385

செல்வன்

செந்தமிழ் மாலை

SCANNED

ஜெகசெல்வன் கம்பெனி

TB
031(9)
N59
146709

செல்வன் செந்தமிழ் மாலை

ஒன்பதாம் வகுப்பு

தொகுப்பாசிரியர்கள்:
ரம்போலோ மாஸ்கரேனஸ், எம்.ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர்,
செயின்ட் ஜோசப்புக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

வித்துவான் A. S. கோவிந்தசாமி
தமிழாசிரியர்,
செயின்ட் ஜோசப்புக் கல்லூரி உயர்நிலைப்பள்ளி, திருச்சிராப்பள்ளி.

பதிப்பாசிரியர்:
மகாவித்துவான் மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை

ஜெகசெல்வன் கம்பெனி

ராமவர்மபுரம் நாகர்கோவில் | தெப்பக்குளம் திருச்சிராப்பள்ளி

பதிப்புரிமை] 1959 [விலை ரூ. 2–25

முகவுரை

இப்பாடநூல் தமிழ் மாணவர் பயின்று பயன் பெறுமாறு தொகுக்கப் பெற்றுள்ளது.

இது நம் கல்வித் துறையினர் அண்மையில் வெளியிட்டுள்ள புதிய பாடத் திட்டத்தின்படி தொகுக்கப் பெற்றதாகும். இக்கோவையில் இலக்கியம் எழுந்த வரலாறு, புலவர், புரவலர், கலைஞர் இவர்கள் மொழிக்கும் கலைக்கும் செய்துள்ள நிலைபேறுடைய பணிகள், இளைஞர்க்குத் தேவையான அறவுரைகள், அறிவுரைகள் ஆகியவை இடம் பெற்றுள்ளன. இதைப் போலவே, செய்யுட்பகுதியும் பழமை நலனும், புதுமைச் செழிப்பும் பொருந்தும் வழியில் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ள பகுதியாம். பொருள் விளக்கம் வேண்டும் அளவு தரப்பெற்றுள்ளது.

இத்தொகுதியுள் தத்தம் கட்டுரைகளையும், செய்யுட்களையும் சேர்த்துக்கொள்ளுமாறு தம் இசைவினை வழங்கிய அறிஞர்க்கும் கவிஞர்க்கும் எம் உளம் கனிந்த நன்றியறிதலைப் புலப்படுத்திக்கொள்கிறோம்.

புதிய பாடத் திட்டத்தின் குறிப்புக்கள் யாவும் செவ்வையாகப் பொருந்த அமைந்துள்ள இந்த நூலை மாணவர்க்குப் பயன்படச் செய்யும் அதிபர்களுக்கு எம் மனமார்ந்த நன்றி உரியது.

ஆசிரியர்கள்

முதற் பதிப்பு—நவம்பர், 1959

TRO
031(9)
N59

Trade Mark:
"SELVAN"

தமிழ்நாடு அவணக் காப்பக நூலகம்
146709
சென்னை-600 008

Kabeer Printing Works, Madras (4130)

முகவுரை

இப்பாடநூல் தமிழ் மாணவர் பயின்று பயன் பெறுமாறு தொகுக்கப் பெற்றுள்ளது.

இது நம் கல்வித் துறையினர் அண்மையில் வெளியிட்டுள்ள புதிய பாடத் திட்டத்தின்படி தொகுக்கப் பெற்றதாகும். இக்கோவையில் இலக்கியம் எழுந்த வரலாறு, புலவர், புரவலர், கலைஞர் இவர்கள் மொழிக்கும் கலைக்கும் செய்துள்ள நிலைபேறுடைய பணிகள், இளைஞர்க்குத் தேவையான அறவுரைகள், அறிவுரைகள் ஆகியவை இடம் பெற்றுள்ளன. இதைப் போலவே, செய்யுட்பகுதியும் பழமை நலனும், புதுமைச் செழிப்பும் பொருந்தும் வழியில் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ள பகுதியாம். பொருள் விளக்கம் வேண்டும் அளவு தரப்பெற்றுள்ளது.

இத்தொகுதியுள் தத்தம் கட்டுரைகளையும், செய்யுட்களையும் சேர்த்துக்கொள்ளுமாறு தம் இசைவினை வழங்கிய அறிஞர்க்கும் கவிஞர்க்கும் எம் உளம் கனிந்த நன்றியறிதலைப் புலப்படுத்திக்கொள்கிறோம்.

புதிய பாடத் திட்டத்தின் குறிப்புக்கள் யாவும் செவ்வையாகப் பொருந்த அமைந்துள்ள இந்த நூலை மாணவர்க்குப் பயன்படச் செய்யும் அதிபர்களுக்கு எம் மனமார்ந்த நன்றி உரியது.

ஆசிரியர்கள்

மனப்பாடம் செய்தற்குரிய பகுதிகள்

				வரிகள்
வாழ்த்து :				
கடவுள் வாழ்த்துச் செய்யுள்	1		...	4
தமிழ்த் தாய் வாழ்த்துச் செய்யுள்	1		...	4
அறவுரை :				
புறநானூற்றுச் செய்யுள்	1		...	6
திருக்குறட் செய்யுள்	5, 14, 15, 20, 21, 29, 32, 33, 34, 39, 40, 41, 67, 75, 87, 100.		...	32
ஏலாதி	3		...	4
பழமொழி	3		...	4
தொடர்நிலைச் செய்யுள் :				
சிலப்பதிகாரம் அடிகள் 29–42			...	14
கம்பராமாயணம் செய்யுள் 7, 8			...	8
பெரிய புராணம்	,,	20, 21, 22	...	12
வில்லி பாரதம்	,,	19, 20	...	8
பல்சுவை :				
இளவேனில்	,,	1	...	4
				100

உள்ளுறை

செய்யுட்பகுதி

எண்	பொருள்		பக்கம்
I.	**வாழ்த்து :**		
1.	கடவுள் வாழ்த்து	...	1
2.	தமிழ்த்தாய் வாழ்த்து	...	1
3.	நாட்டு வாழ்த்து	...	2
II.	**அறவுரை :**		
1.	புறநானூறு	...	3
2.	திருக்குறள்	...	4
3.	ஏலாதி	...	19
4.	சிறுபஞ்சமூலம்	...	21
5.	பழமொழி	...	22
III.	**தொடர்நிலைச் செய்யுள் :**		
1.	சிலப்பதிகாரம்	...	24
2.	பெருங்கதை	...	28
3.	கம்பராமாயணம்	...	33
4.	பெரிய புராணம்	...	38
5.	வில்லி பாரதம்	...	48
6.	பாஞ்சாலி சபதம்	...	58
7.	காவலன் மகளும் கவிஞனும்	...	60
IV.	**பல்சுவை :**		
1.	வருணனைப் பாடல்கள்	...	63
2.	சீட்டுக் கவி	...	65
3.	சிலேடைப் பாக்கள்	...	66
4.	சிறு நூல்கள்	...	67
5.	வழிபாட்டுப் பாடல்கள்	...	71

உரைநடைப்பகுதி

எண்	பொருள்		பக்கம்
1.	இளமை விருந்து —திரு. வி. கலியாணசுந்தரனர் அவர்கள்	...	75
2.	ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு —டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள், எம்.ஏ., பிஎச்.டி.	...	81
3.	வித்துவான் தியாகராச செட்டியார் —டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்	...	87
4.	கண்டதும் கேட்டதும் —திரு. நெ. து. சுந்தரவடிவேல் அவர்கள், எம்.ஏ., எல்.டி.	...	100
5.	உழுபடையும் பொருபடையும் —திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள், எம்.ஏ.	...	105
6.	தொழிற்கல்வி —திரு. ச. ஆறுமுக முதலியார் அவர்கள், எம்.ஏ., பி.ஓ.எல்., எல்.டி.	...	111
7.	என் உலகச் செலவு —அறிஞர் திரு. தனிநாயக அடிகள்	...	116
8.	படக்காட்சி —வித்துவான் தி. சி. குழந்தைவேல் முதலியார் அவர்கள்	...	127
9.	போப்பு ஐயரின் முதுமைக்காலப் பணிகள் —திரு. ஆ. அருள்தங்கையா அவர்கள்	...	136
10.	நாடகக் கலை —திரு. தி. சு. இளவழகனர் அவர்கள்	...	144
11.	காவிரிப்பூம்பட்டினம் —வித்துவான் A. S. கோவிந்தசாமி அவர்கள்	...	152

எண்	பொருள்		பக்கம்
12.	தங்கைக்கு —டாக்டர் மு. வரதராசனுர் அவர்கள்	...	159
13.	இசைக் கலைஞர் —திரு. M. ரம்போலோ மாஸ்கரேனஸ் அவர்கள், எம்.ஏ.	...	166
14.	கூட்டுறவுப் பண்டகசாலைகள் —திரு. அ. முத்தையா அவர்கள், எம்.ஏ.	...	174
15.	சீதக்காதி —வித்துவான் வி. பி. குழந்தைவேற்சோழகரவர்கள்	...	181
16.	ஆய்-அண்டிரன் —திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளையவர்கள்	...	189
17.	பாரி வள்ளல் —திரு. வி. மரிய அந்தோனி அவர்கள், எம்.ஏ.	...	195
18.	மனையினை அழகு படுத்துதல் —குமாரி அன்னவரிது, பி.எஸ்சி.	...	201

நாட்டு வணக்கம்

ஜன கண மன அதி நாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா

தவ சுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே

காயே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

ஜயஹே! ஜயஹே! ஜயஹே!
ஜய ஜய ஜய ஜயஹே!

—இரவீந்திரநாத தாகூர்

தமிழாக்கம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீதான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்.

நின் திருநாமம், பஞ்சாபையும், சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்

திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய, ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை, கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;

இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன;

நின் புகழைப் பாடுகின்றன;
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு

வெற்றி, வெற்றி, வெற்றி!

ஒன்பதாம் வகுப்பு

செய்யுட்பகுதி

I. வாழ்த்து

1. கடவுள் வாழ்த்து

திருவாசகம் : பெருமையை உடைய சொற்களால் ஆகிய நூல். இந்நூல் எத்தகைய கல் நெஞ்சையும் கரையச் செய்து பத்தியை விளக்கும் என்பதைத் 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்,' என்ற பழமொழியால் உணரலாம்.

திருவாசகத்தை இயற்றியருளியவர் **மாணிக்கவாசகர்.** இவர் பாண்டி நாட்டிலுள்ள திருவாதவூரில் பிறந்தவர்; பெரிய அறிஞர்; சிறந்த கவிஞர். அரிமர்த்தன பாண்டியன் அவையில் முதல் அமைச்சராய் விளங்கியவர்.

எந்தை யாயெம் பிரான்மற்றும் யாவர்க்கும்
தந்தை தாய்தம் பிரான்தனக் கஃதிலான்
முந்தி யென்னுள் புகுந்தனன் யாவரும்
சிந்தை யாலும் அறிவருஞ் செல்வனே.

அருஞ்சொற்பொருள் :

எந்தை - எனக்குத் தந்தை, யாய் - என் தாய், பிரான் - தலைவன், தனக்கு அஃதிலான் - தனக்குத் தந்தையும் தாயும் தலைவனும் ஆகிய அம்முறை உரிமை இல்லாதவன், சிந்தையாலும் - மனத்தாலும்.

2. தமிழ்த்தாய் வாழ்த்து

கீழ் வரும் செய்யுள் வில்லிபுத்தூராழ்வார் இயற்றிய **வில்லி பாரதத்தில்** தமிழ்த்தாய் வாழ்த்தாய் அமைந்துள்ளது. இதன் ஆசிரியர், **வில்லிபுத்தூராழ்வார் மகனார் வரந்தருவார்.**

பொருப்பிலே பிறந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை
யேட்டிலே தவழ்ந்த பேதை,

நெருப்பிலே நின்று கற்ருேர்
நினைவிலே நடந்தோ ரேன
மருப்பிலே பயின்ற பாவை
மருங்கிலே வளருகின்ருள்.

அருஞ்சொற்பொருள் :

பொருப்பு - பொதியமலை, தென்னன் - பாண்டியன், ஏனம் - திருமாலவதாரமாகிய பன்றி, பாவை - பூமியாகிய பெண்.

3. நாட்டு வாழ்த்து

கீழ் வரும் பாடலை இயற்றியவர் தமிழ் மொழிக்குப் புதிய சுவை தந்த கவிஞர் சுப்பிரமணிய பாரதியார். இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டையபுரத்தில் சின்னசாமி ஐயருக்கும் இலக்குமி அம்மாளுக்கும் புதல்வராய்ப் பிறந்தவர். இவர் காலம், கி. பி. 1882—1921.

மாரத வீரர் மலிந்தநன் ஞடு
மாமுனி வோர்பலர் வாழ்ந்தபொன் ஞடு
நாரத கான நலந்திகழ் நாடு
நல்லன யாவையு நாடுறு நாடு
பூரண ஞானம் பொலிந்தநன் ஞடு
புத்தர் பிரானருள் பொங்கிய நாடு
பாரத நாடு பழம்பெரு நாடே;
பாடுவ மிஃதை யெமக்கிலை யீடே.

அருஞ்சொற்பொருள் :

மலிந்த - மிகுந்த, கானம் - இன்னிசை, பொலிந்த - விளங்கிய, பாடுவம் - புகழ்ந்து பாடுவோம்.

பயிற்சி வினுக்கள் :

1. இறைவனது இயல்புபற்றி மாணிக்கவாசர் தெரிவிப்பதென்ன ?
2. ‘தனக்கஃதிலான்’—விளக்குக.
3. தமிழை ஆசிரியர் எவ்வாறு உருவகிக்கின்ருர் ?
4. நமது நாட்டின் பெருமையைப் பாரதியார் எவ்வாறு புகழ்கின்ருர் ?
5. பிரித்து எழுதுக :—எந்தை, அறிவரும், சங்கத்திருப்பிலே.
6. பகுபத உறுப்பிலக்கணந் தருக :—புகுந்தனன், வளருகின்ருள், பொங்கிய.

II. அறவுரை

1. புறநானூறு

புறநானூறு: இது புறப்பொருளைப் பற்றிய நானூறு செய்யுட்களால் தொகுக்கப்பட்ட நூல். புறப்பொருள் என்பது அறம், பொருள் முதலிய செய்திகளைப் பற்றிக் கூறுவது. இந்நூல் கடைச்சங்க காலத்து எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று. இது **புறம்** எனவும் **புறப்பாட்டு** எனவும் வழங்கவும் பெறும்.

இந்நூலால் பண்டைக்காலத்து அரசர், வள்ளல்கள் முதலியோருடைய வரலாறுகளையும், சங்ககாலப் புலவர்களின் இயல்புகளையும், தமிழ்நாட்டு நாகரிகத்தினையும் நன்கு அறியலாகும். இந்நூற்செய்யுட்கள் சொற்சுவை பொருட்சுவை நிரம்பியவை ; இனிய நடைபெற்று இயங்குபவை.

வழிபடு வோரை வல்லறி தீயே ;
பிறர்பழி கூறுவோர் மொழிதே றலையே ;
நீமெய் கண்ட தீமை காணின்
ஒப்ப நாடி அத்தக வொறுத்தி ;
வந்தடி பணிந்து முந்தை நிற்பின்
தண்டமும் தணிதிநீ பண்டையிற் பெரிதே !

—ஊன்பொதிபசுங்குடையார்

அருஞ்சொற்பொருள் :

வழிபடுவோர் - வழிபட்டொழுகுவார், வல்லறிதி - விரைந்தறிவாய், தேறலை - தெளியமாட்டாய், தீமை - கொடுமை, ஒப்ப நாடி - நீதி நூற்குத் தக்கபடி ஆராய்ந்து, அத்தக - அக்குற்றத்திற்குத் தக்கவாறு, ஒறுத்தி - தண்டிப்பாய், முந்தை - முன்னே.

பயிற்சி வினாக்கள் :

1. உமக்குத் தெரிந்த எட்டுத்தொகை நூல்களுள் நான்கு குறிப்பிடுக.
2. புறநானூற்றால் அறியப்படுவது யாது ?
3. ஊன்பொதி பசுங்குடையார் அறிவுறுத்தியுள்ள அறவுரை யாது?
4. பகுபத உறுப்பிலக்கணந்தருக :—அறிதி, தேறலை, கண்ட.
5. இலக்கணக் குறிப்பு வரைக :—கூறுவோர், தேறலை, தணிதி.

2. திருக்குறள்

திருக்குறள், மேன்மை பொருந்திய குறள் வெண்பாக்களினு-லாகிய நூல். இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப் பால் என்னும் மூன்று பால்களையும், நூற்று முப்பத்து மூன்று அதிகாரங்களையும், ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்-களையும் உடையது. இது கடைச்சங்க காலத்துத் தோன்றிய பதினெண்கீழ்க்கணக்கைச் சார்ந்தது; தமிழ் மறை என்றும் பொது மறை என்றும் போற்றப்படுவது. திருக்குறள் உலக மொழிகள் பலவற்றில் மொழிபெயர்க்கப்பட்டு, எல்லோராலும் போற்றப்படுகின்றது. இதன் ஆசிரியர் திருவள்ளுவர். இவர் பிறப்பிடம் திருமயிலை (மயிலாப்பூர்) என்பர். இவரது கோயில் அங்கு உள்ளது. இவர் அறக் கருத்துக்களை இலக்கிய நயம்படச் சொல்வதில் இணையற்றவர்; கடைச்சங்க காலத்தவர்.

கடவுள் வாழ்த்து

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவ னடிசேரா தார். 1

வான் சிறப்பு

கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற் றாங்கே
எடுப்பதூஉம் எல்லாம் மழை. 2

நீத்தார் பெருமை

உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து. 3

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். 4

அறன் வலியுறுத்தல்

மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்தறன்;
ஆகுல நீர பிற. 5

அன்றறிவாம் என்னா தறம்செய்க; மற்றது
பொன்றுங்காற் பொன்றாத் துணை. 6

வீழ்நாள் படாஅமை நன்றாற்றின், அஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல். 7

இல் வாழ்க்கை

அன்பும் அறனும் உடைத்தாயின், இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. 8

ஆற்றின் ஒழுக்கி அறனிழுக்கா இல்வாழ்க்கை
நோற்பாரின் நோன்மை உடைத்து. 9

வாழ்க்கைத் துணை நலம்

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின், வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல். 10

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். 11

அன்புடைமை

என்பி லதனை வெயில்போலக் காயுமே
அன்பி லதனை அறம். 12

புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும், யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு? 13

விருந்தோம்பல்

வித்தும் இடல்வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி
மிச்சில் மிசைவான் புலம்! 14

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு. 15

இனியவை கூறல்

துன்புறூஉம் துவ்வாமை இல்லாகும் யார்மாட்டும்
இன்புறூஉம் இன்சொ லவர்க்கு. 16

செய்ந்நன்றியறிதல்

தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார். 17

கொன்றன்ன இன்னா செயினும் அவர்செய்த
ஒன்றுநன் றுள்ளக் கெடும். 18

நடுவு நிலைமை

வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் செயின். 19

அடக்கமுடைமை

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து. 20

யாகாவா ராயினும் நாகாக்க; காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு. 21

ஒழுக்கமுடைமை

ஒழுக்கம் உடைமை குடிமை; இழுக்கம்
இழிந்த பிறப்பாய் விடும். 22

ஒழுக்கத்தின் ஒல்கார் உரவோர் இழுக்கத்தின்
ஏதம் படுபாக் கறிந்து. 23

பிறன் இல் விழையாமை

பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்(கு)
அறனொன்றோ, ஆன்ற ஒழுக்கு. 24

பொறை உடைமை

இன்மையுள் இன்மை விருந்தொரால்; வன்மையுள்
வன்மை மடவார்ப் பொறை. 25

அழுக்காறாமை

அழுக்கா றெனவொரு பாவி திருச்செற்றுத்
தீயுழி உய்த்து விடும். 26

அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும். 27

புறங்கூறாமை

கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல். 28

பயனில சொல்லாமை

பயனில்சொல் பாராட்டு வானை மகன்எனல்;
மக்கட் பதடி எனல். 29

தீவினை அச்சம்

தீயவை தீய பயத்தலான் தீயவை
தீயினும் அஞ்சப் படும். 30

ஒப்புரவறிதல்

ஒப்புரவி னல்வருங் கேடெனின், அஃதொருவன்
விற்றுக்கோள் தக்க துடைத்து. 31

ஈகை

ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாம்உடைமை
வைத்திழக்கும் வன்க ணவர் ? 32

இரத்தலின் இன்னாது மன்ற நிரப்பிய
தாமே தமியர் உணல். 33

சாதலின் இன்னாத தில்லை ; இனிததூஉம்
ஈதல் இயையாக் கடை. 34

புகழ்

புகழ்பட வாழாதார் தம்நோவார் தம்மை
இகழ்வாரை நோவ தெவன் ? 35

அருளுடைமை

அல்லல் அருளாள்வார்க் கில்லை ; வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி. 36

தவம்

இலர்பலர் ஆகிய காரணம், நோற்பார்
சிலர்;பலர் நோலா தவர். 37

கூடாவொழுக்கம்

நெஞ்சின் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து
வாழ்வாரின் வன்கணார் இல். 38

கள்ளாமை

உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல். 39

வாய்மை

மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு
தானம்செய் வாரின் தலை. 40

யாமெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற. 41

வெகுளாமை

சினமென்னுஞ் சேர்ந்தாரைக் கொல்லி இனமென்னும்
ஏமப் புணையைச் சுடும். 42

இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று. 43

இன்னா செய்யாமை

சிறப்பீனும் செல்வம் பெறினும் பிறர்க்கின்னா
செய்யாமை மாசற்றார் கோள். 44

தன்னுயிர்க் கின்னாமை தானறிவான் என்கொலோ
மன்னுயிர்க் கின்னா செயல்! 45

நிலையாமை

அற்கா இயல்பிற்றுச் செல்வம்; அதுபெற்றால்
அற்குப ஆங்கே செயல். 46

உறங்குவது போலும் சாக்கா டுறங்கி
விழிப்பது போலும் பிறப்பு. 47

துறவு

யாதனின் யாதனின் நீங்கியான், நோதல்
அதனின் அதனின் இலன். 48

பற்றுக பற்றற்றான் பற்றினை; அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு. 49

மெய்யுணர்தல்

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு. 50

இறை மாட்சி

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்(கு)
இறையென்று வைக்கப் படும். 51

கல்வி

தாமின் புறுவ துலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். 52

கல்லாமை

கல்லா தவரும் நனிநல்லர் கற்றுர்முன்
சொல்லா திருக்கப் பெறின். 53

கேள்வி

செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும். 54

கற்றிலன் ஆயினும் கேட்க ; அஃதொருவற்(கு)
ஒற்கத்தின் ஊற்ருந் துணை. 55

செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினும் என் ? 56

அறிவுடைமை

அறிவற்றம் காக்கும் கருவி ; செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண். 57

குற்றங்கடிதல்

பற்றுள்ளம் என்னும் இவறன்மை எற்றுள்ளும்
எண்ணப் படுவதொன் றன்று. 58

சிற்றினம் சேராமை

மனந்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனம்தூய்மை தூவா வரும். 59

மனநலம் மன்னுயிர்க் காக்கம் ; இனநலம்
எல்லாப் புகழுந் தரும். 60

தெரிந்து செயல் வகை

செய்தக்க அல்ல செயக்கெடும் ; செய்தக்க
செய்யாமை யானும் கெடும். 61

வலி அறிதல்

பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின். 62

அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும். 63

காலம் அறிதல்

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின். 64

இடன் அறிதல்

கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் ; கடல்ஓடும்
நாவாயும் ஓடா நிலத்து. 65

தெரிந்து தெளிதல்

காதன்மை கந்தா அறி(வு)அறியார்த் தேறுதல்
பேதைமை எல்லாந் தரும். 66

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும். 67

தெரிந்து வினையாடல்

செய்வானை நாடி வினைநாடிக் காலத்தொ
டெய்த உணர்ந்து செயல். 68

செங்கோன்மை

வானோக்கி வாழும் உலகெல்லாம் ; மன்னவன்
கோனோக்கி வாழுங் குடி. 69

இறைகாக்கும் வையகம் எல்லாம் ; அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின். 70

கொடுங்கோன்மை

வேலொடு நின்றான் இடுஎன் றதுபோலும்
கோலொடு நின்றான் இரவு. 71

வெருவந்த செய்யாமை

கடிதோச்சி மெல்ல எறிக நெடிதாக்கம்
நீங்காமை வேண்டு பவர். 72

கண்ணோட்டம்

கருமம் சிதையாது கண்ணோட வல்லார்க்(கு)
உரிமை யுடைத்திவ் வுலகு. 73

ஒற்றாடல்

வினைசெய்வார் தம்சுற்றம் வேண்டாதார் என்றாங்
கனைவரையும் ஆராய்வ தொற்று. 74

ஊக்கமுடைமை

'ஆக்கம் இழந்தேம்!' என் றல்லாவார் ஊக்கம்
ஒருவந்தங் கைத்துடை யார். 75

ஆள்வினை உடைமை

பொறியின்மை யார்க்கும் பழியன் றறிவறிந்
தாள்வினை இன்மை பழி. 76

இடுக்கண் அழியாமை

இடும்பைக் கிடும்பை படுப்பர் இடும்பைக்(கு)
இடும்பை படாஅ தவர். 77

இன்பம் விழையான் இடும்பை இயல்பென்பான்
துன்பம் உறுதல் இலன். 78

சொல் வன்மை

ஆக்கமுங் கேடும் அதனால் வருதலால்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு. 79

வினைத்தூய்மை

பழிமலைந் தெய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை. 80

வினைத்திட்பம்

துன்பம் உறவரினும் செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை. 81

எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
வேண்டாரை வேண்டா துலகு. 82

அவையஞ்சாமை

பகையகத்துச் சாவார் எளியர் ; அரியர்
அவையகத் தஞ்சா தவர். 83

நாடு

பிணியின்மை செல்வம் விளைவின்பம் ஏமம்
அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து. 84

படைச்செருக்கு

பேராண்மை என்ப தறுகண்ஒன் றுற்றக்கால்
ஊராண்மை மற்றதன் எஃகு. 85

புரந்தார்கண் நீர்மல்கச் சாகிற்பின் சாக்கா(டு)
இரந்துகோட் டக்க துடைத்து. 86

நட்பு

புணர்ச்சி பழகுதல் வேண்டா; உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும். 87

நட்பாராய்தல்

அழச்சொல்லி அல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல். 88

கூடா நட்பு

சொல்வணக்கம் ஒன்னார்கண் கொள்ளற்க வில்வணக்கம்
தீங்கு குறித்தமை யான். 89

புல்லறிவாண்மை

ஏவவும் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்
போஒம் அளவுமோர் நோய். 90

உட்பகை

வாள்போல் பகைவரை அஞ்சற்க ; அஞ்சுக
கேள்போல் பகைவர் தொடர்பு. 91

பெரியாரைப் பிழையாமை

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளும் என்னும்
தகைமாண்ட தக்கார் செறின் ? 92

வரைவில் மகளிர்

இருமனப் பெண்டிரும் கள்ளும் கவறும்
திருநீக்கப் பட்டார் தொடர்பு. 93

கள்ளுண்ணாமை

துஞ்சினார் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும்
நஞ்சுண்பார் கள்ளுண் பவர். 94

மானம்

பெருக்கத்து வேண்டும் பணிதல் ; சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு. 95

பெருமை

அற்றம் மறைக்கும் பெருமை; சிறுமைதான்
குற்றமே கூறி விடும். 96

சான்றாண்மை

கடன்என்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு. 97

பண்புடைமை

அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர். 98

குடி செயல் வகை

நல்லாண்மை என்ப தொருவற்குத் தான்பிறந்த
இல்லாண்மை ஆக்கிக் கொளல். 99

உழவு

உழவினார் கைம்மடங்கின், இல்லை 'விழைவதூஉம்
விட்டேம்,'என் பார்க்கு நிலை. 100

அருஞ்சொற்பொருள் :

1. அடி சேர்ந்தார் - பாதமாகிய (மரக்கலத்தைச்) சேர்ந்தவர், சேர்தல் - இடைவிடாது நினைத்தல், நீந்தார் - கடக்கமாட்டார். பிறவியைக் கடலாக உருவகப்படுத்தியதற்கு ஏற்ப, அடியை மரக்கலமாக உருவகப்படுத்தாமையால், இச்செய்யுள் **ஏகதேச உருவக அணி.**

2. சார்வாய் - துணையாய்ப் (பெய்து), எல்லாம் - எல்லாம் வல்லது.

3. உரன் - அறிவு, தோட்டி - அங்குசம், ஓரைந்தும் - பொறிகளாகிய யானைகள் ஐந்தையும், வரன் என்னும் வைப்பு - எல்லா நிலங்களிலும் மேலானது என்று சொல்லப்படுகிற மோட்ச நிலத்திற்கு. இஃது **ஏகதேச உருவக அணி.**

4. நிறைமொழி மாந்தர் - பயன் நிறைந்த மொழியினையுடைய துறந்தார், மறை மொழி - மந்திர மொழிகள்.

5. மனத்துக்கண் - மனத்தில், மாசு - குற்றம், ஆகுல நீர - ஆரவாரக் குணத்தையுடையனவாம்.

6. அன்று - இறக்கும் அந்நாளில், அறிவாம் - செய்வோம், பொன்றுங்கால் - உடம்பினின்று உயிர் போங்காலத்து, பொன்று - அழியாத.

7. வீழ்நாள் - செய்யாமற்கழியும் நாள், படாமை - உண்டாகாமல், நன்று - தருமம், ஆற்றின் - செய்வானாயின், வாழ்நாள் - வாழுநாளது, வழி - வழியை. 'அறம் வீடு பயக்கும்,' என்பது இதனாற் கூறப்பட்டது.

8. இல்வாழ்க்கைக்கு அன்புடைமை பண்பும், அறனுடைமை பயனும் ஆகும். **நிரனிறை அணி.** நிரனிறையாவது, வரிசையாகச் சொல்லப்பட்ட பொருள்களுக்குச் சம்பந்தமுள்ளவைகளை அம்முறையே வரிசையாக நிறுத்திச் சொல்லுதல்.

9. ஆற்றின் - (தமது) வழியிலே, ஒழுக்கி - நடத்தி, இழுக்கா - தவறாத, நோன்மை - வலிமை (பொறுமை).

10. மனை மாட்சி - இல்லறத்துக்குத் தகுந்த நற்குண நற்செய்கைகள், இல் பெருமையை உடையதன்று.

11. கொண்டான் - கணவன், தகை சான்ற - நன்மை மிகுந்த, சொல் - புகழ், சோர்வு - மறதி.

12. என்பு இலதனை - எலும்பில்லாத உடம்பை (புழு), அன்பு இலது - அன்பில்லாத உயிர்.

13. யாக்கை அகத்து - உடம்பினகத்திலே நின்று, உறுப்பு - இல்லறத்துக்கு அங்கமாகிய. புறத்துறுப்பாவன : இடனும் பொருளும் ஏவல் செய்வாரும் முதலாயின.

14. 'விருந்தோம்புபவனது விளைநிலம் தானே விளையும்,' என்பது கருத்து.

15. இச்செய்யுளால் விருந்தோம்புபவன் மறுமைக்கண் எய்தும் பயன் கூறப்பட்டது.

16. துவ்வாமை - வறுமை.

17. கொள்வர் - நினைப்பர், பயன் - அந்நினைப்பின் பயனை, தெரிவார் - அறிபவர்.

19. பிறவும் தமபோற்செய்தலாவது, கொள்வது அதிகமும் கொடுப்பது குறைவும் ஆகாமல், ஒப்ப நாடிச் செய்தல். பேணி - காத்து.

20. ஒருமையுள் - ஒரு பிறப்பின்கண், ஐந்து - ஐம்பொறிகள். ஆமை ஐந்துறுப்பினையும் இடர் புகுதாமல் அடக்குமாறுபோல ஒருவன் ஐம்பொறிகளையும் பாவம் புகுதாமல் அடக்கவேண்டும் என்க.

21. சொல்லிழுக்குப் பட்டு - சொற்குற்றத்திலே அகப்பட்டு, சோகாப்பர் - துன்புறுவர்.

24. மனை - மனைவி, நோக்காத - உட்கொள்ளாத (விரும்பாத), பேராண்மை - பெரிய ஆண் தன்மையானது, ஆன்ற ஒழுக்கு - நிறைந்த ஒழுக்கமுமாம்.

25. இன்மையுள் இன்மை - வறுமையுள் வறுமையாவது, வன்மையுள் வன்மை - வலிமையுள் வலிமையாவது, மடவார் - அறியாமையினால் தீங்கு செய்தவரை, பொறை - பொறுத்தல். இச்செய்யுள் எடுத்துக்காட்டுவமை அணி.

27. அவ்விய நெஞ்சத்தான் - பொறாமையுள்ள மனத்தையுடையவனது, செவ்வியான் - செம்மையுடையவன், கேடும் - வறுமையும் (உண்டானால்), நினைக்கப்படும் - அவை ஆராயப்படும்.

28. கண் நின்று - எதிரே நின்று, கண் அற - கண்ணோட்டமில்லாமல், சொல்லினும் - சொன்னாலும், முன் இன்று - எதிர் இல்லாமல், பின் நோக்கா - பின் வரும் குற்றத்தை நோக்காத.

31. ஒப்புரவினால் - உபகாரம் செய்தலினால், கேடு - பொருட்கேடு, எனின் - என்பவருண்டாயின், விற்று - தன்னை விற்றாயினும், கோள் தக்கது - வாங்குந்தகுதியை உடையதாகும்.

36. வளி வழங்கும் - காற்று உலாவுகின்ற, மல்லல் - வளம், ஞாலம் - உலகத்தார், கரி - சான்று.

42. சினம் - கோபம், சேர்ந்தாரைக் கொல்லி - நெருப்பு, ஏமப் புணை - ஏமத்தை உபதேசிக்கும் புணை (இரட்சைத் தோணி). இது ஏகதேச உருவகம்.

43. இணர் எரி - பல சுடர்களையுடைய பெருநெருப்பில், தோய்வு - தோய்வது, புணரின் - ஒருவனுக்குக் கூடுமாயின்.

46. அற்கா - நிலையாத, அது - அச்செல்வத்தை, அற்குப - (அதனால் செய்யப்படும்) அறங்களை.

48. யாதனின் - யாதொரு பொருளின், நோதல் - துன்பமடைதல், அதனின் - அப்பொருளினாலே.

49. பொழிப்புரை: பற்றில்லாதவனாகிய கடவுள் அருளிய முத்தி வழியை, இதுவே நல்ல வழியென்று மனத்திற்கொள்ள வேண்டும். உள்ள பற்றுக்களை விட்டொழிப்பதற்கே அப்பற்றைப் பற்றவேண்டும்.

'பற்றற்றான் பற்றினைப் பற்றுக; பற்று விடற்கு அப்பற்றைப் பற்றுக,' என்று மாற்றிப் பொருள் காண்க.

51. இறையென்று - (செயலினால்) கடவுள் என்று, வைக்கப்படும் - கருதப்படுவான்.

52. இன்புறுவது - இன்பமடைதற்கு ஏதுவாகிய கல்விக்கு, இன்புற - இன்பமடைதலால், காமுறுவர் - (அக்கல்வியையே) விரும்புவர்.

54. செவிக்குணவு - கேள்வி, ஈயப்படும் - இடப்படும். 'ஈயப்படும்' என்றது வயிற்றினது இழிவு தோன்ற நின்றது.

55. ஒற்கத்தின் - தளர்ச்சி வந்தவிடத்து, ஊற்ருந்துணை - ஊன்று கோல் போலத் துணையாகும்.

56. செவியிற்சுவை - காதுகளால் அனுபவிக்கப்படும் சுவைகள்; அவை சொற்சுவை பொருட்சுவை என்பன. சொற்சுவை, குணம், அலங்காரம் என இருவகைப்படும். பொருட்சுவை : நகை, அவலம், இழிப்பு, வியப்பு, அச்சம், வீரம், வெகுளி, உவகை, சமனிலை என்று ஒன்பது வகைப்படும். வாயுணர்வு - கைப்பு, கார்ப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, தித்திப்பு என ஆறு.

57. அற்றம் - கெடுதல் (வாராமல்), செறுவார்க்கு - பகைவர்க்கு, உள் அரண் - உள்ளாகிய அரண்.

58. பற்றுள்ளம் - பொருளினிடத்தில் பற்றுக்கொள்ளும் உள்ளம், இவறன்மை - ஈயாத்தன்மை.

59. இனம் தூய்மை தூவா வரும் - இனத்தின் தூய்மையைப் பொறுத்தே ஏற்படும்.

62. பீலி - மயிலிறகு, சாகாடும் - வண்டியும், அச்சு இறும் - அச்சு முறியும். 'எளியரென்று பலரோடும் பகையைக் கொள்வோன், தான் வலியனுகவேயிருந்தாலும், அவ்வெளியவர் பலர் ஒன்று சேர்ந்த விடத்து வலியழிவான்,' என்னும் பொருள்பட நிற்கையால், இச்செய்யுள் **பிறிது மொழிதல் அணி.**

65. 'போருக்குச் சென்றவர் பகைவரிடங்களை அறிந்து அவைகளுக்கு ஏற்ற சாதனங்களால் தொழில் செய்யவேண்டும்,' என்னும் பொருள் தோன்ற நிற்கையினுல், இதுவும் **பிறிது மொழிதல் அணி.** ஒரு பொருளைப் புலப்படுத்தற்கு அதனேடொத்த மற்ருெரு பொருளைக் கூறுதல் பிறிது மொழிதல் அணியாம். அஃதாவது, உவமானத்தை மட்டும் கூறி, அது வாயிலாக உவமேயத்தைப் பெற வைத்தல்.

66. காதன்மை கந்தா - அன்புடைமை காரணமாக, அறிவு - (தமக்கு) அறியவேண்டுபவைகளை.

70. முட்டாச் செயின் - (தடை நேரிட்டவிடத்தும்) தடை நேரிடாமல் அதனைச் செலுத்துவாருயின். முட்டாமற்செங்கோல் செலுத்திய விதம் சிபிச்சக்கரவர்த்தி, பொற்கைப் பாண்டியன் என்பவர்களின் வரலாற்ருல் அறியப்படும்.

72. கடிது ஓச்சி - (தண்டிக்கத் தொடங்கும்போது) அளவு கடக்கச் செய்பவர் போலத் தொடங்கி, மெல்ல எறிக - (செய்யும்போது) அளவு கடவாமற் செய்யவேண்டும், நெடிது - நெடுங்காலம்.

73. கருமம் - (நீதி வழங்குதலாகிய தம்) தொழில், கண்ணேட - இரக்கங்காட்ட (தாட்சணியங்காட்ட).

74. வினைசெய்வார் - பணியாளர், சுற்றம் - சுற்றத்தார், வேண்டாதார் - பகைவர், ஆராய்வான் - ஆராய்பவனே.

75. ஒருவந்தம் - நிலைபேறு, கைத்து உடையார் - கைப்பொருளாக உடையவர், அல்லாவார் - கலங்கமாட்டார்.

76. பொறிஇன்மை - (பயனைத் தருவதாகிய) விதி இல்லாமை, ஆள்வினை இன்மை பழி - முயற்சி செய்யாதிருத்தலே பழி.

79. அதனால் - (தமது) சொல்லினால், சொல்லின்கட்சோர்வு - தமது சொல்லில் தவறு நேராமல், காத்தோம்பல் - காக்க வேண்டும்.

80. பழிமலைந்து - (இழிதொழில் செய்து) பழியை மேற்கொண்டு, கழி நல்குரவு - மிகுந்த வறுமை.

82. வினைத் திட்பம் வேண்டாரை - தொழில் வலிமையை விரும்பாதவர்களை. வினைத்திட்பமாவது, எடுத்த காரியத்தை முடிப்பதற்குரிய மனவலிமை.

83. எளியர் - பலர்; அரியர் - சிலர்.

84. விளைவு - விளைபொருள், இன்பம் - இன்பவாழ்வு, ஏமம் - நல்ல காவல், அணி - அழகாகும்.

85. தறுகண் - பகைவரை எதிர்க்கும் வீரத்தை, ஒன்று உற்றக்கால் - அப்பகைவருக்குத் துன்பம் வந்த போது, ஊராண்மை - உதவி செய்தல், எஃகு - கூர்மை.

86. புரந்தார் - (தமக்குச் செய்த உபகாரங்களை நினைந்து) ஆண்ட அரசர், சாகிற்பின் - சாவப் பெற்றால்.

87. புணர்ச்சி - ஒரு தேசத்தராயிருக்கை, பழகுதல் - பலதரங் கண்டும் பேசியும் பழகுதல், உணர்ச்சி - (இருவருக்கும் ஒத்த) அறிவு.

88. அழச்சொல்லி - வருந்தும்படியாக இடித்துச் சொல்லி, வழக்கு அறிய - உலக நடையை அறிய.

89. ஒன்னார்கண் - பகைவரிடத்திலும், சொல் வணக்கம் - அவருடைய சொல்லினது வணக்கத்தை, கொள்ளற்க - நன்மையாகக் கொள்ளக்கூடாது.

90. போம் அளவும் - உடலை விட்டு நீங்குமளவும்.

93. இருமனப் பெண்டிர் - பரத்தையர், கவறு - சூது, திரு நீக்கப் பட்டார் - திருமகளால் விடப்பட்டவர்.

94. துஞ்சினர் - உறங்கினவர், நஞ்சு - விடம்.

96. அற்றம் - பிறருடைய குறைபாட்டை, சிறுமை - சிறுமையுடையவர்.

99. இல் ஆண்மை - குடியினை ஆளுந்தன்மையை, ஆக்கிக் கொளல் - (தனக்கு) உளதாக்கிக்கொள்ளல்.

100. மடங்கின் - தொழில் செய்யாமல் மடங்கியிருக்குமானால், விழைவதூஉம் - விரும்புகின்ற எந்தப் பற்றையும், விட்டேம் என்பார்க்கு - விட்டுவிட்டோம் என்று கூறுகிற துறவிகளுக்கும், நிலை இல்லை - வாழ்வு இல்லை. விழைவதூஉம் - இன்னிசை அளபெடை.

பயிற்சி வினுக்கள் :

1. இறைவன் திருவடியை இடைவிடாது நினைப்பவர் எய்தும் பயன் யாது?

2. மழை எத்தகைய சிறப்புடையது?

3. நீத்தாரது பெருமை திருக்குறளில் எவ்வாறு சொல்லப்பட்டுள்ளது?

4. ஆகுல நீர—எவை?

5. 'அன்றறிவாம் என்னுது அறம் செய்க,' என்றது ஏன்?

6. 'அறம் வீடு பயக்கும்,' என்ற கருத்தமைந்த திருக்குறளைத் தெரிவிக்க.

7. 'பெண்' எனத் தக்காள் எவள்?

8. விருந்தோம்புபவன் இம்மையிலும் மறுமையிலும் எய்தும் பயன்கள் யாவை?

9. சிறப்புடைய வாணிக முறை யாது?

10. ஆமையின் இயல்பு யாது? அதுகொண்டு உணர்த்தப்படும் நீதி யாது?

11. 'பொறையுடைமை' என்ற தலைப்பில் வந்துள்ள திருக்குறளுக்குப் பொழிப்புரை எழுதுக.

12. விற்றுக்கோள் தக்கது, இறந்துகோள் தக்கது—எவை?

13. இலர் பலர் ஆகியதற்குத் திருவள்ளுவர் என்ன காரணம் கூறுகிருர்?

14. உள்ளத்தால் உள்ளலும் தீது—எது?

15. மாசற்ருர் கோள்—எது?

16. 'துறவு' என்னும் தலைப்பில் வந்துள்ள குறட்பாக்களின் கருத்துக்களைத் தெரிவிக்க.

17. கற்றறிந்தாரது இயல்பு யாது?

18. 'கல்லாதவரும் நனிநல்லர்' ஆவது எங்ஙனம்?

19. செவியிற்சுவை உணராதவர்களைத் திருவள்ளுவர் எங்ஙனம் கடிந்து கூறுகிருர்?

20. 'இனந்தூய்மை' காரணமாக வருவன எவை?

21. 'பீலிபெய் சாகாடும்' என்ற திருக்குறள் உணர்த்தும் நீதி யாது? அஃது என்ன அணி?

22. அளவறிந்து வாழாதான் வாழ்க்கை எவ்வாருும்?

23. தீரா இடும்பை தருவது எது?

24. ஒற்றினது இலக்கணம் யாது?

25. எது பழி? எது பழியன்று?

26. எளியர், அரியர்—யாவர்?

27. நாட்டிற்கு அழகைத்தரும் ஐந்து எவை?

28. 'பேராண்மை' எது? அதன் எஃகு எது?

29. கொள்ளத்தக்க நட்பும், தள்ளத்தக்க நட்பும் எவை?

30. ஏகதேச உருவகம், எடுத்துக்காட்டுவமை, பிறிது மொழிதல் இவற்றை விளக்கிப் பாடப் பகுதியிலிருந்து உதாரணந் தருக.

3. ஏலாதி

ஏலாதி: ஏலம், இலவங்கம், சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய கடைச்சரக்குகளால் செய்யப்பட்ட சூரணம் உடலுக்கு உறுதி பயப்பது போல இந்நூலின் பாடல்களிற் பயின்றுள்ள நீதிகள் அறியாமையாகிய நோயை ஒழிப்பது பற்றி இந்நூல் ஏலாதி எனப் பெயர் பெற்றது. இது பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.

இதனை இயற்றியவர் **கணி மேதாவியார்**. இவர் கணி மேதையார் எனவும் வழங்கப்பெறுவர். இவர் காலம் கி. பி. 5-ஆம் நூற்றாண்டு என்பர். இவர் சைன சமயத்தவர் என்பது தெரிகிறது. சிறுபஞ்ச மூலத்தின் ஆசிரியராகிய **காரியாசானும்** இவரும் ஒரு சாலை மாணாக்கராவர்.

பெரியாற்கு இயைந்தவை

கொல்லான் கொலைபுரியான் பொய்யான் பிறர்பொருள்மேல்
செல்லான் சிறியார் இனஞ்சேரான்—சொல்லும்
மறையிற் செவியிலன் தீச்சொற்கண் மூங்கை
இறையிற் பெரியாற் கிவை. 1

மண்கொண்டு பெருகி வாழ்பவன்

களியான்கள் உண்ணான் களிப்பாரைக் காணான்
ஒளியான் விருந்திற் குலையான்—எளியாரை
எள்ளான்ஈத் துண்பானேல் ஏதமில் மண்ணாண்டு
கொள்வான் குடிவாழ்வான் கூர்ந்து. 2

உண்மை நட்பினர் தன்மை

சாதல் பொருள்கொடுத்தல் இன்சொற் புணர்வுவத்தல்
நோதல் பிரிவிற் கவறலே—ஓதலின்
அன்புடையார்க் குள்ளன ஆறு குணமாக
மென்புடையார் வைத்தார் விரித்து. 3

கல்வி அழகே அழகு.

இடைவனப்பும் தோள்வனப்பும் ஈடின் வனப்பும்
நடைவனப்பும் நாணின் வனப்பும்—புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல; எண்ணோ
டெழுத்தின் வனப்பே வனப்பு. 4

விண்ணோர்க்கு வேந்தன்

பொய்யுரையான் வையான் புறங்கூறான் யாவரையும்
மெய்யுரையான் உள்ளனவும் விட்டுரையான்—எய்யுரையான்
கூந்தல் மயிலன்னாய் ! குழீஇயவான் விண்ணோர்க்கு
வேந்தனும் இவ்வுலகம் விட்டு. 5

அருஞ்சொற்பொருள் :

1. கொலை புரியான் - பிறர் கொலை செய்வதைத் தான் விரும்பான், செல்லான் - தன் மனத்தைச் செல்ல விடான், மூங்கை - ஊமை, இவை - இப்படிப்பட்ட குணங்கள்.

2. களியான் - கருவப்படான், களிப்பாரை - கள்ளுண்டு களிப்பவரை, ஒளியான் - இரப்பவருக்குத் தன்னால் இயல்வதைக் கரவான், விருந்திற்கு உலையான் - விருந்தினரை உபசரித்தற்கு வருந்தான்.

3. புணர்வு உவத்தல் - (நண்பர்களோடு) சேர்ந்திருத்தற்கு மகிழ்தல், நோதல் - (நண்பருக்கு வருத்தம் நேர்ந்தால் தாமும்) வருந்துதல், கவறல் - கவலை கொள்ளுதல், மென்புடையார் - மென்மையான தன்மையையுடைய பெரியோர்.

4. ஈடின் வனப்பு - செல்வத்தின் அழகு, புடைசால் - பக்கங்கள் பருத்த, எண் - கணிதம், எழுத்து - இலக்கணம்.

5. வையான் - எவரையும் இகழ்ந்து பேசான், மெய் உரையான் - பிறருக்குத் துன்பந்தருவதாகிய உண்மையைச் சொல்லான், உள்ளனவும் - தன்னிடம் உள்ள பொருள்களையும், விட்டு - வெளியிட்டு, எய் உரையான் - தன் வறுமையை நண்பரிடத்தும் சொல்லான், வான் குழீஇய - வானுலகத்திற் கூடியுள்ள, குழீஇய - குழுமிய; சொல்லிசை அளபெடை.

பயிற்சி வினாக்கள் :

1. ‘ இறையிற்பெரியாற்கிவை ’ என்பன எவை ?

2. மண்கொண்டு பெருகி வாழ்பவராக ஏலாதியில் கூறப்படுபவர் யாவர் ?

3. அன்புடையார்க்குள்ள ஆறு குணங்கள் எவை ?

4. எவை எவை வனப்பு அல்ல ? எவை வனப்புத் தருவன ஆகும் ?

5. விண்ணோர்க்கும் வேந்தனுகும் பெருமையுடையவன் யாவன் ?

6. பிரித்து எழுதுக :—புணர்வுவத்தல், மென்புடையார், மண்ணுண்டு, எய்யுரையான்.

4. சிறு பஞ்சமூலம்

சிறு பஞ்சமூலம் : இது ஒரு நீதி நூல்; பதினெண்கீழ்க்கணக்கைச் சேர்ந்தது. கண்டங்கத்தரி வேர், சிறுமல்லி வேர், சிறுவழுதுணைவேர், நெருஞ்சி வேர், பெருமல்லி வேர் என்னும் ஐந்து வேர்களுஞ்சேர்ந்த மருந்து உடலுக்கு வரும் நோயைப் போக்கி நலம் பயப்பதுபோல மனத்தில் உண்டாகும் மாறுபாடு முதலிய நோய்களைப் போக்கி நலம் பயக்கும் ஐந்து ஐந்து நீதிகளைக் கொண்ட நூறு செய்யுள்களால் ஆகிய நூல். இதனைக் **காரியாசான்** என்பவர் இயற்றினர். இவர் சமண சமயத்தினர்.

பொருளுடையவனும் அருளுடையவனும்

பொருளுடையான் கண்ணதே போகம் அறனும்
அருளுடையான் கண்ணதே யாகும்—அருளுடையான்
செய்யான் பழிபாவஞ் சேரான் புறமொழியும்
உய்யான் பிறர்செவிக் குய்த்து. 1

கண் முதலியவற்றுக்கு வனப்புத் தருவன

கண்வனப்புக் கண்ணோட்டம் கால்வனப்புச் செல்லாமை
எண்வனப் பித்துணையாம் என்றுரைத்தல்—பண்வனப்புக்
கேட்டார்நன் றென்றல் கிளர்வேந்தன் தன்னாடு
வாட்டான்நன் றென்றல் வனப்பு. 2

அறிவுடைச் செயல்கள்

நல்ல வெளிப்படுத்துத் தீய மறந்தொழிந்(து)
ஒல்லை யுயிர்க்கூற்றங் கோலாகி—ஒல்லுமேல்
மாயம் பிறர்பொருட்கண் மாற்றுக மானத்தான்
ஆயின் அழிதல் அறிவு. 3

உள்ள நோய் உண்டாக்குவோர்

அரம்போற் கிளையடங்காப் பெண்ணவியாத் தொண்டு
மரம்போல் மகன்மாறாய் நின்று—கரம்போலக்
கள்ளநோய் காணும் அயலைந்தும் ஆகுமேல்
உள்ளநோய் வேண்டா உயிர்க்கு. 4

கற்றவர் களைய வேண்டுவன

வழிப்படர் வாய்ப்ப வருந்தாமை வாயல்
குழிப்படல் தீச்சொற்க ளோடு—மொழிப்பட்ட
காய்ந்து விடுதல் களைந்துய்யக் கற்றவர்
ஆய்ந்து விடுதல் அறம். 5

அருஞ்சொற்பொருள் :

1. போகம் - இன்பம், அறன் - அறவினை, 'அறம்' என்பதன் கடைப்போலி. 'பழி செய்யான்' என மாற்றுக. உய்த்து - செலுத்தி.

2. கண்ணோட்டம் - கருணைபுரிதல், செல்லாமை - (இரத்தற்காகச்) செல்லாதிருத்தல், எண் வனப்பு - ஆராய்ச்சிக்கு அழகாவது, பண் - இசை, வாட்டான் - (கொடுங்கோன்மையால்) வருத்தமாட்டான்.

3. நல்ல - (பிறர் செய்த) நன்மைகள், தீய - (பிறர் செய்த) தீமைகள், ஒல்லை - விரைவு, ஊற்றங்கோல் - ஊன்றுகோல், மாயம் - வஞ்சனை, மானத்தான் ஆயின் - மானங்காத்தற்பொருட்டாயின்.

4. அரம்போல் - அரம் போலத் தேய்த்துத் தன்னை அழிக்கும், கிளை - சுற்றம் (உறவினர்), அவியாத் தொண்டு - அடங்காத வேலையாள், மரம்போல் மகன் - அறிவற்ற மகன், கள்ளம் - வஞ்சனை, அயல் - அயலார் (அயலிருப்பு.)

5. வழிப்படர் - பிறர் வழியே செல்லுதல், வாய்ப்ப வருந்தாமை - முடியுங் காரியங்களை முயன்று செய்யாமலிருத்தல், வாய் அல்குழிப் படல் - உண்மையல்லாத நெறியிற்செல்லுதல், மொழிப்பட்ட பெரியோரால் சொல்லப்பட்ட நீதிகள்.

பயிற்சி வினாக்கள் :

1. அருளுடையவன் எவற்றைச் செய்யமாட்டான் ?
2. கண், கால், பண் இவற்றிற்கு வனப்புத் தருவன எவை ?
3. அறிவுடைய செயல்களாக எவற்றைக் கூறுதல் வேண்டும் ?
4. உள்ள நோய் உண்டாக்குவோர் யாவர் ?
5. கற்றவர் எவற்றை நீக்கிவிடுதல் அறச்செயலாகும் ?

5. பழமொழி

பழமொழி : இது பழமை+மொழி எனப் பிரிந்து 'பழைய காலந்தொட்டுப் பழகி வரும் மொழி' எனப் பொருள்படும். இந் நூலில் ஒவ்வொரு செய்யுளின் இறுதியிலும் ஒவ்வொரு பழமொழி பொருந்தியுள்ளமையால், இந்நூல் 'பழமொழி' எனப் பெயர் பெற்றது. இந்நூல் நானூறு பாக்களையுடையது. ஆதலின், இதனைப் பழமொழி நானூறு என்றுங் கூறுவர். இதுவும் பதி-னெண்கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று. இதன் ஆசிரியர்

முன்றுறையரையனுர் என்னும் அரசர். இவர் சமண சமயத்தினர்.

சான்ருண்மை

முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
தொல்லை யளித்தாரைக் கேட்டறிதும் ;—சொல்லின்
நெறிமடற் பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்ப!
அறிமடமும் சான்ருேர்க் கணி. 1

தீவினையச்சம்

எனக்குத் தகவன்ருல் என்பதே நோக்கித்
தனக்குக் கரியாவான் தாஞய்த் தவற்றை
நினைத்துத்தன் கைகுறைத்தான் தென்னவனும் ; **காணர்**
எனச் செய்யார் மாணு வினை. 2

குலவித்தை

'உரைமுடிவு காணுன் இளமையோன்,' என்ற
நரைமுது மக்கள் உவப்ப—நரைமுடித்துச்
சொல்லான் முறைசெய்தான் சோழன் ; குலவிச்சை
கல்லாமற் பாகம் படும். 3

அருஞ்சொற்பொருள் :

1. நெறி - அடர்த்தியான, நீடு நீர் - கடல், தொல்லை - முன் நாளில், அறிதும் - அறிவோம், அறிமடம் - அறிந்தும் அறியார் போன்றிருத்தல்.

2. தென்னவன் - பாண்டியன், எனக்குத் தகவு அன்று - எனக்கு இச்செயல் தக்கது அன்று, கரி - சாட்சி, மாணுவினை - தீய செயல்கள்.

3. நரைமுது மக்கள் - நரைத்த கிழவர்கள், முறை செய்தான் - நீதி வழங்கினுன், சோழன் - கரிகாற்பெருவளத்தான், குலவிச்சை - குலத்துக்குரிய வித்தைகள், பாகம் படும் - செம்பாகமாய் அமையும்.

பயிற்சி வினுக்கள் :

1. 'காணர் என மாணுவினை செய்யார்,' என்பதை எதனுல் அறியலாம்?

2. 'அறிமடமும் சான்ருேர்க்கணி.'—அறிமடம் என்பது யாது? அதற்குச் சான்ருனவர் யாவர்? அவர்களின் செயல்கள் யாவை?

3. நரைமுடித்து முறைசெய்த சோழன் யார்? அவன் வரலாற்ருல் அறியப்படும் உண்மை யாது?

4. பகுபத இலக்கணங் கூறுக :— காணர், அறிதும், உவப்ப, செய்யார்.

5. தடித்த எழுத்தாலான சொற்களுக்கு இலக்கணக் குறிப்பு எழுதுக :—(1) **மாணு** வினை, (2) தொல்லை**யளித்தாரைக் கேட்டறிதும்**, (3) நரை **முதுமக்கள் உவப்ப.**

III. தொடர்நிலைச் செய்யுள்

1. சிலப்பதிகாரம்

கண்ணகி வழக்குரைத்தது

சிலப்பதிகாரம் : இது சிலம்பால் விளைந்த நிகழ்ச்சிகளைத் தெரிவிக்கும் நூல். இது ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று; 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று பாரதியாரால் பாராட்டப் பெற்ற பெருமை உடையது.

சிலப்பதிகாரம் **புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக் காண்டம்** என்ற மூன்று பெரும்பிரிவுகளையும், அவற்றின் உட்பிரிவாக முப்பது காதைகளையும் உடையது; (காதை-கதை தழுவிய பாட்டு). இது, "அரசியல் பிழைத்தோர்க்கு அறங்கூற்றாகும்; பத்தினிப் பெண்டிரை உயர்ந்தோர் ஏத்துவர்; ஊழ்வினை உருத்து வந்தூட்டும்," என்னும் முப்பெருநீதிகளை உலகினருக்கு அறிவுறுத்த எழுந்தது. நமது பாடப் பகுதி மதுரைக் காண்டத்தைச் சேர்ந்ததாகும்.

இந்த நூலை இயற்றியவர் சேர நாட்டு இளவரசர் **இளங்கோவடிகள்**. இவர் தந்தையார், இமய வரம்பர் நெடுஞ்சேரலாதர். தாய் : நற்சோணை. தமையன் சேரன் செங்குட்டுவன். இவர் தமையன்பொருட்டு இளமையிலேயே துறவு பூண்டவர்; மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனாரின் நண்பர். சமண சமயத்தைத் தழுவியவர். இவரது காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர்.

பாண்டியன் அரசு வீற்றிருத்தல்

அரிமான் ஏந்திய அமளிமிசை இருந்தனன்
திருவீழ் மார்பின் தென்னவர் கோவே; இப்பால்,

கண்ணகி வாயிற்காவலனிடம் கூறுதல்

'வாயி லோயே! வாயி லோயே!
அறிவறை போகிய பொறியறு நெஞ்சத்து
இறைமுறை பிழைத்தோன் வாயி லோயே!
இணையரிச் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தாளென்று
அறிவிப் பாயே அறிவிப் பாயே,' என,

வாயிற்காவலன் அரசனுக்கு அறிவித்தல்

வாயிலோன், ‘ வாழியெங் கொற்கை வேந்தே வாழி !
தென்னம் பொருப்பின் தலைவ வாழி !
செழிய வாழி ! தென்னவ வாழி !
பழியொடு படராப் பஞ்சவ வாழி !
அடர்த்தெழு குருதி யடங்காப் பசுந்துணிப்
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேற் றடக்கைக் கொற்றவை யல்லள் ;
அறுவர்க் கிளைய நங்கை, இறைவனை
ஆடல்கண் டருளிய அணங்கு, சூருடைக்
கானக முகந்த காளி, தாருகன்
பேருரங் கிழித்த பெண்ணு மல்லள் ;
செற்றனள் போலும் ! செயிர்த்தனள் போலும் !
பொற்றொழிற் சிலம்பொன் றேந்திய கையள்
கணவனை இழந்தாள் கடையகத் தாளே !
கணவனை இழந்தாள் கடையகத் தாளே !’ என,

பாண்டியன் கண்ணகியை வரவழைத்து வினுதல்

‘ வருக மற்றவட் டருக ஈங்’கென,
வாயில் வந்து கோயில் காட்டக்
கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி,
‘ நீர்வார் கண்ணை ; எம்முன் வந்தோய் !
யாரை யோநீ மடக்கொடி யோய்?’ எனத்

கண்ணகி தன் வரலாறு உணர்த்தல்

‘ தேரா மன்னா ! செப்புவ துடையேன் :
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன், அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகார்என் பதியே ; அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி,
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்

சூழ்கழல் மன்னா ! நின்னகர்ப் புகுந்திங்(கு)
என்காற் சிலம்பு பகர்தல் வேண்டி
நின்பால், கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி ;
கண்ணகி என்பதென் பெயரே,' எனப்

பாண்டியன் மறுமொழி

'பெண்ணணங்கே ! கள்வனைக் கோறல் கடுங்கோல்
[அன்று ;
வெள்வேற் கொற்றம் காண்,' என, ஒள்ளிழை,

கண்ணகி உண்மை உரைத்தலும் பாண்டியன் பதிலுரைத்தலும்

'நற்றிறம் படராக் கொற்கை வேந்தே !
என்காற் பொற்சிலம்பு மணியுடை அரியே,' எனத்
'தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி !
யாமுடைச் சிலம்பு முத்துடை அரியே ;
தருகெ'னத் தந்து தான்முன் வைப்பக்

அரசன் உண்மையுணர்ந்து மயங்கி வீழ்தல்

கண்ணகி அணிமணிக் காற்சிலம் புடைப்ப, [கண்டு
மன்னவன் வாய்முதல் தெறித்தது மணியே ; மணி
தாழ்ந்த குடையன் தளர்ந்த செங்கோலன்,
'பொன்செய் கொல்லன் தன்சொற் கேட்ட
யானோ அரசன் ! யானே கள்வன் !
மன்பதை காக்கும் தென்புலங் காவல்
என்முதல் பிழைத்தது ! கெடுகவென் ஆயுள் !' என
மன்னவன் மயங்கிவீழ்ந் தனனே ; தென்னவன்

கோப்பெருந்தேவியும் உடன் வீழ்தல்

கோப்பெருந் தேவி குலைந்தனள் நடுங்கி,
'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவ தில் !' என்(று)
இணையடி தொழுதுவீழ்ந் தனளே மடமொழி.

அருஞ்சொற்பொருள் :

1–2. திருவீழ் - திருமகள் விரும்புகின்ற, தென்னவர் கோ - பாண்டியன் நெடுஞ்செழியன், அரிமான் - சிங்கம் (இரு பெயரொட்டுப் பண்புத் தொகை), அமளி - ஆசனம்.

3–24. அறிவு அறைபோகிய - அறிவில்லாத, பொறியறு நெஞ்சத்து - புண்ணியமற்ற மனத்தையுடைய, இறை முறை - அரசநீதி, பிடர்த்தலை - பிடரியோடு கூடிய மகிடாசுரனது தலையாகிய, பீடம் - பீடத்திலே, கொற்றவை - துர்க்கை, அறுவர்க்கிளைய நங்கை - ஏழு கன்னியர்களுள் ஆறு பேர்க்கும் இளையவளாகிய நங்கை, உரம் - மார்பு, செற்றனள் - முகக் கடுப்புக் கொண்டவள், செயிர்த்தனள்-மனக் கோபங் கொண்டவள்.

25–29. வாயில் - வாயிற்காவலன், குறுகினள் - குறுகி (முற்றெச்சம்), கண்ணை - கண்ணை உடையவளாயிருக்கின்றாய்.

30–34. எள் அறு - இகழ்ச்சியில்லாத, இமையவர் - தேவர், புள் - பறவை (புறு), புன்கண் - துன்பம், தீர்த்தோன் - சிபி, மணி - ஆராய்ச்சி மணி, புதல்வன் - வீதிவிடங்கன், ஆழி - சக்கரம், புதல்வனை ஆழியின் மடித்தோன் - மனுநீதிச் சோழன்.

36–39. பெரும்பெயர் - மிகுந்த புகழ், ஏசா - இகழ்தல் இல்லாத, இசை - புகழ், துரப்ப - செலுத்த.

40–44. பகர்தல் - விலை கூறுதல், கோறல் - கொல்லுதல் (கொல் + தல்), வெள்வேல் கொற்றம் - அரசநீதி, ஒள் இழை - ஒளி பொருந்திய ஆபரணமணிந்தவள் (அன்மொழித் தொகை).

45–54. நற்றிறம் படரா - நீதி நெறியில் செல்லாத, நற்றிறம் - நன்மை + திறம், படரா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்.தேமொழி - தேன் + மொழி - தேன்போலும் மொழியை உடையவள் (அன்மொழித் தொகை), மன்னவன் - நெடுஞ்செழியன், பொன் செய் கொல்லன் - தட்டான்.

55–60. தென்புலம் - தென்னாடு (பாண்டி நாடு), என் முதல் - என் காலந் தொடங்கி, மன்பதை - உயிர்த்தொகுதி, குலைந்தனள் - குலைந்து (முற்றெச்சம்).

பயிற்சி வினாக்கள் :

1. சிலப்பதிகாரம் உணர்த்தும் மூன்று பெரிய உண்மைகள் யாவை ?

2. கண்ணகி வாயிற்காவலனிடம் அறிவித்தது யாது? வாயிற்காவலன் பாண்டியனிடம் தெரிவித்தது யாது ?

3. தன் வரலாறாகக் கண்ணகி பாண்டியனிடம் கூறியது யாது ?

4. கண்ணகிக்கும் பாண்டியனுக்கும் நிகழ்ந்த உரையாடல்களைத் தொகுத்து 20 வரிகளில் எழுதுக.

5. மணி கண்டு பாண்டியன் என்னாயினன் ? அந்நிலையில் அவன் கூறியது என்ன ?

6. இடங்காட்டி விளக்குக :—
(1) யாரையோ நீ மடக்கொடியோய் ?
(2) தேமொழி உரைத்தது செவ்வை நன்மொழி !
(3) யானே அரசன் ! யானே கள்வன் !
(4) கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்.

7. பிரித்தெழுதுக :—பொற்றொழில், பெண்ணணங்கு, மடமொழி, நற்றிறம், தேமொழி, நின்னகர்.

8. பகுபத உறுப்பிலக்கணம் தருக :—பிழைத்தது, கேட்ட, வீழ்ந்தனன், குலைந்தனள், ஏந்திய.

9. இளங்கோவடிகள், சிலப்பதிகாரம்—குறிப்பு வரைக.

2. பெருங்கதை

இலாவாண காண்டம்

குறிக்கோட்கேட்டது

பெருங்கதை : பெரியதாகிய கதையையுடைய நூல். 'பிருகத்கதா' என்னும் வடமொழிப் பெயர் தமிழில் பெருங்கதை என மொழி பெயர்க்கப்பட்டது. இப்பெயர் இதற்கு முதல் நூலால் வந்த பெயர். இது 'உதயணன் கதை' எனவும், 'மாக்கதை' எனவும், 'கொங்குவேள் மாக்கதை' எனவும் வழங்கப்படுகிறது.

இந்நூல் உஞ்சைக்காண்டம், இலாவாண காண்டம், மகத காண்டம், வத்தவ காண்டம், நரவாண காண்டம், துறவுக் காண்டம் என்னும் ஆறு காண்டங்களைக் கொண்டது. இவற்றுள் ஆறுவது துறவுக் காண்டம் கிடைக்கப்பெறவில்லை. மற்றைய காண்டங்கள் பல பிரிவுகளையுடையனவாய்த் திகழ்கின்றன.

நூலாசிரியர் : இந்நூலாசிரியர் கொங்குவேளிர் என்பவராவர். இவர் கொங்கு மண்டலத்து வேளிர் மரபினரான சிற்றரசரைச் சேர்ந்தவராதலின், இப்பெயர் பெற்றார். இவரது இயற்பெயர் தெரியவில்லை. இவரது பிறப்பிடம் கொங்கு நாட்டிலுள்ள விசயமங்கலம் என்பதாகும். இவர் மதம், சைனமதம் ; காலம், ஒன்பதாம் நூற்றாண்டு என்பர்.

இலாவாண காண்டம் : இலாவாணம் என்னும் நகரத்தில் உதயணன் இருந்தபோது நிகழ்ந்த சரித்திரத்தைத் தொகுத்துக் கூறும் பகுதி. இக்காண்டம் இருபது உட்பிரிவுகளாகிய இருபது அகவற்பாக்களை உடையது. நமது பாடப் பகுதியாகிய குறிக்கோட்கேட்டது, 13-ஆம் உட்பிரிவாகும்.

குறிக்கோட்கேட்டது : முனிவர் ஒருவர் கூறிய குறிக்கோளை உதயணன் கேட்டதை உணர்த்தும் பகுதி.

உதயணன் : இவன் பெருங்கதை என்னும் நூலின் பாட்டுடைத் தலைவன் (கதாநாயகன்); உதய காலத்திற் பிறந்தமையின் உதயணன் என்னும் பெயர் பெற்றான். இவனது நாடு, வத்தவ நாடு; தலைநகரம், கௌசாம்பி நகரம். இவன் யாழ் வித்தையில் வல்லவன். இவனுக்கு வாசவதத்தை முதலிய நால்வர் மனைவியர். யூகி என்பவன் இவனுக்குச் சிறந்த நண்பன்.

உதயணனை முனிவர் பள்ளிக்கு அழைத்துச் செல்லுதல்

மைந்தரும் மகளிரும் மலைவயி னுடி
வெந்திறல் வேந்தன் வீழ்பவை காட்டி
ஐம்பெருங் குழுவும் எண்பே ராயமும்
கண்ணுறக் கவவிக் கலந்து விடாஅ
அருமைக் கொத்த அஞ்சுவரு காப்பின்
உரிமைச் சுற்றம் பின்பட வுய்த்துத்
தீதற வெறியுந் தெரிபொருட் கேள்வி
மூதறி முனிவன் பள்ளி முன்னர்ப்
பயமர மல்லது கயமர மில்லாக்
காவினு ளிரீஇக் காவல் போற்றி

உதயணன் முனிவரைக் காணுதல்

மாதவ முனிவற்கு மன்னவன் காணும்
கரும முண்மை மரபிற் கிளப்பப்
பெருங்குலப் பிறப்பினும் அரும்பொருள் வகையினும்
இருங்கண் ஞாலத் தின்னுயிர் ஓம்பும்
காவல் பூண்ட கடத்தினும் விரும்பி
இமையோர் இறைவனை எதிர்கொண் டோம்பும்
அமையா தீட்டிய அருந்தவ முனிவரின்
வியலக வேந்தனை இயல்புளி எதிர்கொண்
டணித்தகு பள்ளி அசோகத் தணிநிழல்
மணித்தார் மார்பனை மணன்மிசை யடுத்த
பத்திப் பன்மலர்ச் சித்திரங் குயின்ற
இயற்றுத் தவிசின்மிசை யிருக்கை காட்டக்

கவற்சி மனத்தொடு காண்டக விருந்ததன்
தாண்முதல் சார்ந்து தோண்முதற் றேழனை
உள்ளி உள்ளழிந் தொழுகுவரைத் தடக்கையின்
வெள்ளிதழ் நறுமலர் வீழப் பையாந்து
நினைப்புள் ளுறுத்தவந் நிலைமை நோக்கி
இனத்தின் இரித்தாங் கெவ்வகை நிமித்தமும்
மனத்தி னுற்றவை மறையின் றுணர்தலின்
துனிவுகொள் மன்னற்கு முனிவன் கூறும் :

முனிவன் கூறல்

'பசுமரஞ் சார்ந்தனை யாதலின் மற்றுநின்
உசிர்ப்பெருந் தோழன் உண்மையும் கூட்டமும்
கண்ணகன் றுறைந்த கடிநாள் அமயத்துத்
திண்ணி தாகுந் தெளிந்தனை ஆகுமதி ;
விரும்பிநீ பிடித்த வெண்மலர் வீழ்ச்சி
பொருந்திநீ யளக்கும் பொருவில் போகத்
திடையூ றுண்மை முடியத் தோன்றும் ;
வீழ்ந்த வெண்மலர் வெறுநிலம் படாது
தாழ்ந்த கச்சைநின் றுண்முதற் றங்கலின்
பிரிந்த போகம் பெயர்த்தும் பெறுகுவை ;
நிலத்துமிசை இருந்தனை ஆதலின் மற்றுநின்
தலைப்பெரு நகரமொடு நன்னாடு தழீஇக்
கொற்றங் கோடலு முற்றிய தாகி
முன்னிய நின்றவை முடியத் தோன்றுமென்
றெண்ணிய இப்பொருள் திண்ணிதின் எய்தும் ;
பெறும்பயம் இதுவெனப் பிழைத்தல் இன்றி
உறும்பெருஞ் சாரணர் உரைவே றுண்மையும்
இறுவாய் எழுச்சியும் இத்துணை யள'வென
உறுதவ முனிவன் உள்விரித் தொழியாது
வத்தவர் பெருமகன் தத்துற வகலக்
கழிபொரு ளெதிர்பொருட் கேது வாக
அழிபொரு ளன்றி யாகுபயங் கூறத்

உதயணன் உவத்தல்

'தக்கது மன்ற மிக்கோன் கூற்'றென
நட்புடைத் தோழனை நண்ணி யன்னதோர்

உட்புகன் றெழுதரும் உவகையன் ஆகிப்
பள்ளி மருங்கிற் பாவங் கழீஇ
வள்ளி மருங்குல் வாசவ தத்தையைக்
கூடுத லானாக் குறிப்பு முந்துறீஇ
ஆடுத லூற்றமொ டமர்ந்தனன் உவந்தென்.

அருஞ்சொற்பொருள் :

1–10. மலைவயின் ஆடி - மலைச்சாரலில் விளையாடிக்கொண்டிருக்கையில், **ஐம்பெருங்குழு** - அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், சாரணர் என்போர்; **எண்பேராயம்** - கரணத்தியலவர், கருமகாரகர், கனகச் சுற்றம், கடைகாப்பாளர், நகர மாந்தர், படைத் தலைவர், யானை வீரர், குதிரை வீரர் என்போர்; வேந்தன் - உதயணன், வீழ்பவை - விரும்புவனவாகிய இனிய காட்சிகளை, கவவி - (உதயணனைச்) சூழ்ந்து, உரிமைச் சுற்றம் - அந்தப்புரப் பெண்களை, பின்பட உய்த்து - பின்னே வரும்படி செய்து, தீது - காமம், வெகுளி, மயக்கம் ஆகிய முக்குற்றம், மூதறி முனிவன் - பழைமையான நூற்பொருளை அறிந்த முனிவர், பள்ளிமுன்னர் - தவம்புரியும் இடத்தில் உள்ள, பயமரம் - பயனைத் தருகின்ற மரம், கயமரம் - இழிந்த மரங்கள், கா - சோலை, இரீஇ - இருக்கச் செய்து, காவல் போற்றி - காவலையும் அமைத்து.

11–18. மன்னவன் காணும் கருமம் உண்மை - உதயண மன்னன் பார்க்கவேண்டிய காரியம் இருப்பதை, கிளப்ப - சொல்லுதலும், கடத்தினும் - கடப்பாட்டையும் (எண்ணி), இமையோர் இறைவன் - தேவர் தலைவனான இந்திரன், எதிர்கொண்டு ஓம்பும் - எதிர்சென்று வாழ்த்துகின்ற, அமையாது ஈட்டிய - இடைவிடாது செய்து சேர்த்த, முனிவரின் - முனிவரைப்போல (இன் - ஐந்தனுருபு 'ஒப்புப் பொருளது'), இயல்புளி - முறைப்படி.

19–30. அணி தகு பள்ளி - அருகிலுள்ள அழகிய ஆசிரமத்திலிருக்கும், பத்தி - வரிசை, இயற்றாத்தவிசு - கையால் செய்யப்படாத இயற்கையாய் அமைந்த ஆசனம், கவற்சி - கவலை, காண்தக - சிறக்க, ஒழுகுவரை - அருவி வீழும் மலை போன்ற, தடக்கை - உரிச்சொற்றொடர், பையாந்து - துன்பமுற்று, நினைப்பு உள் உறுத்த - குறிப்பை உள்ளே கொண்ட, இனத்தின் இரித்து - உடன் இருந்தாரைப் போகச் செய்து, துனிவு - வெறுப்பு, கூறும் - சொல்வான் ('செய்யும்' என் வாய்பாட்டு வினைமுற்று.)

31–40. உசிர் - உயிர் என்பதன் போலி (எதுகை நோக்கித் திரிந்தது என்றும் கூறலாம்), கண் அகன்று உறைந்த - (இராச்சியங்களைப் பிடித்துப்) பெரியனவாக்கி வாழ்ந்த, கடிநாள் - விளக்கமுற்ற நாள்

(உரிச்சொற்றொடர்), ஆகுமதி - 'மதி' முன்னிலை அசைச்சொல், பொருவு இல் - ஒப்பில்லாத, பெயர்த்தும் பெறுகுவை - மீண்டும் அடைவாய்.

41–46. தழீஇ - சொல்லிசை அளபெடை, கொற்றம் கோடலும் - அரசுரிமையைக் கொள்ளுதலும், முற்றியது ஆகி - முடிவாகப் பெற்று, முன்னிய - நீ நினைத்தவைகளும், நின்றவை - எஞ்சி நின்றவைகளும் ஆகிய, முடிய - முழுவதையும், தோன்றும் என்று - தோன்றப் பெறு வாய் என்றும், எண்ணிய இப்பொருள் - நீ கருதுகின்ற இப்பொருள் களை, திண்ணிதின் எய்தும் - தட்டாமல் அடைகின்ற, பெறும்பயம் இது - குறிக்கோட் பயன் இதுவாகும்.

46–52. சாரணர் உரைவேறு - சாரணருடைய உபதேசங்களும், இறுவாய் எழுச்சியும் - முடிவான வீடு பேறு கொள்ளலும், தத்துறவு அகல - மனத் தடுமாற்றம் நீங்கும்படி, கழிபொருள் - நிகழ்ந்த நிகழ்ச்சி, எதிர்பொருட்கு ஏது ஆக - பின் நிகழுங் காரியங்களுக்குக் காரணமாக.

52–59. மிக்கோன் - முனிவன், தக்கது - பலிக்கத் தக்கது ஆகும், தோழன் - யூகி என்னும் நண்பன், புகன்று - விரும்பி, பள்ளிமருங்கின் - தவப்பள்ளியைச் சார்ந்தமையினால், ஆறு - குறைவு படாத, குறிப்பு முந்துறீஇ - எண்ணங்கொண்டு, உவந்து அமர்ந்தனன் - மகிழ்ந்து வந்து தங்கினான்.

பயிற்சி வினாக்கள் :

1. ஐம்பெருங்குழு, எண்பேராயம்—குறிப்பு வரைக.

2. சோலையிலிருந்த முனிவர் உதயணனை வரவேற்ற முறையைத் தெரிவிக்க.

3. முனிவருக்கு முன்னே உதயணன் இருந்த நிலையைத் தெரிவிக்க.

4. உதயணனிடம் நிகழ்ந்த குறிகளைக் கொண்டு முனிவர் கூறிய பயன்கள் யாவை ?

5. குறிப்பயனைக் கேட்ட உதயணனுடைய மனநிலையைத் தெரிவிக்க.

6. 'இமையோர்.........முனிவரின்'—இதை விளக்கி உவமேயந் தருக.

7. இடஞ்சுட்டிப் பொருள் விளக்கந் தருக :—

(1) தக்கது மன்ற மிக்கோன் கூற்று.

(2) பிரிந்த போகம் பெயர்த்தும் பெறுகுவை.

8. பிரித்து எழுதுக :—கண்ணகன்றுறைந்த, வெந்திறல், மூதறிவு, அரும்பொருள், தத்துறவகல.

9. பகுபத உறுப்பிலக்கணந் தருக :—அமர்ந்தனன், பையாந்து, பெறுகுவை, தெளிந்தனை.

3. கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்

கிளை கண்டு நீங்கு படலம்

கம்பராமாயணம்: இது கம்பரது ராமாயணம் என விரியும். கம்பர் தமது நூலுக்கு இட்ட பெயர் **இராமாவதாரம்** என்பது. இதற்கு முதல் நூல் வடமொழியிலுள்ள வான்மீகி இராமாயணம். அது பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிஷ்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம், உத்தர காண்டம் என ஏழு காண்டங்களை-யுடையது. அவற்றுள் யுத்த காண்டம் முடிய உள்ள ஆறு காண்டங்களை மட்டும் கம்பர் தமிழில் பாடியுள்ளார்.

கம்பர் முதல் நூலின் கதைப் போக்கை முற்றிலுந்தழுவாது, தமிழ்ப் பெருமக்கள் விரும்பி ஏற்றுப் பயனடையும் வண்ணம் அதன் பகுதிகளிற் சிலவற்றை விடுத்தும் சிலவற்றை மாற்றியும், சிலவற்றைச் சேர்த்தும் விரித்தும் தமது காப்பியத்தைப் பாடியுள்ளார் என்பது அறியத் தக்கது.

கம்பர் சோழ நாட்டிலுள்ள திருவழுந்தூரில் உவச்சர் குலத்தில் பிறந்தவர். இவர் தந்தையார் ஆதித்தர் என்பவர். இவர் இளமையில் திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப் பெற்றவர்; வைணவ மதத்தினர். இவரது காலம் கி. பி. 12-ஆம் நூற்றாண்டு.

கம்பர் என்னும் பெயர் 'ஏகம்பர்' என்பதன் முதற்குறை என்பர் சிலர். 'கம்பநாடர்', 'கம்ப நாடுடைய வள்ளல்' என்று இவர் குறிக்கப்பட்டிருத்தலால், நாடு பற்றி வந்தது இப்பெயர் என்பர் சிலர். ஒரு சிலர், குலம் பற்றி வந்தது என்பர். எனினும், கம்பர் என்னும் பெயர் சாசனங்களில் இயற்பெயராய் வழங்கியிருப்பதை நாம் காண்கின்றோமாதலின், இதை இயற்பெயராகவே கொள்ள இடமுண்டு.

'கல்வியிற் பெரியன் கம்பன்', 'கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும்,' என்ற முதுமொழிகளும், 'விருத்தமென்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்', 'கல்வி சிறந்த தமிழ்நாடு—புகழ்க் கம்பன் பிறந்த தமிழ் நாடு' என்பன போன்ற புலவர் பாராட்டுரை-களும் கம்பரது பெரும்புகழினைப் புலப்படுத்தும். கவிச்சக்கர-வர்த்தி என்ற சிறப்புப் பெயரும் இவருக்குண்டு. இவர் இயற்றி-

யுள்ள வேறு நூல்கள் சரசுவதியந்தாதி, ஏரெழுபது, சிலை-யெழுபது, சடகோபரந்தாதி என்பன என்பர்.

கிளை கண்டு நீங்கு படலம்: இது இராமருடைய தாயார், தம்பியர் முதலிய சுற்றத்தாரெல்லாம் அயோத்தியிலிருந்து புறப்-பட்டுச் சித்திரகூட மலையை அடைந்து இராமரைக் கண்டு திரும்-பிய வரலாற்றைக் கூறும் பகுதி.

இராமன் திருவடிகளில் பரதன் வீழ்தல்

'அறந்தனை நினைந்திலை ; அருளை நீத்தனை ;
துறந்தனை முறைமையை,' என்னும் சொல்லினன்
மறந்தனன் மலரடி வந்து வீழ்ந்தனன்
இறந்ததன் தாதையை எதிர்கண் டென்னவே. 1

பரதனைக் கண்ட இராமர் கண்ணீர் பெருக்குதல்

உண்டுகொல் உயிரென ஒடுங்கி னானுருக்
கண்டனன் நின்றனன் கண்ணன் கண்ணெனும்
புண்டரி கம்பொழி புனல வன்சடா
மண்டலம் நிறைந்துபோய் வழிந்து சோரவே. 2

இராமர் பரதனைத் தழுவுதல்

அயாஉயிர்த் தழுகணீர் அருவி மார்பிடை
உயாவுறத் திருவுளம் உருகப் புல்லினன்
நியாயமத் தனைக்குமோர் நிலயம் ஆயினன்
தயாமுதல் அறத்தினைத் தழுவி என்னவே. 3

இராமர் தந்தையார் நலனைக் கேட்டல்

புல்லினன் நின்றவன் புனைந்த வேடத்தைப்
பல்வித நோக்கினன் பலவும் உன்னினன்
'அல்லலின் அணங்கினை ஐய ! ஆளுடை
மல்லுயர் தோளினன் வலிய னே ?' என்றான். 4

பரதன் விடை

அரியவன் உரைசெயப் பரதன், 'ஐய! நிற்
பிரிவெனும் பிணியினால் என்னைப் பெற்றஅக்
கரியவள் வரமெனும் கால னால்தனக்
குரியமெய் நிறுவிப்போய் உம்ப ரான்!' என்றான். 5

இராமர் மண்ணில் வீழ்தல்

'விண்ணிடை அடைந்தனன்,' என்ற வெய்யசொல்
புண்ணிடை அயிலெனச் செவிபு காமுனம்
கண்ணொடு மனஞ்சுழல் கறங்கு போலஆய்
மண்ணிடை விழுந்தனன் வானின் உம்பரான். 6

இராமர் சிறிது தெளிந்து புலம்புதல்

'சொற்பெற்ற நோன்பின் துறையோன் அருள்வேண்டி
நற்பெற்ற வேள்வி நவைநீங்க நீஇயற்றி
எற்பெற்று நீபெற்ற தின்னுயிர்போய் நீங்கலோ?
கொற்பெற்ற வெற்றிக் கொலைபெற்ற கூர்வேலோய்! 7

'தேனடைந்த சோலைத் திருநாடு கைவிட்டுக்
கானடைந்தேன் என்னத் தரியாது காவல!நீ
வானடைந்தாய்! இன்னம் இருந்தேன்நான் வாழ்வுகந்தே!
ஊனடைந்த தெவ்வர் உயிரடைந்த ஒள்வேலோய்!' 8

[இராமர் தந்தையார்க்கு நீர்க்கடன் ஆற்றினர். சீதை செய்தி அறிந்து வருந்தினள். மறுநாள்]

இராமர் பரதனை வினவுதல்

'வரதன் துஞ்சினன்; வையம் ஆணையால்
சரதம் நின்னதே; மகுடம் தாங்கலாய்
விரத வேடம்நீ என்கொல் வேண்டினாய்!
பரத! கூறு,'எனாப் பரிந்து கூறினன். 9

பரதன் கூறுதல்

'மனக்கொன் றுதன வரத்தின் நின்னையும்
நினக்கொன் றுநிலை நிறுவி நேமியான்
தனைக்கொன் றுள்தரும் தனயன் ஆதலால்
எனக்கொன் றுதவம் அடுப்ப தெண்ணினால்! 10

'நோவ தாகவிவ் வுலகை நோய்செய்த
பாவ காரியிற் பிறந்த பாவியேன்
சாவ தோர்கிலேன்! தவஞ்செய் வேனலேன்!
யாவ னாகியிப் பழிநின் றேறுவேன்! 11

'உந்தை தீமையும் உலகு ருதநோய்
தந்த தீவினைத் தாய்செய் தீமையும்
எந்தை! நீங்கமீண் டரசு செய்கெனச்
சிந்தை யாவதும் தெரியக் கூறினன். 12

இராமர் பரதனுக்குக் கூறுதல்

'தாய்வ ரங்கொளத் தந்தை ஏவலால்
மேய நங்குலத் தருமம் மேவினேன்;
நீவ ரங்கொளத் தவிர்தல் நீர்மையோ?
ஆய்வ ரும்புலத் தறிவு மேவினய்! 13

'தனயர் ஆயினர் தந்தை தாயரை
வினையின் நல்லதோர் இசையை வேய்தலோ,
நினையல் ஓவிடா நெடிய வன்பழி
புனைத லோஐய! புதல்வர் ஆதல்தான்? 14

'வரனில் உந்தைசொல் மரபி னுலுடைத்
தரணி நின்னதென் றியைந்த தன்மையால்
உரனின் நீபிறந் துரிமை ஆதலால்
அரசு நின்னதே; ஆள்க,' என்னவே 15

பரதன் இராமரை வேண்டுதல்

'முன்னர் வந்துதித் துலகம் மூன்றினும்
நின்னை ஒப்பிலா நீபி றந்தபார்
என்ன தாகில்யான் இன்று தந்தனென்;
மன்ன! போந்துநீ மகுடம் சூடென 16

'மலங்கி, வையகம் வருந்தி வைகநீ
உலங்கொள் தோளுனக் குறுவ செய்தியோ?
கலங்கு ருவணம் காத்தி போந்தெனப்
பொலங்கு லாவுதாள் பூண்டு வேண்டினன். 17

அருஞ்சொற்பொருள் :

1. வந்து - (பரதன் அருகில்) வந்து, இறந்ததன் தாதையை - தசரதனை, முறைமையை துறந்தனை - நீதியை விலக்கினய், மறந்தனன் - மறந்து (முற்றெச்சம்), மலரடி - உவமைத் தொகை.

2. ஒடுங்கினன் - உடல் மெலிந்துள்ள பரதனது, கண்ணன் - இராமன், புண்டரிகம் - தாமரை மலர்கள், சோர - வழிய.

3. அயா உயிர்த்து - தளர்ச்சியினல் பெருமூச்சுவிட்டு, உயா உற- வழிந்து பெருகவும், தயா முதல் - அருளையுடைய முதற்கடவுள், அறத்தினை - அறக்கடவுளை.

4. அல்லலில் அழுங்கினை - நீ துன்பத்தில் மூழ்கியிருக்கின்ருய், மல்லுயர் தோளினன் - தசரதன், வலியனே - நலமாய் இருக்கின்ருனே?

5. காலன் - எமன், மெய் நிறுவி - வாய்மையை இவ்வுலகத்தில் நிற்குமாறு செய்துவிட்டு, உம்பரான் - விண்ணுலகையுடையன் ஆயினன்.

6. வானின் உம்பரான் - இராமன், கறங்கு - காற்ருடி.

7. சொல் - புகழ், நோன்பின் துறையோன் - கலைக்கோட்டு முனிவன், நவை - குற்றம்.

8. ஊன் அடைந்த - உடல் பருத்த, தெவ்வர் - பகைவர், கான் - காடு, தரியாது - பொறுக்கமாட்டாமல்.

9. சரதம் - உண்மையாக, மகுடம் தாங்கலாய் - முடி சூடிக்கொள்ளாமல், பரிந்து கூறினன் - விரும்பிக் கேட்டான்.

11. நோவது ஆக - வருந்தும்படி, பாவகாரி - பாவஞ் செய்தவளாகிய கைகேயி, சாவது ஒர்கிலேன் - இறக்கத் துணிந்தேனில்லை.

13. புலத்து - நூல்களின், மேவினய் - பெற்றவனே, நம் குலம் தருமம் - நம் குலத்துக்கு ஏற்ற ஒழுக்கத்தை, மேவினேன் - விரும்பி மேற்கொண்டேன்.

14. வினையின் - தம் செயல்களால், இசை - புகழ், வேய்தலோ - போர்த்தலோ (உண்டாக்குதலோ), புனைதலோ - சூட்டுதலோ.

15. வரன்நில் - (கைகேயிக்குக் கொடுத்த) வரத்தில் தவருது நின்ற, மரபினல் - முறையால்.

16. நீ பிறந்த - நீ ஆளப்பிறந்த, பார் - பூமி, நீ போந்து - நீ திரும்பி வந்து.

17. மலங்கி - கலங்கி, உலங்கொள் - கல்லைப் போன்ற, உறுவ - நன்மை உண்டாகக்கூடிய செயல்களை மட்டும், காத்தி - பாதுகாப்பாயாக (ஏவல் ஒருமை வினைமுற்று), பொலம் - அழகு.

பயிற்சி விஞக்கள் :

1. கம்பரைப் பற்றியும் கம்ப ராமாயணத்தைப் பற்றியும் குறிப்பு வரைக.

2. பரதனைக் கண்ட இராமரது நிலையை விவரிக்க.

3. 'மல்லுயர் தோளினன் வலியனே?' என்ற இராமருக்குப் பரதன் கூறிய பதில் யாது?

4. தந்தையார் விண்ணுலகடைந்தார் என்பதை அறிந்த இராமர் என்ன கூறிப் புலம்பினர்?

5. 'தவக்கோலம் தாங்கியது ஏன்? என்ற இராமருக்குப் பரதன் கூறியவை யாவை?

6. அரசாட்சியை ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிய பரதனுக்கு இராமர் கூறிய அறவுரைகள் யாவை?

7. இராமர் மீண்டும் அயோத்திக்கு வந்து முடி சூடுதலே தக்கது என்பதைப் பரதன் எவ்வாறு வற்புறுத்தினான்?

8. கீழ்வரும் உவமைகளின் பொருத்தத்தைப் புலப்படுத்துக :—

(1) தயாமுதல் அறத்தினைத் தழுவி என்ன

(2) புண்ணிடை அயிலென

9. இடங்காட்டி விளக்குக :—

(1) அறந்தனை நினைந்திலை; அருளை நீத்தனை.

(2) எற்பெற்று நீ பெற்றது இன்னுயிர் போய் நீங்கலோ?

(3) உலங்கொள் தோளுனக் குறுவ செய்தியோ?

10. பிரித்தெழுதுக :—

இன்னுயிர், ஒள்வேல், வாழ்வுகந்து

11. பகுபத இலக்கணம் தருக :—

நினைந்திலை, கண்டனன், விழுந்தனன், பெற்ற, காத்தி தந்தனென்.

4. பெரியபுராணம்

மெய்ப்பொருள் நாயனார் புராணம்

பெரியபுராணம் : இது, செயற்கரிய செய்த பெரியோர்களின் வரலாற்றை உணர்த்தும் நூல். (பெரியர்+புராணம்= பெரியபுராணம்) இதற்கு ஆசிரியர் இட்ட பெயர் **திருத்தொண்டர் புராணம்** என்பதாகும்.

இந்நூல் சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய திருத்தொண்டத் தொகையையும், நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திருவந்தாதியையும் அடிப்படையாகக் கொண்டது; தேவார ஆசிரியர்களின் சரிதங்களைக் கூறுமிடத்துத் தேவாரப் பதிகங்களின் கருத்தையும் சொல்லையும் தழுவிச் செல்வது; சைவ சமயத்தைச் சார்ந்த தனி அடியார் அறுபத்து மூவர், தொகை அடியார் ஒன்பதின்மர் ஆகிய இவர்கள் சரிதைகளையும், இயல்புகளையும் 'தெய்வ மணக்கும் செய்யுள்'களால் எடுத்தியம்புவது.

இப்புராணம் இரண்டு காண்டங்களடங்கிய பதின்மூன்று சருக்கங்களையுடையது ; 4286 பாடல்களைக் கொண்டது.

நமது பாடப்பகுதி முதற்காண்டத்துள் தில்லைவாழ் அந்தணர் சருக்கத்து ஐந்தாவதாய் அமைந்துள்ளது.

சேக்கிழார் : இப்புராணத்தின் ஆசிரியர் **சேக்கிழார்.** இவர் தொண்டை மண்டலத்தில் குன்றத்தூரில் சைவ வேளாளர் குலத்தில் சேக்கிழார் குடியிற்பிறந்தவர். சேக்கிழார் குடியிற் பிறந்து சிறந்து விளங்கினமையால், குடிப் பெயராகிய 'சேக்கிழார்' என்பதனுலேயே வழங்கப்பட்டார். இவரது இயற்பெயர் அருண்மொழித் தேவர் என்பது. இவர் அநபாய சோழருக்கு (இரண்டாங்குலோத்துங்க சோழருக்கு) முதன்மந்திரியாராயிருந்தவர்; உத்தம சோழப் பல்லவன் என்ற சிறப்புப் பெயர் பெற்றவர்; அரசர் வேண்டுகோளுக்கிசைந்து இந்நூலைப் பாடியருளினுர். இவர் காலம் கி. பி. 12-ஆம் நூற்ருண்டின் முற்பகுதியாகும்.

மெய்ப்பொருள் நாயனுரின் சிவ அன்பு

சேதிநன் ஞட்டு நீடு
  திருக்கோவ லூரின் மன்னி
மாதொரு பாகர் அன்பின்
  வழிவரு மலாடர் கோமான்
வேதநன் னெறியின் வாய்மை
  விளங்கிட மேன்மை பூண்டு
காதலால் ஈசர்க் கன்பர்
  கருத்தறிந் தேவல் செய்வார். 1

அரசியல் நெறியின் வந்த
  அறநெறி வழாமற் காத்து
வரைநெடுந் தோளால் வென்று
  மாற்றலர் முனைகள் மாற்றி
உரைதிறம் பாத நீதி
  ஓங்குநீர் மையினில் மிக்கார்
திரைசெய்நீர்ச் சடையான் அன்பர்
  வேடமே சிந்தை செய்வார். 2

மங்கையைப் பாக மாக
  உடையவர் மன்னுங் கோயில்
எங்கணும் பூசை நீடி
  ஏழிசைப் பாட லாடல்

பொங்கிய சிறப்பின் மல்கப்
போற்றுதல் புரிந்து வாழ்வார்
தங்கள்நா யகருக் கன்பர்
தாளலாற் சார்பொன் றில்லார். 3

நாயனுர் சிவனடியாரிடம் காட்டிய அன்பு

'தேடிய மாடும் நீடு
செல்வமும் தில்லை மன்றுள்
ஆடிய பெருமான் அன்பர்க்
காவன வாகும்,' என்று
நாடிய மனத்தி னேடு
நாயன்மார் அணைந்த போது
கூடிய மகிழ்ச்சி பொங்கக்
குறைவறக் கொடுத்து வந்தார். 4

பகையரசனது வீழ்ச்சி

இன்னவா றெழுகு நாளில்
இகல்திறம் புரிந்தோர் மன்னன்
அன்னவர் தம்மை வெல்லும்
ஆசையால் அமர்மேற் கொண்டு
பொன்னணி ஓடை யானை
பொருபரி காலாள் மற்றும்
பன்முறை இழந்து தோற்றுப்
பரிபவப் பட்டுப் போனன். 5

தோற்றவன் செய்த சூழ்ச்சி

இப்படி இழந்த மாற்றுன்
இகலினல் வெல்ல மாட்டான்
மெய்ப்பொருள் வேந்தர் சீலம்
அறிந்துவெண் ணீறு சாத்தும்
அப்பெரு வேடங் கொண்டே
அற்றத்தில் வெல்வா னுகச்
செப்பரு நிலைமை எண்ணித்
திருக்கோவ லூரிற் சேர்வான் 6

முத்தநாதன் சிவனடியார் வேடம் புனைதல்

மெய்யெலாம் நீறு பூசி
வேணிகள் முடித்துக் கட்டிக்
கையினிற் படைக ரந்த
புத்தகக் கவளி ஏந்தி
மைபொதி விளக்கே என்ன
மனத்தினுள் கறுப்பு வைத்துப்
பொய்தவ வேடங் கொண்டு
புகுந்தனன் முத்த நாதன். 7

முத்தநாதன் அரண்மனையைச் சேர்தல்

மாதவ வேடங் கொண்ட
வன்கணன் மாடந் தோறும்
கோதைசூழ் அளக பாரக்
குழைக்கொடி யாட மீது
சோதிவெண் கொடிகள் ஆடுஞ்
சுடர்நெடு மறுகிற் போகிச்
சேதியர் பெருமான் கோயிற்
றிருமணி வாயிற் சேர்ந்தான். 8

வாயிற்காவலன் போலி அடியாரை யாரென வினவுதல்

கடையுடைக் காவ லாளர்
கைதொழு தேற நின்றே,
'உடையவர் தாமே வந்தார்
உள்ளெழுந் தருளும்,' என்னத்
தடைபல புக்க பின்பு
தனித்தடை நின்ற தத்தன்,
'இடைதெரிந் தருள வேண்டும்;
துயில்கொளும் இறைவன்,' என்றான். 9

முத்தநாதன் அரசமாதேவியாரைக் காணல்

என்றவன் கூறக் கேட்டே,
'யானவற் குறுதி கூற
நின்றிடு நீயும்,' என்றே
அவனையும் நீக்கிப் புக்குப்

பொன்றிகழ் பள்ளிக் கட்டில்
புரவலர் துயில மாடே
மன்றலங் குழல்மென் சாயல்
மாதேவி இருப்பக் கண்டான். 10

அரசன் போலி அடியாரை வணங்குதல்

கண்டுசென் றணையும் போது
கதுமென எழுந்து தேவி
வண்டலர் மாலை யாரை
எழுப்பிட உணர்ந்து மன்னர்,
'அண்டர்நா யகனார் தொண்டர்
ஆம்,'எனக் குவித்த செங்கை
கொண்டிழிந் தெதிரே சென்று
கொள்கையின் வணங்கி நின்று 11

முத்தநாதன் அரிய ஆகம நூலைக் கொண்டுவந்ததாகக் கூறுதல்

'மங்கலம் பெருக மற்றென்
வாழ்வுவந் தணைந்த தென்ன
இங்கெழுந் தருளப் பெற்ற
தென்கொலோ?' என்று கூற,
'உங்கள்நா யகனார் முன்னம்
உரைத்தவா கமநூல் மண்மேல்
எங்குமில் லாத தொன்று
கொடுவந்தே னியம்ப,' என்றான். 12

நாயனார் தேவியாரை அறையை விட்டுச் செல்லுமாறு கூறுதல்

'பேறெனக் கிதன்மேல் உண்டோ?
பிரான்அருள் செய்த இந்த
மாறிலா கமத்தை வாசித்
தருள்செய வேண்டும்!' என்ன,
'நாறுபூங் கோதை மாது
தவிரவே நானும் நீயும்
வேறிடத் திருத்தல் வேண்டும்,'
என்றவன் விளம்ப,வேந்தர் 13

திருமகள் என்ன நின்ற
தேவியார் தம்மை நோக்கிப்
பரிவுடன் விரைய அந்தப்
புரத்திடைப் போக ஏவித்
தருதவ வேடத் தானைத்
தவிசின்மே லிருத்தித் தாமும்
இருநிலத் திருந்து போற்றி,
'இனியருள் செய்யும்,' என்றார். 14

முத்தநாதன் ஆகமநூலை எடுப்பதுபோலக் கத்தியை எடுத்து நாயனார்மீது வீசுதல்

கைத்தலத் திருந்த வஞ்சக்
கவளிகை மடிமேல் வைத்துப்
புத்தகம் அவிழ்ப்பான் போன்று
புரிந்தவர் வணங்கும் போதில்
பத்திரம் வாங்கித் தான்முன்
நினைந்தஅப் பரிசே செய்ய
'மெய்த்தவ வேட மேமெய்ப்
பொருள்!'எனத் தொழுது வென்றார். 15

நாயனாரைக் காப்பாற்றத் தத்தன் வந்த போது அவர் முத்தநாதனைக் காப்பாற்றக் கட்டளையிடுதல்

மறைத்தவன் புகுந்த போதே
மனமங்கு வைத்த தத்தன்
இறைப்பொழு தின்கட் கூடி
வாளினால் எறிய லுற்றான்;
நிறைத்தசெங் குருதி சோர
வீழ்கின்றார் நீண்ட கையால்
தறைப்படும் அளவில், 'தத்தா!
நமர்!'எனத் தடுத்து வீழ்ந்தார். 16

நாயனார் முத்தநாதனைத் தீங்கின்றி நகர எல்லையிற் கொண்டுபோய் விடும்படி தத்தனுக்குப் பணித்தல்

வேதனை யெய்தி வீழ்ந்த
வேந்தரால் விலக்கப் பட்ட

தாதனுந் தத்தன் தானும்
  தலையினால் வணங்கித் தாங்கி,
'யாதுநான் செய்கேன்?' என்ன,
  'எம்பிரான் அடியார் போக
மீதிடை விலக்கா வண்ணம்
  கொண்டுபோய் விடுநீ,' என்றார். 17

அரசரது ஆணையைக் கூறித் தத்தன் முத்தநாதனைக் கொல்ல வந்தவரைத் தடுத்தல்

அத்திறம் அறிந்தா ரெல்லாம்,
  'அரசனைத் தீங்கு செய்த
பொய்த்தவன் தன்னைக் கொல்வோம்!'
  எனப்புடை சூழ்ந்த போது
தத்தனும் அவரை யெல்லாம்
  தடுத்துடன் கொண்டு போவான்,
'இத்தவன் போகப் பெற்ற
  திறைவன தாணை,' என்றான். 18

முத்தநாதனை நகர எல்லையில் விட்டு வந்த தத்தன் மெய்ப்பொருள் நாயனார்முன் நிற்றல்

அவ்வழி யவர்க ளெல்லாம்
  அஞ்சியே யகல நீங்கச்
செவ்விய நெறியில் தத்தன்
  திருநகர் கடந்து போந்து
கைவடி நெடுவாள் ஏந்தி
  ஆளுருக் கானஞ் சேர
வெவ்வினைக் கொடியோன் றன்னை
  விட்டபின் மீண்டு போந்தான். 19

மற்றவன் கொண்டு போன
  வஞ்சனை வேடத் தான்மேல்
செற்றவர் தம்மை நீக்கித்
  தீதிலா நெறியில் விட்ட

சொற்றிறங் கேட்க வேண்டிச்
சோர்கின்ற ஆவி தாங்கும்
கொற்றவர் முன்பு சென்ருன்
கோமகன் குறிப்பில் நின்ருன். 20

நாயஞர் தத்தனுக்குத் தமது நன்றியைத் தெரிவித்தல்

'சென்றடி வணங்கி நின்று,
செய்தவ வேடங் கொண்டு
வென்றவற் கிடையூ றின்றி
விட்டனன்,' என்று கூற,
'இன்றெனக் கையன் செய்த
தியார்செய வல்லார்!' என்று
நின்றவன் தன்னை நோக்கி
நிறைபெருங் கருணை கூர்ந்தார். 21

நாயஞர் எல்லோரையும் சிவத்தொண்டு செய்யத் தூண்டுதல்

அரசிய லாயத் தார்க்கும்
அழிவுறு காத லார்க்கும்
விரவிய செய்கை எல்லாம்
விளம்புவார், 'விதியி ஞலே
பரவிய திருநீற் றன்பு
பாதுகாத் துய்ப்பீர்,' என்று
புரவலர் மன்று ளாடும்
பூங்கழல் சிந்தை செய்தார். 22

நாயஞருக்கு இறைவர் காட்சியளித்தல்

தொண்டஞர்க் கிமயப் பாவை
துணைவஞ ரவர்முன் தம்மைக்
கண்டவா றெதிரே நின்று
காட்சிதந் தருளி மிக்க
அண்டவா னவர்கட் கெட்டா
அருட்கழல் நீழல் சேரக்
கொண்டவர் இடைய ருமற்
கும்பிடுங் கொள்கை ஈந்தார். 23

அருஞ்சொற்பொருள் :

1. சேதி நாடு - சேதியர் நாடு; இது திருமுனைப்பாடி நாடு எனவும் வழங்கி வந்தது; தொண்டை நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் நடுவிலுள்ள நிலப்பகுதியாதலின் 'நடு நாடு' எனவும் வழங்கப்பட்டு வந்தது. மலாடர் - மலையமான் நாட்டவர், மேன்மை - மேலான அற ஒழுக்கம் (பண்பாகு பெயர்).

2–3. மாற்றலர் - பகைவர், முனைகள் - போர் செய்யுமிடங்கள், மாற்றி - அழித்து (வென்று), உரைதிறம்பாத - சொன்னசொல் தவறாத, ஏழிசை - (குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்னும்) ஏழு இராகங்கள், சார்பு - பற்றுக்கோடு. பாடல் ஆடல் - உம்மைத் தொகை.

4. மாடு - செல்வம், நீடு செல்வம் - முன்னோர் தேடிய பொருள் (பூர்விகச் சொத்து), தில்லை - சிதம்பரம், மன்று - பொன்னம்பலம், ஆவன ஆகும் - உரியனவாகும்.

5. இகல் திறம் புரிந்து - மாறுபாடு கொண்டு, ஓடை - நெற்றிப் பட்டம், பொருபரி - போர் செய்கின்ற குதிரை (வினைத்தொகை), பரிப வப்பட்டு - அவமானமடைந்து.

6. சீலம் - நல்லொழுக்கம், மாற்றான் - பகைவனாகிய முத்தநாதன், இகல் - வலிமை, அற்றத்தில் - சமயம் பார்த்து, செப்பரு நிலைமை - வாயினால் சொல்வதற்கும் கூடாத தீய செயல்.

7. நீறு - திருநீறு (விபூதி), வேணிகள் - சடைகள், படை கரந்த - ஆயுதத்தை மறைத்துள்ள, கவளி - பை, மைபொதி விளக்கு - திரியின் கருமையைத் தன்னுள் மறைய வைத்துக்கொண்டுள்ள விளக்கு, பொய் - பொய்த்த, பொய் தவம் - வினைத்தொகை.

8. வன்கணன் - கொடியவன் (முத்தநாதன்), கோதை - மாலை, கொடி - கொடி போன்ற மகளிர் (உவமையாகு பெயர்), மறுகு - தெரு, கோயில் - அரண்மனை.

9. கடைஉடை - வாயிலில் உள்ள, கை தொழுது ஏற நின்று - கைகள் குவிந்து தலையிலேற நின்று, உடையவர் - சிவனடியார், இடை தெரிந்து - சமயம் அறிந்து, அருளல் - எழுந்தருளல்.

10. உறுதிகூற - உண்மையை எடுத்துரைக்குமாறு, 'நீயும் நின்றிடு,' என்க. பள்ளி - படுக்கையறை, புரவலர் - அரசர், மாடு - பக்கத்தில், மன்றல் - வாசனை, குழல் - கூந்தல், சாயல் - அழகு (மென்மை).

11. கதும் என - விரைவாக, இழிந்து - இறங்கி, அண்டர் நாயகனார் - தேவர்களுக்குத் தலைவரான சிவபெருமான், கொள்கையின் - விதிமுறைப்படி.

12. மங்கலம் - நன்மை, ஆகம நூல் - சைவ ஆகம சாஸ்திரம், கொடுவந்தேன் - கொண்டு வந்தேன்.

13. நாறு - மணம் வீசுகின்ற, வேந்தர் - மெய்ப்பொருள் நாயனார்.

14. பரிவு - அன்பு, அந்தப்புரம் - பெண்கள் வசிக்குமிடம், தரு - (பொய்யாகக்) கொண்ட, வேடத்தான் - முத்தநாதன், தவிசு - ஆசனம்.

15. அவிழ்ப்பான் - அவிழ்ப்பவன் (வினையாலணையும் பெயர்), மெய்த்தவ வேடமே - மெய்ப் பொருளாகக் கொண்ட தவவேடத்தையே, மெய்ப்பொருள் - உண்மைப் பொருள், வென்ருர் - (தம் கொள்கையில் தவருது) வெற்றி பெற்ருர்.

16. மறைத்தவன் - (தன்னைப் பொய் வேடத்தில்) மறைத்துக் கொண்டிருந்த முத்தநாதன், இறைப்பொழுதின் கண் - சிறிது நேரத்திற்குள், எறியலுற்ருன் - வெட்டத் தொடங்கினன், நமர் - நம்மவர்.

17. நான் யாது செய்கேன் - அடியேன் என்ன செய்ய வேண்டும், போக - போகும்போது, மீதிடை விலக்கா வண்ணம் - இனிமேல் நடுவழியில் காவலர் தடுக்காதபடி.

18. இத்தவன் போகப் பெற்றது - இந்தத் தவவேடத்தையுடையவன் போகுமாறு நேர்ந்தது.

19. வடி நெடுவாள் - கூர்மையான நீண்ட வாள், ஆள் உருக் கானம் - மனித சஞ்சாரமில்லாத காடு.

20. செற்றவர் தம்மை - கோபங் கொண்டு கொல்ல வந்தவர்களை.

21. நிறைபெருங்கருணை கூர்ந்தார் - மிகுந்த பேரருளைச் செய்தார்.

22. ஆயத்தார் - சுற்றத்தார், அழிவுறும் - மனம் வருந்துகின்ற, காதலார் - விருப்பமுள்ளவர், கழல் - பாதம் (தானியாகுபெயர்).

பயிற்சி வினுக்கள் :

1. மெய்ப்பொருள் நாயனரின் நல்லியல்புகளைத் தெரிவிக்க.
2. நாயனர் சிவனடியாரிடம் எவ்வாறு அன்பு காட்டி வந்தார் ?
3. முத்தநாதன் பொய் தவவேடங்கொண்டு திருக்கோவலூரை அடைந்தது ஏன் ?
4. முத்தநாதன் கொண்ட பொய் தவவேடத்தைச் சேக்கிழார் எங்ஙனம் தெரிவித்துள்ளார் ?
5. சேக்கிழார் தீய செயல்களை வாயால் சொல்லவும் கூசுபவர் என்பதை எவற்ருல் அறியலாம் ?
6. மெய்ப்பொருள் நாயனர் என்னும் பெயர் அரசருக்கு எவ்வாறு பொருந்தும் என்பதைச் சான்றுகளுடன் விளக்குக.
7. மெய்ப்பொருள் நாயனர் அரசியல் ஆயத்தார்க்கும் அழிவுறு காதலார்க்கும் கூறிய அறிவுரை யாது ?
8. ' மைபொதி விளக்கு '—இது எதை விளக்க வந்த உவமை ?
9. இடம் சுட்டிப் பொருள் விளக்கந் தருக :—
   (1) உடையவர் தாமே வந்தார் உள்ளெழுந்தருளும்.
   (2) இடை தெரிந்தருள வேண்டும்; துயில் கொளும் இறைவன்.

(3) யான் அவற்குறுதி கூற நின்றிடு நீயும்.
(4) இத்தவன் போகப் பெற்றது இறைவனதாணை.
(5) இன்றெனக் கையன் செய்தது யார் செய வல்லார் ?

10. பிரித்து எழுதுக :—நன்னெறி, மன்றலங்குழல், செங்குருதி, வெவ்வினை, பூங்கழல்.

11. பகுபத உறுப்பிலக்கணந் தருக :—கண்டான், விட்டனன், செய்கேன், ஈந்தார், கடந்து, விரவிய, வென்றூர்.

5. வில்லி பாரதம்

துரோண பருவம்

வில்லி பாரதம் : வில்லிபுத்தூர் ஆழ்வாரால் இயற்றப்பட்ட பாரதம் என்பது இதன் பொருள். பாரதத்தை முதன்முதல் **வேதவியாசர்** என்னும் முனிவர் வடமொழியில் இயற்றினர். அது **வியாச பாரதம்** எனப்படும். அதைத் தழுவியே இவ்வில்லி பாரதம் இயற்றப்பட்டுள்ளது. வில்லிபுத்தூராழ்வாரைத் தவிர, பெருந்தேவனுர் **நல்லாப்பிள்ளை** என்பவர்களும் தமிழில் பாரதம் பாடியுள்ளார்கள்.

பாரதம் 18 பருவங்களையுடையது. வில்லிபுத்தூரார் தமது பாரதத்தில் 50 சருக்கங்களையுடைய முதற்பத்துப் பருவங்களை 4351 பாடல்களில் பாடியுள்ளார். வில்லி பாரதம் படித்து இன்புறுதற்குரிய ஒரு பெருநூல்.

வில்லிபுத்தூராழ்வார் : இவர் திருமுனைப்பாடி நாட்டில் சனியூரில் அந்தணர் மரபில் தோன்றியவர். இவர் தந்தையார், **வீரராகவாசாரியார் ;** மைந்தர், **வரந்தருவார்.** வில்லிபுத்தூராழ்வாரை ஆதரித்தவன் **வக்கபாகையை** ஆண்ட கொங்கர்குல வேந்தனுகிய **வரபதியாட்கொண்டான்** என்னும் சிற்றரசன். வில்லிபுத்தூரார் காலம் ஏறத்தாழ 450 ஆண்டுகளுக்கு முன்னது என்பர்.

துரோண பருவம் : இப்பருவம் பாரதப் போரில் பதினேராம் நாள் முதல் பதினைந்தாம் நாள் வரையில் துரோணுசாரியர் கௌரவர் படைக்குத் தலைவராயிருந்து போர் நடத்திய காலத்து நிகழ்ந்தனவெல்லாம் கூறும் பிரிவு. இங்கு வந்துள்ள பாடப்பகுதி துரோண பருவத்திலுள்ள ஐந்து சருக்கங்களில் '**பதின்மூன்றும் போர்ச் சருக்கம்**' என்னும் உட்பிரிவில் அடங்கியது. இச்சருக்கம் பதின்மூன்றும் நாட்போரில் **சயத்திரதன்** அருச்-

சுனனுடைய அரும்பெறற்புதல்வனாகிய அபிமன்னியுவை வஞ்சனையாற்கொன்றதையும், அருச்சுனன் ஆற்ருெணுத் துயரடைந்ததையும், அதன் பின்னர் அவன் அரியதொரு சூள் உரைத்ததையும், அது நிறைவேற அவன் கண்ணனேடு கைலை சென்று சிவபெருமானிடம் வில், அம்பு முதலியன பெற்று வந்ததையும், இதற்குள் கடோற்கசன் தருமபுத்திரர் ஏவலின்படி துரியோதனனிடம் தூது சென்று திரும்பியதையும் கூறும்.

கடோற்கசன் வீமனுக்கு இடும்பி என்னும் அரக்கி வயிற்றிற் பிறந்தவன் ; நேர்மையும், ஆண்மையும், பெரியோர்க்குக் கீழ்ப்படிந்தொழுகும் தன்மையும் உடையவன்.

தருமபுத்திரர் கடோற்கசனுக்குக் கூறுதல்

இங்கிவர் மூவரும் ஏகினர்
மீளுமுன் எறிமுரச க்கொடியோன்
அங்குரை யாடிய துரைசெயின்
மண்மிசை யார்விய வாதொழிவார் !
பங்குன னேதிய வஞ்சின
மும்பசு பதியிடை யேகியதும்
கங்குலின் ஏவினன் 'உரைசெய்க,'
என்றுக டோற்கச மீளியையே. 1

கடோற்கசன் வினவுதல்

மற்றவன் முந்துறு தந்தையை
வந்துவ ணங்கி,'முன் வஞ்சனையிற்
சென்றவர் தம்முட னுற்றது
சொல்வது சேவக மோ,அறிவோ ?
கொற்றவர் மாமுடி கமழ்கழ
லாய்!வலி கூர்திற லுஞ்செயலும்
அற்றவர் போலவு ரைப்பதென் ?'
என்றுள ழன்றுபு கன்றனனே. 2

தருமபுத்திரர் கட்டுரை

'திறனறி யாமலு ரைத்தனை
மாருதி சிறுவனெ னும்படிநீ ;
மறநெறி யன்று ;வ யிர்த்தவர்
சொல்வது வஞ்சனை யோவிரகோ ?

அறநெறி யேபொரு தல்லது
வெல்லுதல், ஆண்மைகொ லோ,அழகோ ?
விறல்நெறி யாவது பொய்யில
வென்றனன் மெய்ம்மையு ணர்ந்திடுவான். 3

கடோற்கசன் துரியோதனனிடம் வருதல்

நிருதன கைத்துவ ணங்கிநி
ணங்கமழ் நீளிலே வேலினெடுங்
கருதலர் துற்றிய பாசறை
யன்றொர்க ணப்பொழு திற்புகுதா,
ஒருதனி லக்கண மைந்தனி
றந்தனன் என்றமு துள்ளழியும்
விருதுடை வித்தகன் வாயிலின்
நின்றுவி ளித்தன னேருரையே. 4

கடோற்கசன் தன் வருகையை அறிவித்தல்

எதிரெதிர் கொற்றவன் வாயிலின்
நின்றவர் யாரென எய்துதலும்,
'அதிர்முர சக்கொடி யோனர
வக்கொடி யரசனி டைப்பகர்வான்
முதிரவு ரைத்ததொர் மொழியுள
தச்சொன்மொ ழிந்திட வந்தனன்;யான்
எதிரறு வெற்றிய ரிக்கொடி
யோன்மகன்,' என்றனன் விக்ரமனே. 5

கடோற்கசன் தான் சொல்ல வந்த செய்தியைச் சொல்லுதல்

அம்மொழி தீயுரு மேறென
நீடவை யரசர்செ விப்படவோர்
செம்மொழி யற்றவன் மொழிவழி
சென்றொரு சிறிதும தித்தருளான்,
' நும்மொழி விட்டொரு மெய்ம்மொழி
கேண்ம்,'என நோதகு நெஞ்சினனும்,
' வெம்மொழி வித்தக ! எம்மொழி
நுந்தைதன் மெய்ம்மொழி?' என்றனனே. 6

‘ தன்றிரு மைந்தனை மௌலிது
ணித்தச யத்திர தன்றனை‘வாள்
வென்றிகொள் காவலர் காவன்மி
குப்பினும் வெயிலவன் வீழ்வதன்முன்
கொன்றிடு வேன்!அது தப்பின
ருங்கன லூடுகு தித்திடுவேன் !’
என்று மொழிந்தரன் வாழ்கயி
லாயமு மெய்தினன் வில்விசயன். 7

‘ வஞ்சனை யாலம ரிற்பகை
தன்னைம லைப்பது பாதகமென்
றஞ்சின ணுதலின், நீயறி
யும்படி யையன்வி டுத்தனனுல் ;
எஞ்சின னுளையுன் மைத்துனன்
என்றுகொள் !’ என்றனன் வன்றிறல்கூர்
நெஞ்சினில் வேறெரு சஞ்சல
மற்றநி சாசரன் மாமருகன். 8

துரியோதனன் கூறுதல்

‘ மன்மைந்தர் பலரொடும்போய் மறித்தொருவர்
மீளாமல் மலைந்து வீழ
என்மைந்தன் இறந்திடவும் யாதொன்றும்
புகலாமல் இருக்கின் றேன்யான் !
தன்மைந்தன் இறந்தனனும் ! தான்தழலின்
மூழ்குவனும் ! சபதங் கூறி
வின்மைந்தின் மிகுந்தவருக் கழுதிரங்கி
யரற்றுவது வீரந் தானே ? 9

‘ பயத்திரவில் நடுங்கியரன் பருப்பதம்புக்
கவன்கொடுத்த படையும் வாங்கி
வயத்திரத மால்கடவ வந்தெதிர்தோன்
றுவனுகின் மகர மோதுங்
கயத்திரவி விழுவதன்முன் கையறுதன்
புதல்வனைப்போற் களத்தின் மாளச்
சயத்திரதன் கொடுங்கணையாற் றுன்படுதல்
உறுதியெனச் சாற்று வாயே ! 10

ஆவணக்காப்பக

'என்னினும்பார் தனக்குரியன் ; சிலைத்தொழிலிற்
சிலைக்குருவா யெவரும் போற்றும்
மன்னினுந்தான் மிகப்பெரியன் ; தண்டெடுத்தால்
உந்தையினும் வலியன் ; சால
உன்னினுந்தோள் உரனுடையன் ; மதியாமல்
இப்படிநீ உரைக்க லாமோ ?
தன்னினும்போர்க் கெளியவனே சயத்திரதன்
தானென்று சாற்று வாயே ! 11

'ஆளையாள் நிலையறிவ தல்லதுமற்
றறிபவர்யார் ? அணிந்த போரில்
நாளையார் வெல்வரெனத் தெரியுமோ ?'
எனநவின்று நகைத்தான் மன்னே,
பாளைவாய் நெடுங்கமுகின் மிடறொடியக்
குலைத்தெங்கின் பழங்கள் வீழ
வாளைபாய் குருநாடும் எந்நாடும்
முழுதாளும் மன்னர் கோமான். 12

கன்னன் கூறுதல்

'தாரரசன் மகன்றுச்சா தனன்மகன்சல்
லியன்மகன்வேற் சகுனி யென்னும்
பேரரசன் மகன்முதலா வெத்தனைபேர்
பட்டாலும் பெரிய தன்றே !
பாரரசா ளுதற்கிருந்த பார்த்தன்மா
மகனொருவன் பட்டா னாகில்
ஆரரசுக் கினியுரியா ரந்தோ !'என்
றுரைத்தான்மற் றங்கர் கோமான். 13

'அங்கிருந்து, 'சயத்திரத னுவிகவர்ந்
திடுவல் !'என ஆண்மை கூறிப்
பங்கிருந்த உமாபதிபாற் பணிந்துவரம்
பெறச்சென்றான் பார்த்த னாகிற்
கொங்கிருந்த தாராய் !நின் குடைநிழற்கீழ்
இதுகாலங் கூட்டங் கூடி
இங்கிருந்த ஏழையரேம் என்செயமற்
றிருக்கின்றேம் !' என்றும் சொன்னான். 14

கடோற்கசன் துரியோதனாதியரை மதியாதுரைத்தல்

இவன்மொழிந்த விகழுரைகேட் டிடிம்பன்மரு
மகன்வெகுளூற் ‘றென்சொன் னாலும்
அவனிதல முழுதுமினி அரசாள
நினைந்திருந்தீர் அறிவி லீர்காள் !
சிவனெரிசெய் புரம்போலும் பாடிவீ
டழலூட்டிச் சேனை யாவும்
பவனன்மகன் மகனென்னும் பரிசறியத்
தொலைத்தீடு படுத்து வேனே ! 15

‘ தசைகுருதி மிசையொழுகத் தனித்தனியே
எதிர்த்தவரைத் தலைகள் சிந்த
விசயன்வர வேண்டுமோ ! மற்றுள்ளார்
திரண்டுவர வேண்டு மோதான் !
நிசைபுலரு முனைமுனைந்து நீறாக்கி
விடுகுவன்!எம் நிருபன் சொன்ன
அசைவின்மொழி மறுத்துடற்ற லாகாதென்
றிருக்கின்றேன் ! அறிகி லீரே ! 16

‘ இருவரெதிர் எதிர்தம்மில் இகல்பொருதல்
உலகியற்கை ; யாருங் கூடிப்
பருவமுறாத் தனிக்குதலைப் பாலகனுக்
காற்றாமற் பறந்து போனீர் !
ஒருவனெடுந் தேரழிக்க, ஒருவன்மலர்க்
கைதுணிக்க, ஒருவன் பின்னைப்
பொருவனென அறைகூவிப் பொன்றுவித்தான் !
இதுகொண்டோ புகல்கின் றீரே ?’ 17

துரியோதனன் கடோற்கசனை அவமதித்தல்

வரைக்குவமை பெறுந்தடந்தோள் வீமன்மகன்
இப்படியே மதியா னாகி
உரைக்குமொழி கேட்டிருந்த உரகமணிக்
கொடிவேந்தன் உருத்து நோக்கி,
‘ இருக்கும்எழில் அவைக்கேற்ப இயம்பாமல்
தன்மதத்தால் இயம்பு கின்ற

அரக்கிமக னுடனென்றுங் கழருதீர் !'
என்றுரைத்தான் அரசர் யார்க்கும். 18

கடோற்கசன் துரியோதனன் பழிகளை எடுத்துரைத்தல்

அந்தவுரை மீண்டவன்கேட் டாங்கவனை
நகைத்துரைப்பான் : 'அரக்க ரேனும்
சிந்தனையில் விரகெண்ணர் ; செருமுகத்தில்
வஞ்சகமும் செய்யா ரையா !
வெந்திறல்கூர் துணைவருக்கு விடமருத்தார் ;
நிரைக்கழுவில் வீழச் செய்யார் ;
உந்துபுன லிடைப்புதையார் ; ஒரூரில்
இருப்பகற்றூர் ; உரையுந் தப்பார். 19

'செழுந்தழல்வாழ் மனைக்கொளுவார்; செய்ந்நன்றி
கொன்றறியார் ; தீங்கு பூணர் ;
அழுந்துமனத் தழுக்குறூர் ; அச்சமுமற்
றருளின்றிப் பொய்ச்சூ தாடார் ;
கொழுந்தியரைத் துகிலுரியார் ; கொடுங்கானம்
அடைவித்துக் கொல்ல வெண்ணர் ;
எழுந்தமரின் முதுகிடார் ; இவையெல்லாம்
அடிகளுக்கே யேற்ப !' என்றான். 20

கடோற்கசன் மீளுதல்

'தேனிடறிப் பாண்முரலுஞ் செழுந்தாம
விசயனுடன் செருவில் வந்தால்,
மானிடரிற் பொரவல்லார் சிலருண்டோ ?
தெரியாது வானு ளோரில்
கோனிடையுற் றருகிருந்த திறல்வேந்தர்
காத்திடினும் குறித்த வீரன்
தானிடருற் றுயிரழிகை தப்பாதெ'தன்
பதுமுரைத்துத் தனயன் மீண்டான். 21

அருஞ்சொற்பொருள் :

1. இவர் மூவர் - கண்ணபிரான், அருச்சுனன், கைலையில் சிவ பெருமான் ஆணையால் அருச்சுனற்கு அஸ்திரமும் உபதேசமும் அளித்த முனிவர் ஆகிய மூவர். முரசக் கொடியோன் - தரும புத்திரன், பங்குனன் - (உத்திர பங்குனியிற்பிறந்த) அருச்சுனன், வஞ்சினம் - சபதம், பசுபதி - உயிர்களுக்குத் தலைவன் (சிவபெருமான்), மீளி - வலிமை உடையோன்.

2. தந்தை - பெரிய தகப்பனாகிய தருமன், சேவகம் - வீரம், அழன்று - கோபித்து. 'வலிகூர் திறலும் செயலும் அற்றவர் போல உரைப்பது என்? திறனும் செயலும் அற்றவர்தாம், தம் கோழைத் தனத்தால் பகைவரை மிரட்டும் மொழி புகலுவர்,' என்பது குறிப்பு. கூர்திறல் - உரிச்சொற்றொடர், கழல் - தானியாகு பெயர்.

3. மாருதி சிறுவன் - வீமன், மாருதி - காற்று, மறநெறி - பாவ வழி, வயிர்த்தவர் - பகைத்தவர், விறல் நெறி - வெற்றிக்குரிய வழி, மற நெறி.........விரகோ - வஞ்சனையே யாயினும் ஆகுக, தந்திரமே யாயினும் ஆகுக, பகைவர் சொல்லி விடுதல் பாவமன்று,' என்பது கருத்து.

4. நிருதன் - அரக்கன் (கடோற்கசன்), கருதலர் - பகைவர் (எதிர் மறை வினையாலணையும் பெயர்), துற்றிய - நெருங்கிய, உள் அழியும் - மனம் வருந்தும், விருதுடை வித்தகன் - கொடி முதலியன கொண்டுள்ள தூதனாகிய கடோற்கசன், விளித்தனன் - கூப்பிட்டான், புகுதா - புகுந்து (செய்யா என்னும் வாய்பாட்டு வினையெச்சம்).

5. அரவக் கொடியோன் - துரியோதனன், எதிர் எதிர் - அடுக்குத் தொடர், பகர்வான் - சொல்லும்பொருட்டு (வானீற்று வினையெச்சம்), அரிக்கொடியோன் - வீமன்.

6. தீ உரும் ஏறு என - நெருப்பொடு கூடிய பெரிய இடிபோல, செம்மொழி அற்றவன் - துரியோதனன், கேண்ம் - கேளுங்கள் (மகரக் குறுக்கம்), நோதகு நெஞ்சினன் - மகன் இறந்தமையால் வருந்தும் உளத்தினனாகிய துரியோதனன், வெம்மொழி - கொடுஞ்சொல் (பண்புத் தொகை), நுந்தை - உன் தந்தை (மரூஉ மொழி).

7. திருமைந்தன் - அபிமன்னியு, மௌலி - முடியணிந்த தலை (தானியாகு பெயர்), கனலூடு - தீயினுள்ளே, அரன் - சிவபெருமான்.

8. பகை - பண்பாகு பெயர், மலைப்பது - சண்டை செய்வது, எஞ்சினன் நாளை உன் மைத்துனன் என்று கொள் - நாளை ஒரு பொழுது மட்டுமே சயத்திரதன் உயிருடன் இருப்பான் என்று அறிந்து கொள், நிசாசரன் - நிசியில் (இரவில்) சஞ்சரிக்கும் இயல்புடையோன் (இடும்பன்), மருகன் - சகோதரியின் மகன்.

9. மன் மைந்தர் - அரச குமாரர்கள், வில் மைந்து - விற்போரில் வலிமை, ஓகாரம் - எதிர்மறைப் பொருளது.

10. பயத்து - அச்சத்தினுல், பருப்பதம் - பருவதம் (மலை), அரன் பருப்பதம் - சிவனது திருக்கைலாய மலை, வயம் - வெற்றி, இரதம் - தேர், மால் - திருமாலாகிய கண்ணபிரான், மகரம் மோதும் கயத்து - சுரு மீன்கள் தாக்குங் கடலில், கையறு - இறந்த.

11. சிலைத்தொழில் - வில் வித்தை, எவரும் போற்றும் மன் - துரோணுசாரியன், தண்டு - கதை, உந்தை - உன் தந்தை (மரூஉ) வீமன், உரன் - வலிமை.

12. ஆளை ஆள் நிலை அறிவது அல்லது - ஒரு வீரனின் வலிமையை அவனை ஒத்த வீரனே அறியமாட்டுவான் அல்லாமல், 'பாம்பறியும் பாம்பின் கால்,' என்னும் பழமொழி ஈண்டு அறியத்தக்கது. கமுகு - பாக்கு மரம், மிடறு - கழுத்து, இச்செய்யுள் '**உயர்வு நவிற்சியணி**'.

13. தார் அரசன் - துரியோதனன். 'துரியோதனன் மகன், துச்சா தனன் மகன், சல்லியன் மகன், சகுனியின் மகன் முதலானவர்கள் இறந்தாலும் அது பெரிதன்று; அருச்சுனன் மகனுகிய அபிமன்னியு இறப்பானுயின், வேறு யார் அரசிற்குரியவர்?' என்று கன்னன் கூறினுன். அங்கர் கோமான் - கன்னன்.

14. கவர்ந்திடுவல் - தன்மை ஒருமை எதிர் கால வினைமுற்று, ஆண்மை - வீரம், உமாபதி - சிவபெருமான், பார்த்தன் - அருச்சுனன் (பிருதையின் மகன்), கொங்கு - தேன்.

15. அவனி - பூமி, அவனி தலம் - இரு பெயரொட்டுப் பண்புத் தொகை, புரம் - திரிபுரம், பவனன் - காற்று, மகன் மகன் - நான்காம் வேற்றுமைத்தொகை, பரிசு - தன்மை, தொலைத்து - அழித்து.

16. குருதி - இரத்தம், நிசை - இரவு, முனைந்து நீருக்கி - சண்டை யிட்டுச் சாம்பராக்கி, விடுகுவன் - 'கு' - சாரியை, வசைவு இல் - பழிப்பு இல்லாத, உடற்றல் - துன்புறுத்தல், அறிகிலீர் - அறிய மாட்டாதவரா யிருக்கின்றீர்கள்.

17. பருவமுருத் தனிக்குதலைப் பாலகன் - இங்கு அபிமன்னியு, உரு - ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம், பொன்றுவித்தல் - கொல்லு தல். 'சண்டை செய்வோர் எதிர் எதிர் நின்று தம்முள் பொருதல் இயல்பு; ஆனுல், அபிமன்னியுவுடன் கௌரவர் பொருதது அம்முறையி லில்லை,' என்று கடோற்கசன் கண்டிக்கிருன்.

18. வரைக்கு - மலைக்கு, உரகம் - பாம்பு, உரகக் கொடி வேந்தன் - துரியோதனன், உருத்து - கோபித்து, எழில் அவை - அழகு வாய்ந்த சபை, மதம் - கருவம் (செருக்கு), அரக்கி - ஈண்டு இடும்பி, கழருதீர் - பேசாதீர்கள் (ஏவற்பன்மை வினைமுற்று).

19. விரகு - வஞ்சனை, செருமுகத்தில் - போர் முனையில், செரு......செய்யார்: இது அபிமன்னியுவைக் கொன்றதைக் குறிக்கும். உரையுந்தப்பார்: இது வனவாசமும் அஞ்ஞாத வாசமும் கழித்துத் திரும்பியதும் நாட்டைத் திருப்பித் தருவதாகச் சொன்ன சொல் தவறினதைக் குறிக்கும்.

20. வாழ்மனையில் தழல் கொளுவல் - வாழ்கின்ற வீட்டில் நெருப்பை வைத்து வீட்டை எரித்தல்; இஃது அரக்குமாளிகையைக் கொளுத்தியதைக் குறித்தது. அழுக்கு - பொறாமை, கொழுந்தி - உடன் பிறந்தான் மனைவி, அமரில் முதுகிடார் : விராட புரத்துப் பசு நிரை கவரச் சென்ற கௌரவர் தோற்றுத் திரும்பியது போன்ற செய்தி களைக் குறிக்கும், அடிகளுக்கே - தேவரீருக்கே (இகழ்ச்சிக் குறிப்பு).

21. தேன் - வண்டு, இடறி - தடுக்கி, தாமம் - மாலை, கோன் - இங்குத் தேவேந்திரன், தனயன் - மகன் (கடோற்கசன்), பாண் முரலும் - இசைப்பாட்டாக ரீங்காரம் செய்கின்ற.

பயிற்சி வினாக்கள் :

1. தருமபுத்திரர் துரியோதனனுக்குத் தெரிவிக்கும்படி கடோற்கசனிடம் கூறியது என்ன ?

2. கடோற்கசன் தான் சொல்லவந்த செய்தி பற்றித் துரியோதனனிடம் தெரிவித்தது என்ன ?

3. கடோற்கசன் கூறிய செய்தியைக் கேட்ட துரியோதனன் கூறியவற்றைப் பதினைந்து வரிகளில் விளக்குக.

4. பாரத யுத்தத்தில் பதின்மூன்றும் நாட்போரில் பட்ட அரச குமாரர் யாவர் ?

5. கடோற்கசன் துரியோதனாதியரை மதியாது உரைத்தவற்றை விளக்குக.

6. துரியோதனன் கடோற்கசனை அவமதித்துக் கூறியது யாது ?

7. துரியோதனனுடைய பழிச்செயல்களாகக் கடோற்கசன் எடுத்துரைத்தவை யாவை ?

8. 'குரு நாட்டின் வளம்' எவ்வாறு வருணிக்கப்பட்டுள்ளது ? அது என்ன அணி ?

9. இடங்காட்டிப் பொருள் விளக்குக :—

(1) 'வலிகூர் திறலும் செயலும் அற்றவர் போல வுரைப்பதென் ?'.

(2) 'இங்கிருந்த ஏழையரேம் என் செயமற்றிருக்கின்றேம் ?'

10. பிரித்து எழுதுக :—
விறனெறி, முரசக்கொடி, செம்மொழி, வன்றிறல், மிடறுடிய, விரகெண்ணூர், வசைவின்மொழி.

11. பகுபத உறுப்பிலக்கணந் தருக :—
புகன்றனன், இருக்கின்றேன், மொழிந்தான், எய்தினன், மீண்டான், விடுகுவன்.

12. தொடரிலக்கணம் கூறுக :—
வன்றிறல், அவனிதலம், மகன்மகன், அதிர்முரசம், நெடுங்கமுகு, கூர்திறல், எதிர்எதிர்.

6. பாஞ்சாலி சபதம்

பாஞ்சாலி சபதம்: இது பாஞ்சால நாட்டு மன்னன் மகளாகிய திரௌபதி துரியோதனன் சபையில் செய்த சபதத்தைக் கூறும் நூல். இந்நூலாசிரியர் தமிழ் மொழிக்குப் புதிய சுவையும் தமிழ் மக்களுக்குப் புத்துயிரும் தந்த கவிஞர் கோமான் சுப்பிரமணிய பாரதியார் ஆவர். இவர் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள எட்டையபுரத்தில் சின்னச்சாமி ஐயருக்கும் இலக்குமி அம்மாளுக்கும் புதல்வராய்ப் பிறந்தவர்.

இவர் இளமையிலேயே கவிபாடுந் திறமையைப் பெற்றிருந்தமையால் அறிஞர்கள் இவரைப் பாரதியார் என்று வழங்கத் தலைப்பட்டார்கள். இவர் சாதி சமயக் கட்டுப்பாடுகளையும் மூடப் பழக்க வழக்கங்களையும் வெறுப்பவர்; நாட்டுப் பற்றும் விடுதலை வேட்கையும் மிக்கவர். கண்ணன் பாட்டு, குயிற்பாட்டு முதலிய கவிதைகளையும், தராசு, ஞான ரதம் முதலிய உரைநடை நூல்களையும் இவர் எழுதியுள்ளார். இவரது காலம் கி. பி. 1882—1921.

துரியோதனன் சபையில் பாஞ்சாலி

ஆடை குலைவுற்று நிற்கின்றாள்—அவள்
ஆவென் றழுது துடிக்கின்றாள்;—வெறு
மாடு நிகர்த்ததுச் சாதனன்—அவள்
மைக்குழல் பற்றியி ழுக்கின்றான்;—இந்தப்
பீடையை நோக்கினன் வீமனும்—கரை
பீறி எழுந்தது வெஞ்சினம்—துயர்
கூடித் தருமனை நோக்கியே—அவன்
கூறிய வார்த்தைகள் கேட்டிரோ: 1

வீமன் பேசுகிறான்

நாட்டையெல் லாந்தொலைத்தாய்—அண்ணே!
நாங்கள் பொறுத்திருந்தோம்;
மீட்டும் எமையடிமை—செய்தாய்
மேலும் பொறுத்திருந்தோம். 2

'துருப தன்மகளைத்—திட்டத்
துய்மன் உடன்பிறப்பை
இருப கடையென்றாய்—ஐயோ!
இவர்க்க டிமையென்றாய்! 3

'இதுபொ றுப்பதில்லை!—தம்பீ!
எரித ழல்கொண்டுவா;
கதிரை வைத்திழந்தான்—அண்ணன்
கையை எரித்திடுவோம்! 4

விசயன் வீமனுக்குச் சொல்லுகிறான்

''தருமத்தின் வாழ்வதனைச் சூது கவ்வும்;
தருமமறு படிவெல்லும்,' எனுமிஇயற்கை
மருமத்தை நம்மாலே உலகங் கற்கும்
வழிதேடி விதியிந்தச் செய்கை செய்தான்;
கருமத்தை மேன்மேலுங் காண்போம்; இன்று
கட்டுண்டோம்; பொறுத்திருப்போம்; காலம் மாறும்;
தருமத்தை அப்போது வெல்லக் காண்போம்;
தனுவுண்டு; காண்டீவம் அதன்பேர்,' என்றான்.5

(திரௌபதியின் துகிலுரிந்த துச்சாதனன் கைசோர்ந்து வீழ்ந்தான்.)

பாஞ்சாலி சபதம்

தேவிதி ரௌபதி சொல்வாள்:—'ஓம்
தேவி பராசக்தி ஆணை யுரைத்தேன்:
பாவிதுச் சாதனன் செந்நீர்—அந்தப்
பாழ்த்துரி யோதனன் ஆக்கை இரத்தம்
மேவி இரண்டுங் கலந்து—குழல்
மீதினிற் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல்முடிப் பேன்யான்!—இது
செய்யும்முன் னேமுடி யேன்!'என்று ரைத்தாள்.6

ஓமென் றுரைத்தனர் தேவர்;—ஓம்
ஓமென்று சொல்லி உறுமிற்று வானம்;
பூமி யதிர்ச்சிஉண் டாச்சு;—விண்ணைப்
பூழிப் படுத்திய தாஞ்சுழல் காற்று;
'சாமி தருமன் புவிக்கே,'—என்று
சாட்சி யுரைத்தன பூதங்க ளைந்தும்;
நாமும் கதையை முடித்தோம்;—இந்த
நானில முற்றும்நல் லின்பத்தில் வாழ்க! 7

அருஞ்சொற்பொருள் :

நிகர்த்த - ஒத்த, பீடை - துன்பம், வெஞ்சினம் - கொடிய கோபம், துயர் - துன்பம், மருமம் - இரகசியம், தனு - வில், செந்நீர் - இரத்தம், ஆக்கை - உடல், குழல் - கூந்தல், பூழி - புழுதி, பூதங்களைந்து - நிலம், நீர், தீ, வளி, ஆகாயம்.

பயிற்சி வினாக்கள் :

1. 'பாஞ்சாலி சபதம்'—நூற்குறிப்பும், ஆசிரியர் குறிப்பும் எழுதுக.
2. சினங்கொண்ட வீமன் விசயனை நோக்கிக் கூறியதென்ன?
3. விசயன் வீமனுக்குக் கூறியதென்ன?
4. பாஞ்சாலி செய்த சபதம் யாது?
5. பாஞ்சாலி சபதம் செய்த போது நிகழ்ந்தன யாவை?
6. பிரித்து எழுதுக :—
   நானிலம், நல்லின்பம், தனுவுண்டு.
7. பகுபத உறுப்பிலக்கணம் தருக :—
   உரைத்தனர், உறுமிற்று, இழந்தது.

7. காவலன் மகளும் கவிஞனும்

இது புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் **பில்கணீயம்** என்ற வடமொழி நூலைத் தழுவி எழுதிய **'புரட்சிக்கவி'** என்ற காப்பியத்தின் ஒரு பகுதி. இக்கவிஞர் இக்காலத் தமிழ் நாட்டின் மறுமலர்ச்சியில் தனியிடம் பெற்றவர். **கனக சுப்புரத்தினம்** என்பது இவரது இயற்பெயர். இவர் தேசியக் கவிஞர் சி. சுப்பிரமணிய பாரதியாரின் மாணவர்; ஆசிரியர் மேற்கொண்ட பற்றுதலால் பாரதி தாசன் ஆயினர். சஞ்சீவி பர்வதத்தின் சாரல், புரட்சிக்கவி, வீரத்தாய் ஆகிய காவியங்களையும், பல கவிதைகளையும் இவர் இயற்றியுள்ளார்.

அரசன் வினா

அரசன் அமைச்சர்பால் அறிவிக் கின்றான் :
'அமுத வல்லிஎன் ஆசைக் கொருபெண் ;
தமிழிலக் கியங்கள் தமிழிலக் கணங்கள்
அமைவுற ஆய்ந்தாள் ; அயல்மொழி பயின்றாள்.
ஆர்ந்த ஒழுக்கநூல், நீதிநூல் அறிந்தாள் ;
அனைத்தும் உணர்ந்தாள் ; ஆயினும் அன்னாள்
கவிதை புனையக் கற்றாள் இல்லை.
மலரும் பாடும் வண்டுந் தளிரும்

மலையும் கடலும் வாவியும் ஓடையும்
விண்ணின் விரிவும் மண்ணின் வனப்பும்
மேலோர் மேன்மையும் மெலிந்தோர் மெலிவும்
தமிழின் அமுதத் தன்மையும் நன்மையும்
காலைஅம் பரிதியும் மாலை மதியமும்
கண்ணையும் மனத்தையும் கவர்வன ; அதனால்
என்மகள் அகத்தில் எழுந்த கவிதையைப்
புறத்தில் பிறர்க்குப் புலப்படுத் துதற்குச்
செய்யுள் இலக்கணம் தெரிதல் வேண்டுமாம் ;
ஏற்றஓர் ஆசான் எங்குளான் ?
தோற்றிய வாறு சொல்க அமைச்சரே !'

அமைச்சன் மறுமொழி

தலைமைஅமைச் சன்புகல்வான்: 'எனது மன்னா !
சகலகலை வல்லவன்,இவ் வுலகோர் போற்றும்
புலவன்,உயர் கவிஞன்,அவன் பேர்உ தாரன் ;
புதல்விக்குத் தக்கஉபாத் தியாயன் அன்னோன் ;
இலையிந்த நாட்டினிலே அவனை ஒப்பார் !
எனினும்,அவன் இளவயதும் அழகும் வாய்ந்தோன் ;
குலமகளை அன்னவன்பால் கற்க விட்டால்
குறைவந்து சேர்ந்தாலும் சேர்தல் கூடும் ! 1

'ஆனாலும் நானிதற்கோர் மார்க்கம் சொல்வேன் :
அமுதவல்லி உதாரனிடம் கற்கும் போது
தேனிதழாள் தனைஅவனும், அவனைப் பெண்ணும்
தெரிந்துகொள்ள முடியாமல் திரைவி டுக்க !
பானல்விழி மங்கையிடம், 'உதார னுக்குப்
பார்வையிலை ; குருடன்,'என்று சொல்லி வைக்க !
ஞானமுறும் உதாரனிடம், 'அமுத வல்லி
நனிகுட்ட ரோகி,'என எச்ச ரிக்க !' 2

அரசன் உதாரனை ஆசிரியனாக அமர்த்தியது

தார்வேந்தன் இதுகேட்டான் ; வியந்தான் ; 'ஆம்ஆம் !
தந்திரத்தால் ஆகாத தொன்று மில்லை.
பேர்வாய்ந்த உதாரனைப்போய் அழைப்பீர்,' என்றான் ;
பேச்சுவல்ல அமைச்சர்பலர் சென்ற ழைத்தார் ;

தேர்வாய்ந்த புவிராசன் போலே யந்தச்
செந்தமிழ்த்தீங் கவிராசன் உதாரன் வந்தான்;
பார்வேந்தன் நிகழ்த்தினன்; உதாரன் கேட்டுப்
'பைந்தமிழ்க்குத் தொண்டுசெயக் கடவோம்!'
என்றான். 3

[உதாரன் குருடன் அல்லன் என்பதை ஒரு நாள் அவன் நிலவினைப் பார்த்துப் புகழ்ந்து பாடியதைக்கொண்டு அமுதவல்லி அறிந்து கொண்டாள்; அவன் முன் வந்து நின்றாள். அவனும் அவள் தொழு நோய் அற்றவள் என்பதைத் தேர்ந்தான். இருவரும் மனமொத்த காதலராயினர். அவர்களுடைய காதல் உறவினை அறிந்த வேந்தன், வெகுண்டான்; உதாரனையும் அமுதவல்லியையும் கொலைக்களத்திற்கு அனுப்பினன். அங்குத் திரண்டு வந்திருந்த பொதுமக்களிடம் தனது தூய காதலை எடுத்துரைத்தான் உதாரன். அவனது உரிமை முழக்கங்கேட்ட பொதுமக்கள், கொலையாளரின் கொடுவாளைப் பறித்தார்கள். கொலையாளர்கள் உயிர் தப்ப ஓடினர்கள்.]

கவிஞனுக்கும் காதலிக்கும் மீட்சி தந்தார்;
காவலன்பால் தூதொன்று போகச் சொன்னர்;
'புவியாட்சி தனிஉனக்குத் தாரோம் என்று
போயுரைப்பாய்,' என்ருர்கள்; போகா முன்பே
செவியினிலே ஏறிற்றுப் போனன் வேந்தன்!
செல்வமெலாம் உரிமையெலாம் நாட்டா ருக்கே
நவையின்றி எய்துதற்குச் சட்டம் செய்தார்;
நலியில்லை! நலமெல்லாம் வாய்ந்த தங்கே! 4

அருஞ்சொற்பொருள் :

விண் - ஆகாயம், வனப்பு - அழகு, பரிதி - சூரியன், ஆசான் - ஆசிரியன், புகல்வான் - சொல்வான், மார்க்கம் - வழி, தார் - மாலை, பார் வேந்தன் - பூமியை ஆளும் அரசன், பசுமை + தமிழ் = பைந்தமிழ்.

பயிற்சி வினக்கள் :

1. அமுதவல்லி அறிந்திருந்தன யாவை? அறியாதது என்ன?
2. 'கண்ணையும் மனத்தையுங் கவர்வன' எவை?
3. அமுதவல்லிக்குத் தக்க ஆசிரியன் யார்? அவன் எத்தகையவன்?
4. அமுதவல்லிக்குக் கற்பிக்க அமைச்சன் கூறிய மார்க்கம் யாது?
5. பொதுமக்கள் தூதுவர் மூலம் அரசனுக்கு அனுப்பிய செய்தி யாது?
6. பொதுமக்களின் கருத்தறிந்த அரசன் செய்ததென்ன?
7. இடங்காட்டிப் பொருள் விளக்கந்தருக :—
   (1) 'தந்திரத்தால் ஆகாத தொன்று மில்லை.'
   (2) 'பைந்தமிழ்க்குத் தொண்டுசெயக் கடவோம்.'

IV. பல்சுவை

1. வருணனைப் பாடல்கள்

1. வண்டும் மந்தியும்

கீழ் வரும் பாடல் 'ஈங்கோய் எழுபது' என்னும் நூலில் இருப்பது. இந்நூல் சைவத் திருமுறைகள் பன்னிரண்டில் ஒன்றாகிய பதினோராந்திருமுறையில் உள்ளது; திருவீங்கோய் மலையில் எழுந்தருளியுள்ள இறைவனைப்பற்றிப் பாடிய எழுபது வெண்பாக்களால் ஆகியது. ஈங்கோய் மலை திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் குளித்தலையை அடுத்துக் காவிரியின் வடகரையில் உள்ளது.

இதனை இயற்றிய ஆசிரியர் நக்கீர தேவர். கடைச்சங்க காலத்திருந்த நக்கீரரும் இவரும் ஒருவரே என்பர்.

வழகிதழ்க் காந்தள்மேல் வண்டிருப்ப ஒண்தீ
முழுகியதென் றஞ்சிமுது மந்தி—பழகி
எழுந்தெழுந்து கைந்நெரிக்கும் ஈங்கோயே, திங்கட்
கொழுந்தெழுந்த செஞ்சடையான் குன்று.

அருஞ்சொற்பொருள் :

வழகு - மென்மையான, திங்கள் கொழுந்து - பிறைச் சந்திரன், செஞ்சடையான் - சிவபெருமான்.

2. இளவேனில்

கீழ் வரும் செய்யுள் அதிவீரராம பாண்டியர் பாடிய நைடதத்தில் உள்ளது. அதிவீரராம பாண்டியர் புவியரசராய் விளங்கியதோடு கவியரசராயும் விளங்கியவர். காசி காண்டம், திருக்கருவை அந்தாதிகள் முதலியன இவரால் இயற்றப் பெற்றன. இவரது காலம் 11-ஆம் நூற்றாண்டு. சிலர் 15-ஆம் நூற்றாண்டென்பர்.

கள்ளுயிர்த் தலரு முல்லைக் கடிமுகை முறுவல் தோன்ற
வள்ளிதழ்க் குவளை யுண்கண் மலர்ந்துமாந் தளிர்மென் கையாக்
கிள்ளைமென் குதலை சாற்றிக் கிளரொளி வண்டு பாணாத்
தெள்விளி பாடவேனிற் றிருமகள் சிறந்தாள் அன்றே.

அருஞ்சொற்பொருள் :

கள் உயிர்த்து - தேனைத் தந்து, கடி - வாசனை, முகை - அரும்புகளாகிய, முறுவல் - பல், கிள்ளை - கிளிப் பிள்ளையின் மொழிகளாகிய, குதலை - மழலைச் சொற்கள், பாண்ஆ - பாணனுகை, விளி - இசைப் பாட்டு.

3. குறிஞ்சி நிலக்காட்சி

கீழ்வரும் செய்யுள் சிவஞான சுவாமிகள் பாடிய **காஞ்சிப் புராணத்திலுள்ளது**. சிவஞான சுவாமிகள் திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்தவர். அவர் தென்பாண்டி நாட்டு விக்கிரம சிங்கபுரத்தில் ஆனந்தக் கூத்தருக்கும் மயிலம்மையார்க்கும் மக-வாய்ப் பிறந்தவர்; சைவ வேளாளர். **அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ், சிவஞான போதப் பேருரை** முதலிய நூல்களைச் செய்-துள்ளார்; கி. பி. 18-ஆம் நூற்ருண்டினர்.

நெருங்கு பைந்தழை வருக்கைமேல் நெடுவளி யலைப்ப
அருங்கண் மாமயில் வீற்றிருந் தசைதருங் காட்சி
கருங்க ணாயிரச் செம்மல்தன் மருகனைக் காண
மருங்கு வந்துதன் ஊர்தியை நிறுவுதல் மானும்.

அருஞ்சொற்பொருள் :

வருக்கை - பலாமரம், வளி - காற்று, செம்மல் - இந்திரன், மருகன்-மருமகனுன முருகன், ஊர்தி - வாகனம்.

பயிற்சி வினுக்கள் :

1. 'ஈங்கோய் எழுபது'—குறிப்பு வரைக.
2. மந்தி கை நெரித்ததற்குக் காரணமாக ஆசிரியர் கூறுவது என்ன? அதனுல் விளங்குவது யாது?
3. நைடதத்தில் இளவேனிற்காலச் சிறப்பு எவ்வாறு வருணிக்கப் பட்டுள்ளது?
4. 'குறிஞ்சி நிலக்காட்சி' சிவஞான சுவாமிகளால் எங்ஙனம் புனைந்துரைக்கப்பட்டுள்ளது?
5. பிரித்தெழுதுக :—
   செஞ்சடை, வள்ளிதழ், பைந்தழை.
6. தொடரிலக்கணங் கூறுக :—
   முதுமந்தி, எழுந்தெழுந்து, கைந்நெரிக்கும், கிளரொளி, மாமயில்.

2. சீட்டுக்கவி

செய்யுள் வடிவமாக எழுதுங் கடிதத்திற்குச் சீட்டுக்கவி என்பது பெயர். கீழ் வரும் செய்யுளை இயற்றியவர் சென்ற நூற்றுண்டிலிருந்த பெரும்புலவரும் அட்டாவதானியுமான **சரவணப் பெருமாள் கவிராயர்** ஆவர்.

கல்விச் சமுத்திரம் கமலால யம்தமிழ்க்
கடன்மடை திறந்தவெள்ளம் ;
கற்பனை பிறப்பிடம் ; கலைமகள் இருப்பிடம் ;
கவிமாரி பொழியுமேகம் ;
சொல்விற் பனம்விளையும் மதுரக் களஞ்சியம் ;
தோன்றுகற் பூரதீபம் ;
சுகிர்தகுண அவதானி சரவணப் பெருமாள்கை
தொட்டெழுதி விட்டசனது :
வில்லுக் கருச்சுனன் ; சொல்லுக் கரிச்சந்த்ரன்
வெற்றிக்கு விக்ரமார்க்கன் ;
வித்தைக் ககத்தியன் முத்துக் கருப்பண்ண
விலட்சணன் எதிர்ந்துகாண்க !
மல்வெற்றி யாயென்று தாயென்று நீயென்று
மாலென்று வேலொன்றுகா
மாவென்று காவென்று நாவொன்று பாவொன்று
வருகின்ற தருள்புரிகவே !

அருஞ்சொற்பொருள் :

கமலாலயம் - திருமகளின் 'இருப்பிடம், மாரி - மழை, சொல்விற் பனம் - பேச்சு வன்மை, மதுரம் - இனிமை, சுகிர்த குணம் - நற்குணம், சனது - கடிதம், விலட்சணன் - சிறந்தவன், மால் - திருமால், வேல் ஒன்று காமா - வேலாயுதத்தையுடைய அழகனை முருகனே, கா - கற்பகச் சோலை, நாவொன்று பா - நாவில் பொருந்திப் பாடிய செய்யுள்.

பயிற்சி வினாக்கள் :

1. '**சீட்டுக்கவி**' என்பது யாது ?
2. முத்துக் கருப்பண்ண வள்ளல் எத்தகையவர் ?
3. கவிராயர் தமது புலமையை எவ்வாறு வெளிப்படுத்துகிருர் ?
4. பிரித்து எழுதுக :—
கமலாலயம், கடன்மடை, மதுரக்களஞ்சியம், தொட்டெழுதி, வித்தைக்ககத்தியன்.
5. பகுபத உறுப்பிலக்கணம் தருக :—
வருகின்றது, விட்ட, திறந்த.

3. சிலேடைப் பாக்கள்

கீழ் வரும் பாக்களைப் பாடியவர் காளமேகப் புலவர். கார் மேகம், அளவற்றும், தனக்கென்று வரைந்து வைத்துக்கொள்ளா மலும், கைம்மாறு கருதாமலும், இன்னர் இனியார் என்ற வேற்றுமையில்லாமல் உலக முழுவதையும் இன்றியமையாத மழையைப் பெய்து இன்புறுத்துவது போலவே, இப்புலவரும் மிக விரைவிலும், அளவற்றும், பல பொருள் பற்றியும், பலபேர் மீதும் இனிய எளிய நடையில் பாக்களைத் தங்கு தடையின்றிப் பாடிய காரணத்தால், 'காளமேகம்' எனப் பெயர் பெற்றார்.

இவர் கும்பகோணத்திற்கு அருகிலுள்ள நந்திக் கிராமத்தில் பிறந்தவர். இவரது இயற்பெயர் **வரதர்** என்பது. இவர் **திருவானைக்கா உலா**, சித்திரமடல் முதலிய நூல்களையும், பல தனிப்பாடல்களையும் இயற்றியுள்ளார். இவர் சுமார் 450 ஆண்டு களுக்கு முன்பிருந்தவர்.

பாம்புக்கும் வாழைப்பழத்திற்கும் சிலேடை

நஞ்சிருக்கும் ; தோலுரிக்கும் ; நாதர்முடி மேலிருக்கும் ;
வெஞ்சினத்திற் பற்பட்டால் மீளாது ;— விஞ்சுமலர்த்
தேம்பாயுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்பாகும் வாழைப் பழம். 1

பாம்புக்கும் எலுமிச்சம்பழத்துக்கும் சிலேடை

பெரியவிட மேசேரும் ; பித்தர்முடி ஏறும் ;
அரியுண்ணும் ; உப்புமேல் ஆடும் ;— எரிகுணமாம் ;
தேம்பொழியுஞ் சோலைத் திருமலைரா யன்வரையில்
பாம்புமெலு மிச்சம் பழம். 2

அருஞ்சொற்பொருள் :

(1) **பாம்பு :** நஞ்சிருக்கும் - நஞ்சை உடைத்தாயிருக்கும், தோல் உரிக்கும் - அவ்வப்போது தன் சட்டையைக் கழற்றும், நாதர் முடி - இறைவனது திருமுடி, வெஞ்சினத்தில் - கொடிய கோபத்தில், மீளாது - நஞ்சு இறங்காது.

வாழைப் பழம் : நஞ்சிருக்கும் - கனிந்து நைந்திருக்கும், தோல் உரிக்கும் - வாழைப் பழத்தோல் உரிக்கப்படும், வெஞ்சினத்தில் - உண வாகுங்கால், மீளாது - திரும்ப வெளியே வாராது, விஞ்சுமலர் - மிகுதி யான பூக்களினுடைய, தேம்பாயும் - தேன்+பாயும்.

(2) **பாம்பு :** பெரிய விடம் - மிகுந்த நஞ்சு, பித்தர் - சிவபெருமான், அரி - காற்று, மேல் உப்பும் - உடம்பு ஊதும், எரிகுணம் ஆம் - கோபித்துச் சீறும் குணமுடையது.

எலுமிச்சம்பழம் : பெரிய இடம் - பெரிய இடங்கள், பித்தர் - பைத்தியங்கொண்டவர், அரியுண்ணும் - அரியப்படும், எரிகுணம் ஆம் - (புண்ணில் சாறுபட்டால்) எரியும் குணமுடையதாகும்.

பயிற்சி வினுக்கள் :

1. ' சிலேடை ' என்பது என்ன ?
2. பாம்புக்கும் வாழைப்பழத்துக்கும் பொருந்தும்படி காளமேகப்-புலவர் எவ்வாறு பாடியுள்ளார் ?
3. அரியுண்ணும், பெரியவிடம், உப்புமேல் ஆடும்—இவற்றின்-சிலேடைப் பொருள்களை விளக்குக.
4. பகுபத உறுப்பிலக்கணம் தருக :—
   ஏறும், மீளாது, உரிக்கும்.
5. பிரித்தெழுதுக :—
   வெஞ்சினம், தேம்பாயும்.

4. சிறு நூல்கள்

1. மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ்

பிள்ளைத் தமிழ் என்பது தமிழில் உள்ள 96 வகைச் சிறுநூல்களுள் (பிரபந்தம்) ஒன்று. இஃது ஆண்பாலார் பெண்பாலார் ஆகிய இருபாலாருக்கும் உண்டு. இஃது ஒரு புலவர் தாம் பாடப் புகுந்த தெய்வத்தையோ அல்லது தலைவரையோ குழந்தையாகக் கருதித் தம் அன்புடைமை தோன்றப் பாடுவது. அவ்வாறு பாடுங்கால், குழந்தையின் செயல்களைக் குழந்தையின் வளர்ச்சி முறைக்கேற்பப் பத்துப் பருவங்களாகப் பிரித்துப் பாடுவர். அப்பருவங்கள், காப்பு, செங்கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி, சிற்றில், சிறுபறை, சிறுதேர் என்பன. ஈற்றில் உள்ள மூன்றும் ஆண்பாலாருக்குரியன. பெண்பாலாருக்கு ஈற்றிலுள்ள மூன்று பருவங்களும் அம்மானை, நீராடல், ஊசல் என அமையும்.

மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழில் உமாதேவியார் மலையத்துவச பாண்டியனுக்குத் திருமகளாராய்த் தோன்றி, தடாதகைப் பிராட்டியாராய் வளர்ந்த வரலாற்றைச் சுற்றத்தார் முதலியோர் பாராட்டிப் பேணியதைப் புலவர் பாடுகிருர். நமது பாடப் பகுதி வருகைப் பருவத்து ஒன்பதாவது பாட்டாகும்.

இதனைப் பாடியவர் குமர குருபரர். இவர் 300 ஆண்டு கட்கு முன் வாழ்ந்தவர்; திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஸ்ரீவைகுண்டம் என்னும் ஊரினர்; வேளாண் குலத்தினர்; ஐந்து ஆண்டுவரை ஊமையராயிருந்து திருச்செந்தூர் முருகனருளால் பேசத் தொடங்கியவர். இவர் இயற்றிய வேறு நூல்களுட்சில :— மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டை மணி மாலை, மதுரைக் கலம்பகம், காசிக் கலம்பகம், சிதம்பரச் செய்யுட்கோவை, முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ், நீதி நெறி விளக்கம் என்பன.

தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே ! நறைபழுத்த
துறைத்தீந் தமிழின் ஒழுகுநறுஞ்
சுவையே ! அகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்கும் தொழும்பர் உளக்கோயிற்
கேற்றும் விளக்கே ! வளர்சிமய
இமயப் பொருப்பில் விளையாடும்
இளமென் பிடியே ! எறிதரங்கம்
உடுக்கும் புவனங் கடந்துநின்ற
ஒருவன் திருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கும்
உயிரோ வியமே ! மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே ! வருகவே !
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே ! வருக ! வருகவே !

அருஞ்சொற்பொருள் :

துறை - அகப்பொருள் புறப்பொருள் துறைகளையுடைய, அகந்தை- நான் என்னும் ஆணவம், தொழும்பர் - தொண்டர், பொருப்பு - மலை, எறிதரங்கம் - மோதுகின்ற அலைகளையுடைய கடல், மதுகரம் - வண்டு, குழற்காடு - கூந்தல் தொகுதி.

2. கோயில் நான்மணி மாலை

கோயில் நான்மணி மாலை : இது கோயிலைப்பற்றிய நான்மணி மாலை. **கோயில்** என்பது சைவமரபில் சிதம்பரத்திற்குப் பெயராய் வழங்கும். நான்கு விதமான மணிகளால் ஆக்கப்படும் மாலையைப்போல, **வெண்பா, கலித்துறை, விருத்தம், ஆசிரியப்பா** என்னும் நான்கு வகையான நாற்பது செய்யுட்களால் அந்தாதித் தொடை அமையப் பாடப்பெறுவது **நான்மணி மாலை** எனப்படும்.

இந்த நூலை இயற்றியவர் **பட்டினத்து அடிகள்.** இவரது பிறப்பிடம் காவிரிப்பூம்பட்டினம் ; பெற்றோர் ; சிவநேசர், ஞானகலாம்பிகை என்பவராவர். இவருக்குப் பெற்றோரிட்ட பெயர் **திருவெண்காடர்** என்பது. இவர் '**பட்டினத்துப் பிள்ளையார்**' எனவும் '**பட்டினத்தார்**' எனவும் வழங்கவும் பெறுவர். இவர் **திருக்கழுமல மும்மணிக்கோவை, திருவேகம்பமுடையார் திருவந்தாதி, திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது, திருவிடைமருதூர் மும்மணிக்கோவை** முதலிய வேறு பல நூல்களையும் இயற்றியுள்ளார். இவரது காலம், சுமார் ஆயிரம் ஆண்டுகட்கு முற்பட்டதாகும்.

அறிவில் ஒழுக்கமும் பிறிதுபடு பொய்யும்
கடும்பிணித் தொகையும் இடும்பை ஈட்டமும்
இனையன பலசரக் கேற்றி வினையெனும்
தொன்மீ காமன் உய்ப்ப, அந்நிலைக்
கருவெனும் நெடுநகர் ஒருதுறை நீத்தத்துப்
புலனெனுங் கோள்மீன் அலமந்து தொடரப்
பிறப்பெனும் பெருங்கடல் உறப்புகுந் தலைக்குந்
துயர்த்திரை உவட்டிற் பெயர்ப்பிடம் அயர்த்துக்
குடும்பம் என்னும் நெடுங்கல் வீழ்த்து
நிறையெனும் கூம்பு முரிந்து குறையா
உணர்வெனும் நெடும்பாய் கீறிப் புணரும்
மாயப் பெயர்ப்படு காயச் சிறைக்கலம்
கலங்குபு கவிழா முன்னம் அலங்கல்
மதியுடன் அணிந்த பொதியவிழ் சடிலத்துப்
பையர வணிந்த தெய்வ நாயக !
தொல்லெயில் உடுத்த தில்லை காவல !

வம்பலர் தும்பை அம்பல வாண!நின்
அருளெனும் நலத்தார் பூட்டித்
திருவடி நெடுங்கரை சேர்த்துமா செய்யே!

அருஞ்சொற்பொருள் :

1–13. இடும்பை - துன்பம், ஈட்டம் - தொகுதி, வினை - ஊழ், உய்ப்ப - செலுத்த, கரு - கருப்பம், நீத்தம் - வெள்ளம், கோள் மீன் - வலிமையுள்ள சுறுமீன், உவட்டின் - பெருக்கினால், அயர்த்து - மறந்து, நிறை - மன உறுதி, கூம்பு - பாய்மரம், புணரும் - பொருந்திய, மாயம் - நிலையில்லாததென்று, காயம் - உடல், கலம் - கப்பல்

13–19. கலங்குபு - கலங்கி, அலங்கல் - மாலை, மதி - பிறைச் சந்திரன், பொதி அவிழ் - நெருக்கமாய் விரிந்த, சடிலம் - சடை, பை அரவு - படத்தை உடைய பாம்பு, தொல் எயில் - பழைய மதில், தில்லை - சிதம்பரம், நலம் தார் - சிறந்த கயிறு, சேர்த்தும் ஆ(று) - சேர்க்கும்படி. இச்செய்யுளில் **உருகவ அணி** அமைந்துள்ளது.

3. கலிங்கத்துப்பரணி

'**பரணி**' என்பது தமிழிலுள்ள தொண்ணூற்றுறு வகைச் சிறு நூல்களுள் (பிரபந்தம்) ஒன்று; போர் முகத்தில் ஆயிரம் யானைகளை அழித்து வென்ற வீரனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட சிறு நூல் வகை. கலிங்கத்துப்பரணி என்பது விசயதர (முதற்குலோத்துங்க) சக்கரவர்த்தியின் முதன் மந்திரியாயிருந்த **கருணாகரத் தொண்டைமான்** அம்மன்னனது பிரதிநிதியாகக் கலிங்கத்தின்மீது படையெடுத்துச் சென்றுபெற்ற வெற்றியை அரசன் வெற்றியாகவே வைத்துச் சிறப்பித்துக் கூறுவது. இந்நூல் '**கடவுள் வாழ்த்து**' முதல் '**கூழடுதல்**' ஈருகப் பதின்மூன்று உட்பிரிவுகளையுடையது.

இந்த நூலை இயற்றியவர் **சயங்கொண்டார்** என்னும் புலவர் பெருமான். இவர் ஊர் சோழ நாட்டின் கண்ணதாகிய தீபங்குடி. இவரது காலம் கி. பி. 1070—1118.

களங்காட்டியது

சாய்ந்துவிழுங் கடகளிற்றின் உடனே சாய்ந்து
தடங்குருதி மிசைப்படியுங் கொடிக டங்கள்
காந்தருடன் கனலமளி யதன்மேல் வைகுங்
கற்புடைமா தரையொத்தல் காண்மின்! காண்மின்!

அருஞ்சொற்பொருள் :

களங்காட்டியது : இப்பகுதி கலிங்கப் போரைக் கூளி விவரமாய்க் கூறக் கேட்ட காளி, பேய்க்கணங்களோடு போர்க்களஞ் சென்று கண்ட அதிசயத்தைக் கணங்களுக்குக் காட்டியதைக் கூறுவது.

கொடிகள் - காகங்கள், காந்தர் - கணவர், கனல் அமளி - நெருப்புப் படுக்கை.

பயிற்சி வினுக்கள் :

1. பிள்ளைத் தமிழின் இலக்கணம் யாது ?
2. நாண்மணி மாலை, கலிங்கத்துப் பரணி—முன்னதற்கு நூற்குறிப்பும், பின்னதற்கு ஆசிரியர் குறிப்பும் வரைக.
3. மீனுட்சியம்மையின் பெருமையைக் குமரகுருபரர் எவ்வாறு பாராட்டியுள்ளார் ?
4. மீனுட்சியம்மையைச் சுவையாகவும் விளக்கமாகவும் ஆசிரியர் உருவகித்துள்ள தன்மையை விளக்குக.
5. காயச் சிறைக் கலத்தில் ஏற்றப்படும் சரக்குகள் எவை ?
6. 'அறிவில் ஒழுக்கமும்' என்று தொடங்கும் செய்யுளின் பொருளைத் தொகுத்து, 20 வரிகளில் எழுதுக.
7. கீழ்வரும் உவமையின் பொருத்தத்தைப் புலப்படுத்துக :—
காந்தருடன் கனலமளி யதன்மேல் வைகும் கற்புடை மாதர்.

5. வழிபாட்டுப் பாடல்கள்

1. தேவாரம்

சைவ சமய குரவர் நால்வருள் திருநாவுக்கரசரும், திருஞான சம்பந்தரும், சுந்தரரும் பாடிய பாடல்களின் தொகுதிக்குத் 'தேவாரம்' என்பது பெயர். தேவாரம் என்பது, தே+வாரம் எனப் பிரிந்து, 'தெய்வத்தைப் பற்றிய இசைப் பாட்டு' எனப் பொருள்படும். இனி, தே+ஆரம் எனப் பிரித்துக் 'கடவுளுக்கு ஆரம் போல்வது' எனப் பொருள்கொண்டு, 'சிவபெருமாகிய கடவுளுக்குச் சூட்டப்படும் பூமாலை போன்ற பாமாலை' என உரைப்பினும் அமையும்.

கீழ் வரும் பாடல் சுந்தரர் தேவாரத்திலுள்ளது. இவரது காலம், கி. பி. எட்டாம் நூற்றுண்டு.

பொன்னு மெய்ப்பொரு ளுந்தரு வானைப்
போக முந்திரு வும்புணர்ப் பானைப்
பின்னை யென்பிழை யைப்பொறுப் பானைப்
பிழையெ லாந்தவி ரப்பணிப் பானை

இன்ன தன்மைய னென்றறி யொண்ணு
எம்மா னையெளி வந்தபி ரானை
அன்னம் வைகும் வயற்பழ னத்தணி
யாரூ ரானை மறக்கலு மாமே?

அருஞ்சொற்பொருள் :

மெய்ப்பொருள் - ஞானம், பணிப்பானை - கட்டளை இடுபவனை, எளி வந்த - எளியனாகி வந்த, அன்னம் - அன்னப்பறவை, மறக்கலு மாமே - மறத்தலும் இயலுமா? இயலாதென்றபடி; ஏகாரம்—எதிர் மறைப்பொருளது.

2. தேம்பாவணி

தேம்பாவணி என்பது தேம்பா+அணி எனப் பிரிந்து, 'வாடாத மாலை' எனப் பொருள்படும். இது ஒரு சிறந்த கிறித்தவத் தமிழ்க் காப்பியம். இதில் சூதேய நாட்டிற்பிறந்து புகழ் பெற்ற சூசைமாமுனிவர் வரலாறு கூறப்படுகிறது. இந்நூலாசிரியர் வீரமாமுனிவர். இவர் இத்தாலி நாட்டினர். இவரது இயற்பெயர் பெஸ்கி. இவர் தமிழில் பல நூல்களை இயற்றியுள்ளார். இவரது காலம், கி. பி. 18-ஆம் நூற்றாண்டு.

சூசைமா முனிவர் இறைவனைத் துதித்தல்

கார்த்திரள் மறையாக் கடலினுள் மூழ்காக்
கடையிலா தொளிர்பரஞ் சுடரே!
நீர்த்திரள் சுருட்டி மாறலை இன்றி
நிலைபெறும் செல்வநற் கடலே!
போர்த்திரள் பொருதக் கதுவிடா வரணே!
பூவனந் தாங்கிய பொறையே!
சூர்த்திரள் பயக்கும் நோய்த்திரள் துடைத்துத்
துகள்துடைத் துயிர்தரும் அமுதே!

அருஞ்சொற்பொருள் :

கார்த்திரள் - மேகக் கூட்டம், ஒளிர் - விளங்கும். 'மறையாமலும், மூழ்காமலும் விளங்கும் சுடரே,' என்க. மாறு அலை இன்றி - மடங்கும் இயல்புள்ள அலைகள் இல்லாமல், போர்த்திரள் - போர்க்களத்தில் கூடிய பகைவர் சேனைகள், பொருத - போர் புரியவும், கதுவிடா - (அதனால்) உடைபடாத, அரண் - கோட்டை, பூவனம் - பூவுலகம், பொறை - மலை, சூர்த்திரள் - கூட்டமான துன்பங்கள், துகள் - பாவம், உயிர் தரும் - உயிரைக்கொடுக்கும்.

3. மாலைப் பாக்கள்

'மாலைப் பாக்கள்' என்னும் நூல் தூத்துக்குடிப் புலவர் **மாஸ்கரேனஸ்** அவர்களால் இயற்றப்பெற்றது. இது தேர்ந்தெடுக்கப் பெற்ற சுவையான கவிதைகளின் தொகுப்பு நூல். கீழ் வரும் வழிபாட்டுப் பாடல் இந்த நூலின் அஞ்சலி என்னும் தலைப்பில் அமைந்துள்ளது. அஞ்சலிப்பாக்கள் உள்ளத்தைத் தொடும் தன்மையவை; இறைவனது தடங்கருணைப் பெரு-வெள்ளத்தில் நம்மைத் திளைக்க வைப்பவை.

அன்பெனும் கயிற்றால் மானிட வுளத்தை
அழுத்தமாய்ப் பிணித்தவர்க் குறுதி
இன்புற அளிக்கும் அருட்பெருஞ் சுடரே !
இறைநினை மறப்பின்எம் நிலைமை
என்பெறும்! இதனை நீஅறிந் திலையோ ?
எமதுவாழ் வனைத்தையும் நினது
பொன்பழித் தெழுதாள் நீழலில் வைக்கப்
போந்தமெய் யறிவினைப் பொழியே.

அருஞ்சொற்பொருள் :

இறை - சிறிதும், நினை மறப்பின் - உன்னை மறந்தால்.

4. சீறாப் புராணம்

சீறாப் புராணம் முகம்மது நபியைப் பாட்டுடைத் தலைவ-ராகக் கொண்டு அவரது வரலாற்றைக் கூறும் ஒரு காவியம். 'சீறா' என்னும் வார்த்தைக்கு 'வாழ்க்கை வரலாறு' என்பது பொருள். இதன் ஆசிரியர் உமறுப் புலவர். இவர் இராமநாத-புரத்திலுள்ள கீழ்க்கரையை அடுத்த ஒரு சிற்றூரில் சேகு முதலியார் என்பவருக்குப் புதல்வராய்ப் பிறந்தார். இவர் காலம் 17-ஆம் நூற்றாண்டு.

சிறந்தமெய்ப் பொருளை யழிவிலா மணியைத்
தெரிந்துமுக் காலமு முணர்ந்து
துறந்தவ ரிதயா சனத்திருந் தவனைத்
தொடரின்ப துன்பமற் றவனைப்
பிறந்தபல் லுயிரின் மனத்தள வுறைந்து
பிறப்பிறப் பென்றிலா தவனை

மறந்தவர் சுவர்க்கப் பதியையு மறந்து
மண்ணினில் மதிமறந் தவரே.

அருஞ்சொற்பொருள் :

மெய்ப்பொருள் - உண்மைப் பொருள், இலா - ஈறு கெட்ட எதிர் மறைப் பெயரெச்சம், துறந்தவர் - பற்றுக்களை விட்ட ஞானிகள், பல + உயிர் = பல்லுயிர். சுவர்க்கப் பதி - மேலுலகம், மதி மறந்தவர் - அறிவு கெட்டவர்.

5. அருள் வேட்டல்

கீழ் வரும் பாடல் கவிஞர் பிரான்சிஸ் முருயிஸ் அடிகள் இயற்றியுள்ள உவகையுள்ளம் என்ற கவிதைத் தொகுதியிலிருந்து எடுக்கப்பெற்றது. உலகிலே மனிதனுக்கும் அவனது கர்த்தாவான கடவுளுக்கும் உள்ள உறவைப்போன்று, பிணைப்பைப் போன்று, வேறு எதுவும் அவ்வளவு உயர்ந்ததன்று, நெருங்கியதன்று என்பதை இந்த ஏக்கம் நிரம்பிய பாட்டு வெளிப்படுத்துகின்றது. இதன் ஆசிரியர் செண்பகனூர் திரு இருதயக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார்.

ஓடுகின்ற நதியொழுக்கில் ஒளிந்துள் ளாயோ !
உறைந்தபனிக் கட்டியிலே மறைந்துள் ளாயோ !
ஆடுகின்ற மரக்கிளையில் அமர்ந்துள் ளாயோ !
அணித்தபசும் புற்றரையில் அயர்ந்துள் ளாயோ !
வாடுகின்ற மலர்களொடு வதங்கி னாயோ !
மரங்களின்பின் மறைந்தென்னை மயக்கின் றாயோ !
தேடுகின்றேன் ; காணாது தயங்கு கின்றேன் ;
திருவதனம் காண்கிறநாள் எனக்கு முண்டோ ?

அருஞ்சொற்பொருள் :

அணித்த - அடுத்துள்ள, புல் + தரை = புற்றரை, வதனம் - முகம்.

பயிற்சி வினாக்கள் :

1. சுந்தரர் போற்றும் ஆரூரர் பெருமைகளைக் குறிப்பிடுக.
2. சூசை மாமுனிவர் இறைவனை எங்ஙனம் போற்றித் துதிக்கின்றார் ?
3. அஞ்சலி ஆசிரியர் இறைவனிடம் வேண்டுவது என்ன ?
4. இறைவனின் இயல்புகளாக உமறுப் புலவர் கூறுவனவற்றைத் தெரிவிக்க.
5. பிரித்தெழுதுக :—
இதயாசனம், முக்காலம், பல்லுயிர்.

உரை நடைப்பகுதி

1. இளமை விருந்து

[திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள்]

(இவர் திரு. வி. க. என்னும் பெயரால் நாடறிந்த நற்றமிழ்ப் புலவர்; அரசியல் துறையில் நம் அன்னை மொழியை அரியணை ஏற்றியவர்; இளைஞர் முன்னேற்றத்தில் ஈடுபட்டு அவர்தம் உள்ளங்களைக் கொள்ளை கொண்டவர். இளைஞர் உலகிற்கு விருந்தாக அமைந்த இவரது ஒரு சொற்பொழிவின் திரட்டு இங்குப் பாடமாகத் தரப்பட்டுள்ளது.)

சோழநாடு தொன்மை வாய்ந்தது; மாண்புடையது; நாகரிகத்தில் முதிர்ந்தது. அதன் **வளன், அரசு, வண்மை, வீரம், கல்வி, தொழில்** முதலியன சரித்திர ஆழியில் பதிந்து கிடக்கின்றன.

சோழநாட்டின் இயற்கை போற்றுதற்குரியது. மக்கள் வாழ்விற்கு ஏற்ற பெற்றியில் அஃது அமைந்திருக்கிறது. வெம்மையால் வெந்து எரிதலும், தண்மையால் நடுங்கி வீழ்தலும் சோழநாட்டு இயற்கையிலில்லை. குறிஞ்சியும் முல்லையும் மருதமும் நெய்தலும் சோழநாட்டுச் செல்வங்களாய் மக்களுக்கு இன்பூட்டுகின்றன.

'வான் பொய்ப்பினுந் தான் பொய்யாக் காவிரி' பாட்டெனப் பரந்து, கிளை கிளையாய்ப் பிரிந்து, கால் காலாய் விரிந்து, சோழநாட்டை அணி செய்கிறது. காவிரிப் பயனை சோழநாடு நுகர்தலால், அது புனல் நாடாய்ச் சோறுடைத்தாயது போலும்!

சோழநாட்டு மன்னரின் வீரமும், வண்மையும், பிறவும் ஆட்சி முறைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாய் இலங்குவன. சோழ மன்னர் வீரம் இமயம் வரை முட்டியது ஈண்டு நினைவிற்கு வருகிறது. சோழ மன்னரின் மாண்புக்குக் **கரிகாற்பெருவளத்தான்** வரலாறு ஒன்று சாலும்.

சோழநாட்டிற்றோன்றிய அன்பர் பலர்; அறவோர்

பலர் ; பாவலர் பலர் ; வீரர் பலர். அவர்தம் மொழிகளும் செயல்களும் உலகைப் பல வழியிலும் வளர்த்து வருகின்றன. சோழநாட்டை ஓர் ஓவியக்கூடம் என்றுங்கூறலாம். சோழநாட்டுப் பழம்பெருங்கோயில்கள் ஓவியக்காட்சி வழங்குதல் வெள்ளிடை மலே. வேறு பல சிறப்புக்களும் சோழநாட்டை அழகு செய்கின்றன.

சிலம்பையும், மேகலையையும் தந்த சோழநாடு இப்பொழுது இருக்கிறதா ? அச்சோழநாடு மறைந்துவிட்டது. அதன் நிலப்பரப்பு மட்டும் இப்பொழுது இருக்கிறது. நாடு என்பது நிலப்பரப்பை மட்டுங் குறிப்பதன்று. அரசு, கல்வி, வாழ்வு, நாகரிகம் முதலியன சேர்ந்த ஒன்று நாடு என்பது. மறைவுற்ற சோழநாட்டைச் சரித்திரத்திற் பரக்கக்காணலாம். சரித்திரத்தால் அக்காலச் சோழநாட்டையும் இக்காலச் சோழநாட்டையும் ஒப்பிட்டு நோக்கிச் சோழநாட்டை நன்முறையில் பண்படுத்தல் வேண்டும்.

சரித்திரம் வீணுக்கு ஏற்பட்டதன்று. அது பாடத்துக்கும், பட்டத்துக்கும் மட்டும் ஏற்பட்டதன்று. முற்கால பிற்கால நலந்தீங்குகளே உணர்ந்து, தீங்கைக் களைந்து, நலத்தைக் கொண்டு, ஒழுங்குபட்ட வாழ்வு நடாத்த வழிகோலிக்கொள்ளுதற்குச் சரித்திர உலகம் ஏற்பட்டது. சரித்திரக் கண்கொண்டு எதையும் ஆராய வேண்டுவது நம் பெருங்கடமை.

ஆராய்ச்சித் துறை நண்ணுது, ஒன்றைப் பழமை என்றதும் அதனேப் போற்றவோ தூற்றவோ புகுவதும், அவ்வாறே ஒன்றைப் புதுமை என்றதும் அதனேத் தூற்றவோ போற்றவோ புகுவதும் பகுத்தறிவுச் செயல்கள் ஆகா. பழமையில் நல்லனவும் இருக்கலாம் ; தீயனவும் இருக்கலாம். அங்ஙனே புதுமையிலும் தீயனவும் இருக்கலாம் ; நல்லனவும் இருக்கலாம். பழமை புதுமை என்னும் அளவில் நின்று, ஒன்றைத் தள்ளல் கொள்ளல் விதிப்பது அறிவுடைமையாகாது. அதன் அதன் தன்மைகளே நன்கு ஆராய்ந்து உணர்ந்த பின்னரே தள்ளல் கொள்ளல் விதிப்பது அறிவுடைமை.

இக்கால உலகிற்கு ஆராய்ச்சி இன்றியமையாதது. அவ்வாராய்ச்சிக்குரிய பல திறக் கல்வித் துறைகளைப் பயிலும் பருவம் எது? உங்கள் சீரிய செம்மைப் பருவம் என்று சொல்லலும் வேண்டுமோ? 'வருங்கால உலகுக்-குரிய ஆக்கங்களைத் தம்மாட்டு மாணுற ஆக்கும் முயற்சி-யில் தலைப்பட்டுள்ளோர் மாணுக்கராவர்,' என்று சுருங்கச் சொல்லலாம். இப்பருவமுடைய நீங்களல்லவோ நாட்டின் செல்வம்?

வருங்கால உலகை ஆக்கும் வாய்ப்பு உங்களிட-மிருக்கிறதெனில், உங்கள் பொறுப்பு, பெரிது! பெரிது! கடலினும் பெரிது! இப்பொறுப்பு வாய்ந்த மாணுக்கர்க்-குரிய கடமைகள் பலப்பல. அவற்றை இம்மகாநாட்டுத் தலைமையுரையில் எங்ஙனம் விரித்துரைப்பது? இன்றி-யமையாத சிலவற்றை மட்டும் ஈண்டுச் சுருங்கச் சொல்ல முயல்கிறேன்.

'சுவரை வைத்தே சித்திரம் எழுத வேண்டும்,' என்பது பழமொழி. எதற்கும் உடல் நலன் வேண்டற்-பாலது. பெரும்பொறுப்பை ஏற்கப்போகும் நீங்கள், உடல்நலனைப் பேணுதல் வேண்டுமா வேண்டாவா என்-பதை உன்னுங்கள். **கிளர் ஈரலும், தடைபடாக் குருதியோட்டமும், எஃகு நரம்பும், ஏக்கழுத்தும், பீடு நடையும்** உடையவர்களாக நீங்கள் திகழ்தல் வேண்டும்.

சில மாணுக்கர் உடலை ஓம்பாது, இரவும் பகலும் ஏடுகளைக் கட்டியழுவதைப் பார்த்திருக்கிறேன். அவர் வாழ்வு இரங்கத்தக்கதாக முடியும்; சில இடங்களில் அவ்வாறு முடிந்ததும் எனக்குத் தெரியும். ஆண்டவன் அளித்த அரிய உடலை நல்வழியில் ஓம்பாதாரை இயற்கை-யன்னை ஒறுத்தே தீர்வள். அவ்வொறுத்தலுக்கு ஆளா-காத வழியில் உடலை ஓம்பவேண்டுவது உங்கள் கடன்; தலையாய கடன் என்றுங் கூறுவேன்.

மாணுக்கர் பார்வைக்கு இனியராயிருத்தல் வேண்டும். இளமை அழகுள்ள இடத்தில் இனிமையுண்டு. மாணுக்கர் உடலில் இளமை மணங்கமழின் அதன்கண் அழகொளி

வீசும். 'கண்கொள்ளாக் கவின் பொழிந்த திருமேனி கதிர் விரிப்ப – விண்கொள்ளாப் பேரொளியான்,' என வரூஉம் சேக்கிழார் மொழியின் பொருளாக மாணுக்கர் இலங்க விரும்புவர் என்றே நினைக்கிறேன். கம்பரும் 'கந்தனை யனையவர் கலைதெரி கழகம்' என்று கூறியதும் ஈண்டுக் கருதற்பாற்று.

இளமை அழகுக்கு இயற்கை வாழ்வு வேண்டற்பாலது. அதற்கு முதலாவது ஒழுங்கு வேண்டும். இயற்கை நிகழ்ச்சி ஒவ்வொன்றும் ஒழுங்கு என்னுங் கோட்டின் வழியே இயங்குகின்றது. ஆகவே, இயற்கையோடியைந்த வாழ்விற்கு ஒழுங்கு இன்றியமையாதது.

ஒழுங்கை மாணுக்கர் உறுதியாகக் கடைப்பிடித்து ஒழுகுவாராணுல், வருங்காலத்தில் நாடே நன்னிலை எய்தும். படுக்கை விட்டெழுதல், உலவல், உண்ணல், படித்தல், ஆடல், உறங்கல் முதலியன குறித்த காலத்தில் நிகழுமாறு பயிற்சி செய்யின், அவற்றினின்றும் வாழ்வு நிகழ்ச்சிகளெல்லாம் ஒழுங்கிற்கு வரும்.

காலையிலும் மாலையிலும் உலவுதல் நல்லது. உலாவலில் கதிரொளியில் மூழ்கலும், காற்றில் தோய்தலும் நிகழ்கின்றன. உலவ இயலாதார் ஏதாயினும் வேறு விதப் பயிற்சி செய்யலாம். அன்ணுர் குதிரை ஏற்றம், நீச்சு, சிலம்பம், ஆசனம் முதலியவற்றில் ஏதாவதொன்றைக் கொள்ளலாம். பயிற்சியின் பின்னை நீராடுதல் சிறப்பு.

தீட்டிய அரிசியைத் தள்ளுக; கொழியல் குற்றலரிசியைக் கொள்ளுக. கீரை காய் கனிகளை உண்க; காப்பி, டீ, கொக்கோ முதலிய பானங்கட்குப் பதிலாக நீர், மோர், இளநீர் முதலியவற்றை அருந்துக. வாதுமை, நிலக்கடலை, தேங்காய் முதலியவற்றில் கொழுமையுண்டு. எதையும் அளவறிந்துண்பது சால்பு. மட்பாண்டச் சமையல் நல்லது. பசியெழுந்த பின்னை உண்ணும் பயிற்சி உடலோம்புவதாகும். வேளைக்கு வேளை பசியெழும்புவது உடலோம்பு முறையைப் பொறுத்திருக்கிறது. சுருட்டு, பீடி, சிகரெட்டு முதலியவற்றைக் கனவிலுங்

கருதாதீர்கள். தரைச்செலவு, கடற்செலவு முதலியனவும் உடலோம்பலுக்குத் துணை செய்வன.

உடலோம்பலுடன் அறிவோம்பலும் நிகழ்ந்துவரல் வேண்டும். அன்றேல், வாழ்வில் அறிவியற்கூறுகள் இடர்ப்பட நேரும். அறிவோம்பலுக்குக் கல்வி தேவை. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது கல்வி எனப்படும். அக்கல்விப் பயிற்சிக்குரிய பருவம் இளமை என்பதை விளக்க வேண்டுவதில்லை. இது பற்றியே 'இளமையிற்கல்,' என்னும் முதுமொழி பிறந்தது.

கல்வித் துறைகள் பல திறத்தன. அவற்றுள் ஒவ்வொன்று ஒவ்வொருவர் இயல்புக்குப் பொருந்தியதாகத் தோன்றும். அப்பொருந்திய ஒன்றில் சிறப்பு அறிவு பெறவும், பிறவற்றில் பொது அறிவு பெறவும் அவரவர் முயல்வது ஒழுங்காகும்.

இக்காலத்தில் கல்லூரியில் படிப்போர் தொகை, நாளுக்கு நாள் பெருகுதல் கண்கூடு. கல்விப் பெருக்குப் போற்றத்தக்கதே. ஆனால், பெரும்பான்மையோர் அக்கல்வியை எந்நோக்குடன் பயில்கிறார்? உத்தியோக நோக்குடன் என்பது சொல்ல வேண்டுவதில்லை. அந்நோக்குடன் கல்வி பயின்றோர் நிலை எவ்வாறிருக்கிறது? அவர்தம் நிலை இரங்கத் தக்கதாயிருக்கிறது. வேலையின்பொருட்டு இளங்கொழுந்துகள் படுந்துன்பம் அளவிடற்பாலதன்று. இவ்வேளையில், உத்தியோக நோக்குடன் கல்வி பயிலுதல் வேண்டா என்றும், அறிவு விளக்கத்தின்பொருட்டுக் கல்வி பயிலுதல் வேண்டும் என்றும் இயற்கை அன்னை எச்சரிக்கை செய்த வண்ணமிருக்கிறாள். அவ்வெச்சரிக்கைக்கு மாணாக்கர் செவிசாய்த்து நடப்பாராக. செவி சாய்த்து அறிவு விளக்கத்துக்கெனக் கல்வி பயின்று அவ்வறிவை நாட்டுத் தொழிற்றுறைகளைப் புதிய முறைகளில் வளர்க்கப் பயன்படுத்துவாராக !.

நமது நாட்டில் பல திற ஆராய்ச்சிகள் நிகழ்ந்த வண்ணமிருக்கின்றன. அவற்றுள் ஒன்று, எம்மொழியிற் கல்வி பயில வேண்டுமென்பது.

தாய் மொழியில் கல்வி பெறுவது இயற்கை. தாய்

மொழிப் புலமை நிரம்பப் பெற்ற பின்னே வேறு பல மொழிகளைப் பயிலலாம்; ஆராயலாம். முதல் முதல் தாய் மொழி வாயிலாகவே கல்வி பயிலுதல் வேண்டும். 'தாய் நாடு' என்னும் பெயர், தாய் மொழியைக் கொண்டே பிறப்பது. அத்தாயை வஞ்சிப்பது பாவம் அன்றோ?

சகோதரிகளே, சகோதரர்களே, இன்னும் உங்கள் அரிய காலத்தைக் கொள்ளையிடுதற்கு என் மனம் எழ-வில்லை. இதுகாறும் பொறுமையுடன் என் புன்மொழி-களைச் செவிமடுத்த உங்கட்கு எனது நன்றியறிதலான வணக்கம் உரித்தாகுக! வருங்கால உலகம் உங்களை எதிர் நோக்கி நிற்கிறது. அதற்கு முதலாவது உடலை ஓம்பிக் கல்வி பயின்று, விஞ்ஞானக் கலைகளில் ஊக்கஞ் செலுத்-துங்கள்; நாட்டுக் காவியங்களுடன் உறவு கொண்டு அவற்றின் இயற்கை அமிழ்தை உண்ணுங்கள்; உங்களை நன்முறையில் பண்படுத்தித் தமிழ்த்தாய்க்குச் சேவை புரிய விரைந்து நில்லுங்கள்; தமிழ்த்தாய் உங்கள் முகத்தை நோக்கிய வண்ணமிருக்கிறாள்; அவளைப் பற்றியுள்ள பீடைகளெல்லாவற்றையும் தொலைக்க எழுங்-கள்! எழுங்கள்!.

அருஞ்சொற்பொருள் :

ஈண்டியுள்ள - கூடியுள்ள. அமைச்சர் என்றது ஈண்டு முன்னு ளமைச்சரான திருவாளர் குமாரசாமி ரெட்டியாரைக் குறிக்கின்றது. புலவர் என்றது திருவாளர் கா. நமச்சிவாய முதலியாரைக் குறிக் கின்றது. சால்பு - பொருத்தம், ஆழி - கடல், மாண்பு - பெருமை, ஓம்பாதாரை - போற்றுதவரை, ஒறுத்தல் - தண்டித்தல், கவின் - அழகு, செலவு - பிரயாணம், பீடைகள் - துன்பங்கள்.

பயிற்சி வினாக்கள் :

1. சோழ நாட்டின் சிறப்பும் பெருமையும் பற்றித் திரு. வி. க. கூறுவதென்ன?
2. சரித்திரம் எதற்காக ஏற்பட்டது?
3. மாணாக்கர் எவ்வாறு திகழ வேண்டுமெனத் திரு. வி. க. விரும்புகிறார்?
4. உடலோம்பல் பற்றி ஆசிரியர் கூறுவதை 20 வரிகளில் தெரிவிக்க.
5. கல்வி எந்நோக்குடன் பயில வேண்டுமெனத் திரு. வி. க. தெரிவிக்கிறார்? ஏன்?
6. திரு. வி. க. அவர்கள் தமது முடிவுரையில் கூறியுள்ள அறி-வுரை என்ன?

2. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

[டாக்டர் அ. சிதம்பரநாதன் செட்டியார் அவர்கள்,
எம். ஏ., பிஎச். டி.]

(இவர் அண்ணுமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியராய் இருந்தவர்; இப்பொழுது சென்னைப் பல்கலைக் கழக ஆங்கில தமிழ்ப் பேரகராதித் தொகுப்புக் குழுவில் தலைவராயிருந்து பணி புரிபவர்; இங்கிலாந்து, பிரான்சு முதலிய மேனுடுகளுக்குச் சென்று தமிழ்க் கலைகளின் சிறப்பியல்புகளைப் பற்றி விரிவுரையாற்றியவர்; ஆராய்ச்சியறிஞர்; நூலாசிரியர்; பண்பட்ட எழுத்தாளர்.)

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே."

என முழங்கினுர், கவிஞர் சுப்பிரமணிய பாரதியார்.

"ஒற்றுமை யாக உழைத்திடுவோம்,—நாட்டில்
உற்ற துணைவராய் வாழ்ந்திடுவோம்."

என்ருர், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை.

இறக்கும் தறுவாயில் இருந்த ஒரு முதியவர் தம் பிள்ளைகளை அழைத்து, விறகை ஒவ்வொன்ருகக் கொடுத்தும், கட்டாகக் கொடுத்தும் முரிக்குமாறு பணித்தார் என்றும், ஒன்றினை முரித்த பிள்ளைகள் கட்டினை முரிக்கக் கூடாத காரணத்தை வைத்து, அவர்களுக்கு ஒற்றுமை உபதேசம் செய்தார் என்றும் சொல்லப்படுகிற கதை நம்முள் பலர் அறிந்ததே. திருவள்ளுவரும் ஒற்றுமையின் அருமையை ஓர் உதாரண முகத்தான் விளக்கியுள்ளார். ஒரு பெரிய வண்டி இருக்கிறது. அது வலிமை மிக்கதே. எனினும், மயில் தோகையை நிரம்ப நிரம்ப வாரி வாரிப்போட்டுக்கொண்டேயிருந்தால், அவ்வண்டியும் தாங்காது அச்சு ஒடியும். தோகையோ, மிகவும் நொய்ம்மையானது; வண்டியின் அச்சோ, மிகவும் வலிமை உடையதாய் உள்ளது. எனினும், தோகைகள் மேலும் திரண்டு கூடி வருவதால் அச்சு இற்றுப் போகிறது. அதைப்போலவே, நம் பகைவர் எத்துணை எளியவராயினும், சேர்ந்து சேர்ந்து கூட்டமாக வருவாரேயாயின், நமது வலிமை பெரிதாயினும் பயனின்றிப் போம். நாமே ஒற்றுமைக்குப்

பலரையும் நம்மோடு சேர்த்துக்கொள்ளுவோமாயின், வரும் பயன் மிகப்பெரிதன்றோ? இவற்றையெல்லாம் உணர்த்த எடுத்துக்கொண்ட வள்ளுவர் பெருந்தகையார்,

"பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம்
சால மிகுத்துப் பெயின்."

என்று வழங்கியருளினர்.

நம் சுற்றத்தாரேயன்றி நமது ஏவல் செய்வோர்-தாமும் நம்மோடு இயைந்தவராய் இருத்தல் வேண்டும். நாமொன்று கருத, நம் வேலைக்காரர் பிறிதொன்று நினைத்துச் செய்து நமக்கு எள்ளல் வாங்கித் தருவாரா-யின், அவ்வேலைக்காரரால் நமக்கு உதவியுண்டாவதற்கு மாறாகப் பல சங்கடங்கள் வந்து சேரும். சங்கடங்கள் ஏற்படின், கவலையுண்டாவது உறுதி. கவலையேற்பட்-டாலோ, கருமயிர் நரைத்தல் ஒருதலை. எனவே, நம்-மோடு ஒற்றுமைப்பட்ட வேலையாட்கள் இல்லையேல், நாம் விரைவில் மூப்பு உற்றவர் போன்று தோன்றுவோம். இதன் உண்மை, பழந்தமிழ்ப் பாடல் ஒன்றாலும் அறியப்-படுகிறது:

முன்னாளில் பிசிராந்தையார் என்னும் ஒரு புலவர் இருந்தார். அவருக்கு வயது பல ஆகியும், நரை தோன்ற-வில்லை. புலவர் சிலர், அவரை ஒரு நாள் அதற்குக் கார-ணம் கேட்டனர். அவர் சொல்லிய காரணங்களுள் ஒன்று, 'யான் கண்டனையர் என் இளையரும்,' என்பது. அதன் கருத்து, "நான் நினைக்கிறபடியே நினைத்து என்-னுடைய ஏவல் செய்வோரும் என்னோடு இயைந்து செயல்களைப் புரிகின்றனர்; என் இல்லத்தில் சண்டை தொல்லைகள் இல்லை," என்பதாகும்.

இனி, குடும்பத்தாரிடையே பூசலுங் கலாமும் விளை-யக் கூடிய வேளைகளில், புலவர் சிலர் ஒற்றுமையுரை நல்-கித் தடுத்துள்ளனர் என்பதை அறிகிறோம். நலங்கிள்ளி என்னும் சோழனும், நெடுங்கிள்ளி என்னும் சோழனும் தாயத்தார். அவருள் நலங்கிள்ளி மிக்க வீரம் வாய்ந்த-வன்; சேர பாண்டிய அரசரை வென்று, அவர்தம் வஞ்சி-

யென்னும் ஊரையும், மதுரையென்னும் ஊரையும் புல-வர்க்கு வழங்கத் தக்க ஆற்றலுடையவன். அவன் ஒரு நாள் உறையூரை முற்றுகையிட்டான். உள்ளே பங்காளி-யாகிய நெடுங்கிள்ளி இருந்தான். பார்த்தார் ஒரு புலவர்; 'அழகிது!' என நினைத்தார். நலங்கிள்ளியிடம், "ஒன்று பட்டால் வாழ்வுண்டு; அன்றேல், இருவர்க்கும் தாழ்வே," என்று கூறினர்.

இக்கருத்துப் பொதிந்த பாடல் புறநானூற்றில் காணப்படுகிறது. அதன் பொருள், "அரசே, நீ பொர நினைக்கும் அரசன் சேரனும் அல்லன்; பாண்டியனும் அல்லன். நீயும் சோழன்; அவனும் சோழன். நீயும் ஆத்திமாலை சூடியிருக்கிறாய்; அவனும் ஆத்திமாலை சூடி-யிருக்கிறான். அஃது ஒன்றே நீவிர் இருவீரும் ஒரு குடிப்-பிறந்தீர் என்பதைக் காட்டுமே! நும் இருவருள் எவர் தோற்றாலும், தோற்பது நும் குடியன்றோ? அவ்வசை வர-லாமா? நீவிர் இருவீரும் வெற்றி கொள்ள முடியாது என்-பது வெளிப்படை. நுமது குடிக்கு வரும் பழியை நீக்க வேண்டுமானால், இம்மாறுபாட்டை உடனே தவிர்க்க வேண்டாவோ? நீவிர் பொருவீரானால், நும் பகைவரெல்-லாரும் உடம்பு பூரித்து உவகை எய்துவர். அவர் உவகை நுமது இளிவரல் அன்றோ? நீர் போர் குறித்து நிற்பது நும் குடிக்கு ஏற்றதன்று," என்பதாகும்.

நலங்கிள்ளி, 'குடிக்கு வடு உண்டாகும்' என்பது கேட்டவுடன் போர்க்கோலம் நீத்தான். நெடுங்கிள்ளியும் புலவர் மொழியைக் கேட்டுக் கவலை விட்டான். இங்ஙனம் ஒற்றுமைப்படுத்திய புலவரது பெயரை நாம் அறிய வேண்டாவோ? வேண்டினும் அவர் பெயரை அறியோம்; ஊரை அறிவோம். அவ்வூர்ப் பெயராலேயே அவர் இற்றை நாள் வரை அறியப்படுகிறார். அவரை மறவாது இருப்-போமாக! **கோவூர் கிழார்** வாழ்க!

மற்றொரு புலவர், பாண்டியன் ஒருவனுக்கும் சோழன் ஒருவனுக்கும் ஓர் அறவுரை பகர்ந்துள்ளார். அவர் **காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார்** எனப்படு-வர். வெள்ளியம்பலத்துத் துஞ்சிய **பெருவழுதி** என்னும்

அப்பாண்டியனையும், குராப்பள்ளித் துஞ்சிய **பெருந்திருமா வளவன்** என்னும் அச்சோழனையும் ஒரு நாள் ஒருசேரக்கண்ட அப்புலவர்க்கு உண்டான மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. உடனே அவர் பாடத் தொடங்கிவிட்டார்.

"பால் நிறக் கடவுளும், நீல் நிறக் கடவுளும் உடனிருப்பது போல உள்ள நீவிர் இருவீரும் இயைந்திருப்பது இனிது. அண்ணனும் தம்பியுமாகிய பலராமனும் கண்ணபிரானும் ஒருங்கு இருப்பது போன்று உள்ளது உமது தோற்றம். இதனினும் சிறந்த காட்சி பிறிதொன்று உண்டோ? நீவிர் இருவீரும் ஒருவிர் ஒருவிர்க்கு உதவி புரிவீராகுக! நீவிர் இங்ஙனே ஒன்றுபட்டிருப்பின், கடல் சூழ்ந்த பேருலகு நும் கையகப்படுவது மெய்யேயாகும். இப்படி நீவிர் அன்பினால் இயைந்துள்ளதைக் காணும் சிலர் பொறாமை கொண்டு, நல்லன சொல்லுவார் போலச் சில சொல் சொல்லி நும்மைப் பிரிக்கப்பார்ப்பர். நான் வேண்டுவதெல்லாம் இன்று போலவே என்றும் இருங்கள் என்பது. இருப்பீராயின், வெற்றியெல்லாம் நும் இருவர்க்கேயாம்; நும் கொடிகளே பிற நாடுகள் எங்கும் துலங்கும். பிரியன்மின்! பிரியன்மின்!" என்பது அவர் பாட்டின் கருத்து.

மற்றுமொரு புலவர், சினத்த தந்தையை எதிர்த்த மக்களோடு ஒன்றுபடுத்தி வைத்தார் என்றும் அறிகிறோம். அப்புலவர் பெயர் **எயிற்றியனார்** என்பது. அவர் ஊர் **புல்லாற்றூர்**. கோப்பெருஞ்சோழன் என்னும் அரசன், உறையூரை ஆண்டுவரும் நாளில், ஒரு நாள் அவனுடைய புதல்வர் இருவர் அவனோடு மாறு கொண்டனர். எதிர்த்து நின்ற அவரோடு பொரக்கருதி எழுந்தான் சோழமன்னன். அப்பொழுது அங்கேயிருந்த பைந்தமிழ்ப் புலவர், "விறல் கெழு வேந்தே!" என்று விளித்தவுடன், செவி சாய்த்து நின்றான் நிருபன். புலவர் உடனே பொருளுரையைப் புகலத் தொடங்கினார். அதன் சாரம், "பற்பல அமருள் வென்று மேம்பட்ட வேந்தே! இப்பொழுது உன்னோடு எதிர்த்து வந்து நிற்போர் உன் பகைஞர் அல்லரே! நீயும் அவர்க்குப் பகைஞன் அல்லையே! பகைஞ-

ரைக் கொல்லும் களிற்றையுடைய தலைவ, நீ புகழை இவ்வுலகில் எய்தி, உயர்ந்த உலகை அடைந்த பிறகு, உன் புதல்வர்க்குத்தானே உன் அரசு உரித்தாகும்? இதனை நீ அறியாயோ!'' என்பதாகும்.

இப்பொருளுரையைக் கேட்டும், அரசன் ஓர் அடி எடுத்து வைப்பது தோன்றிற்று, புலவருக்கு. ''இன்னும் கேட்பாயாக, இசையில் விருப்பமுடையோய்! பெரிதும் கேட்பாயாக, புகழில் இச்சையுடையோய்!'' என்பன போன்ற மொழிகளைச் சமயமறிந்து சொல்லி, அவர் மேலும் சொல்லலுற்றார்: ''நின் புதல்வர் ஆலோசனையின்றி, அறிவு குன்றி எதிர்ப்பட்டுள்ளனர். தோற்றுப் போனால் உன் செல்வத்தைப் பின்னர் அவருக்கு அல்லாமல் வேறு எவருக்குக் கொடுக்கப் போகிறாய்? போரினை விரும்புகின்ற செல்வ! ஒருகால் நீ அவர்க்குத் தோற்றால், உன் பகைவரெல்லாம் உன்னை இகழ்ந்து மகிழ்வர். உலகில் பழியையே வைத்துச் செல்லவேண்டியிருக்கும். நான் உன் ஆற்றலில் ஐயமுற்றேன் அல்லேன். அவ்வாற்றலை இவரிடம் காட்ட வேண்டா என்பதே எனது வேண்டுகோள். உன்னுடைய வீரம் உன்னை விட்டு இப்பொழுது நீங்கியிருக்கட்டும். உன்னுடைய ஊக்கம் பிறவற்றிற் செல்லட்டும். நீ நல்வினைகள் பல செய்வாயாக! வாழிய அரசே!'' என்று நயம்பட உரைக்கப்பட்ட இவ்வுரையையும் மறுத்துப் புதல்வரோடு பொருவதற்கு அரசன் மனம் இயைந்திருக்குமோ? புலவர் உரைக்குங்கால், வேம்பும் கரும்பும் போல இடையிடையே கடுஞ்சொல்லும் புகழ்மொழியும் பெய்து உரைத்த நயம் வியக்கற்பாற்று! அவர் அழைக்கும்போதே அவன் பெருமையையும், வீரத்தையும், வெற்றியையும் உரைத்தழைத்தார்; இடையிடை அவன் ஆற்றலின் சிறப்பைக் குறிக்கும் சொற்களைக் கூறினார்; ''உனக்குத் தெரியாததன்று,'' என்று சொன்னார்; புகழ் விருப்பம் உள்ள அவன் பழிதரும் செயல் புரியலாகாது என்பதை வற்புறுத்தினார்; புதல்வரை வெறுத்துரைப்பார் போன்று சில சொன்னார்; இவையெல்லாவற்றினும் மிக்கதாக, ''அமரில் விருப்பமுள்ள செல்வ,'' என்றும், ''உன்

வீரம் இப்பொழுது உன்னை விட்டு நீங்கியிருக்கட்டும்,'' என்றும் அவர் மொழிந்த மொழிகளின் சிறப்பைக் கண்டு நாம் மகிழாதிருக்க முடியாது. அத்தண்டமிழ்ப் புலவர்,

'அமர்வெஞ் செல்வ! நீயவர்க்கு உலையின்
இகழுநர் உவப்பப் பழியெஞ் சுவையே;
அதனால், ஒழிகதில் அத்தைநின் மறனே!''

என இரு மருங்கும் கட்டியைக் கூட்டி, இடையே கடுக்-காய்த் தூளை வைத்தார்! இங்ஙனமெல்லாம் நன்மருந்து தரவல்ல நாவலர் பலர் வாழ்ந்த நாடு நம் நாடு. அவர்தம் ஊர், பேர், உரைகளை மறந்துள்ள நாம், இனியாவது விழித்துக் காண்போமாக. அவர்தம் பொன்னுரைகளை யறிந்து வாழ்வம் ஒன்றுகவே!

அருஞ்சொற்பொருள் :

பணித்தார் - கட்டளையிட்டார், நொய்ம்மை - இலேசு, சாகாடு - வண்டி, சால மிகுத்து - மிகவும் அதிகமாக்கி, பூசல் - வாய்ச்சண்டை, கலாம் - கலகம், தாயத்தார் - பங்காளிகள், பொர - போர் புரிய, வசை - இகழ்ச்சி, பால்நிறக் கடவுள் - பலராமன், நீலநிறக் கடவுள் - கண்ணன், விறல் கெழு - வெற்றி விளங்கும், இசை - புகழ், உலையின் - தோற்றால், கட்டி - வெல்லம், இகழுநர் - பகைவர், நிருபன் - அரசன்.

பயிற்சி வினுக்கள் :

1. பாரதியாரும் கவி மணியும் ஒற்றுமையைப்பற்றிக் கூறுவன யாவை?

2. ஒற்றுமை உபதேசம் செய்த தந்தையார் கதையை எழுதுக.

3. வள்ளுவர் ஒற்றுமையின் பெருமையைப் புலப்படுத்தக் கூறிய குறளை எழுதி, அதன் கருத்தை விளக்குக.

4. 'யான் கண்டனையர் என் இளையரும்.'—இது யார் கூற்று? இதன் கருத்தை நன்கு விளக்குக.

5. கோவூர் கிழார் நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் எவ்வாறு ஒற்றுமை உபதேசம் செய்தார்?

6. சோழனும் பாண்டியனும் சேர்ந்திருக்கக் கண்ட காரிக்கண்-ணனர் கூறிய அறவுரை யாது?

7. எயிற்றியனர் கோப்பெருஞ்சோழனுக்குக் கூறிய பொரு-ளுரையைத் தொகுத்து 20 வரிகளில் எழுதுக.

8. ஆத்தி மாலை யாருக்கு உரியது?

3. வித்துவான் தியாகராச செட்டியார்

[டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள்]

(இவர் சங்க இலக்கிய ஏடுகளைத் தேடித் தொகுத்துச் சிறந்த முறையில் பதிப்பித்து உதவிய பெருந்தகையார். இவருடைய அறிவு நுட்பத்தையும் ஆக்க வேலையையும் போற்றிச் சென்னைப் பல்கலைக் கழகம் இவருக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கியுள்ளது. அரசியலார் இவருக்கு **'மகாமகோபாத்தியாய'** என்னும் பட்டம் வழங்கினர். இவர் அண்மையில் தமது எண்பத்தாறும் வயதில் அமரரானார்.)

கல்வியிற்சிறந்த பெரியோர்களுட்பலர் தங்கள் கடமைகளை உண்மையோடும் ஊக்கத்தோடும் அன்போடும் செய்துகொண்டு, பிறருடைய செல்வத்துக்கேனும் அதிகாரத்துக்கேனும் அஞ்சிப் பிறழ்ந்தொழுகாமல் இன்புற்று வாழ்ந்து வந்ததுண்டு. அத்தகையோர் நம் தமிழ் நாட்டில் பண்டைக் காலத்திலும் பிற்காலத்திலும் இருந்தனரென்பதை நூல்கள் வாயிலாகவும், கண்கூடாகவும், வேறுவிதமாகவும் அறிந்து வருகிறோம். பிற்காலத்தில் வாழ்ந்தவர்களுள், கும்பகோணம் கல்லூரித் தமிழ் ஆசிரியராய் இருந்து பெரும்புகழ் பெற்ற திரு. சி. தியாகராச செட்டியார் ஒருவராவர்.

செட்டியார் தைரியம் மிக்கவர்; தம்முடைய கடமைகளை ஒழுங்காகச் செய்து வருபவர்; பிறருடைய நூல்களிலும் உரைகளிலும் உள்ள நயமான பகுதிகளைக் கண்டு மகிழ்ந்து பாராட்டுபவர்; பிழைகள் கண்டவிடத்து அஞ்சாமற்கண்டிக்கும் துணிவுடையவர்; கல்வியறிவில்லாருடைய மேற்போக்கான நடிப்புக்கள் அவரிடம் பயன்படா.

அவர் திருச்சிராப்பள்ளிக்கு வடக்கேயுள்ள பூவாளூரென்னும் ஊரில், 'பூவாளூர்ச் செட்டியார்' என்னும் சைவ மரபிற்பிறந்தவர். அவர் பிறந்த வருடம் 1825. அவருடைய தந்தையார் பெயர் சிதம்பரஞ்செட்டியார் என்பது. அவர் பதினெட்டுப் பிராயம் வரையில் தம்முடைய குடும்பத்திற்குரிய விவசாயத்தையும் வர்த்தகத்தையும் கவனித்து வந்தனர்; தமிழ் நூல்களையும் தக்க-

வர்களிடத்திற் கற்று வந்தனர். அக்காலத்தில் அவருக்குப் பயிர்த்தொழில் முதலியவற்றில் ஊக்கம் உண்டாகவில்லை. பழம்பிறப்பின் வாசனையால், தமிழ்க் கல்வியை நன்ருகப் பயின்று தேர்ச்சி பெற வேண்டுமென்னும் அவா அவர்பால் உண்டாகி முதிர்ந்தது. ஆதலின், தந்தையாரிடம் விடை பெற்றுக்கொண்டு, திருச்சிராப்பள்ளி **மகாவித்துவான் திரு. மீனுட்சி சுந்தரம்பிள்ளை**யவர்களிடம் சென்று படிக்கத் தொடங்கினர். பிள்ளையவர்கள் அவருடைய அன்பையும் அறிவையும் ஊக்கத்தையும் அறிந்து, அவர்பாற்பெரிதும் அன்பு வைத்துப் பாடஞ்சொல்லி வந்தனர். நாளடைவில், செட்டியார் தமிழ்ப்புலமை மிக்கவராஞர்; பிள்ளையவர்களுக்கு அவரிடம் அளவற்ற அன்பு உண்டாயிற்று; அவருடைய மாணுக்கர்களுட்சிறந்தவராக அவர் கருதப்பட்டார்.

அதன் பயனுக அவர் திரிசிரபுரத்தில் பட்டாளத்தார்க்குரிய பள்ளிக்கூடமொன்றில் தமிழ் ஆசிரியராக நியமிக்கப்பெற்ருர்; அங்கிருந்து பாடஞ்சொல்லி நன்மதிப்பையடைந்தார். அதன் பிறகு திருவரங்கத்திலிருந்த ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியராய் இருந்து பாடஞ்சொல்லி வந்தார். அக்காலத்தில் அவர் பாடஞ்சொல்லும் இயல்பு மாணுக்கர்கள் மனத்தையும் அவர்கள் வழியாக ஏனையோர் மனத்தையும் கவர்ந்துகொண்டது.

அப்போது, கும்பகோணம் மாகாணக் கலாசாலையில் ஆசிரியராய் இருந்த **தண்டலம் கோபால ராவ்** அவர்கள் செட்டியாருடைய கல்வியாற்றலைப்பற்றியறிந்து, 1865-ஆம் ஆண்டில் அவரைக் கும்பகோணத்திற்கு வருவித்துக் கொண்டார். அது முதல் செட்டியார் அங்கேயே ஆசிரியராய் இருந்து வந்தார்; அந்தப் பள்ளிக்கூடம் கல்லூரியான பின்பும் இருந்து புகழ் பெற்ருர். அவருடைய கல்வியாற்றலின் சிறப்பு எங்கும் பாராட்டப்பெற்றது. யாவரும் அவரை மேலாக மதித்து, மிக்க மரியாதையோடு உபசாரம் செய்து வந்தனர்.

அவர் 1880-ஆம் ஆண்டு வரையில் அங்கே வேலை பார்த்தனர்; பின்பு, உபகாரச் சம்பளம் பெற்று, முதலில்

திருவானைக்காவிலும் பின்பு உறையூரிலும் இனிது வாழ்ந்து வந்தார். தாம் ஈட்டிய பொருளின் பெரும்பகுதியைப் பூவாளூர் நடராசப் பெருமான் கட்டளை முதலியவற்றிற்குச் சேர்ப்பித்து, சர்வசித்து ஆண்டு, தைத்திங்கள், 7-ஆம் நாள் (19–1–1888) சிவபெருமான் திருவடி நீழலை அடைந்தார்.

திருவாளர் தியாகராச செட்டியாருடைய வாழ்க்கையில் நிகழ்ந்த பல நிகழ்ச்சிகள் அவருடைய தைரியத்தையும் கல்விப் பெருமையையும் பிற இயல்புகளையும் நன்கு விளக்கும். எல்லாவற்றையும் அமைத்து அவருடைய சரித்திரத்தை விரிவாக எழுதி வெளியிட எண்ணியிருக்கிறேன். இங்கே இரண்டு நிகழ்ச்சிகளை மட்டும் தெரிவிக்கிறேன் :

தியாகராச செட்டியார் கும்பகோணத்தில் இருந்த காலத்தில் உயர்தர நீதிமன்ற வழக்கறிஞர்—ஒரு பெரிய கனவான்—நன்னூற்சூத்திரங்களுள் இருநூற்றுக்கு மேல் நீக்கிவிட்டு, மற்றவற்றைத் தொகுத்து உரையெழுதி வெளியிட்டார். அக்கனவான் சிறிதளவு தமிழறிவுடையவர்; தம்முடைய பிள்ளைகளும் தம் நண்பர்களுடைய பிள்ளைகளும் பள்ளிக்கூடங்களில் நன்னூற்பாடத்தைப் பயில இயலாமல் இருத்தலை அறிந்து வருந்திய அவர், இப்படி ஒன்றை வெளியிட்டுத் தம்முடைய நண்பர்களாகிய அதிகாரிகளின் உதவியாற் பள்ளிக்கூடங்களில் இதையே பாடபுத்தகமாக வைத்தால் பயன்படுமே என்று எண்ணினர்; நண்பர் சிலர் அங்ஙனம் செய்தல் மிகவும் நல்லதென்று தூண்டினர். அதனால், அக்கனவான், சட்டைப் பையில் வைத்துக்கொள்ளும் அளவில் அதனைப் பதிப்பித்து, ஊர்தோறும் உள்ள பள்ளிக்கூடங்களில் வைக்கச் செய்தார். அதனை யாவரும் வாங்கியதோடன்றி அவ்வழக்கறிஞரை மிகப் பாராட்டவும் தலைப்பட்டனர். தமிழ் ஆசிரியர்களுள் இலக்கணம் கற்பித்தலில் வன்மையற்ற சிலர் அப்பதிப்பை விரும்பிப்பெற்றுப் புகழ்ந்தனர்.

புத்தகத்தை வெளியிட்ட கனவான், கலாசாலைகள்

உள்ள இடங்களுக்கெல்லாம் அதனை அனுப்பி அங்கங்கே பாடமாக வைக்கும்படி ஏற்பாடுகளைச் செய்துவந்தார்; கும்பகோணத்தில் உள்ள 'நகர உயர்தரக் கலாசாலை'க்கும் ஒரு பிரதியை அனுப்பினுர். அந்தப் பள்ளிக்கூடத்துத் தலைமையாசிரியர், தமிழ்ப் பாடபுத்தகங்களைத் தியாகராச செட்டியார் தகுதியுடையனவென்று சொன்னுல்தான் பாடமாக வைப்பார்; ஆதலின், அவர் அந்தப் புத்தகத்தைச் செட்டியாரிடம் கொடுத்து, அவருடைய அபிப்பிராயத்தைக் கேட்டார். அதனைப் படித்துப் பார்த்த செட்டியார், 'இது பாடமாக வைக்கத் தகுதியற்றது,' என்று சொல்லிவிட்டார். அதனுல், அந்தப் பள்ளிக்கூடத்தில் அது பாடமாக வைக்கப்பெருமற்போயிற்று. பிறகு அப்புத்தகம் கும்பகோணக்கல்லூரிக்கும் அனுப்பப்பட்டது. அங்கும் அது பாடமாக வைக்கப்படவில்லை. செட்டியார் அந்த நூலை மதிக்கவில்லையென்ற செய்தி அருகிலுள்ள ஊர்களிலும் பரவியது. அதனுல், அங்கங்கே உள்ள பள்ளிக்கூட ஆசிரியர்கள் அதனைப் பாடபுத்தகமாக வைக்க விரும்பவில்லை. அதனை வெளியிட்டோர் தக்க அதிகாரிகள் மூலம் செய்து வந்த முயற்சிகளால் அவ்வாசிரியர்கள் தரும சங்கடத்துக்காளாஞர்கள்.

இந்த நிலையில், அந்தக் கனவான் கும்பகோணம் நீதிமன்றத்துக்கு வந்திருந்தனர்; அப்படியே கல்லூரிக்கும் வந்தார். அவர் செட்டியார் தம் புத்தகம் பாடமாக வைக்கத் தகுதியற்றதென்று கூறியதையும், அதனுற் பல பள்ளிக்கூடங்களில் அது பாடமாக வைக்கப்படாமல் மறுக்கப் பெறுவதையும் உணர்ந்திருந்தார். தம்முடைய மதிப்பைச் செட்டியாருக்கு அங்குள்ளவர்களாற் புலப்படுத்திச் செட்டியாரைக் கண்டித்துவிட்டுச் செல்லவேண்டுமென்பது அவர் எண்ணம். கல்லூரிக்கு வந்த அவர், தம்மோடு படித்த ஒரு சாலை மாணுக்கரும் அங்கே ஆங்கில ஆசிரியராய் இருந்தவருமான **சுந்தர ராவ்** என்பவருடன் பல வகுப்புக்களையும் ஆசிரியர்களையும் பார்த்துவிட்டுத் தமிழ் வகுப்புக்கும் வந்து நின்ருர்; தியாகராச செட்டியார் பாடஞ்சொல்லும் ஆற்றலைக்

கவனித்தார். அவரிடம், நேரிலே தம் புத்தகத்தைப் பற்றிக் கேட்க வேண்டுமென்று எண்ணியிருந்த அக்கனவான், ‘இவரிடம் நாம் எப்படிக் கேட்பது? இவர் மிகச் சிறந்த கல்வியாற்றல் உடையவராய்த் தோற்றுகிருரே!’ என்று எண்ணி அஞ்சிச் சும்மா இருந்துவிட்டுச் சென்ருர்.

சுந்தர ராவ் நாள்தோறும் பாடம் முடிந்தவுடன் தம்முடைய வண்டியில் தியாகராச செட்டியாரையும் ஏற்றிக்கொண்டு செல்லுவது வழக்கம். அன்று அவர் செட்டியாரையும் தம் நண்பராகிய அக்கனவானையும் ஏற்றிக்கொண்டு புறப்பட்டார்.

வண்டி செல்லுகையில், சுந்தர ராவ் தம்முடைய நண்பரை இன்னரென்று செட்டியாருக்குப் பழக்கம் செய்து வைத்துவிட்டு, “இவர் புதிய முறையில் நன்னூல் ஒன்று அச்சிட்டிருக்கிருர்; அதைத் தாங்கள் பார்த்ததுண்டோ?” என்று கேட்டனர். செட்டியார், “ஆம்; பார்த்திருக்கிறேன்,” என்று கூறிவிட்டுப் பேசாமல் இருந்தார்.

உடனே சுந்தர ராவ் அந்தக் கனவானைப் பார்த்து, “இவர்களே தியாகராச செட்டியாரவர்கள்; சிறந்த வித்துவான்; இந்நாட்டில் இவர்களைப் போன்ற வித்துவான்களே இல்லை,” என்று சொல்லிச் செட்டியாரைப் பழக்கம் பண்ணி வைத்தார்.

அதனைக் கேட்ட கனவான், தம்முடைய நண்பராகிய சுந்தர ராவ் அருகில் இருக்கிருரென்ற தைரியத்தினுல் செட்டியாரை நோக்கி, “என்ன, ஐயா! நான் ஆராய்ந்து அச்சிட்ட நன்னூலைப் பாடம் வைக்கக் கூடாதென்று நீங்கள் கண்டித்தீர்களாமே! என்ன நியாயத்தைக் கொண்டு அப்படிச் செய்தீர்கள்?” என்று கேட்டார். அவருடைய கேள்வி அதிகாரத் தொனியோடு இருந்தது.

செட்டியார் உடனே, “அந்த நன்னூலைப் பதிப்பித்தவர் தாங்களோ! எனக்குத் தெரியாது. இருக்கட்டும்; நன்னூலில் இருநூறு சூத்திரங்களுக்குமேல் விலக்கி-

யிருக்கிறீர்களே, என்ன நியாயத்தைக்கொண்டு விலக்கி-னீர்கள் ?'' என்று கேட்டார்.

கனவான்: எல்லாச் சூத்திரங்களும் பயன்படு-கின்றனவா ? பிள்ளைகளுக்கு அவசியமானவற்றை மட்டும் வைத்து மற்றவற்றை நீக்கிவிட்டால், அவர்கள் எளிதிலே படிப்பார்களல்லவா ?

செட்டியார்: எல்லாச் சூத்திரங்களும் பயன்பட-வில்லையென்பது உங்களுக்கு எப்படித் தெரியும்? நீங்கள் எந்தப் பள்ளிக்கூடத்திலாவது பாடஞ்சொல்லியிருக்-கிறீர்களா ? பிள்ளைகளுக்கு எளிதாயிருக்க வேண்டு-மென்றால், எல்லாச் சூத்திரங்களையும் எடுத்திருக்கலாமே? நீங்கள் விலக்கியுள்ள சூத்திரங்களெல்லாம் அவசியமாக இருக்கவேண்டுமென்று நான் காரணங்காட்டி நிரூபிக்-கிறேன் ; நீங்கள் அல்லவென்று மெய்ப்பிப்பீர்களா? நன்னூல் உங்கள் விருப்பப்படி குறைப்பதற்கும் கூட்டு-வதற்கும் என்ன, கிள்ளுக்கீரையா ? அது கிடக்கட்டும் ! நீங்கள் நன்னூலைப் பதிப்பிக்க வந்தீர்களே, அதிலுள்ள உதாரணங்களை ஏன் கத்தரிக்கிறீர்கள் ? அந்த உதாரணங்-கள் எதற்காக இருக்கின்றனவென்பதை நீங்கள் அறிந்த-துண்டா ? **அன்மொழித் தொகைக்கு** உதாரணம் வாக்கி-யத்தில் அமைத்துக் காட்டாமல் தொடர் மொழியை மட்டும் காட்டியிருக்கிறீர்களே ! **பூங்குழல் வந்தாள்** என்பதைப் **பூங்குழல்** என்று குறைத்துவிட்டால் அன்-மொழித்தொகையாகுமா? 'பூங்குழல் வந்தாள்' என்று வாக்கியத்தில் வரும்போதுதானே அது '**பூங்குழலுடை-யாள்**' என்று பொருள்படும்? இவைகளை அறிந்து கொள்ளாமற் பதிப்பித்திருக்கிறீர்களே ! '**தண்டையி-னினக்கிளி கடிவோள், பண்டையளல்லள் மானேக்கி-னளே**' என்ற உதாரணத்தைப் பிள்ளைகளுக்கு எளிதாக இருக்கவேண்டுமென்று வெட்டி, '**தண்டையினினக் கிளி கடிவோள்**' என்பதை மட்டும் காட்டியிருக்கிறீர் களே! **பண்டையளல்லளென்பதும்** இருந்தால்தானே எதுகையின்பொருட்டுத் **தட்டையென்பது** **தண்டை** யென்று வந்ததென்பது தெரியும் ?

கனவான் : அவற்றையெல்லாம் உபாத்தியாயர் சொல்லி விளக்கமாட்டாரா ?

செட்டியார் : உபாத்தியாயர் புத்தகத்தில் இருப்பதைத்தானே விளக்குவார் ? இல்லாதபோதும், இருப்பதே தப்பாக இருந்தாலும், எப்படி விளக்குவார் ? உபாத்தியாயர் நன்னூல் முழுவதையுமே மனப்பாடம் பண்ணிச் சொல்லிவிடுகிறார் ; உங்களுடைய புத்தகம் எதற்கு ?

இங்ஙனம் சொல்லி, மேலும் மேலும் அப்பதிப்பிலுள்ள குறைபாடுகளை எடுத்துச் சொல்லியதோடு சில கேள்விகளையும் செட்டியார் கேட்கத் தொடங்கினார். அவற்றிற்கு விடை சொல்ல இயலாமலிருந்த கனவான், மனங்குழம்பி, ஆத்திரம் மிக்கவராகி, உரத்த குரலில், "நான் என்ன **பண்டிதனா** ?" என்றார். அவர் கேட்ட மாதிரியில், பண்டிதனென்று கூறப்படுதல் இழிவென்று அவர் நினைத்தமை தோற்றியது.

செட்டியாருக்குக் கோபம் வந்துவிட்டது. "**உங்களை எவனையா பண்டிதரென்று சொன்னான்? பண்டிதரல்லவென்று நினைத்துத்தானே சொல்லுகிறேன் !** இதை உங்களுடைய ஏவலின்மேற் பதிப்பித்தவன் யாரோ அவன் அறியாதவன் ; குல்லாய்க்கேற்றபடி தலையை நறுக்கிக்கொண்ட புத்திசாலியைச் சேர்ந்தவன் ; நீங்கள் பண்டிதரென்பது இழிவான பட்டமென்று நினைப்பதாகத் தெரிகிறது ; இப்படிப்பட்ட காரியத்தைப் பண்டிதர்களே செய்யவேண்டும். நீங்கள் சட்டபுத்தகங்களைப் படித்து ஆராய்ந்து வாதம் பண்ணுவதோடு நில்லாமல், தமிழ் வழிக்கு ஏன் வருகிறீர்கள் ? உங்களுக்குத் தெரியாத துறையில் இவ்வளவு துணிவாக நீங்கள் இறங்கியதோடு தமிழ்ப் பண்டிதர்களையும் வற்புறுத்திப் பாடம் வைக்கும்படி தூண்டலாமா? உங்களுக்குத் தமிழபிமானம் இருந்தால், நல்ல புத்தகங்களை வாசித்து இன்புறும் அளவோடல்லவா நிற்கவேண்டும் ?" என்றார்.

அந்தக் கனவானுக்கும் கோபம் சிறிது சிறிதாக வளர்ந்தது ; மீசை துடித்தது. "என்னை இன்னாரென்று தெரியாமல் பேசுகிறீரே !" என்று கோபத்துடன் அவர் கூறினார்.

உடனே செட்டியார், "உங்களை நன்ருகத் தெரிந்து-கொண்டுதான் பேசுகிறேன்; உங்கள் கடிகாரச் சங்கிலிக்-கும் சட்டைக்கும் மீசைக்கும் பயந்தவனல்லன் நான். வண்டியை விட்டு இறங்குங்கள்; ஓரிடத்தில் இருந்து பேசுவோம். உங்களுடைய அறியாமையை வெளிப்-படுத்துகிறேன்," என்று சொல்லிச் சுந்தரராவைப் பார்த்து, "வண்டியை நிறுத்தச் சொல்லுங்கள்," என்ருர்.

இந்த விபரீதத்தைக் கேட்ட சுந்தரராவ் இடை-மறித்து, அந்தக் கனவானைப் பார்த்து, "நாமெல்லாம் படித்தவர்களோடு வாதம் செய்யலாமா? இவர்களிடம் நாங்கள் பெரிய மதிப்பு வைத்து மரியாதையாக நடந்து-கொள்ளுகிருேம். இவர்கள் இருப்பது எங்கள் கல்லூரிக்கே கௌரவம். நீங்கள் இவர்களைத் தெரிந்துகொள்ளாமற் பேசுகிறீர்களே! தமிழ் விஷயத்தில் இவர்கள் இட்ட சட்டத்தை மீறுபவர் இங்கே யார் இருக்கிருர்கள்? உங்க-ளுடைய தமிழ்ப் படிப்பு எனக்குத் தெரியாதா? நாமிரு-வரும் சேர்ந்து படித்தவர்களல்லவா? இப்போது நாம் ஒரு புத்தகம் போட்டுவிடலாமா? நன்னூலைப் பதிப்பிக்க நம்மைப் போன்றவர்களுக்குத் தகுதி ஏது?" என்று சொல்லிவிட்டுச் செட்டியாரையும் சமாதானப்படுத்தினுர்.

இந்தப் பேச்சுக்கள் வண்டியிலே நிகழ்ந்தாலும், பக்கத்தில் நடந்து வந்த மாணுக்கர்கள் காதிலும் மற்ற-வர்கள் காதிலும் பட்டன. மாணுக்கர்களுக்குத் தெரிந்-தால் அப்புறம் வேறு விளம்பரங்கள் எதற்கு? இந்த நிகழ்ச்சி எங்கும் பரவியது; தியாகராச செட்டியாருடைய புகழ் பின்னும் மிகுதியாயிற்று.

மதுரையிலிருந்து ஓர் ஐரோப்பியர், தமிழின்பால் விருப்பமுற்று, ஒரு பண்டிதருடைய உதவி பெற்றுப் படித்து வந்தார். தமிழ்ச் செய்யுட்களுக்கு ஒருவாறு பொருள் தெரிந்துகொள்ளும் அறிவைப் பெற்ற பின்பு தமிழில் மிகச் சிறப்பான நூல் யாதென்று விசாரித்தார்; **திருக்குறள்** ஒப்பற்ற நூலென்பதை அறிந்து அதனைப் படித்தார்; இலக்கண நூலையும் இடையிடையே பயின்று

வந்தார்; போப்பையர் இலக்கணத்தைப் படித்தார்; பிறகு யாப்பிலக்கண வசனத்தைப் படித்து அசை, சீர், தளை, தொடை என்பவற்றை ஒருவகையாகத் தெரிந்து-கொண்டார். அதனால் தாம் படித்த நூல்களிலுள்ள செய்யுட்களில் எதுகை, மோனை அமைந்திருக்-கின்றனவாவென்று ஆராயத் தொடங்கினர்.

அவர், தாம் படித்துவந்த திருக்குறட்புத்தகத்தை எடுத்துத் திறந்தார்; திறந்த பக்கத்தில்,

"தக்கார் தகவில ரென்ப தவரவர்
எச்சத்தாற் காணப் படும்."

என்ற குறள் அவர் கண்ணிற்பட்டது. அவர், 'இதில் எதுகை நன்ருக அமையவில்லையே!' என்று எண்ணினர். **எச்சம்** என்பதற்கு **மக்கள்** என்பது பொருளென்பதை அறிந்துகொண்ட பிறகு, 'ஏன் **மக்க**ளென்றே இதை மாற்றிவிடக் கூடாது? அப்படிச் செய்தால் எதுகை அழகாக அமையுமே!' என்று எண்ணித் தம் புத்தகத்தில் அவ்வாறே திருத்திக்கொண்டார். திருக்குறளைத் திருத்தி-விட்டோம் என்ற எண்ணத்தால் அவருக்கு மிக்க மகிழ்ச்சி உண்டாயிற்று. இப்படியே மேலும் மேலும் சில குறள்-களைத் திருத்தினர்; தமக்குப் பாடஞ்சொல்லும் ஆசிரிய-ரிடம் இவற்றைக் காட்டி, "ஏன்? நான் செய்தது எப்படி? இப்போது இந்தச் செய்யுட்கள் முன்பைவிட அழகாக இல்லையா?" என்று கேட்டார். ஆசிரியர் அவர் கூறுவதை மறுக்க அஞ்சினர்; "நன்ருக இருக்கின்றன; ஆனல், தக்கவர்களிடம் காட்டி, இப்படிச் செய்வது சரியாவென்று ஆராய வேண்டும்," என்ருர்.

ஐரோப்பியர்: தாங்கள் பண்டிதரல்லவா?

பண்டிதர்: நான் பண்டிதனுனலும் உங்களைச் சேர்ந்தவனுதலின், என் கருத்தை மற்றவர்கள் ஏற்றுக்-கொள்ள மாட்டார்கள். வேறு சிலர் உடன்பட்டால் உங்கள் திருத்தத்துக்குக் கௌரவம் உண்டாகும்.

ஐரோப்பியர், தம் திருத்தங்களை யாரிடம் காட்டலா-மென்று ஆராய்ந்தபொழுது, கும்பகோணக் கல்லூரியில்

பண்டிதராய் இருந்த தியாகராச செட்டியார் அவற்றை ஏற்றுக்கொண்டால் மற்றவர்கள் உடம்படுவார்களென்றும், அவர் உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டு உறையூரில் இருக்கிருரென்றும் அறிந்தார். உடனே அவர் திருச்சிராப்பள்ளியிலிருந்த செவல் பாதிரியாருக்குத் (Father Sewell) தாம் புறப்பட்டு வருவதாகவும் திரு. தியாகராச செட்டியாரைப் பார்க்கும்பொருட்டு உதவிபுரிய வேண்டுவதாகவும் கடிதம் எழுதினுர்; பிறகு குறித்த காலத்தில் திரிசிரபுரம் சென்ருர். செவல் பாதிரியார் அவரைத் தக்க வண்ணம் உபசரித்து, ஓர் அழகிய வண்டியில் அவரை உறையூருக்கு அனுப்பினுர்; அவருடன் தக்கவர் சிலரையும் போகச் செய்தார்.

திரு. தியாகராச செட்டியார் உறையூரிலுள்ள பெரிய தெருவில் அண்ணுமலை செட்டியாரென்பவருடைய வீட்டில் இருந்து வந்தார். அக்காலத்தில் அவருடைய கண்ணெளி சிறிது மழுங்கியிருந்தது. அவரைத் தேடி வந்த ஐரோப்பியர் உறையூருக்கு வந்து செட்டியாருடைய வீட்டை விசாரிக்கலானுர். அங்குள்ளவர்கள் அத்தகைய சிறந்த வண்டியையும், வெள்ளைக்காரரையும் கண்டு வியப்பு மேலிட்டவர்களாய்ப் பெருங்கூட்டமாகக் கூடி அவ்வண்டியைப் பின்தொடர்ந்து வந்தார்கள். வண்டி செட்டியாருடைய இருப்பிடத்தின் முன்னே வந்து நின்றது.

செட்டியார் சிவ பூசையை முடித்து, உணவருந்திவிட்டு, கையில் ஒரு விசிறியுடன் வந்து அப்பொழுதுதான் வெளித் திண்ணையில் அமர்ந்திருந்தார்; முழங்காலளவுள்ளதாகிய பழுப்பு நிற ஆடையொன்றையே அவர் உடுத்திருந்தார்.

துரையுடன் வந்தவர்களுள் ஒருவர் வண்டியிலிருந்து இறங்கி வந்து செட்டியாரிடம், "ஒரு பெரிய துரை வந்திருக்கிருர். உங்களைப் பார்க்க வேண்டுமாம்; அவரை வரவேற்று நாற்காலி இட்டு இருக்கச் செய்யுங்கள்," என்ருர்.

செட்டியார், "துரையா? வரட்டுமே! இங்கோ, நாற்-

காலி இல்லை; இந்தத் திண்ணையிலேதான் உட்கார வேண்டும்,'' என்றார்.

கும்பகோணக் கல்லூரியில் எத்தனையோ 'துரைகளை'ப் பார்த்தவர் அவர்; அன்றியும், அவரைப் பார்க்கப் பல துரைகள் வந்து செல்வதுமுண்டு. ஆதலின், அவருக்கு இந்தத் துரை வந்தது ஒரு பெரிய சிறப்பாகத் தோன்றவில்லை.

துரை வண்டியை விட்டு இறங்கி வந்து எதிர்த்திண்ணையில் அமர்ந்தார்.

"தாங்கள் வந்தது எதன்பொருட்டு?'' என்று கேட்டார் செட்டியார். துரை, "நான் குறளைத் திருத்தியிருக்கிறேன். உங்களுடைய அபிப்பிராயத்தைப் பெற்றுப்போக வந்தேன்,'' என்று கூறத் தொடங்கினார்.

அந்த வார்த்தைகளைக் கேட்டதும் செட்டியாருக்கு இடி விழுந்தது போல இருந்தது; "என்ன! குறளையா திருத்தினீர்கள்?'' என்று வியப்பும் கோபமும் நிறைந்த தொனியில் கேட்டார்.

"ஆமாம். எதுகை மோனை சில இடங்களில் இல்லை. அவை அமையும்படி திருத்தினேன்; 'தக்கார் தகவிலரென்ப தவரவர், எச்சத்தாற் காணப்படும்,' என்பதைவிட, 'தக்கார் தகவில ரென்ப தவரவர், மக்களாற் காணப்படும்,' என்பது எதுகை நயத்தோடு கூடி எவ்வளவு அழகாய் இருக்கிறது பார்த்தீர்களா!'' என்றார் துரை.

செட்டியார் எழுந்து நின்றார்; தலையிலே இரண்டடி அடித்துக்கொண்டு காதைப் பொத்திக்கொண்டார்; "ஐயையோ! குறளையா திருத்தினீர்? அது மதிப்புள்ள பழைய நூலாயிற்றே! இவ்வளவு நாளாக அறிவாளிகள் செய்யாத ஒன்றைச் செய்துவிட்டதாக எண்ணமோ! எச்சமென்னும் சொல்லின் பொருள் மக்கள் என்பதால் உண்டாகுமா? ஒருவருக்குப் பிறகு அவருடைய குணமுதலியவை எஞ்சி நிற்கும் சந்ததியென்று காரணத்தைப் புலப்படுத்தும் சொல்லல்லவா எச்சமென்பது? அவ்விடத்தில் அச்சொல் அமைந்ததனால் உண்டாகும்

பொருட்செறிவு மக்களென்னும் சொல்லால் உண்டாகுமா? ஒரு பொருளையே தரும் பல சொற்கள் தமிழில் இருந்தாலும் அவை ஒன்றுக்கொன்று வேறுபட்ட பொருளுடையனவாய் இருக்கும். அவற்றை இடமறிந்து கவிஞர்கள் உபயோகிப்பார்கள். அது தெரியாமல் திருத்திவிடலாமா? எதுகை நயத்தைவிடப் பொருள் நயம் சிறந்ததல்லவா?'' என்று சொல்லிவிட்டு, ''குறளைத் திருத்தினவர் முகத்தில் விழிப்பதுகூடப் பாவம்!'' என்று கூறிக்கொண்டே உள்ளே சென்று கதவைத் தாழிட்டுக்கொண்டு இடைகழித்திண்ணையில் அமர்ந்துவிட்டார்.

துரைக்கு இன்னது செய்வதென்று தோன்றவில்லை. உடன் வந்தவர்கள் சன்னல் வழியாகச் செட்டியாரிடம், ''இவர் பெரிய மனிதர்; இப்படி இவரைத் தாங்கள் அவமதிக்கக் கூடாது. இவரால் உங்களுக்குப் பெரிய இலாபம் உண்டாகும்,'' என்றார்கள்.

செட்டியார்: இவரை யாரையா இங்கே வரச்சொன்னார்? உலகமெல்லாம் புகழும் திருக்குறளைத் திருத்திய இச்செயல் திருவள்ளுவரை அவமதித்ததல்லவோ? தெய்வம்போல யாவரும் கொண்டாடும் அவருடைய குறள் வேதமல்லவா? அதைத் திருத்தத் துணிந்தவர் வேறு என்னதான் செய்யமாட்டார்? இவருக்கு மதிப்பு எங்கிருந்து வரும்? இவரால் எனக்கு ஓரிலாபமும் வேண்டா. இனிமேல் நான் சம்பாதித்து யாருக்குத்தரப்போகிறேன்? எனக்குப் பிள்ளை குட்டிகள் இல்லை. போதும், போதும்! உங்கள் துரையை அழைத்துக்கொண்டு போய்விடுங்கள்.

தாம் என்ன கூறினும் செட்டியார் வழிக்கு வாராரென்பதை உணர்ந்த அவர்கள் துரையை அழைத்துக்கொண்டு மீண்டு சென்றார்கள்.

அருஞ்சொற்பொருள் :

அவா - ஆசை, ஈட்டிய - சம்பாதித்த, வன்மை - வலிமை, பிறழ்ந்து - மாறுபட்டு, எதுகை - செய்யுளில் அடிகளிலாவது சீர்களிலாவது முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாமெழுத்து ஒத்து

வருவது. மோனை - முதற்சீரின் முதலெழுத்தோடு பின்வரும் சீர்களில் ஒன்றேனும் பலவேனும் முதலெழுத்து ஒன்றி வருதல் சீர்மோனையாம்; அடிதோறும் முதலெழுத்து ஒன்றி வருவது அடி மோனையாம்.

பயிற்சி வினாக்கள் :

1. தியாகராச செட்டியாருடைய குண நலங்களைத் தெரிவிக்க.
2. செட்டியாருடைய வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகத்-தெரிவிக்க.
3. செட்டியாருடைய வாழ்க்கை நிகழ்ச்சிகள் அவருக்குரிய எவ்-வியல்புகளைத் தெரிவிக்கும்?
4. வழக்கறிஞராகிய கனவான் நன்னூலைப் பதிப்பிக்க முற்-பட்டது ஏன்?
5. வழக்கறிஞர் பதிப்பித்த நன்னூலிலுள்ள குறைபாடு என்ன?
6. வழக்கறிஞர் செட்டியாரைக் கண்டிக்க வேண்டுமென்று எண்ணியது ஏன்?
7. வண்டியில் வழக்கறிஞருக்கும் செட்டியாருக்கும் நிகழ்ந்த சொற்போரை 20 வரிகளில் தெரிவிக்க.
8. ஐரோப்பியர் குறளைத் திருத்தியதன் கருத்து யாது? அவர் செட்டியாரிடம் வந்த காரணம் என்ன?
9. குறளைத் திருத்தியவர் செட்டியாரைச் சந்தித்துத் தெரிவித்த-தென்ன?
10. குறளைத் திருத்தியவர் கூறியதைக் கேட்ட செட்டியாரின் செயலையும் அவர் கூறியதையும் தெரிவிக்க.

4. கண்டதும் கேட்டதும்

[திரு. நெ. து. சுந்தரவடிவேல் அவர்கள், எம்.ஏ., எல்.டி.]

(இவர் சென்னை மாநிலக் கல்வி இலாக்காத் தலைவர் [Director of Public Instruction] ஆவர்; தூய தமிழ் நடையில் சொற்பொழிவு ஆற்றவும், நூல் எழுதவும் வல்லவர். அண்மையில் மேனாட்டுக் கல்வி முறைகளை அறிய ஐரோப்பாவுக்குச் சென்று மீண்டவர்.)

"மலை பசுமையாயிராவிட்டாலும் சுற்றுப்புறமெல்லாம் பச்சைப்பசேலென்ற வயல் சூழ்ந்த இடம் பசுமலை. கண்ணிற்கெட்டிய தூரமெல்லாம், வயலும் தோப்புந்தான் காட்சியளிக்கும். பழைய தமிழகத்தைப் போலப் பழைய 'பசுமலை'யும் மரஞ்செடி கொடிகள் நிறைந்து பசுமையாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஏன்? அக்காலத்தில் நிலைமைக்குப் பொருந்திய பெயரைத்தான் இட்டிருப்பதாகக் காண்கிறோம்; இக்காலத்தைப்போல இல்லாததை ஈடு செய்யப் பெயரிடுவதில்லை, எனக்குப் பெயரிட்டிருப்பது போல," என்றேன்.

"அப்படியானால், 'மலை' என்கிற பெயர் எப்படிப் பொருந்தும்? இங்குள்ள 'பெருமேடு' குன்றளவு உயரம் கூட இல்லையே!" என்று குறுக்கிட்டார் குருசாமி.

"வானுயர்ந்து இராவிட்டாலும் ஓங்கி வளர்ந்த குன்றத்திற்குப் பக்கத்திலே வெவ்வேறான அதிர்ச்சி நிகழ்ச்சிகளுக்குப் பிறகும் சற்றும் மலையாது நிலைத்திருந்ததால் 'பசுமலை' என்று பெயர் பெற்றது," என வழக்காடினேன்.

"நடக்க வேண்டுவதை விட்டு, சென்று போனதற்குச் சப்பைக் கட்டுக் கட்டுவதிலேயே நம் காலமெல்லாம் வீணானால், நாம் எப்படி முன்னேறுவது?" என்று மீண்டும் குறுக்கிட்டார் நண்பர்.

"ஆம்; இது சிந்தனைக்கு உரியதுதான்," என்றேன்.

'பசுமலை' என்று பெயர் பெற்ற இம்மேட்டூரில் நான் சில நாள் தங்க நேர்ந்தது. அடர்ந்த மரங்களினூடே வேய்ந்த பர்ணசாலையில் அல்ல; உயர்ந்த கம்பிகளினூடே விரைந்து செல்லும் மின்சார ஒளியின் இடையே அமைந்-

திருக்கும் கட்டடங்களுள் ஒன்றில் தங்கினேன். அப்போது நான் கண்டது இரவெல்லாம் பகலாக்கும் மின்சார ஒளி; அங்கே நான் கேட்டவை சில. எனவே, கண் கூசும் புற ஒளியோடு, வழிகாட்டும் அக ஒளியும் சிற்சில சமயம் கிடைத்தது. அம்மின்னல் உங்களுக்கும் வழி காட்டுமா?

“இன்று இந்நாட்டின் கல்விக் கொள்கையாக ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கும் அடிப்படைக் கல்வி உருவாகி இருபது ஆண்டுகளே ஆகின்றன. ஆனால், அதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னிருந்தே அடிப்படைக் கல்வியின் அடிப்படையான செயல் மூலக் கல்வி முறை இங்குச் சோதனையாய் நடந்து வந்திருக்கிறது. அதன் சிறப்புக்களை நாங்கள் நடைமுறையில் உணர்ந்திருக்கிறோம்,” என்று எங்களையெல்லாம் வரவேற்ற ஆங்கிலப் பெரியார் ஒருவர் பெருமையோடும் உரிமையோடும் பொது மேடையில் கூறினது எங்களைத் திடுக்கிடச் செய்தது. இப்படித்தானே சிற்சில சமயம் உண்மை குதித்து வந்து நம்முன்னே நின்று மலைக்கச் செய்கிறது! ‘நாங்களே இதைக் கண்டுபிடித்தோம்!’ என்று உரிமை கொண்டாடி வழக்காடக் கூடியவர் யாரும் அங்கு இல்லை. ஆகவே,

> “எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்ப தறிவு.”

என்ற குறள் வழியைப் பின்பற்றும் நிலையில் நான் இருந்தேன்.

அடிப்படைக் கல்வி இன்று எத்தன்மைத்தாயினும், அதன் மெய்ப்பொருள் என்ன என்று, ‘**தான்**’ என்ற முனைப்பின்றி ஆலோசித்தேன்.

“யாருக்குக் கல்வி?” என்று அருகிலிருந்த அன்பர் அழகரைக் கேட்டேன்.

“குழந்தைக்குத்தான் கல்வி; இதிலென்ன ஐயம்?” என்ற பதில் பளிச்சென்று வந்தது.

“குழந்தை வளர்ச்சி நிறைந்ததா?”

“இல்லை. இப்போதுதான் வளர்வது.”

146709.

"எதில் வளர்வது?"

"உடம்பில், உள்ளத்தில், அறிவில் வளர்வது."

"உடம்பு ஒரு போது, அறிவு மற்றொரு போது, உள்ளம் பிறிதொரு போது வளர்கின்றனவா?"

"இல்லை, தனித்தனியாக வளரவில்லை. மூன்றும் சேர்ந்துதான்—இணைந்துதான்—வளர்கின்றன."

"ஒவ்வொரு நிமிடமும் ஒரே அளவு வளர்கிறது."

"மூன்றையும் ஒரே அளவையில் எப்படி அளக்க முடியும்? கத்தரிக்காயையும் கதரையும் ஒரே அளவையால் அளக்கிறோமா?" என்று எதிர்க் கேள்வி கேட்டார் அன்பர் அழகர்.

"இல்லையே! ஆனாலும், ஒன்றை உணர்வோம். அப்போது அப்போது நேரிடும் தூண்டுதலுக்கேற்ப, ஒரு வேளை உடல் வளர்ச்சியும், மற்றொரு வேளை அறிவு வளர்ச்சியும், பிறிதொரு வேளை உள்ளச் செப்பமும் அதிகமாக நிகழலாம்," என்று தொடர்ந்தார் அழகர்.

குழந்தையைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினேன். குழந்தை வளர்ப்பு எதையொட்டி இருக்க வேண்டும்? அதன் இயல்பையொட்டித்தான் இருக்க வேண்டும். ஏன் அப்படி? புடலங்கொடி படரப் பந்தலும், தக்காளிச் செடியைத் தாங்கக் குச்சியுந்தானே அமைக்கிறோம்? அதைப்போலத்தான்.

குழந்தையின் இயல்பென்ன? துடிப்பு, அதன் இயல்பு; அதுவே வளர்ச்சிக்குத் தூண்டுகோல். ஓட, ஆடத் துடிக்கிறதே அது துடிப்புத்தானே? அதுமட்டு-மன்று; பெரியோர் செய்வதைச் செய்யவுந்தான் துடிக்-கிறது. அவை உடல் வளர்ச்சிக்கான துடிப்புக்கள். மண் வீடு கட்டுவதில் ஆழ்ந்திருக்கும் குழந்தைகூட ஆலோ-சனை செய்கிறதே! எது, ஏன், எப்படி, எப்போது, எவ்வளவு என்ற கேள்விகளெல்லாம் செயலில் ஈடுபட்-டுள்ள போதே எழுவதில்லையா? பதில் சொல்ல ஆளும், கேட்க உரிமையும் இருந்தால், குழந்தை நச்சு நச்சென்று கேள்வி கேட்கவில்லையா? இக்கேள்விகளெல்லாம் அறிவுப் பசியின் அறிகுறிகளல்லவா? எத்தனை குழந்தைகள்

விளையாட்டிலே கூடத் தனித்து ஆழ்ந்திருக்கின்றன! பல குழந்தைகளையும் சேர்த்துக்கொண்டு ஆடத்தானே துடிக்கிறது! கூடிவிளையாடக் கற்றுக்கொள்வதன் மூலம் இயற்கையாகவே கூடி வாழக் கற்றுக்கொள்ளவில்லையா! உள்ளச் சீலத்திற்குப் பிறப்பிடம் இவ்வுணர்ச்சியல்லவா?

இயற்கையோடு இயைந்தால் அல்லவா இன்பம் உண்டாகும்? இன்பத்தோடு இயைந்த வாழ்வல்லவா இன்ப வாழ்வு? இன்பம் இல்லாமல் முழு வளர்ச்சி ஏது? ஆகவே, இயல்புப்படி வளர்தல் இன்ப வளர்ச்சி. அது முழு வளர்ச்சிக்குத் துணை.

கல்வியென்பது படிப்பா? உணவு என்பது சோறு? சோற்றோடு பலவும் கலந்து, பற்பல பக்குவத்திலே சமைத்துக் கலந்து உண்பதன்றோ உணவு? அவ்விதமே கல்வியென்ற நல்லுணவில், பல்சுவையும், பல்பொருளும் பற்பல பக்குவத்தில் சேர்க்கையில் இருக்கவேண்டாவா? குழந்தை, மனிதனை, முற்றிய மனிதனை வளரத் துணை செய்வதுதான் கல்வி. அக்குழந்தை மூன்றிலும் வளர்கிறது. துடிப்பின் மூலம் வளர்கிறது. நல்ல கல்விக் கூடம் அம்மூன்று வளர்ச்சிக்கும் ஒருங்கே வழி செய்ய வேண்டும். மூன்று துடிப்புக்களுக்கும் வாய்ப்புக் கொடுக்க வேண்டும். இதையுணர்ந்த கல்வி மேதையர் இங்கும் அங்கும் செயல் மூலம் கல்வி என்ற முறையைக் கையாண்டனர். செயல் மூலம் கல்வி வேறு; செயற்கல்வி வேறு; தொழிற்கல்வி வேறு. பள்ளிக்கூடத்தில் முப்பகுதியும் வளர வகை செய்தனர். எங்கெங்கோ இருக்கும் மலர்களில் உள்ள தேன் துளிகளையெல்லாம் தேடிச் சேகரித்துத் தேன்கூடு கட்டுவது போலச் சோதனையாக இங்கும் அங்கும் இருந்த நன்முறைகளையெல்லாம் சேர்த்து அவற்றின் அடிப்படையில் அமைந்ததல்லவா அடிப்படைக் கல்வி? இந்த இயல்பு அடிப்படையை அறிவுறுத்தாத நமதோ தவறு, அடிப்படைக் கல்வியினதோ தவறு?

மேற்கூறிய சிந்தனைகள் என் அறிவில் மின்னின. அவை எனக்குத் தெளிவைக் கொடுப்பதாக நான் உணர்-

கிறேன். மின்னல் வெளிச்சத்தில் மயங்கி நிற்கிறேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? எது சரி என்பதைக் காலமும் அது கொண்டுவரும் நிதானமும் தாமே காட்டக்கூடும்.

அருஞ்சொற்பொருள் :

சற்றும் - சிறிதும், மலையாது - கலங்காமல், வேய்ந்த - மூடப்பட்ட, பர்ணசாலை - இலை தழைகளால் வேயப்பட்ட குடிசை, அக ஒளி - ஞானம், மலைக்க - திகைக்க, முனைப்பு - செருக்கு, செப்பம் - ஒழுங்கு, கல்வி மேதையர் - கல்வி நிபுணர்.

பயிற்சி வினாக்கள் :

1. பசுமலை என்னும் பெயர்க்காரணம் பற்றிய ஆராய்ச்சி உரைகளைத் தெரிவிக்க.
2. சிந்தனைக்குரிய உரையாகக் குருசாமி குறுக்கிட்டுக் கூறியது என்ன?
3. ஆங்கிலப் பெரியார் தம் வரவேற்பில் பெருமையோடு கூறியது என்ன?
4. புடலங்கொடி வளரப் பந்தல், தக்காளிச் செடியைத் தாங்கக் குச்சி—இவை எதை விளக்க வந்த உவமைகள்?
5. குழந்தைக்கு உரிய கல்வி எவ்வாறு இருக்கவேண்டும் என்பதை விவரிக்க.

5. உழுபடையும் பொருபடையும்

[திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள், எம்.ஏ.]

(இவர் 'கலைமகள்' என்னும் இலக்கியச் சஞ்சிகையின் ஆசிரியர்; டாக்டர் 'உ. வே. சாமிநாத ஐயர் அவர்களுடைய தகைசால் மாணவர்; நல்ல பேச்சாளர்; நல்ல எழுத்தாளர்; சிறந்த நூலாசிரியர்.)

"அரசன் மிகவும் நல்லவன். ஆனால், அமைச்சர்கள் நாட்டு நலனைக் கருதுபவர்களாக இல்லை. அவனுடைய அருள் உள்ளத்தை நாமெல்லாம் நன்கு அறிந்திருக்கிறோம். பஞ்சம் வந்த காலத்தில் அரச பண்டாரத்தில் பொன் கடன் பெற்றோம். நம்முடைய நிலங்களை வளப்படுத்தும்பொருட்டே அப்படிப் பெற்றோம். அந்தப் பஞ்சத்தின் விளைவு இன்னும் முற்றும் நீங்கினபாடில்லை. கடனைக் கொடுப்பதென்றால் நிலத்தையே கொடுத்துவிட வேண்டுவதுதான்," என்று குடிகள் தம்முள் பேசிக் கொண்டார்கள்.

"அரசன் நேரிலே இவற்றைக் கவனித்தால் நலமாக இருக்கும். அமைச்சர்கள், 'இப்போது நிலம் விளைகிறது; கடனைத் தண்டலாம்,' என்று சொல்லியிருக்கிறார்கள். அதனை உண்மையென்று கருதிய அரசன் கடனைத் தண்ட முயற்சி செய்கிறதாகத் தெரிகிறது," என்றும் பேசிக்கொண்டார்கள்.

கிள்ளி வளவன் என்ற சோழன் ஆட்சியிலே குடி மக்கள் நன்றாக வாழ்ந்து வந்தார்கள். இடையிலே மாரி பொய்த்துப்போய்ப் பஞ்சம் வரவே, நிலம் விளைவு ஒழிந்தது. குடிமக்கள் துன்பத்துக்கு ஆளாயினர். அப்போது அரசன் வேளாளர்க்குப் பொன்னைக் கடன் கொடுத்து வேளாண்மை செய்யச் செய்தான்.

அக்காலத்தில் உணவுப் பண்டங்களை விற்றுப் பணமாக மாற்றி வைத்துக்கொள்ளும் வழக்கம் இல்லை. நாணயத்திற்கு அதிகச் செலாவணி இராது. விளைந்த நெல்லைத் தமக்கும் தர்மத்துக்கும் பயன்படுத்திக்கொண்டனர் மக்கள். எஞ்சியதைக் கடனுக்காகக் கொடுக்கச் சோழ நாட்டுக் குடிமக்கள் எண்ணியிருந்தார்கள்.

அமைச்சர் சிலருடைய வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு அந்தப் பழைய கடனை எப்படியாவது தண்டிவிட வேண்டுமென்று மன்னன் நிச்சயித்தான். அப்படிச் செய்வதாக இருந்தால் மக்கள் பட்டினி கிடக்க நேரும்; இயற்கையாகப் பஞ்சம் இல்லாவிட்டாலும் செயற்கைப் பஞ்சம் வந்துவிடும். அதனால் குடிமக்கள் அஞ்சினார்கள். அரசனை அணுகித் தங்கள் நிலையை எடுத்து முறையிடலாம் என்றாலோ, அமைச்சரைக் கடந்து அவனைச் சேர்வது எளிதன்று.

இத்தகைய நிலையில் குடிமக்களுக்குச் சமய சஞ்சீவி போல நேர்ப்பட்டார், ஒரு தமிழ்ப்புலவர். வெள்ளைக்குடி என்ற ஊரிலிருந்து அரசனைப் பார்த்துவிட்டுப் போகலாமென்று வந்தார் அவர். அவருக்கு **நாகனார்** என்பது பெயர். அவரிடம் குடிமக்கள் தங்கள் நிலையை எடுத்துச் சொன்னார்கள். ''எப்படியாவது அரசர் செவியில் ஏறச் செய்ய வேண்டும். அமைச்சர் சுவரைப் போலச் சூழ உள்ளனர். அவர்களை ஊடுருவிக்கொண்டு செல்வது எங்களால் இயலாத காரியம். எங்கள் வாழ்வு உங்கள் வாக்கில் இருக்கிறது,'' என்று சொல்லி இரந்தார்கள்.

நல்ல காரியங்களைச் செய்வதில் முன் நிற்பவர் புலவர்; 'நாடு வளம்பெற வேண்டுமானால் உழவர் சிறக்க வேண்டும். ஆகவே, அவர்கள் குறையை அரசனுக்குத் தெரிவிப்பது நம்முடைய இன்றியமையாத கடமை,' என்று உணர்ந்து, எப்படியாவது அவர்கள் காரியத்தை நிறைவேற்றிவிட உறுதி பூண்டார்.

''சோழ நாட்டின் பெருமையை என்னவென்று சொல்லுவது! தமிழ் நாட்டுப் பேரரசர் மூவர். அந்தத் தண்டமிழ் அரசர் மூவருள்ளும் அரசர் என்பதற்குரிய இலக்கணங்களெல்லாம் நிரம்பியவன் நீதான். சோழநாடு வளத்திலே சிறந்தது. மழையில்லாமல் பிற நாடுகளெல்லாம் பஞ்சத்தால் துன்புறும் காலத்திலும் காவிரி வற்றாமல் ஓடுவது. அதன் நீரால் சோழநாடு வளம் பெறுகிறது. வேற்று நாட்டான் ஒருவன் இந்த நாட்டுக்கு வந்து பார்த்தால் இங்கே காடுபோலப் பரந்திருக்கும் கரும்பைக்

கண்ட மாத்திரத்திலே, இந்த நாட்டின் செழிப்பை உணர்ந்துகொள்வான். வறுமைப் பகைவனை வதைக்கும் வேலைப்போல வெள்ளைப் பூவோடு தலைநிமிர்ந்து நிற்கும் கரும்பின் காட்சியே காட்சி!''—இவ்வாறு நாகனார் சோழ நாட்டின் வளத்தை எடுத்துச் சொல்லக் கிள்ளி வளவன் கேட்டுக்கொண்டே வந்தான்; கேட்கக் கேட்க அவன் உள்ளம் பெருமிதம் அடைந்தது.

''இத்தகைய செல்வம் மிக்க நாட்டுக்கு அரசனாய் இருக்கும் உனக்கு ஒன்று கூற விரும்புகிறேன்,'' என்று புலவர் நிறுத்தினார்.

''அப்படியா? சொல்லுங்கள், கேட்கிறேன். என்னால் ஆகவேண்டுவது எதுவானாலும் செய்கிறேன்,'' என்றான் அரசன்.

''காவிரிக்கு நீர் வளம் மழையால் உண்டாகிறது. நாம் நினைத்த போது நினைத்த காரியத்தை ஓரளவுதான் செய்ய முடியும். சில காரியங்கள் நம் கையில் இல்லை. மழை பெய்ய வேண்டுமென்று நாம் எண்ணினால், அது உடனே பெய்யாது. ஆனால், அரசர்கள் மழையைப் பெய்யும்படி செய்வார்கள்.''

''அது எப்படி முடியும்?''

''செங்கோல் செலுத்தும் வேந்தர்கள் அறம் புரிவார்கள்; குடிமக்களுக்கு எளியராக இருப்பார்கள். குடிகளுக்கு ஏதேனும் குறை இருந்தால், அவர்கள் அதை முறையிடுவதற்கு வருவார்கள். அந்த முறையீட்டைக் கேட்பதற்குத் தயாராக இருக்கும் அரசர்கள் எப்போது மழை வேண்டுமென்று விரும்பினாலும் பெய்யும்என்று பெரியோர் கூறுவர். முறை வேண்டும்பொழுது முன் நிற்கும் அரசர் உறை (மழைத்துளி) வேண்டும்பொழுதும் மழையும் முன்னிற்குமாம்.''

அரசன் யோசனையில் ஆழ்ந்தான். சில நாட்களாகத் தன்னைப் பார்க்க வேண்டுமென்று சில குடிமக்கள் விரும்பிய பொழுது, அமைச்சர்களை விட்டு விடை சொல்லியனுப்பியது அவன் நினைவுக்கு வந்தது.

''அரசன் ஒவ்வொரு கணமும் குடிமக்களுக்காக

உயிர் வாழ்கிறான். அவன் பிடிக்கும் குடை மற்றவர்கள் வெயிலுக்குப் பிடிக்கும் குடையைப் போன்றதன்று. தன்னுடைய அருளினால் குடிமக்களையெல்லாம் அரவணைத்துப் பாதுகாப்பதற்கு அடையாளம் அது. வெயில் மறைக்க நிற்பதன்று, அந்தக் குடை; வருந்திய குடி மறைப்பது.''

அரசனுக்குப் புலவர் பேச்சுக்குள்ளே தனக்கு அறிவுரை ஒன்று இருப்பது தெரிந்தது. தன்னுடைய கடமையை அவர் எடுத்து வற்புறுத்தவே வந்திருக்கிறார் என்பதையும் அவன் தெரிந்துகொண்டான்.

''கூர்வேல் வளவ, அரசர்கள் படைகளைத் திரட்டிப் பகைவர்களோடு பொருது வெற்றி பெறுகிறார்கள். பெரிய பெரிய படைகளையெல்லாம் பாதுகாத்து வெற்றி அடைவது எதனாலே? உழுபடையால் விளைந்த விளைவின் பயன் அது. உழவர் உழுது நெல் விளைக்க, அதனைக்கொண்டு வீரர்களைப் பாதுகாக்கிறான் அரசன். அவர்களுக்கு உணவில்லாவிட்டால் படை ஏது? வெற்றி ஏது? உழுபடையின் சாலிலே விளைந்த நெல்லைக்கொண்டுதான் பொருபடையின் போரிலே விளைந்த வெற்றியைப் பெறவேண்டும். உலகத்தில் பஞ்சம் தோன்றினாலும் இயற்கையல்லாத உற்பாதங்கள் நிகழ்ந்தாலும் அரசர்களைத்தான் மக்கள் பழிப்பார்கள். ஆகையால், அரசனாய் இருப்பவன் நியாயம் வழங்க எப்போதும் தயாராய் இருக்க வேண்டும். படை வீரர்களைப் பாதுகாப்பதைக்காட்டிலும் பெரிதாக எண்ணி உழவர்களைப் பாதுகாக்க வேண்டும்.''

''புலவர் பெருமானே, என்னிடம் குறையிருந்தால் குறிப்பாகச் சொல்லாமல், நேராகவே சொல்லலாம்,'' என்று அரசன் முகம் நிமிர்ந்து சொன்னான். அவன் குரலில் பச்சாத்தாபம் தொனித்தது.

''சொல்கிறேன். நான் சொன்ன உண்மைகளை மனம் கொண்டாயானால், மற்றவர்கள் கூறும் வார்த்தைகளைச் செவியிலே கொள்ளக்கூடாது. நாலு பேர் நாலு கூறுவார்கள். அரசன் உண்மையை நேரிலே கேட்டு உணர வேண்டும். குடிமக்களுடைய குறையை உணரும்

திறத்தில் நடுவில் அயலாருக்கு என்ன வேலை? தாய்க்கும் பிள்ளைக்கும் இடையே அன்பை வாங்கிக் கொடுக்கக் கையாள் எதற்கு? நீ அத்தகையவர்களின் புல்லிய வார்த்தைகளைக் காதிலே வாங்கவே கூடாது. எருது-களைப் பாதுகாத்து நிலத்தை வளப்படுத்தும் குடியானவர்-களின் பாரத்தை நீதான் தாங்கவேண்டும். அவர்களாலே-தான் நாடு வளம் பெறுகிறது; படை பலம் பெறுகிறது; அரசன் புகழ் பெறுகிறான். இதனை நன்கு உணர வேண்-டும். குடிகளின் குறையை உணர்ந்து நீ பாதுகாப்-பாயானால், பகைவர் யாவரும் உன் பெயரைக் கேட்-டாலே நடுங்குவார்கள்; காணிக்கையுடன் வந்து உன் காலில் விழுவார்கள். இதற்கு வழி, உன் குடிமக்களை நீயே நேரில் கண்டு குறைகேட்டுப் பாதுகாப்பதுதான்.''

அரசன் முகத்தில் சோகம் தேங்கியிருந்தது. புலவர் பேச்சை முடித்தார். அரசன் ஒருவாறு புன்னகையை வருவித்துக்கொண்டான். ''புலவரே, வணக்கம்! உங்-கள் பொன்னுரை என்னை விழிப்படையச் செய்தது. உங்கள் குறிப்பை உணர்ந்துகொண்டேன். நான் குடி-மக்களைப் புறக்கணித்தேன்; இனி அப்படிச் செய்யேன். அவர்களை அரசாங்கக் கடனிலிருந்து விடுதலை செய்து-விட்டேன். இதை முரசறைந்து தெரிவித்துவிடுகிறேன். சோழநாடு வளம் பெறட்டும். உங்களைப் போன்ற புலவர்-களால் அறிவு வளமும் பெருகட்டும்!'' என்று தழுதழுத்த குரலோடு சொன்னான்.

பழஞ்செய்க் கடனிலிருந்து குடிமக்கள் விடுதலை பெற்றார்கள். கோள் சொல்லும் குண்டுணிகளாகிய அமைச்சரினின்றும் அரசனும் விடுதலை பெற்றான். இந்த இரண்டுக்கும் காரணமாயிருந்த புலவர் வெள்ளைக்குடி நாகனார் பெருஞ்சிறப்புப் பெற்றார்.

அருஞ்சொற்பொருள் :

பண்டாரம் - பொக்கிஷம், தண்டலாம் - வசூலிக்கலாம், மாரி - மழை, வேளாளர் - பயிர்த்தொழில் செய்பவர், எஞ்சியதை - மிகுந்துள்ளதை, பெருமிதம் - பெருமை, பொருது - போர் செய்து, பச்சாத்தாபம் - இரக்கம், செய் - நிலம் (வயல்)

பயிற்சி வினுக்கள் :

1. குடிமக்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டது என்ன ?

2. குடிமக்களின் வருத்தத்திற்குக் காரணம் யாது ?

3. குடிமக்கள் தங்கள் குறையை அரசனிடம் எடுத்துக்கூற இயலாமைக்குக் காரணம் என்ன ?

4. குடிமக்கள் நாகனுரிடம் கூறியது என்ன ?

5. சோழநாட்டின் பெருமையைப் பற்றி நாகனுர் அரசனிடம் கூறியது யாது ?

6. அரசன் ஆழ்ந்து யோசிக்கும்படி நாகனுர் கூறியது என்ன ?

7. அரசனுக்கு நாகனுர் அறிவுறுத்திய அறிவுரைகளைத் தொகுத்து 20 வரிகளில் எழுதுக.

8. புலவர் குறிப்பை உணர்ந்த கிள்ளி வளவன் கூறியது என்ன ?

9. இயற்கைப் பஞ்சம், செயற்கைப் பஞ்சம்—விளக்குக.

6. தொழிற்கல்வி

(உரையாடல்)

[திரு. ச. ஆறுமுக முதலியார் அவர்கள், M.A., B.O.L., L.T.]

(இவர் சேலம் மாவட்டம் குமாரபாளையம் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரித் தலைவராய் இருப்பவர்; பல பாட நூல்களின் ஆசிரியர்; பேச்சிலும் எழுத்திலும் வல்லவர்.)

[கண்ணன், கட்டாயப் பாடம் தேவையில்லை என்பவன்; கமலத்திற்குத் தம்பி.

கமலம், கட்டாயப் பாடம் தேவை என்பவள்; கண்ணனுக்குத் தமக்கை.]

கண்ணன் : அக்கா, எங்கள் பள்ளியில் கைத்தொழிற்கல்வியை விருப்பப் பாடமாக வைத்துள்ளனர்.

கமலம் : அப்படியா? அது தவறு.

கண்ணன் : தவறு? விருப்பப் பாடமாக இருப்பதுதான் நல்லது. விருப்பம் உள்ளவர் தொழிற்கல்வி பெறலாம்; விருப்பம் இல்லாதவர் வேறு பாடங்களைப் படிக்கலாம் என்று இருத்தலே நல்ல முறை என்று பலரும் பேசுகின்றனரே!

கமலம் : அஃது ஒரு வகையில் பொருத்தமான வாதம்; முற்றும் சரியன்று. தொழிற்கல்வி கற்பிப்பதன் நோக்கம், தொழில் இன்னது என்பதை அனைவரும் அறிந்திருத்தல் நல்லது என்பதே. வெறும்புத்தகப் படிப்பேதான் இதுவரை எல்லாப் பள்ளிகளிலும் இருந்து வந்தது. அதனால் நாடு அடைந்த பலன் யாது? படித்தவர் தொகை பெருகிற்று; ஆனால், பிழைக்க வழி தெரிந்தவர் தொகை பெருகவில்லை. 'பள்ளிக் கணக்குப் புள்ளிக்கு உதவாது,' என்பதற்கு ஏற்ப, ஏட்டுக் கல்வி எல்லோருக்கும் பிழைப்புக்கு வழி காட்டவில்லை. அதனால், வேலை இல்லாதவர் தொகை பெருகியது; கணக்கற்ற குடும்பங்கள் வறுமைப்படலாயின. ஒரு சமுதாயத்தின் இளங்கொழுந்துகள்—எதிர்காலத்தில் இந்நாட்டின் குடிமக்களாக இருப்பவர்கள்—இவ்வாறு வறுமைப்படின், நாடு எவ்வாறு உயர்வு

பெறக்கூடும்? பதினுன்காண்டுகள் படித்து, பி.ஏ. பட்டம் பெற்றும், அப்படிப்பு, பிழைப்புக்கு வழிகாட்டவில்லையாயின், அப்படிப்பால் பயன் யாது? இதனை நன்கு ஆராய்ந்தே காந்தியடிகள் கல்வித் திட்டத்தையே மாற்றியமைக்க வேண்டும் என்று திட்டமிட்டார். ஏட்டுக் கல்வியும் கைத்தொழிற்கல்வியும் கலந்து புகட்டப்படின், பள்ளியையோ, கல்லூரியையோ விட்டு வெளி வரும் பிள்ளைகள், வேலை கிடைக்கவில்லையாயின் தொழில் செய்தேனும் பிழைக்க வழியுண்டு.

கண்ணன்: நீ கூறுவது சரிதான். ஆனல், கட்டாயத் தொழிற்கல்வி வேண்டுவதில்லையே!

கமலம்: கண்ணு, நீ 'கைத்தொழிற்கல்வி நமக்குத் தேவை இல்லை; நாம் அப்பாவைப்போல வேலை பார்க்கலாம்' என்று நினைத்து உன் விருப்பம்போல வேறு பாடத்தைப் படிப்பதாகக் கொள்வோம். நீ பி.ஏ. பட்டம் பெற்றவுடனே வேலை கிடைக்கவில்லை. அப்பொழுது நீ என்ன செய்வாய்? அதே சமயத்தில் தொழிற்கல்வியிற் பயிற்சிபெற்ற உன் வகுப்பு மாணவன் வேலையைப்பற்றிக் கவலைப்படாமல், தான் கற்ற தொழிலைச் செய்ய முனைவான்; பொருள் ஈட்டுவான். 'ஐயோ! நாம் அப்பொழுது தொழிற்கல்வியிற் பயிற்சி பெறத் தவறினேமே! இப்பொழுது வேலையின்றித் தவிக்கிறேமே!' என்று நீ கவலைப்பட நேரும். தொழிற்கல்வி கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப்படின், எல்லோரும் நலம் பெறுவர் அல்லவா? கண்ணு, இதனை நன்கு எண்ணிப் பார்.

கண்ணன்: அக்கா, நீ சொல்வது சிறந்த கருத்து எனினும், பட்டம்பெற்ற பிறகு எல்லோருமே வேலையின்றித் தவிப்பார்கள் என்று கூறமுடியுமா? அதைக் கருதித் தொழிற்கல்வியைக் கட்டாயமாக்க வேண்டுமா?

கமலம்: தம்பீ, நான் கூறுவது அது கருதி மட்டுமன்று. ஒவ்வொரு மனிதனும் ஒரு தொழிலிலே அறிவு படைத்தவனுதல் வேண்டும். வேலை கிடைக்கவில்லையாயினும், கிடைத்த வேலை நிலைக்கவில்லையாயினும், வயிற்றுப் பிழைப்பு நடைபெற வேண்டுமே! அதற்கென்ன

செய்வது? மேலும், ஒரு தொழிலிற் பயிற்சி பெறுதல்—ஒன்றில் திறமை பெற்றிருத்தல்—கையிருப்புப் போன்றதன்றோ? அக்கையிருப்பு வேலை உன்னை அடிமைத் தனத்திலிருந்து நீக்கும்; உரிமை மனிதனுக்கும்; ஏறுபோல் பீடு நடை கொள்ளச் செய்யும்; மானவுணர்ச்சியைக் கொல்லாமற்காக்கும். வேலை செய்துகொண்டே, நீ கற்ற தொழிலையும் ஓய்வு நேரத்தில் செய்து வருமானத்தைப் பெருக்கலாம். இத்தகைய பல நன்மைகளைச் செய்யும் தொழிற்கல்வி கட்டாயமாகக் கற்பிக்கப்படல் வேண்டும் என்பது என் கருத்து. கண்ணா, படிக்கும் பெண்களை எடுத்துக்கொள். அவர்கள் திருமணம் செய்துகொண்டு கணவருடன் வாழவேண்டுபவர்கள். கணவன் ஏழை; வேலை செய்கிறான். அவன் திடீரென்று இறந்துவிடுகிறான். அப்பொழுது அவன் மனைவியின் கதி என்னவாகும்? அவள் ஏட்டுக்கல்வி கற்றவள்; அவளுக்குத் திடீரென்று வேலை கிடைக்குமா? வேலை கிடைக்கும் வரை அவள் என்ன செய்வாள்? அவள் பள்ளியில் ஏதேனும் ஒரு தொழிற்பயிற்சி பெற்றிருப்பின், எளிதில் அத்தொழில் செய்ய முற்படுவாள் அல்லவா? அத்தொழில் அவளை ஒருவாறு காக்கக்கூடும் அல்லவா? நம்நாட்டில் பின்னல், நூல் நூற்றல், கைத்தறியில் நெய்தல், கூடை முடைதல், பூமாலை கட்டுதல், சமக்காளம் நெய்தல், தையல் வேலை, நெட்டி வேலை, லேசு பின்னுதல், களிமண் வேலை முதலிய பல சிறிய கைத்தொழில்களைச் செய்து கணக்கற்ற பெண்கள் பிழைக்கிறார்கள் என்பதை நீயுணரவேண்டும். இங்ஙனம் ஆடவரை நோக்கினும், பெண்களை நோக்கினும் தொழிற்கல்வி கட்டாயமாகக் கற்பிக்கப்பட வேண்டுவது என்பதில் ஐயமே உண்டாகாது.

கண்ணன்: அக்கா, நீ கூறியன யாவும் உண்மையே. ஆனால், உயர் அலுவலர் மகன் தச்சு வேலை, ஆடை நெய்தல் முதலிய வேலைகள் செய்ய விரும்புவானா? விரும்பினும், அவனால் எளிதில் கற்க முடியுமா? தச்சன் மகனுக்குத் தச்சு வேலை எளிதாக விளங்குமல்லவா?

கமலம்: தம்பீ, நீ நினைப்பது சரியன்று. அரசியல்

அலுவல் போன்றவை தொழிலைப்போல உரிமை உடையவை அல்ல. அரசியல் அலுவல், அடிமை வாழ்வு; தொழில், உரிமை வாழ்வைத் தரும். அரசியல் அலுவல், செல்வ வளத்தைத் தாராது; தொழில், செல்வ வளத்தைத் தரும். நாட்டில் செல்வராயிருப்பவர் தொழில் செய்பவரே தவிர அலுவலரல்லர். ஆதலால், பயிர்த்தொழில், கைத்தொழில் என்பவை பிற அலுவல்களைவிடப் பன்மடங்கு சிறந்தவை.

"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்;மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்."

என்னும் தமிழ் மறையை எண்ணிப் பார். இத்தகைய உயர்ச்சியைத் தரும் தொழிற்கல்வியை அனைவரும் கற்க வேண்டும். இது அனைவர்க்கும் எய்ப்பினில் வைப்புப் போன்றது; உற்றுழி உதவி புரிவது.

மேலும் இன்ன தொழிலை இன்னவர்தாம் செய்ய வேண்டும் என்னும் வரையறை இருத்தல் முறையன்று. சலவைத் தொழிலாளி மகன் சலவைத் தொழிலாளியாகவே இருத்தல் வேண்டுமா? அங்ஙனமிருப்பின், அச்சமூகம் உயர்நிலை அடைவது எப்போது இயலும்? மேலும், ஒரே மரபினரிடம் ஒரு தொழிலை ஒப்படைத்தல் அத்தொழில் வளர்ச்சியைக் கெடுப்பதாகும். தொழிலாளி மகன் படித்து அரசியல் அலுவல் செய்யலாகாதா? இப்பொழுது சிலர் அரசியல் அலுவல் செய்துகொண்டிருக்கின்றனரே! தொழிலைப் பரம்பரை உரிமையாகக் கொண்டதாலேதான் உலகத்தில் வேறெந்த நாட்டிலும் இல்லாத சாதிகள் நம் நாட்டில் மட்டும் ஏற்பட்டு வேரூன்றி, இன்று சமுதாய வாழ்க்கையின் அடிப்படையிலேயே அமைதியின்மையை உண்டாக்கிவிட்டன. அதனாலேதான் காந்தியடிகள் போன்றோர், 'தொழில்களை எல்லோருக்கும் பொதுவாக்க வேண்டும்,' என்பதை வற்புறுத்தினர்; இன்றும் அறிஞர் பலர் வற்புறுத்தி வருகின்றனர். இந்த நாடு முன்னேற வேண்டுமாயின்—வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய வேண்டுமாயின்—எல்லோரும் பிழைப்புக்கு வழி காண

வேண்டுமாயின்—எல்லோரும் எவ்வித வேறுபாடுமின்றி அவரவர்க்கு விருப்பமான ஒரு கைத்தொழிலை நன்கு கற்பதுதான் சிறந்த வழியாகும். ஆகவே, பள்ளிகளில் எல்லோரும் கட்டாயமாகத் தொழிற்கல்வியிற் பயிற்சி பெறும் திட்டமே நமது நாட்டுக்கு ஏற்றது.

கண்ணன் : அக்கா, எனக்கு இப்பொழுதுதான் உண்மை விளங்குகிறது. நான் தொழிற்கல்வியிற் சிறப்புப் பயிற்சி பெறுவேன்.

அருஞ்சொற்பொருள் :

முற்றும் - முழுவதும், ஏறு - எருது (காளை), பீடு - பெருமை, பீடு நடை - பெருமித நடை, தமிழ் மறை - திருக்குறள், உற்றுழி - துன்பம் நேர்ந்த பொழுது.

பயிற்சி வினாக்கள் :

1. வெறும்புத்தகக் கல்வியால் விளைந்த பலன் யாது ?
2. காந்தியடிகள், 'கல்வித் திட்டத்தையே மாற்றி அமைக்க வேண்டும்,' என்று திட்டமிட்டது ஏன் ?
3. ஏதேனும் ஒரு தொழிலில் திறமை பெற்றிருப்பதால் உண்டாகும் நன்மைகளைக் குறிப்பிடுக.
4. 'பெண்டிர்க்குத் தொழிற்கல்வி தேவை,' என்பது எவ்வாறு வற்புறுத்தப்படுகிறது ?
5. 'கைத்தொழில் பிற அலுவல்களைவிடப் பன்மடங்கு சிறந்தது,' என்றது எதனால் ?
6. 'தொழில்களை எல்லோருக்கும் பொதுவாக்க வேண்டும்,' என்பது ஏன் ?
7. தொழிற்கல்வியின் அவசியம் பற்றி 20 வரிகள் எழுதுக.

7. என் உலகச் செலவு

[அறிஞர் திரு. தனிநாயக அடிகள்]

(இவர் யாழ்ப்பாணத்துத் தமிழ் அறிஞர்; உரோமை மாநகரில் குருத்துவப் பட்டம் பெற்றவர்; உலகஞ்சுற்றிய தமிழர். ஆங்கிலம் பிரெஞ்சு முதலிய பிற மொழிப் புலமை கொண்டு அம்மொழிகளின் மூலம் தமிழ்த்தூது செய்பவர். தமிழ்ப் பண்பாடு பற்றி ஆங்கிலச் சஞ்சிகையொன்றை நிறுவி அதனைத் திறம்பட நடத்துபவர்)

நாட்டை விட்டுப் பெயர்ந்து ஏறக்குறைய ஈராண்டுகள் ஆகிய பின்னர், தமிழ்த்திரு நாட்டை மீண்டும் என் கண்கள் பார்த்தன. இந்த ஈராண்டுகளில் யான் **மலாயா, சீனம், சப்பான், வட அமெரிக்கா, தென்னமெரிக்கா, நடு ஆப்பிரிக்கா, இத்தாலி, பலத்தினு, எகிப்து** இந்நாடுகளைக் கண்டு வந்தேன்.

தமிழைப் பொறுத்தவாறு யான் அடைந்த பெருவியப்பு, தமிழும் தமிழரும் உலகிற்பரவியிருக்கும் வகை கண்டு ஏற்பட்டதேயாம். பர்மாவில் தமிழ் மொழிக்குச் செல்வாக்குண்டு. நடு அமெரிக்காவின் தீவுகளாகிய **திரிநாடு, சமேக்கா, அட்லாண்டிக்குத் தீவுகளாகிய மார்த்தீனிக்கு,** ஆபிரிக்காவின் பல பிரிவுகள், இன்னோரன்ன இடங்களுக்குச் சென்ற தமிழர் பெருஞ்சிறப்புடன் வாழ்ந்து வருகின்றனர். ஆயினும், மலாயாவிற்குச் சென்றபொழுது யான் அடைந்தது போன்ற வியப்பு வேறு எவ்விடத்திலும் யான் அடைந்தேன் அல்லேன். ஆங்குள்ள இந்தியர்களில் தமிழரே பெரும்பகுதியினர். அங்குத் தமிழ் நாட்செய்தித் தாள்கள் நான்கு ஐந்து வெளியிடுகின்றனர். **சிங்கப்பூர், கோலாலம்பூர்** முதலிய பேரூர்களின் வானொலி நிலையங்கள் தமிழில் நாள்தோறும் ஒலி பரப்புகின்றன. இவையெல்லாம் என் மகிழ்ச்சிக்கும் வியப்புக்கும் காரணமாகும். மேலும், யான் அங்குச் சென்றிருந்த போது மலாயாவின் **பல்கலைக்கழகம்** ஒன்றை நிறுவத் திட்டங்கள் வகுத்து வந்தனர். அப்பல்கலைக்கழத்தில் தமிழிற்கும் ஒரு பேராசிரியக் கட்டில் நிறுவவேண்டும் என்று இலங்கைத் தமிழரும் இந்தியத்

தமிழரும் முயன்று வந்தது என் மகிழ்ச்சிக்கு மற்றுமொரு காரணமாயிற்று.

தமிழன் தன் மொழியினிடத்துப் பற்றுக்கொள்வது போல வேறெவரும் தம் மொழியினிடத்துப் பற்று வைப்பதையோ, தமிழ்ப் புலவர் தம்மொழியைப் போற்று-வது போல வேறெவ்விலக்கியத்திலும் யாரேனும் தம் மொழியைப் போற்றுவதையோ கண்டிலேன். சேக்கிழாரது பெரிய புராணத்தை விரித்துப் பார்மின். தமிழ் என்னும் சொல்லை, தம் செய்யுளில் அமைக்க வேண்டுமெனின், அதற்கு அடை இல்லாமல் எழுதப் பின் வாங்குவர். '**செந்தமிழ், இன்றமிழ், வண்டமிழ், தண்டமிழ், அருந்தமிழ், செழுந்தமிழ், தீந்தமிழ், உயர்தமிழ், கோதில் தமிழ், தேன் பொழியும் செந்தமிழ்** என்-றெல்லாம் யாழினும் இனிதிசைப்பர்.

இனி, தேவாரங்களைப் பாடினுர் என்னும் பொருளில் '**தமிழ் பாடி யறைந்தார், தமிழ் மாலைகள் சாற்றினுர்**' என்று அப்புலவர் கூறுவதை யார்தாம் நினைந்து நினைந்து இன்புறுர்! மேலும் திருமூலர், "என்னை நன்ருக இறைவன் படைத்தனன், தன்னை நன்ருகத் **தமிழ் செய்யுமாறே,**" என்று கூறுவது போலெல்லாம் பிற மொழிப்புலவர் தம் மொழியைப் போற்றிக் கூறிய-தாகத் தெரியவில்லை. தமிழரின் இத்தமிழ்ப் பற்றுத்தான், மலாயாவின் தமிழர் என் விரிவுரைகளைக் கேட்கத் தொலைவிலிருந்து வருவதற்கும், யான் செய்த சிறு தொண்டைப் பெரிதாகப் போற்றுதற்கும் காரணமாய் இருந்தது. உலகிலிருக்கும் தமிழரனைவரும் தம் மொழிக்குத் தொண்டாற்ற ஒன்று கூடுவரேல், தமிழ் முரசு உலகெங்கும் முழங்கி நிற்கும் என்பதில் ஐயமும் உளதோ? ஆயினும், இந்தியத் தமிழ் நாட்டிலுள்ள அரசியற்கருத்து வேறுபாடுகள் மலாய்த் தமிழரையும் பிரிக்கின்றன. இவர் அரசியல் துறையில் வேற்றுமைகள் உடையரேனும், தமிழ்த்தாதுத் துறையில் ஒற்றுமை பாராட்டி ஒன்று சேர்வது தமிழிற்கு உறுதுணையாகும்.

வேற்று நாடுகளில் குடியேறியிருக்கும் தமிழர்,

தமிழை ஒருவாறு மறப்பதற்கு அவர்கள் சூழ்நிலை காரணமாயிருப்பதால், அந்நாடுகளின் மொழிகள் வாயிலாகவும் தமிழின் புகழைப் பரப்புவது நம் கடமையாகும். வேற்று நாடுகளுக்குத் தமிழ் நாட்டிலிருந்து கல்விப்பொருட்டாகவும், வாணிகப்பொருட்டாகவும் செல்லும் தமிழரனைவரும் தமிழ் வரலாற்றையும் தமிழ் இலக்கியங்களையும் நன்குணர்ந்து செல்வாராயின், அவரும் தமிழ்க் கலைத் தூதைப் பெரிதும் நிகழ்த்துவதற்கு வழிகளைக் காண்பர். சென்ற நூறு ஆண்டுகளில் மேல் நாட்டார் சிலர் தமிழைப் பற்றி ஒருவாறு அறிந்திருக்கின்றனர். ஆயினும், பண்டைப் பண்பு படைத்த சீனம் சப்பான் முதலிய நாடுகளிலும், தமிழ்க் கலைகளும் பண்பும் பரவியிருந்த சாவகம், புட்பகம் போன்ற நாடுகளிலும் தமிழினது புகழை எடுத்துக் கூறும் பணியைப் புரிபவர் இலர். சென்ற பல ஆண்டுகளாக மேற்றிசை நோக்கியே நம் எண்ணங்களைச் செலுத்தி வந்திருக்கின்றோம். ஆசியப் பரப்பில் நடு நாட்டவராயிருக்கும் தமிழர் நாற்றிசையிலும் தம் எண்ணங்களைச் செலுத்தித் தமிழ்த் தொண்டாற்றுவது இன்றியமையாதது. இக்கீழ்த்திசை நாடுகளுக்கெல்லாம் முன்னொருகால், தமிழர் புத்தசமயத் தொண்டாற்றுவதற்கும் தம் வாணிகத்தைப் பெருக்குதற்கும் சென்றிருந்தனர். இங்ஙனம் உண்டாகிய பண்டைத் தொடர்புகளை நாம் இழப்பது எதற்கு?

சப்பான் நாட்டில் பல பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. அக்கழகங்களில் வடமொழிப் பயிற்சி சிறிதளவிலேனும் உளது. ஆயின், தமிழ்ப் பயிற்சியோ, அறவே இல்லை. "திராவிடக் கலைகளைப் பற்றியும் பண்பைப் பற்றியும் யாம் அறிய விரும்புகின்றனம். சப்பானிய மொழியில் அவற்றைப் பற்றி அறியத் தக்க நூல்கள் எமக்குக் கிடைத்தில. ஆங்கிலத்திலும் மிகக் குறைவே," என்று சப்பானில் கீழ்த்திசைக் கலை மொழியாசிரியர் ஒருவர் எனக்குக் கூறினர்.

தோக்கியோப் பேரூரில் 'மாருசேன்' என்பது ஒரு புத்தக விற்பனைக் கடை. அங்குப் புது நூல்களையும்

பழைய நூல்களையும் விலைக்குப் பெறலாம். அவர்களுடைய பழைய நூல் விற்பனை நிலையத்திற்குச் சென்ற போது போப்பு ஐயருடைய பல நூல்களையும், தீட்சிதரின் சிலப்பதிகார மொழி பெயர்ப்பையும் கண்டேன்.

செய்தித்தாள்கள் சப்பானிய நாட்டில் மிக்குயர்ந்து வளம் பெற்றுள்ளன. மைனிச்சி, அசாகி என்னும் செய்தித்தாள்களுள் ஒவ்வொன்றும் முப்பது நூருயிரம் படிகளுக்குமேல் நாள்தோறும் செலவாகின்றன. இவற்றின் ஆசிரியர்கள், தம் செய்தித் தாள்கள் மூலம் சப்பானிய மக்களுக்கு நற்சொற்கள் சில கூறுமாறு என்னை வேண்டினர். அப்பொழுது, ''மேற்றிசை கீழ்த்திசை வேற்றுமைகள் ஒழிந்து, உலகமாந்தர் தமிழ்ப் புலவரின் '**யாதும் ஊரே, யாவரும் கேளிர்**,' என்னும் மனப்பான்மையை வளர்க்க வேண்டும்,'' என்று கூறினேன். இனி, இவ்வாறே உலகின் வேறுபல இடங்களிலும் என் நற்சொல்லையும் கையெழுத்தையும் விரும்பியவர்க்கும், விருந்தினரின் நூல்களிலும் சங்கப் புலவரின் இவ்வழகிய அடியினைத் தமிழ் எழுத்தில் பொறித்து, ஒத்த மொழி பெயர்ப்பையும் கேட்பார் மொழியில் வரைந்தனன்.

பிறநாட்டுப் பல்கலைக் கழகங்களில் தமிழைப் பற்றிய ஆங்கில நூல்கள் இல்லாமையை அறிந்து, அண்ணமலைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் உயர்திருவாளர் **மணவாள இராமானுசம்** அவர்கள், என் வேண்டுகோளுக்கு இசைந்து, சப்பானியப் பல்கலைக் கழகங்களுக்குப் பல நூல்களை நன்கொடையாக அளித்தார்கள். இவ்வாறு நன்கொடையாக நூல்களை உலகெங்கும் அனுப்பித் தமிழின் உரிமைகளை நிலைநாட்ட வேண்டுவது இன்றியமையாததாகும். தமிழ் நாட்டு வள்ளல்கள் தம் தமிழ்த் தொண்டை இம்முறையில் நிகழ்த்தலாம்.

யான் தமிழ் நாட்டை விட்டுத் தோக்கியோவை அடைந்து இரண்டு கிழமைகளாயினபின் நண்பரொருவர் என்னை விருந்துக்கழைத்தார். அவ்விருந்தில் எனக்குப் பெருமகிழ்வூட்ட எண்ணி, சப்பானிய உணவை வழங்காது, தமிழ் உணவாகிய சோறும் கறியும் வழங்கினர்.

உண்ணும்பொழுது, அவர் தம் வானெலிப் பெட்டியை அணுகி, அதை இயக்கினர். உடனே புதுடில்லியிலிருந்து தமிழ்ப் பாட்டுக் கேட்டது. 'இவ்வளவு தொலைவிலும் நாவுக்கும் செவிக்கும் தமிழ் விருந்து கிடைத்ததே!' என எண்ணி மகிழ்ந்தேன்.

சப்பானியர் இயற்கையின் எழிலில் பெரிதும் ஈடு-பட்டு வளர்பவர். மலர்களைச் செப்பில் ஒழுங்குபடுத்தி வைப்பதில், அவர்கள் தம் பெண்மணிகளுக்குச் சிறப்பாகப் பயிற்சி அளித்து வருகின்றனர். ஆயினும், ஆவாய்த் தீவுகளில், மலர்களையும் மாலைகளையும் இன்னும் பெரி-யனவாய்ப் பேணுகின்றனர். ஆவாய்த் தீவுகளுக்கு யான் சென்றபொழுது, சங்க இலக்கிய காலத்தின் நினைவு என்னையறியாமலே எனக்குத் தோன்றிற்று. ஏனெனில், அங்குத் துறைமுகத்திற்கு வந்த மக்களனைவரும் கண்-ணியும், மாலையும், தாரும், கோதையும் அணிந்தே வந்த-னர்; விருந்தாக வந்தவர்க்கும் மாலைகளைச் சூட்டினர்; வழியனுப்புவோர்க்கும் மாலைகளைச் சூட்டி விடையளித்-தனர்; பாடினர்; அலோவா என்னும் ஆவாய் இசை-யினைப் பண்ணுடன் இசைத்தனர். சிலர் தழையுடைகளை அணிந்து வந்திருந்தனர். அப்பெண்டிரும் ஆடவரும் சங்க காலத் தமிழ் மக்களைப்போல எனக்குத் தோன்றி-னர் என்பதில் சிறிதேனும் உயர்வு நவிற்சியின்று.

ஆவாய்த் தீவில், விண்ணும் மண்ணும் எழில் படைத்-திருக்கின்றன. தெளிவான நீலவானம், நிலத்தைச் சூழ்ந்த பசுமையான ஒளி, கடல் நீர், பறவைகள், பூக்கள், மரஞ்செடிகள் இவை யாவும் யான் கண்ட வேறு ஊர்களில் இல்லா நிறத்தையும் மணத்தையும் படைத்தன-வாய் இருந்தன. என் உலகச் செலவில் யான் கண்ட நாடுகளில், ஆவாய்த் தீவுகளே எழிலிற்சிறந்தவை. இங்குள்ள தட்பவெப்ப நிலைகள் அஞ்சத்தக்கன அல்ல; என்றும் உடல் நலத்துக்கு உறுதுணையானவையே.

பசுபிக்குப் பெருங்கடலின் நடுவிலிருக்கும் இத்தீவுகள் கீழ்த்திசை நாடுகளையும் மேற்றிசை நாடுகளையும் இணைக்-கும் பாலமாய் விளங்குகின்றன. ஆவாய்த் தீவில் யான்

தங்கியபோது அங்குக் கீழ்த்திசை மேற்றிசைத் தத்துவப் பேரறிஞர் மாநாடு நிகழ்ந்தது. இத்தகைய பேரவையைக் கூட்டுவதற்கு இதைவிடப் பொருத்தமான இடத்தைத் தெரிந்தெடுப்பது அரிது. ஆவாய்த் தீவுகளிலும் பொதுவாகப் பசிபிக்குப் பெருங்கடலின் தீவுகளிலும், நம் சங்ககாலப் பழக்க வழக்கங்களிற்சில இடம் பெறுவது தோன்றுகின்றது. மலர்களை அகவொழுக்கத்திற்கும் புறவொழுக்கத்திற்கும் அறிகுறிகளாகக் கையாண்டு வருகின்றனர். இந்நாட்டவர் முற்காலத்தில் பெரும்பாலும் இந்திய நாடுகளுடன் தொடர்புடையவராகவே இருந்திருப்பர் போலும்!

ஆவாய்த் தீவில் **வாட்டுமல்** என்னும் இந்திய வணிகர் என்னை விருந்துக்கு அழைத்திருந்தார். அவர் சிந்து மாகாணத்திலுள்ள **ஐதராபாது** என்னும் ஊரவர்; ஆவாயில் பெருஞ்செல்வம் படைத்த வணிகராய் விளங்குகின்றனர். அவர் அமெரிக்கப் பெண்மணியை மணம் செய்தனர். இம்மணத்தால் நிகழ்ந்த இந்திய அமெரிக்க உறவின் பயனாக அவரிருவரும் தம் செல்வத்தின் ஒரு பகுதியை முதற்பொருளாக நிறுவி, இந்தியாவில் அமெரிக்கக் கலைகளைப் பற்றியும் அமெரிக்காவில் இந்தியக் கலைகளைப் பற்றியும் ஆசிரியர் வழியாக அறிவு பரப்பி வருகின்றனர். இத்தொண்டிற்கு அவர் ஒதுக்கிய முதல், **பதினைந்து நூறாயிரம் வெண்பொற்காசுகள்** (பதினைந்து லட்சம் ரூபாய்). இவ்வாறு தமிழ்ச் செல்வர் அனைவரும் முதல் திரட்டி, தமிழ்த் தூது நிகழ்த்துவராயின், நம் கலைகள் பாரெங்கும் பரவுவதற்கு வழி காண்பர்.

ஆவாய்த் தீவுகளில் **மொலோக்காய்** என்பது வரலாற்றில் பெயர் பெற்றது. தமக்கென வாழாப் பிறர்க்குரியாளரான அருள் மறைத் திருவாளர் **தமியான்** அடிகள் என்பார், தொழுநோயினர்பொருட்டுத் தம் வாழ்க்கையைத் தியாகம் செய்தார். அவர் வாழ்ந்த இல்லத்தையும் சூழ்நிலையையும் காணுமாறு ஆங்குச் சென்றேன். அவண் வதியும் தொழு நோயாளரைப் பேணி மேற்-

பார்த்து வரும் கன்னியர் தமிழ் நாட்டின் தொழுநோய் மருத்துவ நிலையங்களைப் பற்றி நன்கறிந்திருந்தனர். மொலோக்காய்க்குச் சென்ற முதற்றமிழன் நான் எனக் கருதி அன்னர், யான் மீண்டும் வந்து வானூர்தி இவரும் வரைக்கும் தமிழ் நாட்டின் பற்பல பொருள் பற்றி என்னை இடைவிடாது உசாவலாயினர்.

ஆவாய்த் தீவுகளை ஐக்கிய அமெரிக்காவின் வாயில் என்று கூறுவர். இத்தீவுகளிலிருந்து ஐக்கிய அமெரிக்காவின் மேற்குக் கரை இரண்டாயிரம் கல் தொலைவிலிருக்கின்றது. நண்பகலில் வானூர்தி ஏறினுல் அன்று மாலை சான்பிரான்சிசுக்கோ எனும் பேரூர்க்குப் போய்ச் சேரலாம். ஐக்கிய அமெரிக்காவிலிருப்பவர், பிற நாடுகளைப் பற்றியும், பிற மக்களைப் பற்றியும், பிற இலக்கியங்களைப் பற்றியும் அறிய அவா உடையவர். அவர்களுடைய பல்கலைக் கழகங்களிலும் கல்லூரிகளிலும், கூட்டங்களிலும், வேறு நாட்டுச் சொற்பொழிவாளரை அழைப்பது பெருவழக்காம். சொற்பொழிவுகள் கேட்பதிலும் விருந்துகளுடன் கூட்டங்களைக் கூட்டுவதிலும், விருந்தோடு விரிவுரைகள் நிகழ்த்துவதிலும் ஐக்கிய அமெரிக்கா பிற நாடுகளைவிடத் தேர்ச்சி பெற்றது. ஆதலால், அங்கு ஓராண்டில் யான் தமிழைப் பற்றி இருநூறு விரிவுரைகள் நிகழ்த்தியது வியப்பன்று. பல்கலைக் கழகங்களிலும், கல்லூரிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலும், கிழமைக்கு ஒரு முறை மாணவர் பொதுக்கூட்டம் கூட்டி ஆசிரியரையும் பேரறிஞரையும் வரவழைத்து விரிவுரை நிகழ்த்துவிப்பர். அங்ஙனம் அழைக்கப் பெறுபவர்களுக்கு இருநூறு அல்லது முந்நூறு வெண்பொற்காசுகளைச் சம்பளமாகக் கொடுப்பர். அங்குச் சொல் வன்மையுடையவர் சொற்பொழிவுகள் ஆற்றியே தம் வாழ்நாட்களைக் கடத்தலாம். இப்பல்வேறு கழகங்களுக்குச் சொற்பொழிவாளரை அனுப்புவதற்கென வணிகக் குழுக்கள் இருக்கின்றன.

அமெரிக்கா அண்மையில் தோன்றிய நாடு; இன்னும் இளமை நிலையில் இருக்கிறது. ஒரு நூற்றாண்டு இரு

நூற்றுண்டு படைத்த இடங்கள் அல்லது பொருள்கள் என்றால், அமெரிக்கருக்கு அவை மிகப் பழைய இடங்களாகவும் பொருள்களாகவும் தோன்றுவன. ஆதலால், தமிழர் பழமையையும், தமிழரின் பண்டை வாணிகத்தையும், யவனர் உரோமர் போன்றோருடன் பண்டைத் தமிழரின் நட்பையும் கூறியபோது அவர்கட்குப் பெரிதும் வியப்பு உண்டாயிற்று. அவருட்பெரும்பாலார் இந்திய இலங்கை வறுமை பற்றியும் உடல்நலம் குன்றிய மக்கள் பற்றியும் கேள்விப்பட்டிருந்தனர். எனினும், தமிழ் நாட்டின் **கலைகளையும், இலக்கியங்களையும், பத்திப் பாடல்களையும், மொழி வளத்தையும்** பற்றிக் கேள்விப்பட்டவர் அல்லர்.

அமெரிக்காவில் யான் கண்ட தமிழர் ஒரு சிலரே. ஆயினும், யான் அமெரிக்காவில் கண்ட தமிழ்ப்பற்றுடைய தமிழர்களுள், நூற்கூட இயக்கத்தின் தலைவராகிய திருவாளர் **அரங்கநாதனும்**, தமிழிற்புத்தகங்கள் இயற்றிய திருவாட்டியார் **உருக்குமிணி அம்மையாரும்** சிறந்தவர். இவரிருவரும் என்னைப்போல உலகில் தமிழ்த் தூது நிகழ்த்தும் இன்றியமையாத் தன்மையை நன்குணர்ந்தோர். உருக்குமிணி அம்மையார் இந்தியக் கலைகளைப் பற்றிப் பல விரிவுரைகள் அமெரிக்காவின் பல பகுதிகளில் நிகழ்த்தி வருகின்றனர்.

பிற நாட்டில் வைகுங்கால், சிறிதேனும் தமிழ் மணங்கமழ்ந்தால், யாம் மட்டற்ற மகிழ்ச்சி எய்துவது இயல்பன்றோ? நியூயார்க்கிலும் **லொசு அஞ்சலிசிலும் சான்பிரான்சிசுகோவிலும்** இந்திய உணவுச் சாலைகள் உள. இவற்றின் உணவு நிரலில் '**கண்டிசம்பல்**', '**சிங்கள மிளகு தண்ணீர்**', '**சென்னைக் கறியும் சோறும்**', '**தமிழ் இனிப்பு**' என்றெல்லாம் விளம்பரம் செய்திருக்கின்றனர். இந்தியா உலகுக்கீந்த நலங்களில் 'கறியே' சிறந்ததென்று ஓர் ஆசிரியர் இடக்குக்காகச் செப்பினரேனும், ஒரு நாட்டவரின் நாகரிகத்தை அறிவதற்கு அவரது உணவும் ஒரு வாயிலாவது உண்மை. என் அமெரிக்க நண்பரோடு அமைதியாய் உரையாட

விரும்பும் போதெல்லாம், அவரை இவ்விந்திய உணவுச்சாலைகளுக்கு என் விருந்தாக அழைப்பேன். அமெரிக்கரைச் செவிக்குணவு தருதலால் மட்டுமன்றி, வயிற்றுக்குணவு தருதலாலும் வெல்ல முடியும். நான் முதன்முதல் 'இராசா' என்னும் உணவுச் சாலைக்குச் சென்றபொழுது, என்னைத் தென்னாட்டவரென்று உணர்ந்த ஊழியன், இந்தி இசைத்தட்டுக்களை நீக்கி, 'தெருவில் வாராண்டி' என்ற தமிழ் இசைத் தட்டையமைத்தான். நியூயார்க்கில் 'தெருவில் வாராண்டி' கேட்டதை நினைக்கையில், இன்னும் நகையாகின்றது.

வேற்று நாடுகளில் வாழும்பொழுது, தமிழ்ப்பற்றும் ஆற்றலும் மிகுவதை, வேற்று நாடுகளில் வாழ்ந்துள்ள தமிழர் உண்மையென உணர்வர். உரோமை மாநகரில் யான் உறைந்த குரு மடத்திலும், திருமறை நூற்கல்வி பயின்ற பல்கலைக் கழகத்திலும், நாற்பத்து மூன்று வெவ்வேறு நாடுகளிலிருந்து வந்தோர் என்னுடன் மாணக்கராயிருந்தனர். அவருடன் ஐந்து ஆண்டுகள் (1934—1939) வாழ்ந்ததன் பயனாகவே யான் பரந்த உலக மனப்பான்மை படைத்தேனாயினேன். அவரிடை வதியுங்கால் என் தமிழ்ப்பற்று மிகுந்ததேயன்றிக் குறையவில்லை. அயல் நாட்டுத் தொடர்பாலும், அயல் மொழிப் பயிற்சியாலும், நம் நாட்டு மொழிப்பற்று நனி சிறந்து வளர்கின்றது; பிற மொழிகளுடன் தமிழைச் சீர்தூக்கிப் பார்க்கும் பெரும்பேற்றினையும் அடைகின்றோம்.

தமிழ்க் கலைகளை விரிவுரைகளோடு வெள்ளித் திரைவாயிலாகவும் விளக்குவதற்குத் துணையாக என்பால் இரு சினிமாப்படச் சுருள்கள் இருந்தன. அவற்றுள் ஒன்று தமிழ் நாட்டுக் கட்டடங்களையும், மாளிகைகளையும், கோயில்களையும் காட்டுவது. பிறிதொன்று தமிழ் நாட்டுக் கலையை உணர்த்துவது. இவ்விரு படங்களையும் மேல் நாட்டினர் மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். பன்னீராட்டைப் பெதும்பை 'தில்லான' ஆடிய படத்தைக் கண்ணுற்று மகிழாதார் இலர். 'நீங்கள் காட்டிய நடனப் படம் இள அருவியின் சலசலவெனும் ஓட்டம் போல

இருந்தது!' என்று அமெரிக்க எழுத்தாளர் ஒருவர் அழகாக எனக்குக் கூறினர்.

வட அமெரிக்காவில் மக்கள் தமிழ்க் கலைகளைப் பற்றி அறியப் பெரிதும் அவாவுடையவராயிருக்கின்றனர். தென் அமெரிக்காவிலோ, பண்டை நாகரிகம் படைத்தவரும் பழங்குடிகளுமான இலத்தீன் வழித்தோன்றல்கள் இந்தியாவின் பெருமையை நன்ருக அறிந்திருப்பதாகத் தெரிந்திலது. இலத்தீன் அமெரிக்க நாடுகளில் பழைய நாகரிகங்கள் அரும்பி மலர்ந்து வாடின. மெக்சிக்கோவில் **அசுதெக்கரும், தோல்தெக்கரும்,** பெருவில் **இன்காகரும்** வரலாற்று நூல்களில் பெயரும் புகழும் பெற்ற மக்கள். அவர்களுடைய கோட்டைகளையும் மாளிகைகளையும் நான் கண்டபோது திராவிட மக்களின் கட்டடத்திறன் என் நினைவில் தோன்றியது. அவர்கள் இத்திறனில் கட்டடக்கலைஞருடைய வியப்பையும் புகழையும் பெற்றவராயினும், இலக்கிய நூல்களை யாத்தவரல்லர். இப்பண்டை நாகரிகங்களுடன் தமிழ்ப் பண்பு நிலையைப் பிணைத்துப் படித்து ஆராய்ச்சி செய்வதும் தமிழாராய்ச்சியின் புதியதொரு துறையாகும்.

தென்னமெரிக்காவில் ஒரு திங்களாகப் பல நாடுகளுக்குச் சென்று விரிவுரை நிகழ்த்தி வந்தேன். ஆங்குள்ள செய்தித்தாள்கள் தமிழையும் என் கருத்துக்களைப் பற்றிய என் உரைகளையும் விரிவாக எடுத்துக் கூறின. அவர்கள் தங்கள் ஊர்களில் நான் பல திங்கள் தங்கவேண்டுமென்று என்னைக் கேட்டனர். அங்குச் செல்லும் தமிழர் மிகு சிலராகலின், என்னிடத்திற் பழமையையும் புதுமையையும் ஒருங்கே கண்டனர். தம் மொழியாகிய இசுபானிய மொழியில் யான் தமிழ்ப் பண்பை எடுத்துக் கூறியது, அவர்கட்குப் பெருமகிழ்ச்சியைக் கொடுத்தது. தென்னமெரிக்க நாடுகளில் 'ஆர்கெண்டீனு' என்னும் குடியரசு முன்னேற்றத்தில் சிறப்புற்று வளர்கின்றது. ஆங்குள்ள பல்கலைக்கழகங்கள் இந்தியக் கலைகளை அறிய விரும்புகின்றன. ஆங்கெல்லாம் நம்மவர் தமிழ்த் தூதாகச் சென்று விரிவுரைகள் நிகழ்த்துதல் வேண்டும்.

அருஞ்சொற்பொருள் :

கோது - குற்றம், கிழமை - வாரம், கடைப்பிடியாய் - உறுதியாய், கண்ணி, தார் - மாலையின் வகைகள், விண் - ஆகாயம், எழில் - அழகு, இணைக்கும் - ஒன்று சேர்க்கும், அவை - சபை, பேணி - பாதுகாத்து, இவரும் - ஏறும், (இவர்தல் - ஏறுதல், ஊர்தல்), வைகுங்கால் - தங்கியிருக்கும் போது.

பயிற்சி வினாக்கள் :

1. மலாயாத் தமிழரின் தமிழைப் பற்றி விளக்கந்தருக.
2. தமிழ்ப் புலவர் தமிழ்ப்பற்று மிக்கவர் என்பதை எதனால் அறிகிறாய்?
3. அறிஞர் தனிநாயக அடிகள் சப்பானிய மக்களுக்குச் செய்தித்தாள்கள் மூலம் கூறிய நல்லுரை யாது?
4. ஆவாய்த் தீவு மக்களின் பழக்க வழக்கங்களைத் தெரிவிக்க.
5. ஆவாய்த் தீவின் இயற்கை எழிலின் சிறப்பைத் தெரிவிக்க.
6. 'வாட்டுமல்' என்பவர் யார்? அவரது கலைத்தொண்டு பற்றி விவரிக்க.
7. ஐக்கிய அமெரிக்க நாட்டினரின் இயல்புகளைக் குறிப்பிடுக.
8. அமெரிக்காவில் இந்திய உணவுச்சாலை உள்ள இடங்கள் எவை? இவ்வுணவுச் சாலைகளைப் பற்றி நீ அறிந்ததைக் குறிக்க.
9. தென்னமெரிக்காவில் அடிகள் ஆற்றிய தமிழ்ப் பணியைக் குறிக்க.

8. படக்காட்சி

(சொற்போர் மன்ற நிகழ்ச்சி)

[வித்துவான் தி. சி. குழந்தைவேல் முதலியார் அவர்கள்]

[இவர் திருச்சிராப்பள்ளி செயின்ட் ஜோசப்புக் கல்லூரி உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர்; பல பாடநூல்களின் ஆசிரியர். சிறந்த உரை-நடைத் திறன் கைவரப்பெற்றவர்.]

செயலாளர் செல்லப்பன்: அன்புள்ள நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் எனது வணக்கம் உரியதாக! நமது கழகத்தின் இரண்டாவது கூட்டம் இன்று நடைபெறவிருக்கிறது. இக்கூட்டம் செவ்வனே நடைபெறுவதற்குரிய அறிவுரைகளைக் கூறி ஆவன புரிந்து வரும் ஆசிரியப் பெரியோர்கள் இங்கு எழுந்தருளியுள்ளார்கள். அவர்களுக்கு வணக்கம் செலுத்தி, மகிழ்வுடன் வரவேற்கிறேன். இக்கூட்டத்தில் நம் தோழர்களுள் இருவர் அறிவுத் திறமையுடன் சொற்போர் நிகழ்த்தப் போகிறார்கள். அவர்கள் கூறும் மொழிகளைக் கேட்கும் ஆவலுடன் நாம் இங்குக் குழுமியிருக்கிறோம். நண்பர் தாயப்பர் அவர்களைத் தலைமை தாங்குமாறு கேட்டுக்கொள்கிறேன். (மாணவர்கள் கை தட்டல்)

தலைவர் தாயப்பன்: அறிவு சான்ற ஆசிரியப் பெரியோர்களே, அன்பு நிறைந்த நண்பர்களே, யாவர்க்கும் எனது பணிவார்ந்த வணக்கம் உரியதாக! இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கும் பெருமையை அளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவிக்கிறேன். கல்வி அறிவும் பேசுந் திறமையும் உள்ள பெரியோர்களே தலைமை தாங்கும் தகுதியுடையோராவர். அத்தகுதியிற் குறைவுள்ள நான், உங்கள் அன்பின் ஆதரவு கொண்டு, இயன்ற வரையில் என் கடமையையாற்ற முயலுகிறேன்.

அன்பர்களே, இப்பொழுது நமது நாட்டில் பேசும் படங்கள் பெருகி வருகின்றன. இவற்றைக் காண்பதில் மக்கள் பெருவிருப்பங்கொண்டு திரள்திரளாகச் செல்-

கிறார்கள். இன்பப் பொழுது போக்காகக் களிப்படைய விரும்புவதே, படக்காட்சி பார்க்கும் பலருடைய நோக்கம். அதனாலேயே, செல்வர்களேயன்றிப் பற்பல அலுவல்கள் தொழில்கள் செய்யும் பல்வேறு நிலைகளில் உள்ளோரும் படக்காட்சியைப் பார்க்க அவாக் கொள்கின்றனர். இங்ஙனம் பொது மக்களின் உள்ளத்தைக் கவர்ந்து செல்வாக்குப் பெற்றுள்ள படக்காட்சியின் நன்மை தீமைகளை ஆராய்ந்தறிவது மிக இன்றியமையாததன்றோ? ஆகையால், '**படக்காட்சி பார்ப்பது நன்று, தீதா?**' என்பது பற்றி, இப்பொழுது நம் நண்பர்கள் இருவர் சொற்போர் புரிவது வாயிலாக விளக்கித் தெரிவிக்கப் போகிறார்கள். உங்களைப் போலவே நானும் அவர்கள் கூறும் அரிய கருத்துக்களைக் கேட்கும் ஆவலுடன் இருப்பதால், நான் தெரிவிக்க விரும்புவதை முடிவுரையில் கூறுகிறேன். முதலில் 'தீது' என்று **தில்லை வாணர்** அவர்களும், பின்னர் 'நன்று' என்று **நாகப்பர்** அவர்களும் முறையே பேசுவார்கள்.

தில்லை வாணன்: அறிவிற்சிறந்த ஆசிரியப் பெரியோர்களே, அவைத் தலைவர் அவர்களே, அன்பிற் சிறந்த நண்பர்களே, பணிவார்ந்த வணக்கம்! தலைவர் குறிப்பிட்டதைப் போல, இக்காலத்தில் பேசும் படங்கள் பெருகி வருகின்றன என்பது உண்மையே. ஆனால், அவற்றால் நன்மை பெருகவில்லை; தீமைகளே பெருகுகின்றன என்பதே எனது தாழ்மையான கருத்து. அத்தீமைகளை வரிசையாக எடுத்துரைக்கின்றேன்.

1. படக்காட்சி சோம்பலுக்கு இருப்பிடம். எங்ஙனமெனில், மக்கள் ஒரு நாளில் பல மணி நேரம் படக்காட்சி நடைபெறுமிடங்களில் உடல் உறுப்புக்களுக்கு வேலை தாராமல் அசைவின்றி உட்கார்ந்திருக்கிறார்கள். இவ்வாறு காலத்தை வீணே கழிப்பதுமன்றி, சுறுசுறுப்பற்று அமர்ந்திருப்பதால், அவர்கள் உடம்பில் சோம்பலும் ஏற்படுகிறது.

2. படக்காட்சி பார்ப்பதால் பல்லாயிரக் கணக்கான ஏழை மக்களின் செல்வமெல்லாம், ஒரு சிலராகிய பட

முதலாளிகளிடம் போய்க் குவிகிறது. இதனால், செல்வர்கள் மேலும் பெருஞ்செல்வர்கள் ஆகிறார்கள்; ஏழைகளோ, இன்னும் ஏழைகளாகிறார்கள்.

3. படக்காட்சி, மாணவர்கள் மனத்தைக் கவர்ந்து, அவர்களது காலத்தைக் கொள்ளை கொண்டு, கல்விப் பயிற்சிக்கு இடையூறு விளைவிக்கிறது. இதனால், எத்தனையோ மாணவர்கள் கல்விப் பயிற்சியில் கருத்தைச் செலுத்தாமலிருந்து, தேர்வில் தேர்ச்சி பெறாமல் வருந்துகிறார்கள்.

4. இக்காலப் படக்காட்சிகளில் தீயவர்கள், திருடர்கள் முதலியோரின் வீரதீரச் செயல்கள் மிகுதியாய்க் காணப்படுகின்றன. அச்செயல்கள் படம் பார்ப்போரின் உள்ளத்தில் ஆழ்ந்து பதிவதால், அவர்களது நற்குணம் மாறும்படியான நிலை ஏற்படுவதால், நாட்டில் தீயவர்களும் திருடர்களும் மலிகிறார்கள்.

5. படக்காட்சியில், குடித்தல், புகை பிடித்தல் முதலிய செயல் புரிவோர் பலர் தோன்றுவதை நாமனைவரும் நன்கு அறிவோம். அவர்களைப் பார்க்கும் இளைஞர்கள், அவர்களைப் போலவே தாமும் செய்ய விரும்பித் தீய பழக்கங்களைக் கைக்கொண்டு தீயவர்களாகிறார்கள்.

6. படத்திற்காணும் ஆண் பெண் உறவுக் காட்சிகள், உடம்பை நன்கு மறைக்காத உடைக்காட்சிகள், கீழ்த்தரமான உரையாடல்கள் முதலியனவெல்லாம் மக்கள் மனத்தைக் கெடுத்துத் தீயவொழுக்கத்தில் செல்லத் திருப்பிவிடுகின்றன. சிறப்பாக, இளைஞர்கள் உள்ளம், இவற்றால் மிகவும் கெட்டு, ஒழுக்கக்கேடு உண்டாகக் காரணமாகிறது.

நண்பர்களே, இன்னும் எத்தனையோ காரணங்களை எடுத்துரைக்கலாம். ஆயினும், நான் கூறிய இக்காரணங்களே படக்காட்சியின் தீமையை விளக்கப் போதும் என்று நினைக்கிறேன். படக்காட்சி பார்ப்பதால் நமது அரிய காலமும், உரிய பொருளும் வீணாகின்றன; தீய எண்ணமும் தீய ஒழுக்கமும் மக்களிடம் குடிகொள்ளுகின்றன. இங்ஙனம் தீமைகளுக்கு இருப்பிடமான படக்காட்சியைப்

பார்ப்பது தீது என்பதை நீங்கள் ஒப்புக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். (கை தட்டல்)

நாகப்பன் : அறிவு சான்ற ஆசிரியப் பெரியோர்களே, அவைத்தலைவர் அவர்களே, அன்பு நிறைந்த நண்பர்களே, பணிவார்ந்த வணக்கம்! நம் நண்பர் படக்காட்சி பார்ப்பது தீது என்பதற்குரிய காரணங்களை மிக்க திறமையுடன் எடுத்துக் காட்டிப் பேசியதைக் கேட்டீர்கள். அவர் கூறியதைக் கேட்ட பொழுது படக்காட்சியில் தீமைகள்தாம் மலிந்துள்ளனவோ என்று நானும் சிறிது மயங்கினேன். இங்ஙனம் என் நண்பர் தீமையைப் பெருக்கிக் காட்டிப் பேசிய திறமையைப் பாராட்டுகிறேன்! ஆனால், நண்பர் கூறிய காரணங்களுள் எதுவும் ஒப்புக்கொள்ளக் கூடியதாயில்லை. அவற்றை முறையே விளக்கிக் காட்டி, இறுதியில் நன்மைகளைத் தெரிவிக்கிறேன்.

1. படக் காட்சியைப் பார்ப்போரில் பலர் தொழிலாளர். அவர்கள் பகற்பொழுது முழுவதும் பாடு பட்டுக் களைத்துச் சோர்ந்துவிடுகின்றனர்; இந்நிலையில் சிறிது நேரம் படக்காட்சி பார்ப்பதால் உள்ளக் களிப்படைந்து, உடற்களைப்பு நீங்கி ஊக்கம் பெறுகின்றனர். இங்ஙனம் நன்மை தரும் இன்பப் பொழுது போக்கு, சோம்பலை வளர்க்கிறது என்று நண்பர் கூறினர். இதை நாம் ஏற்றுக்கொள்ள முடியுமோ?

2. படக்காட்சி பார்ப்பதால் ஏழைகளின் செல்வமெல்லாம் பட முதலாளிகளிடம் போய்க் குவிகிறதென்றார், நம் நண்பர். இஃது ஓரளவு உண்மையாயினும், முழுவதும் சரியன்று. எவ்வாறெனில், படம் பிடிக்கும் தொழிலில் நூற்றுக்கணக்கான தொழிலாளர்களும், நடிகர், கதையாசிரியர், இசையறிஞர், ஆடலாசிரியர், பாடலியற்றுவோர், காட்சியமைப்பாளர் முதலிய பலரும் பங்கெடுத்துக்கொண்டு வேலை செய்து வாழ்கின்றனர். படங்காட்டும் இடங்களிலும் பலர் தொழில் செய்து வாழ்கின்றனர். இங்ஙனம் படக்காட்சியால் சேரும் செல்வம் பலருக்கும் பங்கிடப்படுகின்றதேயன்றி, முழு-

வதும் ஒரு சிலரிடமே குவிகிறதென்பது ஒப்பக்கூடியதன்று.

3. படக்காட்சி, பள்ளி மாணவர்களின் மனத்தைக் கவர்கிறதென்றூர். இது சரியே. அதனுலேயே படக்காட்சி வாயிலாகக் கல்வியறிவை வளர்க்கலாம் என்று அறிஞர் கருதுகின்றனர். இக்கருத்தினுல் கல்விப்படங்கள் மாணவர்களுக்குக் காட்டப்பட்டு வருவது நீங்களெல்லாம் அறிந்ததே. இங்ஙனம் கல்விப் பயிற்சிக்குத் துணை செய்யும் படக்காட்சி, அதற்கு இடையூறு விளைக்கிறது என்ற நண்பர் கூற்றை ஏற்றுக்கொள்வது எப்படி ? அளவுடன் படக்காட்சி பார்த்து வரும் மாணவர் அறிவிற்சிறந்து, தேர்வில் சிறப்பாகத் தேர்ச்சி பெறுவாரேயன்றித் தோல்வியடையாரென்று துணிவாய்க் கூறலாம்.

4. படக்காட்சியில் தீயவர்களும் நல்லவர்களும் கலந்து காணப்படுவது இயல்பேயாகும். மக்கள் சமூகத்தில் இங்ஙனம் தீயவர் சிலர் இருப்பதே இதற்குக் காரணம். படக்காட்சியில் இத்தீயவர்கள் தம் தீச்செயல்களால் தொடக்கத்தில் நன்மை பெற்று இன்புறுவதைப்போலக் காணப்பட்டாலும், முடிவில் பல இன்னல்களையடைந்து கெட்டொழிகின்றனர் என்ற உண்மை தெளிவுறக் காட்டப்படுகிறது. இந்நிகழ்ச்சியைக் காண்போர் தம்மிடமுள்ள தீக்குணங்களைவிட்டுத் திருந்துவதுதான் அறிவுடைமையாகும். தீச்செயல்களால் அழிவடைவது திண்ணமென்று தெரிந்த பிறகும் திருந்தாமல் பெருந்தீயவர்களாய் மாறினுல், அது அவர்களது மனக்குற்றமேயன்றிப் படத்தின் குற்றமாகுமோ ? அன்னப்பறவை தாமரை மலரை விரும்புகிறது ! காக்கை பிணத்தை விரும்புகிறது ! அதற்கு என்ன செய்வது ? நன்மை தீமைகளையறிந்து நல்லவற்றைக் கைக்கொண்டு திருந்தி முன்னேறுவதே, நல்லோரின் இயல்பாகும். படக்காட்சி பார்ப்பதால், தீக்குணமுடையோரும் தீச்செயலால் விளையும் துன்பங்களைக் கண்டு அஞ்சி நல்ல-

வர்களாய் மாறலாம். அதனால், நாட்டில் தீயவர்கள் குறைவார்களேயன்றிப் பெருகுவதெங்ஙனம்?

5. குடித்தல், புகை பிடித்தல் முதலிய பழக்கங்களை நண்பர் குறிப்பிட்டார். இது மக்கள் சமூகத்தில் உள்ள குறைகள் என்பதில் தடையில்லை. இதுவே படக்காட்சியிலும் தீயவர்களின் பழக்கங்களாகக் காட்டப்படுகின்றன. படக்காட்சி பார்ப்பதால் இப்பழக்கங்களைக் கைக்கொண்டு இளைஞர்கள் கெடுவார்களென்றால், பெரியோர்கள் அன்றாடம் செய்வதை நேரில் பார்த்துக் கெடமாட்டார்களா என்று கேட்கிறேன். படக்காட்சியில் தீயவர்களின் பழக்கங்களாக இவை காட்டப்படுவதை நாம் நன்குணர வேண்டும். இவற்றைத் தடுக்க அரசியலார் முயல்வது நல்லதே! இப்பொழுது மதுவிலக்கு ஏற்பட்டுள்ளதால், குடிப்பழக்கம் மக்கள் சமூகத்திலிருந்து பெரும்பாலும் நீங்கிவிட்டதென்றே சொல்லலாம். புகை பிடித்தல் நாகரிகப் பழக்கமாகவுமிருந்து வருகிறது. இதற்குப் படக்காட்சியின்மீது குற்றம் சுமத்துவதில் பயனில்லை.

6. சில படக்காட்சிகளில் இளைஞர்கள், ஏன், பெரியோர்களும் காணத்தகாத இழிவான நிகழ்ச்சிகளும் உரையாடல்களும் இருப்பது உண்மையே. இது பட முதலாளிகள் தம் நலத்தையே குறிக்கோளாகக் கொண்டு பெரும்பொருள் குவிக்க விரும்பும் குறுகிய நோக்கத்தால் ஏற்படுவது. இத்தகைய படங்களைப் பொதுமக்கள் வெறுத்தொதுக்கி, இவை எங்கும் நடைபெறுதவாறு தடை செய்ய வேண்டுமேயன்றி, அதற்காக எல்லாப் படங்களிலும் தீமைகள் உள்ளன என்று கூறுவது பொருந்துமோ? '**ஔவையார்**' போன்ற நல்ல படங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவற்றைப் பார்ப்பதால் நல்லொழுக்கம் வளருமே அன்றி ஒழுக்கக்கேடு உண்டாகுமோ?

நண்பர்களே, இதுகாறும் நான் நண்பர் கூறியவற்றிற்கு மறுமொழி கூறினேன். இனி, படக்காட்சியால் விளையும் நன்மைகள் சிலவற்றை எடுத்துரைக்கிறேன்:

1. படக்காட்சி பார்ப்பதால், நாம் கண்டறியக்-

கூடாத நாடுகள், காடுகள், வரலாற்றுப் பெருமையுள்ள இடங்கள், சின்னங்கள் முதலியவற்றை இருந்தவிடத்திலிருந்தே கண்டு களிக்கிறோம்.

2. பழைய வரலாற்றைப் புனைந்து காட்டும் படங்களைப் பார்ப்பதால், பழங்கால மக்களின் வாழ்க்கை முறைகள், பழக்க வழக்கங்கள், போர் முறைகள், அரசாட்சி முறைகள் முதலியவற்றை அறிந்து இன்புறுகிறோம். இவற்றால் நாம் படித்து வரும் சமூகப் பாட அறிவு தெளிவு பெறும்.

3. படக்காட்சியோடு செய்திப் படங்கள் காட்டப்படுவதால், தொழிற்சாலைகள், விவசாயப் பண்ணைகள், சிற்பம், ஓவியம் முதலிய கலைத்தொழில்கள், வானவூர்தி கப்பல் முதலியன செய்யுமிடங்கள் முதலியவற்றையெல்லாம் கண்டு, அவற்றின் தொழில் நிகழ்ச்சிகளை அறிந்து, அறிவு வளர்ச்சி பெறுகிறோம்.

4. நாட்டு முன்னேற்றத்திற்காக நம் அரும்பெருந்தலைவர்கள் கூடிப் பேசும் கூட்டங்கள், ஜவகர்லால் நேரு போன்ற தலைவர்கள் பெருந்திரளான கூட்டத்தில் பேசும் காட்சிகள், நாம் காணமுடியாத இடங்களில் நடைபெறும் குடியரசு விழாப் போன்ற கொண்டாட்டங்கள், பந்தய விளையாட்டுக்கள் முதலியவற்றையெல்லாம் பார்த்துக் களிப்படைகிறோம்.

5. இன்னும் விஞ்ஞான முன்னேற்றத்தால் விளைந்துள்ள ‘தெலிவிசன்’ போன்ற புதுமைகள், இயந்திரங்களின் நுட்பங்கள், புதுமையான கருவிகள் முதலியவற்றையெல்லாம் நேரில் பார்ப்பது போல அறிந்து வியப்படைகிறோம். இன்னும் எத்தனையோ நன்மைகள் உண்டு. ஆகையால், படக்காட்சி பார்ப்பது நன்று என்பது என் கருத்து. எல்லோரும் இதை ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன். (நீண்ட கை தட்டல் ஒலி.)

தலைவர் முடிவுரை: அன்பர்களே, நம் நண்பர் இருவரும் படக்காட்சி பற்றிய செய்திகளை நுணுகி ஆராய்ந்து மிகுந்த திறமையுடன் பேசியதைக் கேட்டோம்.

இருவரும் மாறுபட்ட கருத்துடையவர்களாய்த் தத்தம் கருத்தை உறுதிப்படுத்தும் முறையில் சிறந்த காரணங்களை எடுத்துக்காட்டி விவாதித்தார்கள். இவ்விருவரும் கூறிய கருத்துக்களில் ஏற்றுக்கொள்ளத் தகுந்தது எதுவென்று கூறும் பொறுப்புடன், நான் உங்கள் முன்னிலையில் நிற்கிறேன்.

நண்பர்களே, இருவர் கூற்றிலும் ஒப்புக்கொள்ள வேண்டிய உண்மைகள் பல இருக்கின்றன என்பதை எவரும் மறுக்க முடியாது. ஆயினும், தீமையே கலவாத நன்மை உலகில் இல்லையாதலால், பெரும்பான்மையாக உள்ளது எதுவென்று ஆராய்ந்தறிந்து, அதைக் கொண்டே நன்மையானது அல்லது தீமையானது என்று முடிவு செய்ய வேண்டும். 'குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள் மிகைநாடி மிக்க கொளல்,' என்ற வள்ளுவர் வாய்மொழி இதனை உறுதி செய்யும். அம்முறையில் பார்த்தால், படக்காட்சியில் சில தீமைகள் உள்ளனவேனும், பெரும்பான்மையும் மக்கள் வாழ்க்கைக்கும் அறிவு வளர்ச்சிக்கும் பயன்படும் நன்மைகள் பல நிறைந்திருக்கின்றன எனலாம். படக்காட்சியிலுள்ள சிற்சில தீமைகளும் படம் பிடிப்போரினுல் நேரும் குறைகளென்றே கூறவேண்டும். இதனைப் படத்தின் குற்றமாகக் கொண்டு படக்காட்சியே தீதென்று சொல்வது பொருந்தாது. நெருப்பைக் கொண்டு உணவு சமைத்து உண்டு பசியாறி இன்புறலாம்; நமது ஆடையைக் கொளுத்திக்கொண்டு துன்பமும் அடையலாம். இந்த இன்ப துன்பங்களுக்குக் காரணம், நெருப்பைக் கையாண்டவரேயன்றி, நெருப்பாகுமோ? அவ்வாறே, படத்திலுள்ள தீமைகளுக்குப் படம் பிடிப்போரின் குறைகளேயன்றிப் படம் காரணமாகாது. நண்பர் நாகப்பர் தெரிவித்தது போல, படத்திலுள்ள தீய நிகழ்ச்சிகளை மனத்திற்கொண்டு தீயவராவது, பார்ப்பவரின் மனக் குற்றமேயன்றி, படத்தின் குற்றமாகாது. ஆயினும், இந்நிகழ்ச்சிகள் பெருகிவாராமலிருக்க முயலுவது, சமூக நலத்தைக் கருதும் பட முதலாளிகளின் கடமையாகும். ஆகவே,

'படக்காட்சி பார்ப்பது நன்று' எனத் தீர்ப்பளிக்கிறேன். யாவரும் இதை ஏற்றுக்கொள்வீர்களென்று நம்புகிறேன். வணக்கம்! (நீண்ட கை தட்டல் ஒலி.)

செயலாளர் நன்றியுரை: நண்பர்களே, சொற்போர்க் கூட்டம் இனிது நிறைவேறியதைக் குறித்துப் பெருமகிழ்ச்சியடைகிறேன்! இக்கூட்டம் நன்கு நடைபெறப் பல வகையில் அறிவுரை கூறி வழிப்படுத்திய ஆசிரியர்களுக்கும், தலைமை தாங்கியும் சொற்போரில் பங்கெடுத்தும் திறம்படப் பேசிய நண்பர்களுக்கும், அமைதியுடனிருந்து கூட்டத்தைச் சிறப்பித்த உங்களுக்கும் கழகத்தின் சார்பில் நன்றி கூறுகிறேன். யாவருக்கும் வணக்கம்! (நீண்ட கைதட்டலுடன் கூட்டம் கலைகிறது.)

அருஞ்சொற்பொருள் :

குழுமி - கூடி, திரள் திரளாக - கூட்டம் கூட்டமாக, அவா - ஆசை, மலிகிறார்கள் - பெருகுகிறார்கள், இன்னல் - துன்பம், அவை - சபை.

பயிற்சி வினாக்கள் :

1. படக்காட்சியின் நன்மை தீமைகளை ஆராய வேண்டுவதன் அவசியம் என்ன?
2. தீமையெனத் தில்லை வாணன் தெரிவித்தன யாவை?
3. தில்லை வாணன் கருத்துக்களை நாகப்பன் எவ்வாறு மறுத்துக் கூறினான்?
4. நன்மை என்று நாகப்பன் கூறிய செய்திகள் யாவை?
5. தலைவரின் தீர்ப்பு யாது?

9. போப்பு ஐயரின் முதுமைக்காலப் பணிகள்

[திரு. ஆ. அருள்தங்கையர் அவர்கள்]

[இவர் போப்பையர் நிறுவிய **சாயர்புரம்** பாடசாலையில் இளமையில் கல்வி பயின்றவர்; அப்பாடசாலையின் ஆசிரியராயும் பணியாற்றியவர்; சமயப் பணியுடன் இலக்கியப் பணியும் ஆற்றி வருகின்றார்.]

போப்பையர் நாற்பத்திரண்டு ஆண்டு தென்னிந்தியாவையே தம் நாடாகக் கொண்டு வாழ்ந்து வந்தார். அவர் தம் முதுமைக் காலத்தில் இந்நாட்டினின்று நீங்கித் தம் முன்னோர் நாடாகிய இங்கிலாந்து போய்ச்சேர்ந்தார். 1885-ஆம் ஆண்டில் ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தார் தம் பல்கலைக் கழகத்தில் ஐயர் பேராசிரியர் பதவி தாங்குதல் வேண்டும் என்று கேட்டுக்கொண்டனர். தமிழும் தெலுங்கும் சொல்லிக்கொடுக்க வேண்டியதாகிய அப்பதவி தாங்கி, தென்னிந்தியாவுக்கு இங்கிலாந்திலேயே தொண்டு செய்யலாமென்று ஐயர் கருதினர். ஆதலால், அவர் அப்பதவியை ஏற்றார். இருபத்து மூன்று ஆண்டுகள் ஆக்சுபோர்டு பல்கலைக் கழகத்தில் தமிழ், தெலுங்கு ஆகிய மொழிகள் பயில்வாருக்கு அவரே பேராசிரியராய் இருந்தார். அவ்வேலையை அவர் ஊக்கமாகவும் செம்மையாகவும் செய்து வந்தார்.

தமிழ் நாட்டில் பணி செய்யும் ஆங்கிலேயர் தமிழ் மொழியை நன்றாய்ப் படித்திருத்தல் வேண்டும் என்றும், தமிழில் பேசவும் எழுதவும் படிப்பது மட்டுமன்றி, தமிழில் நினைக்கவும் உணரவும் பழகுதல் வேண்டும் என்றும் அவர் அடிக்கடி சொல்வாராம். ஆக்சுபோர்டில் போப்பையர் ஆங்கில மக்களுக்குத் தமிழ்ச்சுவையூட்டிக்கொண்டிருந்தார். அவர் பாடஞ்சொல்லிக்கொண்டிருந்த இடத்தில் அவரது உருவப்படம் ஒன்று தொங்குகிறது. அவரது நூல் நிலையத்திலிருந்த நூல்களுள் சில அங்கு வைக்கப்பட்டுள்ளன.

போப்பையர் ஆஃசுபோர்டு பல்கலைக் கழகத்துப் பதவி ஏற்ற காலத்தில், ஆப்பிரிக்காவில் அத்தியட்சராகப் பணி செய்ய வேண்டுமென்று நற்செய்திக் கழகத்தார் அவரைக் கேட்டுக்கொண்டனர். ஐயரோ, அத்தியட்சப் பட்டம் பெற்று ஆப்பிரிக்காவில் பணி செய்ய விரும்பவில்லை; ஆதலால், அவர் அவ்வேண்டுகோளுக்கு இணங்க இல்லை. தென்னிந்திய மக்கள்பொருட்டே தம் வாழ்க்கையின் இறுதி வரை உழைக்க வேண்டுமென்பது அவர் விருப்பம் போலும்! ஆஃசுபோர்டு பல்கலைக் கழகத்தில் தென்னிந்திய மொழிகளைச் சொல்லிக் கொடுப்பதே தம் மனத்திற்கினிய பணியென அவர் நினைத்தார். தமிழ் மொழியைச் சொல்லிக்கொடுப்பதைப் பெரும்பணியெனக் கருதிய பெரியார் நம் போப்பையர். ஐயரின் பன்மொழிப் புலமையையும் பரந்த அறிவையும் ஆராய்ச்சித் திறமையையும் பல்கலைக் கழகத்தார் அறிந்து, 1886-ஆம் ஆண்டு அவருக்கு எம். ஏ. பட்டமளித்தனர். இளைஞரோடு சென்று அவர் அப்பட்டம் பெற்ற காட்சி அதனைப் பார்த்தோர் உள்ளத்தைக் கவர்ந்தது. போப்பையர், ரெவரெண்டு டாக்டர் ஜீ. யூ. போப்பு, எம். ஏ., டி. டி. ஆயினர்.

போப்பையர் தமது இளமை முதல் ஒவ்வொரு நொடிப் பொழுதையும் பயன்படுத்தப் பழகியிருந்தார். பல்கலைக்கழகத்துப் பேராசிரியராயிருந்த காலத்தில் அவர் ஓயாமல் படித்தார்; இடை விடாமல் உழைத்தார். மொழிகளையும் இலக்கியங்களையும் மட்டுமன்றி, மற்றக் கலைகளையும் பயின்றார். அவர் கலைக்கடலாய் விளங்கினர். முதல் நான்கு நூற்றாண்டுகளில் வாழ்ந்த மறை நூற்புலவர் எழுதியுள்ள நூல்களையெல்லாம் அவர் பன்முறை படித்தார். முற்காலத்துப் புலவர் எழுதிய நூல்களைப் போற்றிப் படித்ததுமன்றி, இக்கால ஆராய்ச்சி நூல்களையும் அவர் பயின்றார். எக்கலை பயின்றாலும் எம்மொழி பயின்றாலும் செந்தமிழ் நூல்களிலேயே அவர் உள்ளந் தோய்ந்து கிடந்தது. தமிழ் நூல்களைப் பயில்வதையே அவர் தமக்கு விளையாட்டாகக் கொண்டார். எழுபத்தைந்து ஆண்டுக்

கிழவர் பல கலைகளையும் மொழிகளையும் தமிழ் இலக்கியங்களையும் படித்துக்கொண்டு இளமாணவரே போன்று விளங்கினூர்.

ஐயர் இந்தியாவுக்கு வந்து தமிழ் மொழி பயிலத்தொடங்கிய காலமுதல் தமிழ் மொழிக்கு அகராதி ஒன்று தொகுத்தல் வேண்டும் என்று நினைத்தார்; உதகமண்டலத்தில் இருந்த காலத்திலேயே அத்தகைய அகராதிக்கு வேண்டிய குறிப்புக்களைத் திரட்டுவாராயினர்; இங்கிலாந்துக்குப் போன பின்னரும் அவ்வேலையைத் தொடர்ந்து செய்து வந்தார். ஆயினும், அவர் தாம் நினைத்தவாறு அவ்வேலையைச் செய்து அகராதியை வெளியிட முடியாமற்போயிற்று. அகராதி தொகுக்கவும் வெளியிடவும் ஏற்படும் செலவிற்காகச் சென்னை அரசியலார் இரண்டு மூன்று ஆண்டுகள் சிறிது பொருள் கொடுத்து உதவினர். பின்னர், எக்காரணம் பற்றியோ, திடீரென அக்கொடையை நிறுத்திவிட்டனர். ஆதலால், ஐயர் அம்முயற்சியில் தொடர்ந்து ஈடுபடவும் அகராதியைப் பதிப்பிக்கவும் முடியாமற்போயிற்று. போப்பையர் அதனை நினைத்துப் பெரிதும் வருந்தினர். அவர் தொடங்கிய வேலை பல ஆண்டுகளுக்குப் பின் சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் செய்யப்பெற்றது. பல்கலைக் கழகத்தார் செய்த அகராதி பல தொகுதிகளாய் வெளியிடப்பட்டுள்ளது.

அகராதி வேலையை முடித்து அதனைப் பதிப்பிக்க முடியாது போயிற்றெனினும், அவர் தமிழ் மொழிக்குப் பல வகையிலும் தொண்டு செய்வாராயினர். அவர் தம் முதுமைக் காலத்தில் வெளியிட்ட நூல்களும் எழுதிய கட்டுரைகளும் தமிழ் மொழியின் உயர்வையும் தமிழ் இலக்கியங்களின் மாண்பையும் உலகறியச் செய்துவிட்டன. அவர் நூல்களும் கட்டுரைகளும் தமிழ் மொழிக்கே புத்துயிர் ஊட்டிவிட்டன. அவர் உரைகளைப் படித்த தமிழர் தம் மொழியின் பண்பை நோக்கி ஊக்கம் பெற்றுத் தமிழைப் போற்றிப் படிப்பாராயினர். அவர் இந்நாட்டை விட்டுப் போன பின் இந்நாட்டுக்காகச்

செய்த பணியை நாம் ஒரு போதும் மறக்க முடியாது. மாணிக்க வாசகரைப்பற்றியும் தமிழ் நீதி நூல்களைப்பற்றியும் தமிழ் மொழியின் சிறப்புப்பற்றியும் அவர் பல திங்கள் வெளியீடுகளில் அரிய கட்டுரைகளை எழுதினுர். கட்டுரைகளைப் படித்தோர் பல உண்மைகளை அறிவாராயினர். அவரது ஆராய்ச்சி முறையைத் தழுவி மற்றவர்களும் ஆராய்ச்சி செய்யத் தொடங்கினர்.

போப்பையர் தமிழ் இலக்கியங்களைப் பயிலத் தொடங்கியவுடன் அவற்றில் காணக்கிடக்கும் கருத்துக்கள் அவரது உள்ளத்தைக் கவர்ந்தன. தமிழ் நூல்கள் இணையற்றவை என்னும் உண்மையை அவர் கண்டார். செந்தமிழிலக்கியங்களிலுள்ள கலைச் செல்வம் உலகத்தார் யாவருக்கும் உரியது என்பதை அவர் உணர்ந்தார். ஆதலால், தென்னிந்தியாவில் இருந்த காலத்திலேயே சில நூல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கத் தொடங்கிவிட்டார். அவர் முதன்முதல் மொழிபெயர்க்கத் தொடங்கிய நூல் திருக்குறளேயாகும். அதனை அவர் சிறிது சிறிதாகப் பல்லாண்டுகள் மொழி பெயர்த்து வந்தார். உலகத்திலுள்ள இலக்கியங்களுள் திருக்குறளுக்கு இணையானதெனச் சொல்லக் கூடியது ஒன்றுமில்லை என்பது போப்பையர் கருத்து. அவர் அத்தகைய நூலை ஆங்கிலம் பேசும் மக்கள் அறிதல் வேண்டுமென்று நெடுங்காலம் முயன்றும் வந்தார். அவர் அதனைச் செம்மையாக மொழி பெயர்த்தற்பொருட்டுத் தமிழ் மொழியைச் செம்மையாகக் கற்ருர். பல நூல்களின் துணையினுல் குறட்பாக்களின் உண்மைப் பொருளை உய்த்துணர்ந்தார். அக்குறட்பாக்களை உளங்கவரும் முறையில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். 1886-ஆம் ஆண்டு மொழி பெயர்ப்பு முற்றுப்பெற்றது. அவர் அதனைப் பல அரிய குறிப்புக்களுடன் நன்முறையில் வெளியிட்டார். அவர் தமது திருக்குறள் மொழி பெயர்ப்புக்கு எழுதியுள்ள முகவுரை மிகவும் சிறப்பு வாய்ந்தது. அதிலுள்ள சில வாக்கியங்கள் அடியில் தமிழில் பெயர்த்தமைக்கப்பட்டுள்ளன.

“யான் தமிழ் மொழி பயிலத் தொடங்கிய காலத்தி-

லேயே நினைத்த இவ்வேலை, பல்லாண்டுகட்குப் பின் முற்றுப் பெற்றமைகண்டு இறைவனுக்கு நன்றி செலுத்துகிறேன். இது என் நெடுங்கால உழைப்பின் பயனாக வெளியிடப்படுகிறது. வியக்கத் தகுந்த தமிழை ஐரோப்பியரும் தமிழரும் பயிலத் துணை செய்யும்பொருட்டுப் பல நூல்கள் செய்துள்ளேன். இஃது இறுதி நூல்.''

ஐயர் அதன் பின் இருபத்திரண்டு ஆண்டுகள் வாழ்ந்து பல அரிய நூல்கள் செய்து வெளியிட்டார்.

''வெவ்வேறு குலத்தினர் தமிழ் நாட்டில் ஆட்சி செய்திருக்கின்றனர். மகமதியர் படையெடுத்திருக்கின்றனர். இவற்றால் பன்னிரண்டு நூற்றாண்டுகளாகத் தென்னாட்டில் பல மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. பழமை மாறி வருகிறது; பழைய வழக்கங்கள் ஒழிந்து வருகின்றன. பாண்டியன் அரியணையில் மற்றையோர் வீற்றிருக்கின்றனர். ஆயினும், தமிழர் இன்னும் பழைய நல்லொழுக்கத்தைக் காத்து வருகின்றனர். பிற்காலத்தில் அவர்களுக்கு நற்காலம் தோன்றும் என்பது உறுதி. ஆங்கில நண்பர்கள் மேனாட்டினின்றும் கற்கக்கூடியவற்றையெல்லாம் கற்பித்தாலும் திருக்குறள் காட்டும் ஒழுக்க நெறியைச் செம்மையாய் அறிந்தவர்களிடம் அவர்கள் மறந்துவிட வேண்டுமென்று சொல்லக்கூடியது யாதொன்றுமில்லை. '**தாழ்மை, அன்பு, மன்னிப்பு**' என்பவை கிறித்தவ குண நலன்களாதலின் **அரிஸ்டாட்டில்** இவற்றை விரித்துரைக்கவில்லை என்று **சர். ஏ. கிரான்று** என்பார் சொல்லுகிறார். இம்மூன்றும் திருக்குறள் ஆசிரியரால் வலியுறுத்தி உரைக்கப்படுகின்றன. திருக்குறளிலுள்ள மிகச் சிறந்த பாக்கள் இவற்றையே எடுத்துரைக்கின்றன. உயர்ந்த நீதியைக் கடைப்பிடித்தொழுகும் சிறந்த மக்கள் வாழும் நாட்டிலேதான் திருக்குறள் போன்ற ஒழுக்க நூல் எழுதப்பட முடியும். தமிழ் பேசும் மக்கள் ஒழுக்கமுள்ளவர்கள் என்பதே என் கூற்று. தமிழ் மக்களுக்கு நன்மை செய்ய விரும்புவோர் யாவரும் இவ்வுண்மையை ஒப்புக்கொள்ளுதல் வேண்டும்.

''குறள் வடசொல் கலப்பில்லாத தூய தமிழில் யாக்-

கப் பெற்றுள்ளது. தமிழ் வடமொழியின் கிளைமொழியன்று. அது சொற்செல்வம் படைத்த தனிமொழி. தமிழ் இலக்கண நெறி தத்துவ உண்மைகள் அடங்கியது; தெளிவானது. தமிழ் மொழி பண்பட்ட மொழி. அது எவ்வகையிலும் வடமொழிக்கு இணையானது. தமிழ் தென்னிந்திய மொழிகளுக்குத் தாய். பண்டைக் காலத்துத் தூய தமிழுக்குத் திருவள்ளுவர் நூல் சிறந்த எடுத்துக்காட்டாகும். இதனை அழுக்கில்லாத தூய நீரூற்று என்று சொல்லலாம். குறளில் சில வடசொற்கள் வழங்கப்பட்டுள்ளன. அவை தமிழ் உருவம் பெற்று வந்துள்ளன. அவை வடசொற்கள்போலத் தோன்றவுமில்லை. இக்காலத்தில் வேதம், கோபம், சாட்சி முதலிய வடசொற்கள் தமிழில் வழங்கப்படுகின்றன. இச்சொற்கள் திருக்குறளில் இல்லை. மறை, வெகுளி, கரி என்னும் சொற்களே குறளில் வந்துள்ளன.''

இவை போன்ற பல அரிய குறிப்புக்களை ஐயர் தமது முகவுரையில் எடுத்துரைக்கிறார். ஐயர் எழுதியுள்ள ஒவ்வொரு சொல்லிலும் அவரது ஆராய்ச்சித் திறனும், நேர்மையும் புலனாகின்றன. பல உரைகள் போப்பையரின் தமிழ் உள்ளத்தைப் புலப்படுத்துகின்றன. சில மொழிகள் தமிழ் மக்கள்பால் அவருக்கிருந்த பற்றையும் வெளிப்படுத்துகின்றன.

திருக்குறளின் ஆங்கில மொழி பெயர்ப்பே தமிழுக்குத் தாம் செய்யும் இறுதித் தொண்டாக இருக்குமென்று ஐயர் நினைத்தார். ஆயினும், அவர் இறைவன் திருவருளால் அதற்குப்பின் பல்லாண்டு வாழ்ந்து தமிழ்த்தொண்டு செய்யும் பேறு பெற்றார். தமிழிலுள்ள நீதி நூல்களின் கருத்தை உலகோர் அறிதல் வேண்டுமென்று அவர் மிகவும் விரும்பினாராதலின், நாலடியார் என்னும் பழைய நூலையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கலானார். அம்மொழிபெயர்ப்பு 1893-ஆம் ஆண்டு முற்றுப்பெற்றது. அதனை அவ்வாண்டில் தாமே வெளியிட்டார். அதற்கும் ஆராய்ச்சியோடு கூடிய முகவுரையொன்று எழுதியிருக்கிறார். நாலடியாரிலுள்ள அத்தியாயங்களின் பொருளை

விரித்துரைத்திருக்கிருர். அவர் தமது நூலின் முக்கியப் பகுதியில் நாலடியாரிலுள்ள வெண்பா ஒவ்வொன்றையும் முதலில் அச்சிட்டு, அதன் பின் அதன் ஆங்கில மொழி-பெயர்ப்பையும், இறுதியில் விரிவுரையையும் செய்து, செம்மையான முறையில் அந்நூலை வெளியிட்டுள்ளார். அதன் பின் பாட்டு முதற்குறிப்பகராதியும், சொற்-பொருள் அகராதியும், நூலின் இறுதியில் பொது அகராதி-யொன்றும் அவர் தொகுத்துத் தந்துள்ளார். நாலடியார் மொழி பெயர்ப்பில் அவர் தமிழ் மக்களின் ஒழுக்க நூல்-களை மிகவும் புகழ்ந்துரைக்கிருர்; நாலடியாரில் உரைக்-கப்பட்டுள்ள ஒழுக்கத்தின் சிறப்பையும் அவர் எடுத்துக் கூறுகிருர். நாலடியாரில் வரும் சொற்களையும் சொற்-ருெடர்களையும் வியந்து எழுதுகின்ருர். பின் வருவன அவர் எழுதியுள்ள முகவுரையிலுள்ளவை.

"தமிழ் நாட்டில் எழுந்த பேரிலக்கியங்களை இவ்வாறு வெளியிடுவதால் நலன் விளையும் என்று நான் உறுதியாய் நம்புகிறேன். தமிழ் நாட்டு இளைஞர் மிக்க ஊக்கத்துடனும் திறமையுடனும் ஆங்கிலக் கல்வி பெறுகின்றனர். அவர்கள் வியக்கத் தகுந்த தங்களது இணையற்ற தாய்மொழியைப் புறக்கணிப்பதை நோக்கி வருந்துகின்றேன்! அவர்களுள் சிலராவது இத்தகைய பதிப்புக்களை விரும்பிப் படித்து நன்மை அடைவர் என்று நம்புகின்றேன்.

"நாலடியாரைப் படிக்கும்போது பல அரிய உண்மை-கள் வெளிப்படுகின்றன. தமிழ் மக்கள் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டுமென்னும் ஊக்கமுள்ளவர்கள்; நன்னெறி பற்றி ஒழுகவேண்டுமென்னும் விருப்ப-முள்ளவர்கள்; தன்னலமற்ற உண்மையான அன்புள்ள-வர்கள்; உயர்ந்த நோக்கமுள்ளவர்கள்; ஒழுக்க நெறி காட்டும் நூல்களை யாத்தலையே தமிழர்கள் இன்பப் பொழுது போக்காகக் கொண்டுள்ளார்கள். இத்தகைய மக்களுக்கு நற்காலம் தோன்றுமென்று நான் நம்பு-கிறேன். இந்திய மக்களுள் முக்கியமானவர்கள் தமிழர்-களே. திருக்குறளும் நாலடியாரும் அவர்கட்கு இம்-முதன்மைப் பேற்றை நல்கிவிட்டன."

நாலடியார் மொழி பெயர்ப்பை வெளியிட்டபின் அவர் ஒன்றும் செய்யாமலிருக்கவில்லை. அவர் தம் வாழ்நாள் முழுவதையும் தமிழ் நாட்டுக்கும், தமிழ் மொழிக்கும் அளித்துவிட்டார். ஆதலால், திருவாசகம் என்னும் சிறந்த நூலை மொழி பெயர்க்கத் தொடங்கினர். விடா-முயற்சியாய் அவர் அவ்வேலையைச் செய்தார். முதுமைக் காலத்தில் அவர் அப்பணியை மேற்கொண்டது நமக்கு வியப்பூட்டுகின்றது. அதனை மிகச் செம்மையாகச் செய்து முடித்துத் தமது எண்பதாவது பிறந்த நாளில் வெளி-யிட்டார். அது 1900-ஆம் ஆண்டு, ஏப்பிரல் மாதம், 24-ஆம் தேதி வெளியிடப்பட்டது.

அருஞ்சொற்பொருள் :

மாண்பு - பெருமை, திங்கள் வெளியீடு - மாதச் சஞ்சிகை, அரியணை - சிம்மாசனம், இணையானது - ஒப்பானது, பற்று - ஆசை, இறுதி - கடைசி, நல்கி - கொடுத்து.

பயிற்சி வினக்கள் :

1. ஆஃசுபோர்டு பல்கலைக் கழகத்தில் போப்பையர் பேராசிரியர் பதவி ஏற்கச் சம்மதித்தது எதைக் கருதி?

2. தமிழ் நாட்டில் தொண்டு செய்ய விரும்பும் அயல் நாட்டவருக்-குப் போப்பையர் உணர்த்துவது யாது?

3. போப்பையர் தமிழிலக்கியங்களைப் பயிலத் தொடங்கிய காலத்-தில் கண்டறிந்த உண்மைகள் யாவை?

4. (அ) போப்பு ஐயர் தம் திருக்குறள் முகவுரையில் குறிப்பிட்-டுள்ளதென்ன?

(ஆ) நாலடியார் முகவுரையில் அவர் குறிப்பிட்டுள்ளது என்ன?

5. திருக்குறளை 'அழுக்கு இல்லாத தூய நீரூற்று,' என்று போப்பையர் கூறக் காரணம் யாது?

6. திருவள்ளுவரால் வலியுறுத்திக் கூறப்படும் குண நலங்கள் யாவை?

7. போப்பையரின் ஆராய்ச்சித் திறனும் நேர்மையும் பற்றிக் குறிப்பிடுக.

8. போப்பையர் தமது முதுமைக்காலத்தில் தமிழ் மொழிக்கு ஆற்றிய தொண்டுகளைத் தொகுத்துக் கூறுக.

9. தமிழருடைய குண நலங்களாகப் 'போப்பையர் கூறுவன யாவை?

10. நாடகக் கலை

[திரு. தி. சு. இளவழகனார் அவர்கள்]

[இவர் மறைமலை அடிகளாரின் தலைமைசால் மாணக்கருள் ஒருவர்; **தொல்காப்பியம்** என்னும் இலக்கண நூலைக் குறிப்புரைகளுடன் பதிப்பித்து உதவியவர். **சங்க இலக்கிய இன்கவித் திரட்டு**' என்னும் தலைப்பில் சங்க இலக்கியச் செய்யுட்களில் சிறந்தவற்றைத் தொகுத்து நூல் வடிவில் தந்துள்ளார்.]

'நாடகம்' என்னும் சொல்லுக்கு '**விளையாட்டு**' என்பது பொருள். அதாவது, **ஒழுங்கான விளையாட்டு**. இதனை '**ஆட்டம்**' என்றும் உலகம் வழங்குகின்றது. தமிழ்ச்சுவை செறிந்த **திருவாசகம்** என்னும் அருள் நூலில்,

"நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து"

என்று **மணிவாசகப் பெருமான்** ஒரு தொடர் அருளிச் செய்திருக்கிறார். இதில் 'நாடகம்' என்னும் சொல் 'விளையாட்டு' என்னும் பொருளில் வந்திருக்கின்றது. 'நடித்தல்' என்பதே அதன் செயல் என்பதும் இத்தொடரிலிருந்தே தெரிகின்றது.

நடிப்பில் இரண்டு வகைகள் உண்டு. ஒன்று கருத்துக்களை நடித்தல்; இன்னொன்று கதைகளை நடித்தல். கருத்துக்களை நடித்துக் காட்டுவதற்கு, '**நாட்டியம்**' என்றும், கதைகளை நடித்துக் காட்டுவதற்கு '**நாடகம்**' என்றும் பெயர் சொல்வதுண்டு. சங்க காலத்தில் இவ்விரண்டுமே '**கூத்து**' என்னும் பெயராலும் வழங்கி வந்தன.

நாடகத்தில் நடிப்புச் சுவையோடு கதைச் சுவையும் அடங்கி இருப்பதனால், எல்லார்க்கும் அது மிக்க இன்பத்தைத் தரும். ஆயினும், அந்நாடகத்திலும் நடிப்புதான் உயிர். நடிப்பை நாடகத்திலிருந்து பிரித்துவிட்டால், அப்போது அதற்கு 'நாடகம்' என்னும் பெயரே பொருந்தாமற்போய்விடும். ஆதலால், நாடகத்தைப் பற்றிப் பேசுகின்ற பழைய தமிழ் நூல்கள் முதன்மையாக நடிப்பைப் பற்றியே மிகுதியாகப் பேசியிருக்கின்றன.

மேலும், பண்டைக் காலந்தொட்டே பழந்தமிழ் நூலுரைகளில் வழங்கி வருகின்ற '**நடம், நட்டம், நடனம், நடிப்பு, ஆடல், ஆட்டம், ஆட்டு, கூத்து, தாண்டவம், சொக்கம், கரணம்,** குறிப்பு, விறல், **அவிநயம்**' முதலிய பல சொற்கள் கதை தழுவி வாராத கூத்தின் பகுதிகளையே பெரிதும் உணர்த்துவனவாயிருக்கின்றன. 'நாடகம்' என்னும் சொல்கூட ஒரோவொருகால் முதன்மை பற்றி நாட்டியத்தை உணர்த்தி நிற்றலும் உண்டு.

"நாடக மடந்தையர் ஆடு அரங்கு"

என்னுஞ் சிலப்பதிகாரத் தொடரில் 'நாடக மடந்தையர்' என்பவர் நாட்டிய மடந்தையரேயாவர். 'அரங்கு, ஆடுதல்' என்று வருவனவெல்லாமும் நாட்டியக் கருத்தின்மேல் வருவனவேயாகும். மூன்று தமிழ்களுள் ஒன்றுகக் கூறப்படும் 'நாடகத் தமிழ்' என்பதும் நாட்டியத் தமிழே. சிலப்பதிகாரத்தின் அரங்கேற்று காதையில் மாதவி அரங்கேறி ஆடினளென்று கூறப்பட்டது நாட்டியக் கலை பற்றியதே என்பது, அக்காதையின் இறுதியில் ஆசிரியர் இளங்கோவடிகளே,

"நாட்டிய நன்னூல் நன்குகடைப் பிடித்துக்
காட்டின ளாதலின்"

என்று எடுத்துக் காட்டுதலால் விளங்குகின்றது. மேலும், அவ்வரங்கேற்று காதை முழுவதிலும், அதன் உரை முழுவதிலும் கருத்துப் பற்றி நடிக்கும் நடிப்பின் விளக்கங்களே பெரிதும் விளக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால், நாடகம் என்பதில் முதன்மையானது **நடிப்பு** நிகழ்ச்சியேயாம் என்பது இவற்றுலெல்லாம் நன்கு விளங்குகின்றது.

உலகத்தில் இந்நடிப்புக் கல்வியே முதலில் தோன்றியது என்று சொல்லலாம். எந்தக் காரியத்தையும் ஒருவரைப் பார்த்து ஒருவர் செய்யும் போது அங்கே நடிப்புத் தோன்றுகின்றது. மனத்தில் தோன்றுகின்ற கருத்துக்களை மொழியினுல் தெரிவிக்க முடியாமலிருந்த காலம் மிகவும் பழைமையானது. அந்தக் காலத்தில் மனிதர்-

களுக்குப் பேசத் தெரியாமலிருந்தது. முகக் குறிப்புக்கள் கை அசைவுகள் முதலிய சைகைகளினுலேயே ஒருவர்க்கொருவர் தம் கருத்துக்களை அப்போது தெரிவித்துக்கொண்டனர். அவையெல்லாம் நடிப்பு என்பதில் அடங்கும்.

பின்பு, மொழி பேசத் தெரிந்துகொண்ட காலத்திலும் அக்கை அசைவுகள் முகக் குறிப்புக்கள் முதலிய நடிப்புக்கள் நிகழாமலில்லை; நிகழ்ந்துகொண்டுதானிருக்கின்றன. ஒரு பயனுமில்லாமல் நடிப்புக்கள் இப்படி எப்போதும் நிகழுமா? நினைத்துப் பார்த்தால் நடிப்பினுலேதான் நிறையப் பயனிருக்கின்றதென்பது தெரிகின்றது.

நம் அன்பார்ந்த நண்பரொருவர் தமது கருத்தைத் தெரிவித்து நமக்கு ஒரு கடிதம் எழுதினுரென்று வைத்துக் கொள்வோம். கடிதம் வாயிலாக நாம் அவர் கருத்தைத் தெரிந்துகொண்டோம். ஆனுல், நமக்கு அப்போது உண்டான இன்பத்தைவிட, அந்நண்பரே நேரில் வந்து அக்கருத்தை அதற்கேற்ற முகக்குறிப்புக்கள் முதலியவற்றுடன் தெரிவிக்கும் போது எவ்வளவு மிகுதியான இன்பம் உண்டாகின்றது! காரணம் என்ன? அவர் உள்ளக் கருத்துக்கேற்றபடி அவர் கண்களிலும் இதழ்களிலும் புருவங்களிலும் நெற்றியிலுமெல்லாம் தோன்றுகின்ற பல வகையான முகக் குறிப்புக்களும் பிற கையசைவுகள் முதலியவைகளுமேயல்லவா?

இனி இன்னெரு நிகழ்ச்சியையும் நாம் நினைவு கூரலாம். நல்ல கதை நூல் ஒன்றை எடுத்து அதிலுள்ள கதையைப் படிப்பதாக வைத்துக் கொள்வோம். அப்போது நமக்குக் கதை இன்னதென்று தெரிந்துவிடும். கதையின் சுவையை அறிந்தும் நமது மனம் இன்புறக் கூடும். ஆயினும், அக்கதையைப் போலவே நல்ல முறையில் ஒரு நாடகம் நடப்பதை நாம் பார்க்க நேர்ந்தால், நமக்கு இன்னும் எவ்வளவு மிகுதியான மகிழ்ச்சி உண்டாகும்? நேரிற்காணும் நடிப்பன்ருே நமக்கு அத்தனை மிகுதியான மகிழ்ச்சியைத் தருவதாயிற்று?

சிலப்பதிகாரம் தமிழ் மொழியில் இப்பொழுது முத்-

தமிழ்க் காவியமாய் விளங்குகின்றது. அதன் ஆசிரியரான இளங்கோவடிகள், ஓரிடத்தில் சிவபிரான் நடிப்பைப் பற்றிக் கூறுகின்ருர். அவர்,

> " திருநிலைச் சேவடிச் சிலம்புவாய் புலம்பவும்
> பரிதரு செங்கையிற் படுபறை ஆர்ப்பவும்
> செங்கண் ஆயிரம் திருக்குறிப் பருளவும்
> செஞ்சடை சென்று திசைமுகம் அலம்பவும்......"

அப்பெருமான் நடனமாடினுர் என்று இந்நடிப்புத் திறத்தைப் பற்றி மிக ஆற்றலாகவும் அழகாகவும் விளக்கிச் செல்கின்ருர். 'கருத்துக்கேற்றபடி ஒழுங்காக அடிபெயர்ப்பதனுல் திருவடிச் சிலம்பு கலகல என்று ஒலிக்கிறது. கையில் உள்ள **தமருகம்** என்னும் உடுக்கை தக்க ஒலி ஒழுங்குகளை உண்டாக்குகின்றது. அவர் கண்கள் நொடிக்கு நொடி ஆயிரம் ஆயிரம் திருக்குறிப்புக்களை அள்ளி அள்ளி வீசுகின்றன. செஞ்சடை அவிழ்ந்து திசை முழுமையுந் தடவி வருகின்றது.' ஆ! பெருமான் திருநடனம் என்ன தாராளமாக, பரவலாக, கண்ணியமாக, காரிய ஒழுங்காக நடைபெறுகின்றது! அதன் மாட்சியைக் காணுங் கண்களல்லவோ கண்கள்! உள்ளக் கருத்துக்கேற்ற முகக் குறிப்புக்களும் பிறவுமான நடிப்புக்கள் இதன்கண் எவ்வளவு நன்ருகக் காட்டப்படுகின்றன! இந்நடிப்புக்களைக் காணும்போது உள்ளக் கிளர்ச்சியும் இன்பமும் ஒருங்கு எழாமலிருக்குமோ!

சிவபெருமானது இந்நடனத்தைக் **கூத்தச் சாக்கையன்** என்னும் ஒரு கூத்தன் அப்பெருமானைப் போலவே கோலம் புனைந்துகொண்டு இயல்பு வழுவாமல் நடித்துக்காட்டச் சேரன் செங்குட்டுவன் என்னும் மன்னர் மன்னன் தன் தேவியுடன் அந்நடிப்பின் திறத்தைக் கண்டு மிகவும் மகிழ்ந்தனன் என்று சிலப்பதிகாரத்தில் இச்செய்தி தொடர்ந்து செல்கின்றது. இதனுல், நடிப்புத் திறத்தில் தக்க இன்பப் பயன் இருக்கிறதென்பது நன்ருகத் தெரிகின்றதன்ரே!

இந்த எடுத்துக்காட்டுக்களை எல்லாம் வைத்து நோக்கும்போது மொழி கொண்டு பேசத் தெரிந்துகொண்ட

காலத்திலும் நடிப்பு இருக்க வேண்டியதன் கட்டாயம் நன்கு வெளியாகின்றது. மிகப் பழைய காலத்திலிருந்தே இங்ஙனம் நடிப்புத் தொடர்ந்து வர நேரிட்டது. அறிவும் பழக்கமும் ஆராய்ச்சியும் முதிர முதிர, இந்நடிப்புக்கலை சிறந்த முறையில் வளர்ந்து மேலோங்கலாயிற்று. வாழ்க்கையில் இயல்பாகவே பிணிப்புற்று நின்று இவ்வளவு இன்பந்தருகின்ற கலையை இழந்துவிட யாருக்குத்தான் மனம் வரும்? தமிழின் ஒரு பிரிவாகவே வைத்து அறிஞர் இதனை ஆராயலாயினர். அதனால், சிறந்த இலக்கிய இலக்கணங்களெல்லாம் ஏராளமாய்த் தோன்றின.

ஆனால், எல்லாக் கலைகட்கும் தமிழில் நூல்கள் மறைந்துபோனது போல, இந்நாடகக் கலை நூல்களும் நெடுங்காலத்துக்கு முன்னமே இறந்து போயின. உரையாசிரியர் அடியார்க்கு நல்லாரும் தங்காலத்துக்கு முன்னரே இந்நூல்கள் இறந்து போனமையை நினைந்து உள்ளம் உருகியிருக்கின்றார். நாடகத் தமிழைப் பற்றிய குறிப்புக்கள் சிலப்பதிகாரத்திலும் அதனுரையிலும் இப்போது சிலவே நமக்குக் கிடைக்கின்றன. அவற்றைக் கொண்டு பார்த்தாலும் சங்க காலத்தில் இந்நாடகக் கலை எவ்வளவோ விரிவாக ஆராயப்பட்டு வந்ததென்பது நன்றாகப் புலனாகின்றது.

தமிழ் மக்கள் இயற்கையாகக் கூர்ந்து அறியும் இயல்புள்ளவர்கள். அதனால், அவர்கள் கலையுணர்வில் மிக்கவரானார்கள். தமிழ் மக்களின் இத்தனித்திறத்தினாலேயே நாடகக் கலை வரவர இவ்வளவு விரிவுக்கு உயர்ந்தோங்கலாயிற்று. நாடகக் கலையைத் தமிழ் மக்கள் மற்றவர்களிடமிருந்து கற்றுக்கொண்டவரல்லர். இவர்கள், தம் அறிவு உணர்வின் பழக்கங்களினாலேயே இதனைக் கண்டுணர்ந்து பெருக்கி, இன்பமார்ந்தனர். இறைவரே இவர்களுக்குக் கூத்தப் பெருமானாய் விளங்குகின்றார். பேசத் தெரியாத முதற்காலத்திலேயே இந்நடிப்புக் கல்வி தொடங்கினமையால் இதுவே முதலில் தோன்றிய கல்வியாயிருக்கின்றது.

நாடகக் கல்வி மிகவும் நுட்பமானது. அது கருத்துக்களை நடிப்புக்களால் இயக்கிப் புலப்படுத்துவது. அச்செயல் எவ்வளவு அருமையானது! அதற்கு எவ்வளவோ நுண்ணறிவும் மிக்க பழக்கமும் வேண்டும்; மனத் தூய்மையும் வேண்டும். சிலப்பதிகாரம் என்னும் அரிய நூலினுல், மாதவி என்னும் நாடக மாது, அறுபத்து நான்கு கலைகளிலும் வல்லவள் என்பதும், அவள் ஐந்தாண்டிலிருந்தே பழகி வந்திருக்கிருள் என்பதும், தூய மனமுடையவள் என்பதுந் தெரிகின்றன. அவ்வளவு அறிவும் பிறவும் அக்கலைக்குக் கட்டாயமாகும். ஆதலால், நடிப்புக் கலை மிகவும் பெருமையாகப் பாராட்டுதற்குரியது. நடிப்புக்கு அமையும் நாடக அரங்கும் மிகவும் தூய்மையான இடத்தில் அமைய வேண்டுமென்பது இலக்கணம். இங்ஙனமெல்லாம் பெருமைப்படுவதாயின் அத்தகைய நாட்டியத்திறங்களைக் காண்பது ஒரு நற்பேறேயாம்.

"பண்கனியப் பருகிப் பயன்நாடகம்,
கண்கனியக் கவர்ந்துண்டு"

என்னுஞ் சிந்தாமணிச் செய்யுளில், 'பயன் நாடகம்' எனவும், 'கண்கனியக் கவர்ந்துண்டு' எனவும் வருவது எவ்வளவு மதிக்கத் தக்கதாயிருக்கின்றது!

வீரம் அச்சம் இழிவு வியப்பு இன்பம் துன்பம் நகை நடுவுநிலை வெகுளி என்னும் ஒன்பது சுவைகள் நடிப்புக்குரியவை. நாடக மாந்தர் இவற்றை நன்கு புலப்படுத்தி நடிக்க வேண்டும். நடிப்புக்களை இன்னும் விரிவாகப் பாகுபடுத்தும்போது, அவை இருபத்து நான்கு வகையாகப் பகுத்துக் காட்டப்படுகின்றன. அவற்றில் சோம்பலுக்குரிய நடிப்பு, பெருமைக்குரிய நடிப்பு, வெட்கத்துக்குரிய நடிப்பு, மழையில் நனைவதற்குரிய நடிப்பு, பனியில் தலைப்படுவதற்குரிய நடிப்பு, வெயிலிற் செல்வதற்குரிய நடிப்பு முதலியனவெல்லாம் கொள்ளப்படும். இவைகட்கு இலக்கணம் இன்னின்னவென்பதும் சிலப்பதிகார உரையில் வந்திருக்கின்றது. வெட்கமுற்றது போல நடிக்க வேண்டுமானுல், தலை குனிதலும், மறைவான செய்கைக்

குறியும், முகவாட்டமும், உடம்பு கோணலும், மழுங்கிய ஒளியும், கீழ்க்கண் பார்வையுங் கொண்டு நடிக்க வேண்டு-மென்பது இலக்கணம்.

நாடகத்தின் நோக்கத்தை நாம் மூவகையாகக் கொள்ளலாம். பார்ப்பவர்களின் மகிழ்ச்சிக்காக மட்டும் நடிப்பது ஒரு வகை. கருத்தறிந்துகொள்ளும்படி நடிப்-பது ஒரு வகை. கருத்துக்கள் உலகத்திற் செயற்பட்டு உருவாகும்படி நடிப்பது ஒரு வகை. நடிப்பு வாயிலா-கவே உலகத்திற் பல காரியங்களை நிகழச் செய்வது ஓர் அரும்பெருஞ்செயலாகும். அம்பலவாணர் என்னும் கூத்தப் பெருமான், வாய் பேசாமல் நடிப்பு வாயிலா-கவே காரியஞ் செய்பவராவர். சங்க நூல்களுள் ஒன்றான கலித்தொகை என்பது இவ்வுண்மையை அழகாக வெளி-யிடுகின்றது.

"கூருமற் குறித்ததன்மேற் செல்லுங் கடுங்கூளி
மாருப்போர் மணிமிடற் றெண்கையாய் கேளினி:
படுபறை பலவியம்பப் பல்லுருவம் பெயர்த்துநீ
கொடுகொட்டி யாடுங்கால்"

என்னும் அடிகள் அக்கருத்துக்களை அறிவிப்பனவாகும். சிலப்பதிகாரத்தில் கூத்தச் சாக்கையன் ஆடியதாகக் கூறப்படுகின்ற **கொடுகொட்டிக் கூத்தும்** இத்தகைய தொன்றேயாம்.

நாடகங்கள் நடிப்பதற்கென்றே தமிழ் நாட்டில் தனித்த சாதியாரும் இருந்தனர். **கூத்தர், பொருநர்** என்பவர் அவ்வகையினரைச் சார்ந்தவர். 'கூத்தர்' என்-பதற்கு **நடிப்பவர்** என்பது பொருள். 'பொருநர்' என்ப-தற்கு '**ஒப்பக் கோலம் புனைவோர்**' என்பது பொருள். சிவபெருமானைப் போலவே கோலம் புனைந்துகொண்டால் மட்டுமே அவரைப் போலக் கொடுகொட்டிக் கூத்து ஆடு-வது சிறக்கும். பத்துப்பாட்டு என்னும் சங்க நூல் தொகுதியைச் சார்ந்த **கூத்தராற்றுப்படை** (மலைபடு-கடாம்) என்பதும் **பொருநராற்றுப்படை** என்பதும் இக்கூத்தர் பொருநரைப் பற்றியனவாகும்.

மகளிரில் நாடகம் நடிப்பவர் '**விறலியர்**' எனப்-

படுவர். 'விறல்' என்பது உள்ளக் கருத்தைப் புறத்தே புலப்படுத்தும் திறம். இவ்விறலியர் தம் கணவரோடு கூடியும் தனித்தும் சென்று நாட்டில் அங்கங்கு உள்ள கலையன்பர்களுக்குத் தம் திறமையைப் புலப்படுத்தி மகிழ்வித்தும் பரிசில் பெறுவதுண்டு. புறநானூற்றில் விறலியாற்றுப்படையைப் பற்றிய பாட்டுக்கள் வந்திருக்கின்றன.

இவற்றையெல்லாம் கருதும்போது, நாடகம் என்பது பண்டைக் காலத்தில் மிகவும் விரிவாகவும் நுட்பமாகவும் ஆராயப்பட்டு வந்ததென்பதும் பிறவும் நன்கு விளங்குகின்றன. இவ்வரிய கலையை உயர்வான முறையில் இயக்கிக்கொண்டு நாடு நலம் பெறுவது இன்றியமையாதது.

அருஞ்சொற்பொருள் :

கோலம் - வடிவம், மடந்தையர் - பெண்டிர், ஆர்ப்பவும் - ஒலிக்கவும், கொடுகொட்டிக் கூத்து - திரிபுரங்களை எரித்த போது சிவ பெருமான் ஆடிய கூத்து.

பயிற்சி வினாக்கள் :

1. 'நாடகம்' என்னும் சொல்லின் பொருள் யாது?
2. நடிப்பின் இரண்டு வகைகள் எவை?
3. 'கூத்து' என்பது எதற்குப் பெயர்?
4. கதை தழுவி வாராத கூத்தின் பகுதிகளை உணர்த்தும் சொற்கள் எவை?
5. 'நடிப்புக் கல்வியே உலகில் முதலில் தோன்றியது,' என்பதைக் காரணங் காட்டி விளக்குக.
6. சிவபெருமான் நடிப்பைப்பற்றிச் சிலப்பதிகார ஆசிரியர் கூறிய விளக்கம் யாது?
7. நடிப்புத் திறத்தில் தக்க இன்பப் பயன் இருக்கிறதென்பது எதனால் தெரிகிறது?
8. 'நாடகக் கலையைத் தமிழ் மக்கள் மற்றவரிடமிருந்து கற்றுக்கொண்டவர்களல்லர்,' என்பதைச் சான்று காட்டித் தெளிவுபடுத்துக.
9. நடிப்புக்குரிய சுவைகள் எவை?
10. வெட்கமுற்றது போல நடிப்பது எப்படி?
11. நாடகத்தின் நோக்கத்தை எத்தனை வகையாகக் கொள்ளலாம்? அவை யாவை?
12. பண்டைக் கால நாடக மாந்தர் யாவர்? அவர்களைப் பற்றி நீவிர் அறிந்துள்ளதைத் தெரிவிக்க.

11. காவிரிப்பூம்பட்டினம்

[வித்துவான், A. S. கோவிந்தசாமி அவர்கள்]

[இவர் திருச்சிராப்பள்ளி 'செயின்ட் ஜோசப்புக் கல்லூரி' உயர் நிலைப் பள்ளித் தமிழாசியர்; பல பாட நூல் ஆசிரியர்; உரை நடைத்திறன் கைவரப் பெற்றவர்.]

சோழ வளநாடு வான் பொய்ப்பினும் தான் பொய்யாத காவிரி பாய்வதால் கன்னி நாடெனவும் பொன்னி நாடெனவும் புலவர்களால் புனைந்துரைக்கப்பட்ட பெருமையை உடையது. அந்நாட்டையாண்ட சோழர்கள் பல்வேறு காலங்களில் வெவ்வேறு நகரங்களைத் தலைநகரங்களாகக் கொண்டு முறை வழுவாது ஆண்டு வந்தார்கள். அவர்கட்குத் தலை நகரங்களாய் அமைந்திருந்தவை **காவிரிப்பூம்பட்டினம், உறையூர், திருவாரூர், காஞ்சி** முதலியனவாம். இந்நகரங்களுக்குள் பழமையானதும் புலவர் பலராலும் போற்றப் பெற்றதும் பெரும்புகழ் பெற்றுப் பொலிந்ததும் **காவிரிப்பூம்பட்டினமே**யாகும்.

இவ்வணி நகர் காவிரி கடலோடு கலக்குமிடத்து அமைந்திருந்தமையால், காவிரிப்பூம்பட்டினம் என வழங்கலாயிற்று. பட்டினம் என்பது கடற்கரையை அடுத்த பேரூர்களின் பெயர். எனினும், அப்பெயர் சிறப்பாக அக்காலத்தில் காவிரிபூம்பட்டினத்தையே உணர்த்தியது. மேலும், இந்நகர் பகைவர்கள் புகுதற்கரிய காவலைப் பெற்றிருந்தமையால் '**புகார்**' எனவும், பொலிவுடன் விளங்கினமையால் '**பூம்புகார்**' எனவும் புகழ்ந்துரைக்கப்பட்டது. அன்றியும், சம்புத் தீவின் காவல் தெய்வமாகிய **சம்பா** என்பவள் இப்பதியில் தங்கித் தவஞ் செய்தமையின் இது **சம்பாபதி** எனவும் பெயர் பெற்றது. இந்நகரை முன்னொருகால் ககந்தன் என்பவன் புரந்து வந்தான். அவன் இதனை ஆண்டுவந்தமைக்கு அறிகுறியாக, **காகந்தி** எனவும் இது பெயர் பெற்று வழங்கலாயிற்று.

இவ்வாறு பல்வேறு பெயர்களால் வழங்கி வரப்பட்ட

இப்பதி **கரிகாற்சோழன்** காலத்தில் அடைந்திருந்த பெருமை அளவிட்டுக் கூறுதற்கரியது. பல்வகைக் கைத்தொழில்களும் இங்குப் பாங்குற நடைபெற்றன. உள்நாட்டு வாணிபத்திற்கும் இது பெயர் பெற்ற துறைமுகப்பட்டினமாய் விளங்கியது. அயல் நாட்டிலிருந்து நம் நாட்டோடு வியாபாரம் செய்ய வந்த **யவனர், சோனகர், சாவகர்** முதலான பிற நாட்டாரும் இந்நகரில் வந்து குடியேறி இருந்தனர். இவர்களேயன்றிப் புலவர்களும் கலைஞர்களும் கைத்தொழிலறிஞர்களும் பல்வேறு இடங்களிலுமிருந்து இங்கு வந்து இன்ப வாழ்வு எய்தி நின்றனர்.

இங்ஙனம் அறிவும் நாகரிகமும் முதிர்ந்த மக்களுக்கு உறைவிடமாயிருந்த இப்பட்டினம், சீரிய முறையில் அமைந்து, காண்போர் கண்ணையும் கருத்தையும் கவரக்கூடிய பெருவனப்புடையதாயிருந்தது. தெருக்கள் ஒழுங்காக அமைக்கப்பட்டுச் சிற்ப சித்திரங்களாற் பொலியும் பல மாளிகைகளையுடையனவாய்க் காட்சியளித்தன. இத்தகைய இப்பட்டினம் அகநகர், புறநகர் என்னும் இருபிரிவுகளையுடையதாய் இருந்தது. அகநகர் **பட்டினப்பாக்கம்** எனவும் புறநகர் **மருவூர்ப்பாக்கம்** எனவும் வழங்கப் பெற்றன.

அரசனுக்கும் அரசியலுக்கும் தொடர்புடைய மக்கள் பட்டினப்பாக்கத்தில் வசித்தனர். ஒழுங்கும் அழகும் அமைந்த பல தெருக்களில் மக்கள் பலரும் சிறப்புடன் வாழ்ந்தது ஒரு நியதிக்குட்பட்டே இருந்தது. இன்னின்னார் இன்னின்ன தெருக்களில் வசிக்க வேண்டுமெனக் கட்டுப்பாடு செய்யப்பட்டிருந்தது போல, மக்கள் தத்தம் குலம், தொழில், அறிவு, உத்தியோகம், பெருமை இவைகளுக்குத் தக்கபடி பல்வேறு தெருக்களில் வசித்தனர். பட்டினப்பாக்கத்தில் அரச வீதியும், தேரோடு வீதியும், பெரிய கடைத் தெருக்களும், வணிகர், வேதியர், உழவர், மருத்துவர், சோதிடர் முதலியோர் வசித்த தெருக்களும், சூதர், மாகதர், வைதாளிகர், நாழிகைக் கணக்கர் முதலியோரிருப்பிடங்களும்; பாடகர், கூத்தர், விகட-

கவிகள், பறை கொட்டுவோர் ஆகிய இவர்கள் தங்கியிருந்த மறுகுகளும் தனித்தனியாய் மிளிர்ந்தன. இவ்விதமான பல தெருக்களுக்குமிடையே நகரின் நடுவில் அரசன் அரண்மனை இலங்கியது. குதிரை வீரர், யானைப்பாகர், மறவர் ஆகியோர் வசித்த தெருக்கள் அவ்வரண்மனையைச் சூழ்ந்து அழகு செய்தன.

பட்டினப்பாக்கத்தில் கோயில்கட்குக் குறைவில்லை. சிவன், முருகன், பலதேவன், இந்திரன், சூரியன், சந்திரன், புத்தர், அருகதேவன் முதலிய பல தெய்வங்களின் கோயில்கள் இங்கு இருந்தன. அக்கோயில்களெல்லாம் சிற்ப சித்திரங்களால் அழகு செய்யப்பட்டிருந்தன. இத்தகைய கோயில்களேயன்றி இங்குப் பற்பல சமயத்தாரும் தங்கித் தம் மத நூல்களைக் கற்கவும் நூலாராய்ச்சி செய்யவும் பல மடங்கள் கட்டப்பட்டிருந்தன. பௌத்த மடங்களும், சமணப் பள்ளிகளும் இந்நகரில் அநேகமிருந்தன.

இவையன்றியும் பிறர் பொருளைக் களவு செய்வோரை அம்பலப்படுத்தி அவமானப்படுத்தும் **வெள்ளிடை மன்றம்**; பல வகை நோயாளர் நீராடிய அளவில் நலனைச் செய்யும் இலஞ்சி **மன்றம்**; பைத்தியம் கொண்டவர், நஞ்சுண்டவர், விடக்கடியுண்டவர், பேய் பிடிக்கப்பட்டவர் முதலியோர் ஒரு முறை சுற்றி வருதலால் அவர்கள் தெளிவுபெறக் காரணமாகிற ஒளியை வெளிப்படுத்தும் நீண்ட கல் நிறுத்தப்பெற்ற**நெடுங்கல் மன்றம்**; பொய்த்தவ வேடங் கொண்டோரும், கணவரை வஞ்சித்தொழுகும் பெண்டிரும், கொடிய அமைச்சரும், பிறர் மனைவிழைந்தோரும், பொய்க்கரி புகன்றோரும், புறங்கூறுவோரும் ஆகிய இவர்களைத் தண்டிக்கும் இயல்புடைய பூதம் நிலைபெற்ற **பூத சதுக்கம்**; அரசனது செங்கோல் சிறிதளவு தவறினும், அவனது அறங்கூறவையத்தார் நடுவுநிலை தவறினும் நாவாற்கூறுது நீர் உகுத்துக் கண்ணால் அறிவிக்கும் பாவையொன்று நிற்கும் **பாவை மன்றம்** ஆகிய ஐவகை மன்றங்களும் இங்கு அழகுடன் விளங்கின. மற்றும், **உய்யானவனம்**, **சம்பாதி வனம்**,

கவேரவனம், உவவனம் என்ற பெயர்களையுடைய பல பூஞ்சோலைகளும் இங்குப் பொலிவுடன் திகழ்ந்தன.

மருவூர்ப்பாக்கம் கடலோரத்தில் அமைந்திருந்தது. இங்குக் கடல் தரும் வளங்கள் மூட்டை மூட்டையாகக் குவிந்து கிடக்கும். இது பல மாடங்கள் அமைந்த வீதிகள் பலவற்றையுடையதாய் இருந்தது; மக்கள் இரவில் இன்பமாகப் பொழுதுபோக்குவதற்குரிய நிலா முற்றங்களையும் பெரிய பெரிய பண்டகசாலைகளையும் பெற்றிருந்தது. இங்கு வாசனைச் சாமான்களையும், நறும்புகைச் சரக்குகளையும் வீதிவீதியாக எடுத்துச் சென்று விற்பவர் வசிக்கும் தெருக்கள் ஒரு புறமும்; முத்து, மணி, பொன் முதலிய விலையுயர்ந்த பொருள்களும், நெல், வரகு முதலான தானியங்களும் விற்கப்படும் வீதிகள் ஒரு புறமும் அமைந்திருந்தன. பிட்டு வாணியர், அப்பஞ்சுடுவோர், வெற்றிலை விற்போர், ஏலம் இலவங்கம் முதலான வாசனைப் பொருள்கள் விற்போர் முதலியவர்கள் தத்தம் பொருள்களை எடுத்துக்கொண்டு கடைவீதி நெடுகச் சுற்றி விற்றுவருவர். இவர்களாலும், பலவகைப் பொருள்களை விலைக்கு வாங்க வருபவர்களாலும் கடை வீதிகள் எப்பொழுதும் கூட்டம் நிறைந்தனவாகவே இருக்கும். கடை வீதிகளுக்குச் சென்றால் வெற்றிலைக் கடையிலிருந்து நவரத்தினக் கடை வரையில் எல்லாக் கடைகளிலும் பொருள்கள் குவியல் குவியல்களாகக் குவிக்கப்பட்டிருக்கும்.

இத்தன்மையான மருவூர்ப்பாக்கத்தின் கடற்கரை வெண்மணல் பரந்த வெளியிடம். இங்கேதான் அயல் நாட்டினர் வசிக்கும் சேரிகள் வரிசை வரிசையாய் இருந்தன. தெருக்களில் உள் நாட்டுப் பொருள்களும், வெளி நாட்டுப் பொருள்களும் மலை போலக் குவித்து வைக்கப்பட்டிருக்கும். அப்பொருள்களின் விலை வாங்குவோர்க்குத் தெரிவதற்காகப் பல நிறக் கொடிகள் ஆங்காங்கு உயர்த்தப்பட்டிருக்கும். அக்கொடிகளின் நிறத்தைக்கொண்டு இன்ன பொருள் இன்ன விலையுடையதென்று தெரிந்து மக்கள் அப்பொருளை வாங்குவார்கள்.

இங்குள்ள துறைமுகத்தில் எகிப்து, சீனம் முதலான அயல்நாடுகளிலிருந்து வந்த கப்பல்கள் வரிசை வரிசை-யாக நிற்கும். அயல் நாட்டுப் பொருள்கள் இறக்குமதி-யாவதையும் உள் நாட்டுப் பொருள்கள் ஏற்றுமதியாவதை-யும் கவனிக்க அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இறக்குமதியான பொருள்களையும், ஏற்றுமதியாகும் பொருள்களையும் நிறையிட்டு, அளந்து, முத்திரை பொறித்து அந்தப் பொருள்களுக்குரிய சுங்கத்தைப்பெற இத்துறைமுகத்திற்கருகே ஒரு சுங்கச் சாவடியும் நிறுவப்பட்டிருந்தது. அத்துடன் கடலில் செல்லுங் கப்பல்கள் இரவு நேரங்களில் துறையை அறிந்து வரு-வதற்காகக் **கலங்கரை விளக்கம்** ஒன்றும் இங்கு அமைந்திருந்தது. இக்கலங்கரை விளக்கத்தைத் தவிர வேறு சில விடி விளக்குகளும் இவ்விடத்தில் எரிந்து-கொண்டிருக்குமாம்.

இங்குக் கூறப்பட்ட மருவூர்ப் பாக்கத்திற்கும் பட்டி-னப்பாக்கத்திற்கும் இடையே ஒரு வெளியிடம் இருந்தது. இது இவ்விரு ஊர்கட்கும் பொதுவானது. இங்கு வரிசை வரிசையாய் வளர்ந்த மரங்கள் அடர்ந்திருந்தன. இங்கே-தான் **நாளங்காடி** கூடுவது வழக்கம். வியாபாரிகள் அம்மரங்களின் நிழலில் தத்தம் கடைகளை அன்றுடம் அமைத்துக்கொண்டு வாணிபம் செய்வர். வியாபாரம் நடக்கும்போது இங்கு ஒரே இரைச்சலாய் இருக்கும். இந்த நாளங்காடியில் அச்சந்தரும் ஒரு பெரும்பூதத்தின் பலி பீடமும் காணப்பட்டது. அப்பூதம் சோழகுலத்-தோன்றலாகிய முசுகுந்தனுக்கு வந்த இடரை நீக்க இந்திரனல் அனுப்பப்பட்டு இந்நகரைக் காவல் செய்யும் தெய்வமாகும். அது **நாளங்காடிப் பூதம்** எனப்படும். சித்திரைத் திங்கள் சித்திரை நாளில் மறக்குடிப் பெண்டிர் அப்பூதத்தை வழிபடுவார்கள். அவ்வழிபாட்டின்போது அவர்கள் 'எம்மன்னனது நாடு முழுதும் வறுமை நீங்கி வளம் சிறப்பதாக!' என வாழ்த்தித் துணங்கைக் கூத்தும் குரவைக் கூத்தும் ஆடுதல் வழக்கம். இந்நாளங்காடி-

யைப் போலவே மருவூர்ப் பாக்கத்திலும் இராக் கடைகள் இருந்தன. அவைகள் அல்லங்காடி எனப்படும்.

இவ்விதம் சிறந்த அமைப்புக்களைப் பெற்றிருந்த இக்காவிரிப்பூம்பட்டினத்தில் ஆண்டுக்கொரு முறை தேவர்கோனுக்குத் திருவிழா கொண்டாடப்படுவது வழக்கமாயிருந்தது. அவ்விழா இந்திர விழா எனப்படும். அது இருபத்தெட்டு நாட்கள் நடைபெறும். அந்நாட்களில் இந்நகர் அமராவதியை ஒப்ப அணி செய்யப்பட்டுப் பேரழகுடையதாய் இலங்கும்.

பல வேறு மதத்தினரும், பிரிவினரும் அவ்விழாவின்போது ஒன்றுபட்டு அதனைக் கொண்டாடுவார்கள். இந்நகரின் எழிலையும் விழாக் கொண்டாடப்படும் சிறப்பையும் காண அக்காலத்தில் தேவர்களும் தமது உருக்கரந்து இங்கு வருவார்களாம்.

இற்றைக்கு ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இப்பட்டினம் தமிழரின் பண்பாட்டிற்கும் நாகரிகச் சிறப்பிற்கும் ஓர் எடுத்துக்காட்டாய் இலங்கியது. பின்னர் இந்நகர் அந்தோ! கடலாற் கொள்ளப்பட்டு மறைந்தது. எனினும், இதன் சிறப்பியல்புகளை இன்று பட்டினப் பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய இலக்கியங்களால் நாம் உணர்கிறோம். இதன் பெருஞ்சிறப்பையும் தெய்வத்தன்மையையும் கண்ட இளங்கோவடிகள், "பூம்புகார் போற்றுதும்! பூம்புகார் போற்றுதும்!" என்று அன்று போற்றி இன்று நம்மையும் போற்றச் செய்கின்றார்.

அருஞ்சொற்பொருள் :

முறை வழுவாது - நீதி தவறாது, பொலிவு - அழகு, புரந்து - பாது காத்து (ஆட்சி புரிந்து), வனப்பு - அழகு, மறுகு - தெரு, மறவர் - வீரர், சூதர் - அரசனை நின்று பாடுபவர், மாகதர் - அரசனை இருந்து பாடு பவர், வைதாளிகர் - வைதாளியாடுபவர், பொய்க்கரி - பொய்ச்சாட்சி, சுங்கம் - வரி, திங்கள் - மாதம், துணங்கைக் கூத்து - இரு கையும் முடக்கி ஆடும் கூத்து, குரவைக் கூத்து - பெண்கள் கைகோத்து ஆடும் கூத்து, எழில் - அழகு, கரந்து - மறைந்து, இலங்கியது - விளங்கியது.

பயிற்சி விஞக்கள் :

1. காவிரிப்பூம்பட்டினத்தைக் குறிக்கும் வேறு பெயர்கள் யாவை? அவற்றின் காரணமும் குறிப்பிடுக.

2. காவிரிப்பூம்பட்டினத்தின் பழம்பெருமையினைப் புலப்படுத்துக.

3. அகநகர் எனப்படும் பட்டினப்பாக்கத்தின் சிறப்பியல்புகளை 20 வரிகளில் தொகுத்து எழுதுக.

4. மருவூர்ப்பாக்கம் என்பது எதற்குப் பெயர்? அதன் சிறப்பு என்ன?

5. காவிரிப்பூம்பட்டினத்துத் துறைமுகத்தைப் பற்றி நீவிர் அறிந்ததைக் குறிப்பிடுக.

6. காவிரிப்பூம்பட்டினத்து ஐவகை மன்றங்கள், பூஞ்சோலைகள் எவை?

7. குறிப்பு வரைக :—பூத சதுக்கம், நாளங்காடிப் பூதம், இந்திர விழா.

12. தங்கைக்கு

[டாக்டர் மு. வரதராசனர் அவர்கள்]

(இவர் சென்னைப் பச்சையப்பர் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர்; பல நூல்களின் ஆசிரியர்; சிறந்த சிந்தனையாளர்.)

அன்புள்ள தங்கை,

நாம் குடும்பத்தோடு பூனுவுக்குப் போயிருந்தபோது ஆகாகான் அரண்மனையை அடுத்த பூங்காவில் கஸ்தூரிபாவின் சமாதியின் அருகேயிருந்து உருகியது உன் நினைவில் இருக்கும். அப்போது அப்பா அம்மாளை நோக்கிச் சொன்ன சொற்கள் நினைவில் இருக்கின்றனவா? "இந்த அம்மாளின் கணவர் காந்தி அடிகள் உலகத் தலைவர். கணவரின் வழியைக் கண்மூடிப் பின்பற்றிய உத்தமியார் இவர். இந்த அம்மாளைப்போல எளிய வாழ்க்கை வாழ எந்தப் பெண்ணுலும் முடியாது. கணவர் உலகத் தலைவர். உலகத் தலைவரின் மனைவியார், பருத்திப் புடைவையும், சங்கு வளையலும், தாலியும் தவிர, எந்த ஆடம்பரமும் அறியாமல் வாழ்ந்துவிட்டு மறைந்தார்," என்று அப்போது அப்பா சொன்ன சொற்கள் இன்னும் என் செவியில் ஒலிக்கின்றன.

எளிய வாழ்க்கை வாழ்வது சிறந்த அறம் என்பது ஒருபுறமிருக்கட்டும்; '**வேண்டாமை அன்ன விழுச்செல்வம்**' என்ற மந்திரம் திருக்குறளிலும் உள்ளது. அதனுல் உலகத்திற்கு விளையும் நன்மை இருக்கட்டும். தனியாட்களுக்கே அதனுல் எவ்வளவோ பயன் உண்டு. முதலாவதாக, மனம் பண்படுகிறது. அதுவே போதுமே!

இன்றைய சமுதாய அமைப்பும் பொருளாதார அமைப்பும் தக்க முறையில் இல்லை. ஆகையால், எத்தனையோ பேர் வாழ்வதற்கே வாய்ப்பு இல்லாமல் தவிக்கிறுர்கள். உடம்பாலுழைக்கப் பலர் காத்திருக்கின்றனர்; ஆனுல், வேலை இல்லை. மூளையால் உழைக்கப் பலர் காத்திருக்கின்றனர்; தொழில் இல்லை. ஒரு சிலர்க்கு மட்டும் எப்படியோ இடம் கிடைத்துவிடுகிறது. அவர்கள் மட்டும் காலூன்றி நிலைத்துவிடுகிறுர்கள்; மற்றவர்களைப்

பற்றிக் கவலைப்படுவதில்லை. தங்கள் மனைவி மக்களை மட்டும் காப்பாற்றிக் காலம் கழிக்கிறார்கள். மற்றவர்கள் வாழ்வதற்கும் வயிறு வளர்ப்பதற்கும் வழியில்லாமல், வாய்ப்பே இல்லாமல் தவிக்கிறார்கள். அவர்களைப் பற்றி இரக்கத்தோடு எண்ணுவார் இல்லை; அந்த ஏழைகள் கேட்டு வந்தது அவ்வளவுதான். 'அவரவர்க்கு அன்று அளந்தபடிதான் இன்று கிடைக்கும்!' என்று சோம்பேறிப் பேச்சைப் பேசித் தட்டிக்கழிக்கின்றார்கள்.

'இவர்களாவது தொடர்ந்து இன்பமாக அமைதியாக வாழ்கின்றார்களா?' என்றால் அதுவும் இல்லை. உள்ள தொழிலில் ஏதேனும் வீழ்ச்சி ஏற்பட்டால், அதற்கு ஒரு முடிவு ஏற்பட்டால், வருவாய் வற்றினால், இவர்களும் நிலை கலங்குகின்றார்கள்; தடுமாறுகின்றார்கள்; தவிக்கின்றார்கள். அப்போது இவர்களைப் பார்த்ததும் இரங்க வேண்டிய நிலைமை ஏற்படுகின்றது. சுருங்கச் சொன்னால், இன்றைய சமுதாயத்தில் வாழ்வு என்பது நூற்றுக்கு இருவர் மூவர்க்கு மட்டுமே உரிய கலையாய் அமைந்துள்ளது எனலாம். பெரும்பாலார் தடுமாறியும் தவித்தும் நடுங்குகின்ற ஒரு சமுதாயம் நாகரிகமானது என்று சொல்ல நாக்குக் கூசுகின்றது. பிறந்த பறவைகள் அத்தனையும் வாழ்கின்றன; பிறந்த விலங்குகள் அத்தனையும் வாழ்கின்றன. ஆனால், மனிதர்கள் பிறக்கின்றார்கள்; அவர்களில் ஒருசிலர் மட்டுமே வாழ்கின்றார்கள் என்றால், அதைவிட அநாகரிக அமைப்பு ஒன்று உண்டா? எண்ணிப்பார். இவ்வளவு சீர்கெட்ட நிலை நம்மைச் சுற்றிலும் உள்ளபோது, நாம் ஆடம்பரத்தை நாடுவது தகுமா? மனமாரச் சொல்லுகிறேன்: இன்றைய நிலையில் பாவங்களில் பெரிய பாவம், குற்றங்களில் முதல் குற்றம் எது என்று என்னைக் கேட்டால், கொள்ளை, கொலை என்று எவ்வெவற்றையோ சொல்ல மாட்டேன்; ஆடம்பர வாழ்க்கை என்ற ஒன்றைத்தான் சொல்வேன். ஏன் தெரியுமா?

கொலை, கொள்ளை முதலியன ஒரு சிலரைத்தான் அழிக்கின்றன. ஆனால், ஒரு சிலருடைய ஆடம்பர

வாழ்க்கை, எத்தனேயோ ஏழை மக்களின் அமைதியான வாழ்க்கையைப் பாழ்படுத்தி அல்லல் விளேக்கின்றது. வைர நகைகள் போட்டுக்கொண்டிருப்பவர்களேப் பார்த்து இல்லாத பெண் ஏங்குகிருள்; கணவனிடம் போராடுகிருள்; கணவனுடன் பிணங்குகிருள். அது மண முறிவு வரையில் வளராமல் போராட்டத்தோடும் பிணக்கோடும் நின்றுவிட்டால் புண்ணியம் என்றுதான் சொல்ல வேண்டும். கணவன் இதைச் சுருக்கி அதைச் சுருக்கிப் பணம் சேர்த்து வைரநகை வாங்கிப் போடுகின்ருன்; அல்லது திருவள்ளுவரின் அறத்தில் நம்பிக்கை கொஞ்சம் தளர்ந்தவனுக இருந்தால், இதில் கொஞ்சம் திருடி, அதில் கொஞ்சம் திருடிப் பணம் சேர்த்து வாங்கித் தருகிருன். வள்ளுவர் குறளே வாயளவுக்கு வைத்துவிடத் துணிந்தவனுக இருந்தால், இவரை இங்கே ஏமாற்றி, அவரை அங்கே ஏய்த்து, இலஞ்சம் பெற்று, மனேவி கேட்டதை வாங்கித்தருகிருன். அல்லது கணவன் கதியற்றவன் என்ருே, கவலேயற்றவன் என்ருே மனேவி தெரிந்துகொண்டால், அவன் சேர்க்க முடியாத பணத்தைத் தானே சேர்த்து வாங்க முயல்கின்ருள்.

வைரநகை என்று ஒன்றை மட்டும் எடுத்துக் காட்டாகக் குறிப்பிட்டேன். அதுபோன்ற ஆடம்பரத் துறைகள் எல்லாவற்றையும் தனித்தனியாக எண்ணிப்பார். பெரும்பாலான குற்றங்கள் நாட்டில் இப்படி விளேயும் போது ஒரு சிலரின் ஆடம்பர வாழ்க்கையைத் தடுக்க ஆற்றல் இல்லாமல், உண்மைக் காரணத்தை எடுத்துச் சொல்லவும் ஆண்மை இல்லாமல், நாட்டில் இலஞ்சம் பெருகிவிட்டதென்று அலறுகிருர்கள்; நேர்மை குன்றிவிட்டதே என்று கதறுகிருர்கள். ஒழுங்கும் ஒழுக்கமும் குறைந்துவிட்டனவே என்று கூக்குரலிடுகின்ருர்கள். சாக்கடைகளேத் தேங்கி அழுக விட்டுவிட்டு, அவற்றின் பழமையையும் புகழ்ந்துகொண்டு, கொசுக்கள் பெருகிவிட்டனவே என்று கூக்குரலிடுகின்றவர்கள் இவர்கள். ஏழை மக்களின் வாழ்க்கை நிலேயை உயர்த்துதல், உணவு உடை தொழில் ஆகிய அடிப்படைத் தேவைகளே எல்லோ-

ருக்கும் அமைத்துத் தருதல் இவைகளைச் செய்யக் காலம் ஆனாலும் ஆகட்டும். போட்டிக்கும் பூசலுக்கும் குறைகளுக்கும் குற்றங்களுக்கும் வழியமைத்துத் தருகின்ற இந்த ஆடம்பரங்களையாவது தடுக்கலாமே! இதற்கு ஒரு சட்டம் பிறப்பிக்க ஒருவர் துணிவாரானால், அவரைத்தான் நாட்டின் முதல் தொண்டர் என்று நான் போற்றுவேன். ஏன்? அவர்தான் சமுதாய அழிவுக்குக் காரணமாக வளரும் நோயைத் தீர்க்க முடியாவிட்டாலும், வளராமல் தடுக்கவாவது துணிந்தவர் என்று அவரைப் போற்றுவேன்.

இவ்வளவும் ஏன் எழுதினேன்? உனக்கு அரசியல் அறிவுறுத்துவதற்காக அல்ல; உன் உள்ளத்தில் ஆடம்பர மோகத்தை அழிப்பதற்காகத்தான்.

உன்மேல் குற்றம் சொல்லவில்லை. பெரும்பான்மையாகப் பெண்களே இவ்வகையில் பிற்போக்காக இருக்கிறார்கள். மற்ற வகையில் பிற்போக்கு என்று சொல்வதற்கில்லை. இந்த ஒரு வகையிலேதான் பெண்ணுலகில் உண்மையான பிற்போக்கு இருக்கிறது. ஆத்திரம் அடையாதே. எண்ணிப்பார். ஆடம்பர மோகம் இல்லாத பெண்யார் என்றே கண்டுபிடிப்பது அருமையாக உள்ளது. ஆடவர் பலர் எளிய உடை உடுத்து, எளிய வாழ்வு வாழ்கின்றார்கள். ஆனால், பெண்களில் எத்தனைபேர் அவ்வாறு வாழத்துணிகிறார்கள்? ஏழைப் பெண்களே வறுமையின் குறையால் எளிய கோலத்தோடு காணப்படுகிறார்கள். வறுமையில்லாத பெண்கள் எளிய வாழ்வு வாழ்கின்றார்களா? '**வேண்டின் உண்டாகத் துறக்க,**' என்னும் கொள்கையை ஆண்கள் பலரிடம் உடை முதலியவற்றில் காண்கிறேன். எல்லாம் இருந்தும் எளிய வெள்ளையாடை பருத்தியுடை உடுத்துப் பெருமையோடு திரிகின்றனர் ஆடவர் பலர். ஆனால், எந்த அளவிற்கு ஆடம்பர ஏணியில் ஏறி நிற்க முடியும் என்றுதான் பெண்கள் முயல்கின்றார்கள். ஆடம்பரப் போக்கு இல்லையானால், தங்களுக்கு உலகத்தில் மதிப்பு இல்லை என்று எண்ணும் தாழ்வு மனப்பான்மை பெண்டிர் பலரிடம் இயல்பாக

உள்ளது. இதுதான் உண்மையான பிற்போக்கு என்பது என் கருத்து.

கஸ்தூரிபாவைப்போல மிகமிக எளிய வாழ்க்கை நடத்து என்று நான் உனக்குக் கூறவில்லை; முடிந்தால் நல்லது என்றே போற்றுவேன். அந்தத் துணிவும், தெளிவும், வீரமும் உனக்கு உண்டா என்று உன் நெஞ்சையே கேட்டுக்கொள். அது இருக்கட்டும். அழகாக விளங்குவதற்கு இவ்வளவு நகை, இவ்வளவு உடை இருந்தால் போதும் என்று ஒரு வரையறை 'குறைந்த அளவு' ஏற்படுத்திக்கொண்டு கவலையில்லாமல் வாழக் கற்றுக்கொள். அது போதும்.

ஆடம்பரம் இருந்தால் தனியழகு இருக்கும் என்னும் உலகத்தாரின் மூட நம்பிக்கையைப் பொய்ப்படுத்திக் காட்டு. அழகு என்றாலே என் உள்ளம் குழைகிறது. என் பகைவனும் அழகாக இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறவன் நான். என் வேலையாள், என் வீட்டுக்கு வரும் தபாற்காரர், எனக்குக் காய்கறி விற்கும் கடைக்காரர், என் பிள்ளைக்குக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர், அலுவலகத்தில் என் பக்கத்தில் இருந்து வேலை பார்க்கும் கணக்கர்கள் எல்லோரும் அழகாயிருக்க வேண்டும் என்று விரும்புகிறவன் நான். ஆகையால், அழகுக்காகத் தனி முயற்சி செய்யாதே என்று ஒருபோதும் சொல்லமாட்டேன். ஆனால், ஆடம்பரத்தாலேதான் அழகு தேடமுடியும் என்ற தவறான போக்கு வேண்டா. ஆடம்பரத்தால் அழகு தேடுகின்ற பெண்களைப்பற்றி நீயே எண்ணிப்பார். பதின்மூன்று வயது முதல் இருபத்தைந்து வயது வரையில் அவர்களால் அழகைக் காக்க முடிகின்றது. சிலரால் அதுவும் முடியாமல் இருபது இருபத்திரண்டு வயதிலேயே பொந்தைகள் போலத் தோன்றுகிறார்கள். சிலர் இருபத்தைந்து வயதிற்கு மேலும் முப்பது வயது வரையில் ஒருவாறு அழகாயிருக்க முடிகிறது. அப்புறம் என்ன ஆகிறது தெரியுமா? உடனே அவர்களது அழகு எல்லாம் தொப்பென்று விழுந்துபோகிறது. அதன் பிறகு அவர்களைப் பார்த்-

தாலே, பார்க்கின்றவர்களின் அழகும் பறந்து போகும் போலத் தெரிகிறது. அழகு இருக்கும் இளமைக் காலத்திலும் அவர்களின் அழகில் பாதி செயற்கையாகச் செய்து கொள்ளப்பட்ட 'வேடம்' என்றே சொல்லத்தக்கதாய் இருக்கிறது. இதுதான் ஆடம்பரத்தால் விளையும் அழகு. நான் சொல்லும் அழகு அதுவன்று. வயது நாற்பது நாற்பத்தைந்து ஆனாலும் இளமை தவழும் முகம் விளங்க வேண்டும். ஐம்பது, ஐம்பத்தைந்தானாலும், சித்திரப்பாவைபோல் சாயல் என்னும் மென்மை ஒளிர வேண்டும். இந்த விரிவெல்லாம் வேண்டா. வயது ஆன பிறகும் இரவி வர்மா தீட்டிய கலைமகளின் வடிவம்போல உடல் அமைப்பு விளங்கும்படியாகக் காத்துக்கொள்ளும் பெண்ணே, அழகைக் காக்கும் பெண் என்று சொல்வேன்.

இதற்கு உரிய வழிகள் என்ன ? தக்க உணவு என்ன ? தக்க பயிற்சி என்ன ? எந்த உழைப்பு நல்லது? என்ன பழக்க வழக்கங்கள் நல்லவை ? இப்படி யாராவது எண்ணிப் பார்க்கின்றார்களா ? இல்லையே ! உன் அண்ணிக்கு எவ்வளவோ சொல்கிறேன். அவளும் முழுதும் கேட்டு நடக்கவில்லை. உடம்பு பருமனாகாமல் காத்துக்கொள்ளும் முயற்சியாவது வேண்டுமே ! அழகுக்குப் பகை ஒன்று உண்டு என்றால், அது இயைபு இல்லாமல் உடல் பருத்து வளர்வதுதான். ஆடவருக்கும் அழகு வேண்டும். அவர்களுக்கும் இந்தக்கலை எல்லாம் தெரிய வேண்டும். பெண்கள் அவர்களைவிட அக்கறையோடு இந்தக் கலையைப் போற்ற வேண்டும் அல்லவா ? 'உழைப்பு இல்லாமல் இருக்கக்கூடாது. களைப்பு உண்டாகுமாறு உழைக்கக்கூடாது. தசை நார் திரட்சி பெறுமாறு வன்மையான பயிற்சிகள் செய்யக்கூடாது. குடலில் ஊறிப்புளிக்கும் நிலையை வளர்த்துக்கொள்ளலாகாது. மேன்மையான சுவையுள்ள உணவுகளை அளவுபடுத்தி உண்ண வேண்டும். மந்தப்பொருள்களை மிகுதியாக உண்ணலாகாது,' என்றெல்லாம் தம்பிக்கும் உனக்கும் அடிக்கடி சொல்லியிருக்கிறேன். உங்களுக்கு அப்போதெல்லாம் என்மேல் வெறுப்பாய் இருந்திருக்கும். இப்போதாவது

தெரிந்துகொள்ளுங்கள். பத்து ஆண்டுகள் இருந்து நீங்கிப்போகும் அழகை நாற்பது ஐம்பது ஆண்டுகள் நீடித்துக் காப்பாற்றவும் மக்களால் முடியும். ஆனல், அதற்கு முயற்சி வேண்டும்; நெறி வேண்டும்; அறிவு வேண்டும்.

உன் அன்புள்ள,
அண்ணு.

அருஞ்சொற்பொருள் :

வேண்டாமை - விரும்பாமை, வீழ்ச்சி - கெடுதல் (நட்டம்), வருவாய் - வருமானம், சீர் - சிறப்பு, மணமுறிவு - விவாக ரத்து, பிணக்கு - சச்சரவு, ஆற்றல் - வலிமை, மோகம் - விருப்பம்.

பயிற்சி வினக்கள் :

1. கஸ்தூரிபா வாழ்ந்த வாழ்க்கை பற்றி அப்பா கூறியது என்ன?
2. எளிய வாழ்க்கை, ஆடம்பர வாழ்க்கை இவற்ருல் உண்டாகும் நன்மை தீமைகளைக் குறிப்பிடுக.
3. பாவங்களில் பெரிய பாவம் எது என்று ஆசிரியர் குறிக்கின்ருர்?
4. நாட்டின் முதல் தொண்டரென ஆசிரியரால் போற்றப்படுபவர் யார் ? ஏன் ?
5. இலஞ்ச ஊழலைத் தடுப்பதற்கு ஏற்ற வழி எது ?
6. பெண்ணுலகின் உண்மையான பிற்போக்கு எனக் கூறத் தகுவது எது ?
7. அழகை நீடித்துக் காக்கப் பின் பற்றற்குரிய வழிகள் யாவை ?

13. இசைக் கலைஞர்

[திரு. M. ரம்போலா மாஸ்கரேனஸ் அவர்கள், எம்.ஏ.]

(இவர் திருச்சிராப்பள்ளி செயின்ட் ஜோசப்புக் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர்; தூத்துக்குடிப் புலவர் மாஸ்கரேனஸ் அவர்கள் புதல்வர்.)

இலக்குமண பிள்ளையின் தந்தையார் திருவாளர் எம். திரவியம் பிள்ளையவர்கள், திருவிதாங்கூரில் 'வலிய மேல் எழுத்து அதிகாரி' என்ற தலைமைக் கணக்கர் அலுவல் பார்த்து வந்தார். அவரது குடும்பம் பரம்பரையான சைவக் குடும்பம். அதைச் சார்ந்த பெருமக்கள் வழிவழி வந்த சிவநேயச் செல்வர்கள். இல்லத்தில் நாள்தோறும் சிவபூசை நடைபெறும். தந்தையார் பத்திப் பாசுரங்களான தேவார, திருவாசகங்களை ஓதுவார். இலக்குமண பிள்ளை உடன் சேர்ந்து உள்ளம் உருகப் பாடுவார். பிள்ளையவர்கள் பிற்காலத்தில் ஒவ்வொரு பெருநாளிலும் சிறப்பாகப் பாடிய 'சொற்றுணை வேதியன்', 'காதலாகிக் கசிந்து' என்று தொடங்கும் தோத்திரப் பாக்கள் குழந்தைப் பருவத்தில் தம் தகப்பனாரோடு உள்ளன்புடன் பாடிய பாக்களே ஆகும்.

இசைப் பயிற்சி:

தமது காதல் மைந்தருக்கு இறையன்புடன் இசை ஆர்வம் கிளைத்து எழுந்திருப்பதைக் கண்ட தந்தையார் பெருமகிழ்ச்சி கொண்டார். சிறுவருக்கு ஏழாவது வயது நடக்கும்பொழுது தகுதியும் திறமையும் வாய்ந்த இசை ஆசிரியர்களைக்கொண்டு முறையான இசைப் பயிற்சியைத் தொடங்கினார். சிறுவர் ஏழு ஆண்டுகள் இசையினை ஈடுபாட்டோடு தொடர்ந்து கற்றார். அதன் விளைவாகத் தமது பதினான்காவது வயதில் திருச்செந்தூர் முருகப்பெருமான் மீது ஒரு கீர்த்தனம் இயற்றினார்; தம் தந்தையாரின் பழம்பதியாகிய செந்தூரில் கோவில் கொண்டருளிய செம்மலுக்கு அதனைக் கனிந்த காணிக்கையாக வைத்துப் பணிந்தார்.

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும் பாடும் பணியைக் குமரகுருபரர் எந்தத் திருப்பதியில் தொடங்கினரோ, அதே திருப்பதியாகிய திருச்செந்தூரிலேயே இலக்குமண பிள்ளையின் இன்னிசைப் பணியும் தொடங்குவதாயிற்று.

கலைச் செல்வர் :

இசையில் இயல்பாய் அமைந்த பெருவிருப்பத்தால் இவர் பள்ளிப்படிப்பைப் புறக்கணிக்கவில்லை. இவர் கல்விப் பயிற்சியில் காட்டிய உழைப்பும், ஊக்கமும் மாணவர் கருத்திற்கொண்டு பின் பற்றத்தகுவன. 'ஆக்கம் அதர்வினைய்ச் செல்லும் அசைவிலா ஊக்கமுடையா னுழை,' என்றபடி, அசைவில்லாத ஊக்கத்தை உடையவனிடத்துச் செல்வம் தானே, வழி விசாரித்துக்கொண்டு வந்து சேரும். இந்த உன்னத வாசகத்திற்கு உயரிய இலக்கியமாய் விளங்கினர் இலக்குமண பிள்ளை. இவர் தம் பதின்மூன்றும் வயதில் பள்ளியிறுதி வகுப்பில் தேர்ச்சி பெற்றுர். பி. ஏ. வகுப்பில் சிறப்பாகத்தேறி முதல் பரிசுக்கும் உரியவரானர். கல்லூரித் தலைவர் டாக்டர் ஹார்வி இவரது ஆங்கிலப் புலமையையும் உளநூற்புலமையையும் வியந்து பாராட்டியுள்ளார். சட்டத் தேர்வுக்குப் பயின்று வருங்கால் திருவனந்தைத் திவான் திரு. இராமய்யங்கார் அவர்கள் இவரைக் கணக்குப் பயிற்சிக்காகச் சென்னைக்கு அனுப்பினர்.

கணக்குப் பயிற்சி பெற்றுத் திரும்பியதும் 'ஜமாபந்தி'த் தணிக்கையாளர் வேலையில் மாதம் நாற்பது ரூபாய் சம்பளத்தில் அரசாங்கப்பணி தொடங்கிற்று. உழைப்புத் திறத்தாலும், முயற்சியாலும் படிப்படியாகப் பணிநிலையில் உயர்வு பெற்றுர். மாதம் ரூபாய் இருநூற்றைம்பது சம்பளத்தில் பெரிய கருவூல அலுவலர் பதவி பெற்று அதைப் புகழுடன் நடத்தினர்.

மறக்கவொண்ணுத நிகழ்ச்சி :

இலக்குமணரின் இருபத்தேழாவது வயதில் என்றும்

மறக்கவியலாத ஒரு நிகழ்ச்சி நிகழ்ந்தது: இவர் அருவிக்கரை என்ற ஊருக்குச் சென்றிருந்தார்; அங்கே ஆற்றில் நீராடப் போனூர். நீராடு துறையில் இளைஞர்களின் கும்மாளத்தை எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ? இளைஞராகிய இவர் ஆர்வ மேலீட்டால் ஆற்றிலே திளைத்து விளையாடிய வேளையில் அங்கே பெருவெள்ளத்தில் அகப்பட்டுத் திண்டாடினூர்; திக்குமுக்காடினூர். உயிர் இழக்க இருந்த அந்த நேரத்திலும் இவர் இறைவனிடத்தில் நம்பிக்கையை இழக்கவில்லை. ஆண்டவனை நோக்கி உணர்ச்சிப் பெருக்கோடு ஓலமிட்டார். எவ்வாறு தப்பினூர் என்று அறிந்துகொள்ளக் கூடாத வகையில் இறைவன் இன்னருளால் கரை சேர்ந்தார். இந்நிகழ்ச்சியைக் குறித்து 'முன்னருள் உள்ளல்' என்ற மகுடத்தில் ஓர் இசைப்பாவினை இவர் பாடியுள்ளார்.

சுடச்சுட ஒளிரும் பொன்:

இறை வழிபாட்டில் உள்ளத்தை என்றும் இயைத்து வைத்த இலக்குமண பிள்ளை துன்பத்தில் சலிக்காத வைர உறுதி படைத்தவர். இவருக்கு வாழ்க்கையில் நேர்ந்த இடர்கள் யாவும் இவரை இறைவனேடு இணைக்கும் தொடர்புகளாகவே இருந்தன. சுடச்சுடரும் பொன் போல இவர் துன்பங்களால் புடம்போடப் பெற்று, புத்தொளியுடன் திகழ்ந்தார். இவரது அருமை சான்ற மகன் இறந்தான். பையனது மரணம் இவருக்கு ஆற்ற முடியாத மனவேதனையை அளித்தது. இந்தத் தெய்வ சோதனையிலிருந்து இவர் எப்படி வெளிவந்தார்? இசைச் சாதனையாலேயே வெளி வந்தார் என்று சொல்லுதல் வேண்டும்.

இன்பம் பெருகும் இசைப் பேச்சு:

இலக்குமண பிள்ளை வீணையை மீட்டியே இசைத்தேன் வார்ப்பார். ஒரு பாட்டின் பொருளைக் கேட்டால் அது பாடப் பெற்ற காரணம், பாடிய சமயம், சூழ்நிலை முதலியவற்றை விளக்கமாக எடுத்துரைப்பார். வேதாந்த தத்து-

வார்த்த விளக்கத்துடன் அதன் உட்பொருளை நயந்தோன்ற உணர்த்துவார். சில வேளை இரண்டு அல்லது மூன்று மணி நேரம் விளக்கவுரை நிகழும். ஐந்து நிமிடம் பேசினாலும் எத்துணையோ பயனுள்ள குறிப்புக்களைக் கொடுத்துதவுவார்.

இன்னிசை விருந்து :

இவர் விருந்தினரை வரவேற்று உபசரித்த முறை ஒரு முறையில் விநோதமானதே. வருவிருந்தினரை முகத்தால் அமர்ந்தினிது நோக்கி இருக்கை அளிப்பார்; அளித்ததும் தம் அறைக்குச் செல்வார் ; அங்கிருந்து தம் பக்கத் துணைவனும் பரம தோழனுமான அருமை வீணையைப் பெருமிதத்துடன் பக்குவமாய்ச் சுமந்து வருவார் ; அதில் ஒரு சுருதியை இராக ஆலாபனத்தோடு மீட்டுவார். வீணை நாதத்திற்கு ஏற்ற இசைக்குரல் எடுத்துப் பாடுவார் ; இசை விருந்திற்குப் பிறகுதான் இன்சுவை விருந்து நிகழும்.

பண்பட்ட ஆசிரியர் :

அலுவல் முறையில் இவர் ஆசிரியர் அல்லர். எனினும், வாழ்க்கை முறையில் இவர் பண்பட்ட ஆசிரியர். இவர் தாம் பயின்ற கலையைப் பலருக்கும் பயன்படப் பரிந்தளிக்கும் பரிவு மிகுந்தவர். இவரிடம் இசைக்கலையைக் கற்றுத் தேர்ந்த மாணவர், மாணவியர் பற்பலர். அன்னவர்க்கு இவர் அன்றுடம் இசை பயிற்றும் பணியைத் தமது பற்றுட்டுக் கலையாக மேற்கொண்டிருந்தார். திருவனந்தபுரத்தில் வாழ்ந்த தமிழ் மாணவரிடத்து இவர் தனிப்பேரன்புடையவராய் இருந்தார் ; அவர்களுடைய கூட்டங்களுக்குத் தவறுது வந்திருந்து அவர்களுடைய தமிழறிவையும், ஆற்றலையும் வளர்ப்பதில் பெரும்பங்கு எடுத்துக்கொண்டார்.

அருங்குண சீலர் :

இலக்குமணரின் அருங்குணங்களில் பிறர் குறை உரையாப் பெருமையும், எவ்வெவர்க்குந் தாழ்ச்சி சொல்-

லுந் தகவுடைமையும் குறிப்பிடத் தகுவன. அயலவர் குற்றங்களை இவர் அயர்ந்தும் வெளியிடார். 'அற்றம் மறைக்கும் பெருமை' இவரிடம் உரிமையாய் மருவியிருந்தது. செல்வ வாழ்வினராகிய இச்சீலர், மிகப்பெரிய அலுவல்களை மேற்கொண்டிருந்த இச்சான்றோர், ஏழை எளியவர்களிடத்தும் மிகவும் பணிவாகவே உரையாடுவார். இதை இவரது நெருங்கிய நேயமுடையார் சிலர் விரும்பாது வெகுண்டெழுந்து கடிவர். அந்த வேளையில் இவர் 'பாய்ந்துவரும் புலிக்குழாத்திற்கெதிரே பதுங்கி நிற்கும் பூனைபோல' அடங்கி, "மில்டன் அப்படிச் சொல்லியிருக்கிறார்; ஷேக்ஸ்பியர் இப்படிச் சொல்லியிருக்கிறார்," என்று பொருந்திய மேற்கோள் காட்டிப் பொறுமை, நிதானம், பணிவு இவற்றின் பெருமையைப் புலப்படுத்துவது சுவை நிரம்பியதாக இருக்கும். "அதிகமாகச் சத்தம் போட்டால் உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது அல்லவா?" என்று அமைதியாக வினவி நகைச் சுவையைக் கலந்து அவர்கள் சீற்றத்தைப் போக்குவார்.

நிலையான தமிழ்ப்பணி:

இவர் நூல்கள் இயற்றித் தமிழுக்கு நிலையான அரும்பணியாற்றியிருக்கின்றார். இவ்வாறு நூல்கள் எழுதுவதற்கு ஆதாரமாய் இருந்தது இவரது தொடர்பான கல்வி ஆர்வமே. கல்லூரிப் படிப்பு முடிந்ததும் கல்வி முற்றியதாக இவர் எண்ணி இறுமாந்திருக்கவில்லை. "படமுடியாது இனித்துயரம் அரசே! பட்டதெல்லாம் போதும்," என்று படிப்புத் துறைக்கு முற்றுப்புள்ளி வைக்கவில்லை. "கற்றாரை யான் வேண்டேன்; கற்பனவும் இனி அமையும்," என்று மாணிக்கவாசகர் போன்ற மெய்யுணர்வு பெற்ற ஞானச் செல்வர்கள் உரைக்கலாமேயன்றித் தம் போன்றவர் அவ்வாறு சொல்லவும் கருதவும் இடமில்லை என்பதை இவர் தெளிவாக உணர்ந்தார். கல்லூரிப் படிப்பு முடிந்ததுந்தான் உண்மையான கல்விப் பயிற்சி தொடங்கியதாகக் கொண்டு வாழ்க்கை முழுமையும் தம்மை மாணவராகவே நினைத்துச் செயலாற்றினார்.

கல்லூரியில் ஆங்கில இலக்கியங்களைத் திறன் ஆய்ந்து தெளிந்த முறையைப் பின்பற்றித் தமிழ் இலக்கியங்களையும் தொடர்ந்து துருவி ஆராய்ந்தார்.

சபாக்னீஸ் என்பாரின் கிரேக்க நாடகத்தின் தமிழாக்கம் இவர் இயற்றிய **வீல நாடகம்**. ஷேக்ஸ்பியரின் **சிம்பலீன்** நாடக மொழிபெயர்ப்பாகச் **சத்தியவதி நாடகம்** தோற்றுவித்தார். **இரவிவர்மன்** என்ற வரலாற்றுத்துறை நாடகமும் இவரால் இயற்றப் பெற்றது. இது மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் 1906-ஆம் ஆண்டில் அரங்கேற்றப் பெற்றது. பல பாவினங்களில் **ஞானனந்தன் அடிமாலை, நினைவாட்சி, இயற்கைக் குறிப்பு** முதலிய பாடல்களைப் பாடியுள்ளார். இவர் தமது இருபத்து நான்காம் வயதில் எழுதிய கட்டுரை **தமிழ் மொழி வளர்த்தல்** என்பது. இதைத் தொடர்ந்து தத்துவம், இசை, இலக்கியம் பற்றிப் பல கட்டுரைகளை எழுதியுள்ளார். **தமிழ்ச்சொல் வழக்கு** என்னும் பெயருடன் தமிழ் மரபுச் சொற்களையும் சொற்றொடர்களையும் தொகுத்து ஒரு நூலாக வெளியிட்டுள்ளார்.

இசைத் தமிழ்ச் செல்வர் :

இவரது செய்யுள் திறம் உணர்ந்த அறிஞர் அருள் திருவாளர் **பாப்புலி** அவர்கள், இவரை வங்கக் கவிஞர் இரவீந்திரநாத தாகூருடன் ஒப்பிட்டு உரைத்துள்ளார். 1927-ஆம் ஆண்டு சென்னையில் கூடிய தமிழ் இசை மாநாட்டில் இவரது இசைப் புலமையைப் பாராட்டி ஒரு பொற்பதக்கம் அளித்தார்கள். அங்கே இவர் '**தமிழ்த்தியாகையர்**' என்னும் சிறப்புப் பட்டம் பெற்றார். 1934-ஆம் ஆண்டு திருநெல்வேலியில் கூடிய சென்னை மாகாணத் தமிழர் மாநாட்டில் இவருக்கு '**இசைத்தமிழ்ச் செல்வர்**' என்னும் பட்டத்தை வழங்கினார்கள்.

பொன்றாப் புகழ் :

இவருடைய இசைப்பாக்கள் ஞானம், அறம், பத்தி என முத்திறமாக வகுத்தற்குரியன. அவை சுர அமைப்புடன் அச்சிடப்பெற்று வெளி வந்துள்ளன. இவர்

சென்னை இசைப்பேரவைத் தேர்ச்சியாளர் குழுவில் அமர்ந்து பணியாற்றியுள்ளார். அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தின் சங்கீத பூஷணம் தேர்வுக்கும் தேர்வுத்தாளாசிரியராய் இருந்துள்ளார். எத்தொழிலைச் செய்தாலும், எந்நிலையில் இருந்தாலும், இவர்தம் சித்தமெல்லாம் இறைவன் வயத்ததாகவே இருந்தது. ஆண்டவன் தமக்குச் செய்த அளவில்லாத மாபெருந்துணை நலன்களுக்கு எந்த வகையில் ஏற்ற வண்ணம் நன்றி செலுத்தக்கூடும் என்ற பான்மையில் இவர் ஞானனந்தனடி மாலையில்,

‘உடம்பளித்தாய் உயிரளித்தாய் உணர்வளித்தாய்
உறவளித்தாய் உயிர்வாழ் தற்கே
இடம்படைத்தாய் பொருள்படைத்தாய் எண்ணுவதை
இயற்றஎன்னுள் இடத்தில் மெய்யில்
திடம்படைத்தாய் ஐம்பொறியின் திறம்படைத்தாய்
மறைந்துனையே தேட வைத்தாய்
கடம்படைத்த கருணையினைக் கருதினுனக்கு
எந்நன்றி காட்டு வேனே!’

என்று உருக்கமான கவிதை ஒன்றைப் பாடியுள்ளார்.

பொதுநலத் தொண்டு:

தமிழ் நாட்டில் தமிழிசையைப் பற்றிய கிளர்ச்சி தோன்றியவுடன் இலக்குமண பிள்ளையவர்களின் கீர்த்தனங்கள் பெரிதும் பாராட்டப்பட்டன. இவரது பெருமையையும் தமிழ் நாட்டவர் நன்கு உணர்ந்தனர்.

பிள்ளையவர்களுடையபெருமை இயல், இசை, நாடகம் என்ற முத்திறத்தோடு அமைந்துவிடவில்லை. யாவரிடத்தும் மிக்க பரிவு காட்டி வந்த அன்புச் செல்வர் என்றே இவரைச் சொல்லலாம். திருவிதாங்கூர்த் தமிழ் மக்கள் அங்குள்ள மற்றமக்களை நோக்க, அரசாங்கப் பதவிகளில் மிகத் தாழ்ந்த நிலையிலுள்ளவர்கள் என்பதை உணர்ந்து, அவர்களது உரிமையைப் பாதுகாப்பதற்காகத் தமிழர் சங்கம் என ஒன்று நிறுவியவர்களுள் இவர் முக்கியமானவராவர்.

இவ்வாறு தம் இனத்தவரோடு மட்டுமல்லாமல் பிற உயிர்களிடத்தும் இவர் மிக்க அன்பு காட்டினர். மனிதாபிமான சங்கம் என்ற ஒரு தாபனத்தில் இவர் பெரிதும் ஈடுபட்டு உழைத்து வந்தார். பொதுநலச் சேவையில் இவர் கொண்டுள்ள ஆர்வம் மிகச் சிறந்ததாகும்.

பிள்ளையவர்கள் தமது 86-ஆம் ஆண்டில் இறைவன் திருவடியை எய்தினர். இவரது வாழ்வு, நிரம்பிய வாழ்வு. இவரது நினைவு தமிழ் மக்களால் என்றும் மறவாமல் போற்றுதற்குரியது ஆகும்.

அருஞ்சொற்பொருள் :

பாசுரம் - பாடல், நாற்கவி - (ஆசுகவி, மதுர கவி, சித்திர கவி, வித்தார கவி என்னும்) நான்கு வகையான கவிகள், உள்ளல் - நினைத்தல், கும்மாளம் - குதித்து விளையாடுதல், சுருதி - இசைச் சுரத்திற்கு ஆதாரமான ஒலி, பற்ருட்டு - விருப்ப விளையாட்டு, அற்றம் - மறைக்கத் தகுவது, கடிவர் - கோபிப்பர், சீற்றம் - கோபம், தத்துவம் - தன்மை (பொருள்களின் இயல்பு).

பயிற்சி வினக்கள் :

1. இசைக்கலைஞர் பிள்ளையவர்களது இசைப்பயிற்சி பற்றி நீவிர் அறிந்ததை எழுதுக.
2. திரு. பிள்ளையவர்கள் கலைச்செல்வர் ஆவர்.—எவ்வாறு?
3. பிள்ளையவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த மறக்கவொண்ணுத நிகழ்ச்சி யாது?
4. பிள்ளையவர்கள் பண்பட்ட ஆசிரியர் என்பது எவ்வாறு பொருந்தும்?
5. இலக்குமண பிள்ளையவர்களின் குணநலங்களை விவரிக்க.
6. பிள்ளையவர்கள் பெற்ற சிறப்பியல்புகள் யாவை?
7. பிள்ளையவர்கள் பொதுநலத்தொண்டு புரிவதில் விருப்பமுள்ளவர் என்பது எவற்ருல் தெரிகிறது?

14. கூட்டுறவுப் பண்டசாலைகள்

[திரு. அ. முத்தையா அவர்கள், எம்.ஏ.]

(இவர் பொருளாதாரப் பேராசிரியர்; பொருளாதாரக் கருத்துக்களைத் தமிழில் தெளிவாக எழுதலாம் என்பதை நிறுவியவர்களில் முன்னணியில் உள்ளவர்; ஆங்கிலத்தில் அமைந்த கூட்டுறவு நூற்கருத்துக்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.)

கடந்த ஒரு நூற்றாண்டாகப் பொருளாதார உலகில் பெரிய மாறுதல்கள் உண்டாகி வருகின்றன. நம் நாட்டைவிட மேல் நாடுகளில் இம்மாறுதல்கள் இன்னும் மிகுதி. பொருளுற்பத்தி முறையில் பெரிய மாறுதல்கள் உண்டாவதன் முன் பல பண்டங்களையும் பல தொழிலாளிகளே செய்து வந்தார்கள். அதனால் வரும் இன்ப துன்பங்களை அவர்களே அடைந்து வந்தார்கள். இப்போது அந்தப் பண்டங்களெல்லாம் பெரிய பெரிய தொழிற்சாலைகளில் செய்யப்படுகின்றன. பொருள்களை உற்பத்தி செய்பவர்களுக்கும் அவைகளை வாங்கிப் பயன்படுத்துபவர்கட்கும் இடையே நெருங்கிய தொடர்பு இல்லை.

பொருள்களை வாங்குகிறவர்கள் சில்லறைக் கடைகளில் வாங்குகிறார்கள். சில்லறைக் கடைக்காரர்களோ, பெரிய கடைக்காரர்களிடம் வாங்கி விற்கிறார்கள். பெரிய கடைக்காரர்கள் பொருள் உற்பத்தி செய்வோரிடம் வாங்குகிறார்கள். சில சமயங்களில் ஒரு பொருள் அதனை உற்பத்தி செய்வோரிடமிருந்து அதைப் பயன்படுத்துபவர் கைக்கு வருவதற்குள் அனேக வணிகர்களின் கை மாறுகின்றது. அந்த வணிகர்களில் ஒவ்வொருவரும் சிறிது சிறிது இலாபம் வைத்துக்கொண்டாலும் மொத்தத்தில் இலாபம் அதிகமாகிவிடுகிறது. பெரும்பாலும் சில்லறைக் கடை வைத்திருக்கும் வணிகர்கள் அதிக லாபத்தையே விரும்புகின்றார்கள். கடைக்காரர்கள் தாங்கள் எடுத்துக்கொள்ளும் தொந்தரவிற்குக் கொஞ்சம் ஊதியம் பெற விரும்புவது முறையானதே. ஆனால், அவர்கள் அடையும் இலாபம் அவர்கள் எடுத்துக்கொள்ளும் முயற்சிக்கு எவ்வளவு இருக்கலாமோ அதைவிட

மிகவும் மிகுதியாகவே இருக்கின்றது எனப் பல நாடுகளிலும் பண்டங்களை வாங்குவோர் எண்ணவேண்டியிருக்கின்றது. பொருள்களை உற்பத்தி செய்வோர்க்கும் அவற்றைப் பயன்படுத்துவோர்க்கும் இடையில் எந்த நடுவர்களும் இல்லாவிட்டால், பெரும்பாலும் எல்லாப் பொருள்களையும் குறைந்த விலைக்கே பெற முடியும் என மக்கள் எண்ணலானார்கள். எனவே, வணிகர்களின் உதவியில்லாமல் பொருள்களைத் தாங்களே வாங்குதல் பல வகையிலும் நல்லது என உறுதி கொண்ட சிலருடைய முயற்சியே, இப்போது கூட்டுறவுப் பண்டசாலைகள் என்னும் உருவம் பெற்று விளங்குகின்றது. பண்டங்களை நேரே வாங்கும்போது, பலர் சேர்ந்து வாங்கலாம்; பலர் சேர்ந்து அதிகமான அளவு பண்டங்களை வாங்கும்போது குறைந்த விலைக்கு வாங்கவும் கூடும்; நல்ல பண்டங்களாக வாங்கவுமுடியும். முன் வணிகர்களைச் சேர்ந்த இலாபமெல்லாம் இப்போது பண்டங்கள் வாங்குவோரையே சேரும். இதுவே கூட்டுறவுப் பண்டசாலைகள் தோன்றியதன் சிறந்த காரணம்.

அனேகமாக ஏழைகள்தாம் தாங்கள் வாங்கும் பண்டங்கட்கு மிகுவிலை கொடுக்கும்படி நேருகின்றது. ஏழைகளும் தொழிலாளிகளுமே சில்லறைக் கடையிலே தங்கட்கு வேண்டிய பண்டங்களை வாங்குகின்றார்கள். ஒரு மாதத்துக்கு வேண்டும் பண்டங்களைக்கூட மொத்தமாக வாங்க அவர்கட்கு முடியாது. பெரும்பாலும் ஒரு நாளைக்கு, அல்லது ஒரு வாரத்திற்கு வேண்டும் பண்டங்களை அவர்கள் வாங்குகிறார்கள். அப்பண்டங்களுக்குச் சில்லறைக் கடைக்காரர் வைத்ததுதான் விலை. பெரும்பாலும் அந்தக் கடைக்காரர் வைத்து விற்கும் பண்டங்கள் மிகவும் மோசமானவை. சில்லறை வணிகர்கள் தாழ்ந்த சரக்குகளை உயர்ந்த விலைக்கு விற்று ஏழைகளின் வாழ்க்கை அடிப்படையை உறிஞ்சிவிடுகிறார்கள். இன்னும் கடனுகச் சாமான் வாங்குவதென்றாலோ, கேட்க வேண்டுவதில்லை. விலை உயர்ந்துவிடும்; சாமானுடைய நிலை இன்னும் குறைந்துவிடும். இத்துன்பத்தினின்றும்

சிறப்பாக ஏழைகளை விடுவிக்க எழுந்துள்ளதே கூட்டுறவுப் பண்டசாலை ஆகும்.

பண்டம் வாங்குவோர்தாம் இக்கூட்டுறவுப் பண்டசாலைகளை நடத்துகின்றனர். 'வணிக நுட்பங்கள் தெரியாது தொண்டாற்றிவரும் உழைப்பாளிகளின் இக்கூட்டுறவுப் பண்டசாலைகளை எப்படிச் சிக்கன முறையில் நடத்த முடியும்?' என்று சிலர் நினைக்கக் கூடும். 'இலாபத்தைக் கருதி உழைக்காத சிலர் இந்தப் பண்டசாலைகளை நன்றாக நடத்துவதில் எப்படி அக்கறை எடுத்துக்கொள்ளக் கூடும்?' என்று சிலர் கருதலாம். ஆனால், நடைமுறையில் இப்பண்டசாலைகள் மிகச் செவ்வையாக வேலை செய்து வருகின்றன. ஏனெனில், இப்பண்டசாலைகட்குத் தனிப்பட்ட சில வசதிகள் இருக்கின்றன.

இப்பண்டசாலைகள் பொருள்களை உறுப்பினர்கட்கே விற்கின்றன. பண்டசாலையின் உறுப்பினர்கள் அங்கேயே எல்லாப் பொருள்களும் வாங்குவதால், யாராவது வாங்க வருவாரோ வரமாட்டாரோ என்னும் கவலை இதை நடத்துவோருக்குச் சிறிதும் இல்லை. மாதாமாதம் உறுப்பினர் இவ்வளவு வாங்குவர் என்னும் ஒரு திட்டம் தெரியுமாதலால், அதிகமாகக் கட்டுக் கடைச்சரக்குத் தங்குவதற்கு இடமில்லை. பொதுவாகக் கடைகளைப் பலரது கண்ணில் படும்படி தெரியத் தெருவில் வைக்க வேண்டியிருக்கின்றது. பொதுக் கடைகட்கு விளம்பரம் இன்றியமையாதது. ஆகையால், அவை இக்காரியங்கட்காக மிக்க பொருள் செலவிட வேண்டியுள்ளது. கூட்டுறவுப் பண்டசாலைகட்கோ, இந்த வகையில் செலவே இல்லை. ஒரு சந்தில் வைத்தாற்கூட உறுப்பினர்கள் வந்து சேர்ந்துவிடுவார்கள். உறுப்பினரல்லாத மற்றவர்கட்கு விளம்பரம் வாயிலாகத் தெரிவிக்க வேண்டுமென்ற தேவையுமில்லை. ஒரு கடையை ஒருவர் மற்றொருவருக்கு அறிமுகம் செய்யமாட்டார். ஆனால், கூட்டுறவுப் பண்டசாலையையோ, ஒருவர் தம் நண்பர் பலருக்கும் அறிமுகம் செய்ய விரும்புவார்.

கடைகளில் கடன் வியாபாரமும் நடக்கின்றது.

பலருக்குக் கடன் கொடுக்கும்போது, சிலர் கடனைத் திருப்பிக் கொடுக்காமல் மோசம் பண்ணவும் கூடும். இது போலச் சில கடன் கொடுக்கப்படாமல் போனாலும் தங்கட்குப் பொருட்கேடு உண்டாகாதவாறு, கடன் வியாபாரத்தில் எல்லாச் சாமான்களையும் அதிக விலைக்குத் தான் அவ்வியாபாரிகள் கொடுக்கிறார்கள். ஆனால், கூட்டுறவுப் பண்டசாலையில் இவ்வகையான அதிக விலையே இல்லை. ஏனென்றால், கூட்டுறவுப் பண்டசாலைகளில் நடைபெறும் வியாபாரம் எல்லாம் ரொக்க வியாபாரமே; கடன் வியாபாரம் இல்லவே இல்லை. ஆகவே, கூட்டுறவுப் பண்டசாலையின் சாமான்கள் அதிக விலை உடையவை அல்ல.

இனி, தனி மனிதன் கடைவைத்து நடத்தினால் எல்லா வேலைக்கும் சம்பள ஆட்களையே வைக்க வேண்டியுள்ளது. கூட்டுறவு முறையில் வைத்து நடத்தினாலோ, செயலாளர் முதலியவர்கட்கு மிக்க சம்பளம் கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால், கூட்டுறவுப் பண்டசாலைகளிலோ பெரும்பான்மையான வேலைகள் ஊதியத்தை விரும்பாதவர்களால் செய்யப்படுகின்றன. பலர் குறைந்த சம்பளத்துக்கு வேலை செய்ய முன் வருகின்றனர். ஒரு பெரிய உபகாரமான இயக்கத்துக்கு வேலை செய்யும்போது குறைந்த ஊதியம் கிடைத்தால் போதுமென்று பலர் எண்ணுகின்றனர். பல சிறந்த அறிவாளிகள் கூட்டுறவு இயக்கங்களில் மிகக் குறைந்த சம்பளம் பெற்றுக்கொண்டு உழைத்து வருகிறார்கள். கூட்டுறவு இயக்கத்தில் குறைந்த சம்பளத்துக்கு வேலை செய்து வந்த ஒரு பெரிய அறிவாளரை ஒருவர் கேட்டபோது "நான் அதிக சம்பளத்தை விரும்பவில்லை. என்னை, என்னுடன் வேலை செய்பவர்கள் பெரிதும் மதிக்கின்றார்கள். என்னிடம் ஆட்சி உரிமை உள்ளது. எனக்குக் கூட்டுறவு இயக்கத்தின் கொள்கையில் முழு நம்பிக்கை உண்டு. இவைதாம் என்னை முற்றிலும் அமைதி அடையச் செய்கின்றன," என மகிழ்ச்சியுடன் பதில் கூறினாராம்.

ஒவ்வொரு சங்கமும் பண்டசாலையும் அதற்கு வேண்டிய சாமான்களைத் தனியே வாங்குவதில்லை. இந்தக் கூட்டுறவு பண்டசாலைகள் பல சேர்ந்து, கூட்டுறவு மொத்த வியாபாரப் பண்டசாலைகளை ஏற்படுத்திக்கொண்டுள்ளன. இந்த மொத்தப் பண்டசாலைகள் சாமான்களை அதிகமாக வாங்குவதால் குறைந்த விலைக்கு வாங்க முடிகிறது. மேலும், மொத்தப் பண்டசாலைகள் தாமே தொழிற்சாலைகளை ஏற்படுத்தி நடத்திப் பல கூட்டுறவுப் பண்டசாலைகட்கும் வேண்டும் சாமான்களைக் கொடுக்கின்றன. உதாரணமாக, இங்கிலாந்தின் மொத்தப் பண்டசாலை, தனக்கு வேண்டிய தேயிலை, காப்பிக்கொட்டை இவைகளைத் தனக்குச் சொந்தமான தேயிலை காப்பித் தொழிற்சாலையில் செய்யும் சாமான்களையே பல பண்டசாலைகளும் வாங்கி விற்கின்றன.

இந்தப் பண்டசாலைகளில் சாமான்களை வாங்குவதனுல் நம்மை அறியாமலே நாம் பணத்தைச் சேர்க்கிறோம். எப்படி என்றுல், இப்பண்டசாலைகள் நாம் வாங்கும் சாமான்கள் எவ்வளவெனக் கணக்கு வைத்துக்கொள்ளுகின்றன. ஆறு மாதங்கழித்தோ, ஒரு வருடம் கழித்தோ, பண்டசாலையின் கணக்குப் பார்க்கும்போது வருகிற லாபத்தைச் சாமான் வாங்கிய அளவுக்கேற்பப் பங்கிட்டுக் கொடுப்பதால், நமக்கு மொத்தமான ஒரு தொகை கிடைக்கிறது.

இந்தக் கூட்டுறவுப் பண்டசாலைகள் ஆங்காங்குத் தோன்றியிருப்பதால் அந்த இடங்களிலெல்லாம் ஏனைய வியாபாரிகளும் தங்களுடைய சாமான்களைக் குறைந்த விலைக்கு விற்கிறுர்கள். அவ்விதத்தில் இப்பண்டசாலைகளின் உறுப்பினர்களே அன்றி மற்றவர்களும் நன்மை அடைகிறுர்கள்.

பண்டசாலைகள் பல ஏழைத் தொழிலாளிகட்கு அறிவூட்டும் இயக்கங்களாகவும் விளங்குகின்றன. பேராசிரியர் சி. ஆர். பெ. என்பவர் இப்பண்டசாலைகள் நான்கு வகையாகத் தொழிலாளர்கட்கு உதவியாயிருக்கின்றன எனக் கூறியிருக்கிறுர்.

முதலாவது, தொழிலாளிகளிடையே தன்னுட்சி முறையைப் புகுத்தியிருக்கின்றன.

இரண்டாவது, தொழிலாளர்கள் எல்லாச் சாமான்களையும் காசு கொடுத்தே, அதாவது ரொக்கத்துக்கே வாங்கும்படி செய்கின்றன.

மூன்ருவது, தொழிலாளர்களிடையே சிக்கனத்தைப் பரப்பி, அவர்கள் பணம் சேர்த்து வைக்கும் பழக்கத்தை வளர்ச்சி செய்துள்ளன.

நான்காவது, பொதுவாக எல்லாத் தொழிலாளர்களுடைய அறிவு வளர்ச்சிக்காகவும், நன்னடத்தை வளர்ச்சிக்காகவும் எல்லா உறுப்பினரையும் உழைக்கச் செய்து வருகின்றன.

இவை பண்டசாலைகளால் உண்டாகும் பொது நன்மைகளாகும்.

இனி இந்த இயக்கங்களில் ஒவ்வோர் உறுப்பினருக்கும் ஒவ்வோர் ஓட்டே இருப்பதால், சில கம்பெனிகளில் இரண்டொருவர் தம்முடைய வாக்குரிமை வன்மையால் மற்றவர்கள் முயற்சியை வீணுக்கல் போல, இங்கே செய்வதற்கில்லை. பண்டசாலைகளின் பல காரியங்களையும் உறுப்பினர்களே பார்ப்பதால், வியாபாரத்திலும் சிறு இயக்கங்களை நடத்துவதிலும், உறுப்பினருக்குப் பயிற்சி உண்டாகிறது. இந்தப் பயிற்சியினுல் அவர்கள் தங்கள் நன்மைக்கான பல காரியங்களைச் செய்துகொள்ளும் ஆற்றலைப் பெறுகின்ருர்கள்; பல பொறுப்பான நிலையங்களை நடத்தத் திறமை உடையவர்கள் ஆகிருர்கள்.

வியாபாரிகள் பலர் சாமான்களைக் கடன் கொடுக்கிருர்கள். அனேகமாகப் பலர் கடனுக்குச் சாமான்களை வாங்குவதையே விரும்புகின்றனர். இக்கூட்டுறவுப் பண்டசாலைகளில் சேர்வோர் கடன் வாங்காதிருப்பதால், நாளடைவில் சிக்கன வாழ்க்கை முறைகளைக் கற்றுக்கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது; வருவாய்க்கேற்ற செலவு செய்யும் பழக்கமும் உண்டாகிறது.

இலாபத்தில் பங்கு கொடுப்பதென்ற முறை சிக்கனத்தை வளரச் செய்கின்றது. இந்த வகையில் இங்கி-

லாந்து தேசத்தில் உறுப்பினர் பெருந்தொகையினராய் இருக்கின்றனர். கூட்டுறவு இயக்கங்களில் வரும் இலாபத்தில் ஒரு பகுதி கல்வி முன்னேற்றத்திற்காக உபயோகப்படுகின்றது. இங்கிலாந்திலே இவ்வகையில் கூட்டுறவு இயக்கங்கள் செலவிடும் தொகை அதிகம். இந்தப் பணத்திலிருந்து கூட்டுறவைப் பற்றிய அறிவைப் பரப்பும் வேலை செய்யப்படுகிறது. அங்கே கூட்டுறவு இயக்கத்தின் வரலாறும் கூட்டுறவு இயக்கம் பல தேசங்களிலும் எப்படி நடக்கிறதென்னும் விவரங்களும் தெரிவிக்கப்படுகின்றன.

இனி, இந்த இயக்கங்கள் பல நூல் நிலையங்களையும் வைத்து நடத்துகின்றன; பல சொற்பொழிவுகள் நடைபெறும்படி செய்கின்றன. இவை மேலும் பல படிப்பகங்களை ஏற்படுத்தியிருக்கின்றன; வெளியூருக்குப் பலர் சேர்ந்து போகும் ஏற்பாடுகளைச் செய்கின்றன; பல வித விளையாட்டுக்களையும் உறுப்பினரின் நன்மைக்காக ஏற்படுத்துகின்றன. கூட்டுறவுப் பண்டசாலைகள் தொழில் உலகிலும் தலை சிறந்து நிற்கின்றன. பண்டசாலைகள் தமக்கு வேண்டும் சாமான்களில் பலவற்றைத் தாமே செய்துகொள்கின்றன.

அருஞ்சொற்பொருள் :

தொடர்பு - கூட்டுறவு, ஊதியம் - இலாபம், நடுவர் - வாங்கி விற்கும் வணிகர், பண்டசாலை - பண்டங்கள் விற்குமிடம், ஏனைய - மற்ற, தன்னாட்சி - சுய ஆட்சி, படிப்பகம் - வாசகசாலை.

பயிற்சி வினாக்கள் :

1. பொருளாதார உலகில் சென்ற ஒரு நூற்றாண்டாக ஏற்பட்டு வரும் பெரிய மாறுதல் யாது?
2. கூட்டுறவுப் பண்டசாலை தோன்றுவதற்குரிய காரணம் என்ன?
3. கூட்டுறவுப் பண்டசாலைகளின் தனி வசதிகள் யாவை?
4. இப்பண்டசாலைகள் பண்டங்களை வாங்கும் விதம் யாது?
5. இப்பண்டசாலைகளால் உண்டாகும் நன்மைகள் யாவை?
6. கம்பெனிகளுக்கும் கூட்டுறவுப் பண்டசாலைகளுக்கும் உள்ள வேறுபாடு யாது?
7. இங்கிலாந்தில் கூட்டுறவுப் பண்டசாலைகள் செய்துவரும் அலுவல்கள் எவை?

15. சீதக்காதி

[வித்துவான் வி. பி. குழந்தைவேற்சோழகரவர்கள்]

[இவ்வாசிரியர் திருச்சிராப்பள்ளி செயின்ட் ஜோசப்புக் கல்லூரி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய்ப் பணி புரிந்தவர்; பல பாட நூல்களின் ஆசிரியர்.]

தாய்மொழிப் பற்றே தாய்நாட்டுப் பற்றுகும். தாய்நாட்டுப் பற்றுத் தலைதூக்கத் தாய் மொழி செழுமையுற வேண்டும். தாய் மொழி செழிக்க, அம்மொழி வல்லுநர்களான புலவர்கள், பாதுகாக்கப்பட வேண்டும். இந்தக் கருத்து நம் முன்னவர் கண்ட உண்மை. இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இவ்வுண்மை நம் நாட்டில் வேரூன்றி இருந்தது. இங்குத் தோன்றிய அரசர்களும், செல்வர்களும், வள்ளல்களும் தம் செல்வத்தைச் செல்வமென மதியாது, வறுமையுற்ற தமிழ்ப்புலவர்கட்கு வாரிவழங்கினர்; வறுமை நீங்கி மனமுவந்த அப்புலவர்களால் நா மணக்க வாயாரப் பாடப்பட்ட செந்தமிழ்ப் பாக்களைக் கேட்டு அகங் குளிர்ந்தனர். இங்ஙனம் பற்பல பாவலர்களால் பல சமயங்களில் பாடப்பெற்ற பாக்களே **பத்துப்பாட்டு, எட்டுத்தொகை** என்னும் சங்கத் தமிழ் நூல்களாய் இன்று நம்மிடை உலவி வருகின்றன.

சங்க காலத்திற்குப் பிறகும் செந்தமிழ் வளர்ச்சிக்குத் தளர்ச்சியில்லை. அன்று தொடங்கி இன்று வரையில் அதன் வளர்ச்சியில் கருத்துக்கொண்டு, உடல், பொருள், ஆவி ஆகிய இவற்றை உவந்தளித்த மொழிப்பற்றுள்ள மேலோர் பலப்பலர். அவர்கள் சாதிசமயக் கொள்கைகளில் முற்றிலும் வேறுபட்டவர்களாயினும், தாய்மொழிவளர்ச்சியில் மனமொன்றி உதவி புரிந்தவர்கள். அவர்களில் இந்துக்கள், கிறித்தவர்கள், முசுலீம்கள் முதலியபல சமயத்தினரும் உள்ளனர். இவ்வாறு முற்காலத்தினரும் பிற்காலத்தினரும் தமக்குள் எத்துணை வேறுபாடுகளிருப்பினும், அவற்றை மறந்து தாய் மொழி வளர்ச்சியில் மனங்கலந்து ஆதரவு காட்டினமையால்தான், இன்று தமிழ் யாவரும் விரும்பும் இனிய நிலையில் இருக்கின்றது.

இன்றைய இன்பத் தமிழைக் கற்கும் நமக்கு அதனை வளர்த்த வண்மையாளரைப் பற்றிக் கற்பதும் கடைமையாயிற்று. அக்கடமையைத் தலைமையாகக் கொண்ட நாம், இவண் தமிழ்ப்பற்றால் தண்டமிழ்ப்புலவரைத் தயங்காது தாங்கிய முசுலீம் வள்ளல் ஒருவரது வரலாற்றைக் காண்போம் :

இற்றைக்குச் சுமார் முந்நூறு ஆண்டுகட்கு முன்னர்ப் பாண்டி நாட்டில் கீழ்க்கரை என்னும் ஊரில் தமிழ்ப் பற்றுள்ள ஒரு முசுலீம் வள்ளல் இருந்தார். அவரது இயற்பெயர் செய்கு **அப்துல் காதர் மரக்காயர்** என்பது. தமிழர் அதனைச் சுருக்கிச் **சீதக்காதி** என்று அமைத்துக் கொண்டனர். அப்பெரியார் பல நற்குணங்களுக்கும் உறைவிடமாயிருந்தார். ஒழுக்கத்தையும் அவர் உயிரினும் உயர்ந்ததாக ஓம்பி வந்தார். அவர்பால் பல மரக்கலங்கள் இருந்தன. அம்மரக்கலங்களில் நம் நாட்டுப் பொருள்களை ஏற்றிக்கொண்டு அயல்நாடுகளுக்குச் சென்று விற்று வந்தமையால், அவர் பெருஞ்செல்வராயுமிருந்தார்.

குணச் செல்வமும், பொருட்செல்வமும் பெற்ற அவர், கல்விச் செல்வத்தையும் விழைந்தார்; அவர்க்கு இயற்கையாகவே போதிய தமிழ்ப் பயிற்சியும் தேர்ச்சியும் இருந்தன. அவற்றை மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டுமென்று அவர் ஆர்வமுற்றார். அதனால், அவர் கற்றோர் கூட்டுறவை நாடினார். பொன்னென அவர்களைப் போற்றி அவர்கள்பால் தெள்ளிய தமிழ்ப் பாக்களையும் பிறவற்றையும் கேட்டுக்கேட்டு இன்புற்றார். தாமின்புறுவது மட்டும் போதுமா? தம்மை இன்புறுத்தும் புலவர்களும் இன்புற வேண்டாவா? அதன்பொருட்டு அவர் தம்மிடமுள்ள பொருளைத் தாராளமாக அள்ளிக் கொடுத்து அவர்களையும் மகிழ்வித்தார். சீதக்காதியின் இச்செவ்விய செயல், சின்னாளில் தமிழ் நாடெங்கும் பரவியது. தமிழ் நாட்டில் பல வேறிடங்களிலும் வறுமையால் வாடிய தமிழ்ப் புலவர்கள் சீதக்காதியின் வள்ளன்மையைக் கேள்விப்பட்டுத் தங்கள் வறுமையைப் போக்கும்பொருட்டு அவரை நாடுவாராயினர். அவரைக்கண்டு காலத்திற்கு

ஏற்பப் பேசியும், செய்யுள் பாடியும் அவரை உவப்பிப்பாராயினர். செம்மல் சீதக்காதியின் உள்ளம் தமிழில் தோய்ந்து ஆய்ந்து உவப்புற்றது. அவர் கைகள் தம்மை நாடி வந்த புலவர்களுக்குக் கொடுத்துச் சிறந்தன. சீதக்காதியின் அருங்குணங்களாலும் பெருங்கொடையாலும் ஈர்க்கப்பட்டு, அவர்பால் நட்புப் பூண்டு ஒழுகிய தமிழறிந்த பெரியோர் அந்நாளில் எண்ணிலடங்கார். அவர்களுள் சிறப்பாக ஈண்டுக் குறிப்பிடத் தகுந்தவர் **படிக்காசுத் தம்பிரான்** என்னும் சைவப் பெரியாரும் புலவர் பெருமானுருமாவர்.

சீதக்காதி சிறந்த மதப் பற்றுடையவர். இசுலாத்தின் தலைவரான நபிநாயகமவர்களிடமும் அம்மத குருக்களான ஏனையோரிடமும் அளவுகடந்த அன்பு காட்டி, அம்மதக்கட்டுப்பாடுகளை எள்ளளவும் மீருது தம் வாழ்க்கையை நடத்தி வந்தார். அவருக்குக் கல்வி புகட்டும் ஆசிரியராகவும் மதகுருவாகவும் அமைந்தவர் **செய்கு சதக்கத்துல்லா** என்னும் பெரியாராவர். அவர்க்கு அக்காலத்தில் இந்தியா முழுவதும் நல்ல செல்வாக்கிருந்தது. அவர் இசுலாத்தில் சிறந்த தத்துவ ஞானியார்; உண்மையான துறவியார். அவர் சீதக்காதியைத் தம் உயிர் நண்பராகக் கருதி, அவர்பால் அளவுகடந்த அன்பு பூண்டு ஒழுகி வந்தாரென்றல், சீதக்காதியின் சீரிய குண ஒழுக்கங்களுக்கு வேறென்ன சான்று வேண்டும்? அக்காலத்தில் வடநாட்டை ஆண்டுவந்த மொகலாயப் பேரரசர் ஔரங்கசீபு என்பவர். அவர் தமது ஆட்சிக்குட்பட்ட வங்காளத்தில் அரசியலறிவும் திறமையும் வாய்ந்த ஒருவரைத் தமக்குப் பிரதிநிதியாக அமர்த்த விரும்பினர். அந்தப் பதவிக்குத் தகுந்த ஒருவரைத் தெரிந்தெடுத்து அனுப்புமாறு கீழ்க்கரையிலிருக்கும் செய்கு சதக்கத்துல்லா என்பவருக்குத் திருமுகம் போக்கினர். அப்பெரியார் பேரரசரின் பெருவிருப்புக்கேற்றவர் சீதக்காதியே என்பது தெரிந்து, அவரை ஔரங்கசீபுவிடம் அனுப்பி வைத்தார். ஔரங்கசீபுவும் சீதக்காதிபால் அன்பும் பெருமதிப்பும் காட்டி அவரை வங்காளத்தில் பதவி ஏற்கச் செய்தார்.

ஆனுல், பதவி ஏற்ற சின்னுட்களுள் அந்நாட்டு தட்ப-வெப்பநிலை சீதக்காதிக்கு ஊறு செய்தமையால், அவர் பதவியினின்றும் விலகிக் கீழ்க்கரைக்கே வந்து சேர்ந்தார். இந்நிகழ்ச்சி சீதக்காதியின் அரசியலறிவையும் திறமை-யையும் தெள்ளிதிற்காட்டப் போதுமான சான்றல்லவா?

சீதக்காதி தமதூருக்கு வந்த பிறகும், முன்போலவே தம் வாணிபத்தைத் தொடங்கி நடத்திஞர்; ஓய்வு நேரங்களில் தண்டமிழ்ப் புலவர்களோடிருந்து தமிழை ஆராய்ந்து தாய் மொழிப் புலமையைப் பெருக்கிஞர்; ஏழைகள், ஆதரவற்றவர், பிணியாளர் இவர்கட்குப் பொருளீந்து திசையுள்ளார் அறிய இசையை வளர்த்தார். இந்நாளில் சேதுநாட்டிற்கரசராயிருந்தவர், விசய ரகு-நாத சேதுபதி அவர்கள் ஆவர். அவர் சீதக்காதியின் சிந்தைக்கினிய பண்புகளையும் சீரிய அறிவுத் திறனையும் கேள்விப்பட்டு, அவரை வரவழைத்து அவரோடு நட்புப்-பூண்டார். அவரால் சில உதவிகளையும் தாம் பெற்று, தாம் அவர்பால் கொண்ட அன்பிற்கறிகுறியாகத் தம் பெயரையே பட்டப் பெயராக அவருக்குத் தந்து அவரைப் போற்றிஞர்.

இங்ஙனம் சீதக்காதி தமிழ்க்கொடி வளரக் கொழு கொம்பாகவும், பாவலர் போற்றும் காவலராகவும், புலவர்க்கரு நண்பராகவும் இருந்து வருநாளில், உயிர்களை வருத்தும் வற்கடம் பாண்டி நாட்டை அடிமைப்படுத்-தியது. பல ஆண்டுகள் சேர்ந்தாற்போலப் பூமி மழைத்-துளியை அறியவில்லை. வெயிலின் கொடுமை சொல்-லுந்தரமன்று. விளை நிலங்களிலும் காடுகளிலும் புல் பூண்டும் தலை காட்டவில்லை. கிணறுகளிலிருந்து நீர் இறைத்துச் சாகுபடி செய்யப்படும் நிலங்களிலும் பயிர்-கள் வெயிலுக்காற்ருது கருகிச் சாம்பின. இந்த நிலையில் மக்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைப்பது அருமையாய்விட்டது. இக்காலத்தைப்போல அக்காலத்-தில் போக்குவரவு சாதனங்கள் இன்மையாலும், மேலும் பஞ்சம் நீடித்தால் என்ன செய்வதென்று அஞ்சித் தம்-மிடத்தில் உள்ள தானியங்களைப் பதுக்கி விட்டமை-

யாலும், உண்பொருள்களின் விலை, யானைவிலை, குதிரை விலையாயிருந்தது. சில சமயங்களில் நெல்லின் அளவுக்குச் சரிக்குச் சரி பொன் கொடுத்து அதனைப் பெற வேண்டியிருந்ததாம்! அவ்வளவு கடுமையான பஞ்சகாலமது! எத்துணைப்பேர் இப்படிப் பொன்கொடுத்து நெல்லை வாங்கியுண்டு வாழ முடியும்? அக்கால ஏழை மக்கள் கூழுக்குப் பட்ட துன்பம் எண்ணவும் முடியாதது.

நாட்டு மக்களின் இத்தகைய நலிவைச் சீதக்காதியால் கண்கொண்டு பார்க்க முடியவில்லை. அவர் உள்ளம் அனலில் இட்ட மெழுகுபோல அன்பால் உருக, அவர் தம் களஞ்சியத்திலுள்ள நெல்லை ஏழைகளுக்கு அள்ளிக் கொடுத்து அவர்கள் பசியை நீக்க முன் வந்தார். "இது என்ன அறியாமை! இப்படி இவர் செய்தால், இவரே உணவுக்குத் திண்டாடும் நிலைமை ஏற்படுமே!" என்று எண்ணிய அவர்தம் காரியக்காரர் அவர் செயலைத் தடுக்க முயன்றனர். ஆனால், காரியக்காரர் முயற்சி பயனளிக்கவில்லை. சீதக்காதி வள்ளல் தம்மிடமுள்ள நெல்லையெல்லாம் வறியவர்கள் துயர் நீங்கக் கொடுத்து, அவர்கள் போற்ற உள்ளமும் உடலும் ஒருசேரப் பூரித்தார். சீதக்காதியின் இத்தகைய அன்னதானச் செயலைப் படிக்காசுத் தம்பிரான் என்னும் பெருந்தகையார்,

'ஓர்தட்டி லேபொன்னும் ஓர்தட்டி லேநெல்லும் ஒக்கவிற்கும்
கார்தட் டியபஞ்ச காலத்தி லும்தங்கள் காரியப்பேர்
ஆர்தட்டி னும்தட்டு வாராம லேஅன்ன தானத்துக்கு
மார்தட் டியதுரை மால்சீதக் காதி வரோதயனே.'

என்று சிறப்பித்துப் பாடியுள்ளார்.

இவ்வாறு தம்மைச் சேர்ந்தவர்களை நிழல் மரம் நேரொப்பத் தாங்கிப் பழுமரம் போலத் தம் பயனைத் துய்க்கச் செய்து இன்புறுத்தி வந்த சீதக்காதிக்கு இறுதி நாள் எய்தியது. உற்றார் உறவினர், கவலையை முகத்தில் தேக்கி, அவரது படுக்கையைச் சூழ்ந்திருந்தனர். அப்போது சீதக்காதி தமது நிலையை மெய்யுணர்வால் அறிந்து, தம் உறவினரை நோக்கி, "நான் இறந்ததும் என் விரல் மோதிரத்தைக் கழற்றாமலே, என்னை

அடக்கம் செய்துவிடுங்கள்,'' என்று கேட்டுக்கொண்டார். அவர்களும் அவ்வாறே செய்வதாகச் சொன்னது கேட்ட அவர் முகமலர்ந்து இளநகை அரும்ப, அந்நிலையிலேயே அவரது உயிர் உடலை விட்டுப் பிரிந்தது. கண்ணிலியாம் காலன் அவருயிரைக் குடித்துத் திளைத்தான். அக்காலை அவரைப் பிரிந்த சுற்றத்தார் மனம் மருண்டு வாய் விட்டரற்றினர். புலவர் குழாம், ''தமிழை வளர்த்த புண்ணியர் தரணியை விட்டு நீங்கினரே! இனிப் புலவர்களைத் தகுதியறிந்து புரப்பவர் யாருளர்!'' என ஏங்கியது. ஏழை இரவலர் இறக்கை ஒடிந்த பறவை போல மனமிரங்கிப் புலம்பினர். எல்லோர் கண்களும் துன்ப நீரை உகுத்தன; இந்த நிலையில் சீதக்காதியின் உடலை அவர் சுற்றத்தார், தம் மதத்திற்குரிய சடங்குகளுடன் அடக்கம் செய்தனர். அவரது பூதவுடல் பூமிக்குள் ஒடுங்க, அவருயிர் இறைவன் திருவடி நீழலை அடைந்து இன்புற்றது.

நாட்கள் பல சென்றன. வள்ளல் இறந்த செய்தி தமிழ் நாட்டில் எங்கும் நன்கு பரவவில்லை. அந்நிலையில் வள்ளல்பால் சிதையா அன்பு கொண்ட படிக்காசுத் தம்பிரான் அவரைக் காணக் கீழ்க்கரைக்கு வந்தார்; உள்ளடங்கா ஆவலுடன் வள்ளல் இல்லத்தை விரைந்தடைந்தார். அங்கு அவர், ''வள்ளல் வானவர் விருந்தாயினர்,'' என்பதல்லது வேறொன்றையும் கேட்டிலர். புலவர் பெருமான் உள்ளமும் உடலும் புழுப்போலத் துடித்தன. அவர் கண்களுக்குப் பூமியும் வானமும் சுழல்வன போலத் தோன்றின. அவரடைந்த துன்பத்திற்கு முடிவில்லை; ஆறுதலுக்கொரு வழியுமில்லை. நெடுநேரம் செயலற்று நின்ற அவர், சிறிது உள்ளம் தேறுதலுற்று, வள்ளல் புதையுண்ட இடத்தையாவது கண்டு தம்மூர் திரும்பலாம் என உறுதி பூண்டார். பிறகு அவர் அவ்விடத்தினின்றும் புறப்பட்டு இடுகாட்டிற்கு வந்தார். அங்கே வள்ளலின் சவக்குழிக்கு முன்வந்து அவர் நின்ற போது அவரது உள்ளத்தில் அடைபட்டுக் கிடந்த துயர் மடை திறந்த கடல் போல வெளிப்படலாயிற்று. புலவர்

பெருமான், "வள்ளலே, நீ பொருளைத் தேடிப் பூவுலகில் புகழை நிலை நிறுத்தினாய், தமிழ்ப் புலவர்களைத் தண்ணளி-யோடு தயங்காது புரந்தாய். அப்படிப்பட்ட நீ, இன்று அவர்களை ஒட்டாண்டியாக்கி, அவர்கள் வாயில் மண்ணைப் போட்டாய்! தமிழ் வள்ளலே, இமிழ் கடல் வரைப்பில் பூ மாதும், புவி மாதும், நா மாதும், நாமும் இருந்து பயனென்ன? என்று நீ இறந்தாயோ, அன்றே பைந்-தமிழ்ப் பாவலர் ஆதரவற்றவராகிவிட்டனர். இனி அவர்-களுக்குப் புகலாவார் யாவர் உளர்? இனித் தமிழ்ப்-புலமையும் தழைக்க வழியேது? அந்தோ! தமிழனைக்கு நேர்ந்த இத்துயரை மாற்றும் வகையையும் மண்ணில் காண இயலுமோ?" என்னும் கருத்துத் தோன்ற,

"தேட்டாளன் காயற் றுரைசீதக் காதி சிறந்தவச்ர
நாட்டான் புகழ்க்கம்பம் நாட்டிவைத் தான்தமிழ் நாவலரை
ஒட்டாண்டி யாக்கி அவர்கள்தம் வாயில் ஒருபிடிமண்
போட்டான் அவனும் ஒளித்தான் சமாதிக் குழிபுகுந்தே!

"பூமா திருந்தென்ன புவிமா திருந்தென்ன பூதலத்தில்
நாமா திருந்தென்ன நாமிருந் தென்னநன் னாவலர்க்குக்
கோமான் அழகமர் மால்சீதக் காதி கொடைமிகுந்த
சீமான் இறந்திட்ட போதே புலமையும் செத்ததுவே!"

என்று வாய்விட்டரற்றினர்.

புலவரது புலம்பலுரை அங்கு அவரைச் சூழ்ந்திருந்-தார் யாவரையும் கண்ணீர் பெருக்கிக் கரைந்துருகச் செய்தது. அக்காலை இறைவன் இன்னருளால் எதிர்-பாராத வகையில் வள்ளலின் சவக்குழி வெடித்தது; அதில் ஏற்பட்ட பிளவொன்று வழியாக மோதிர-மணிந்த அவர் கை யாவரும் வியப்பெய்த வெளிப்பட்டது. அதனைக் கண்டதும், தம்பிரான் அவர்களின் துயரம் முன்னையிலும் பன்மடங்காய் வளர்ந்தது. அவர், வள்ளல் இறந்தும் தம்மை நாடி வந்தவரை 'வா' என்-றழைக்கவே, தம் கையைத் தொடு குழிக்கு வெளியில் நீட்டியதாகவும், இப்புலவர்கள் தமிழ்ப் பாவொன்றும் கற்றறியாத கயவர் பக்கம் சென்று 'தா' என்றிரத்தல் தகாது என்று தம் கையால் அவர் குறிப்பிடுவதாகவும்

தம்முள் கருதிக் கல்லும் கரைந்துருக் கதறினர். அவருக்கு அருகிலிருந்து அங்கு நிகழ்ந்தவற்றைக் கவனித்தவர்கள், சீதக்காதி இறந்தும் தம் செயலில் குன்றாது புலவருக்கு மோதிரமளிக்கக் கை நீட்டிய செயலை வானளாவப் புகழ்ந்து, "செத்துங் கொடுத்தான் சீதக்காதி!" என்றார்கள். பின்னர் அங்கிருந்தோர் தத்தம் இருப்பிடம் ஏகத் தம்பிரான் அவர்களும் தேம்பிய உள்ளத்துடனே தம்மூர் சேர்ந்தார்.

சீதக்காதி தமிழ் தழைக்கச் செய்த செயலை உற்று நோக்குங்கள். அவரைப்போல நம் தாய் மொழி சீருற மொழிப் புலவர்களைத் தாங்குவார் உளரானால், நம் தமிழன்னையின் திருமேனி தளர்வின்றித் தழைத்துப் பொலிவுறுமென்பதில் ஐயமும் உண்டோ?

அருஞ்சொற்பொருள் :

ஆவி - உயிர், உவந்து - மகிழ்ந்து, மரக்கலம் - கப்பல், விழைந்தார் - விரும்பினர், கூட்டுறவு - நட்பு, ஈர்க்கப்பட்டு - இழுக்கப்பட்டு, ஊறு - துன்பம், அறிகுறி - அடையாளம், வற்கடம் - பஞ்சம், காலன் - எமன், தரணி - பூமி, புரப்பவர் - பாதுகாப்பவர், பூமாது - இலக்குமி, நாமாது - கலைமகள், புகல் - அடைக்கலம்.

பயிற்சி வினாக்கள் :

1. 'நம் முன்னவர் கண்ட உண்மை' என்று ஆசிரியர் எதனைக் குறிப்பிடுகின்றார்?
2. சீதக்காதி என்பவர் யார்? அவருடைய குணநலங்களைத் தொகுத்து எழுதுக.
3. சீதக்காதியின் மதகுரு யார்? அவர் எத்தகையவர்?
4. சீதக்காதி ஒரு சிறந்த அரசியலறிஞர் என்பதை எதனால் அறியலாம்?
5. சீதக்காதியுடன் விசய ரகுநாத சேதுபதி நட்புச் செய்து கொண்டது ஏன்?
6. படிக்காசுத் தம்பிரான் சீதக்காதி இறந்த பிறகு அவரைக் குறித்துப் புலம்பியதை விளக்குக.
7. சீதக்காதி செத்தும் கொடை கொடுத்த இயல்பினைத் தெரிவிக்க.

16. ஆய்–அண்டிரன்

[திரு. சிவ. குப்புசாமிப் பிள்ளையவர்கள்]

[இவர் பேரளம் கழக உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்; சங்க கால வள்ளல்கள், வள்ளலும் வளவனும் என்னும் நாடகங்களை இயற்றியவர்.]

இயல்–1 காட்சி–2

இடம் : கொங்கு மன்னனது அவைக் களம்.

காலம் : முற்பகல்.

உறுப்பினர் : கொங்கு வேந்தன், பெருங்குடிலன், நல்லாயன், வீரநாதன், வச்சிரமுடியான், காவலன்.

(கொங்கு மன்னன் தனது படையெடுப்பைப் பற்றி அமைச்சருடனும், படைத்தலைவருடனும் ஆய்தல்.)

கொங்கு வேந்தன் : (அமைச்சனை நோக்கி) பெருங்குடிலரே, என் உள்ளம், ஆய் நாட்டுப் படையெடுப்பில் ஆழ்ந்து கவல்கின்றது. ஆய் மன்னன் அண்டிரன் தன் இளமை தொட்டு, தக்கவரை அடுத்து, கல்வி கேள்விகளிற் சிறந்து, உலகியல் முறைகளையும் போர் இயல் நுணுக்கங்களையும் செவ்வனே உணர்ந்துள்ளானும். மேலும், கற்றவர் துணை சூழ என்றும் இருத்தலோடு, எவரும் எளிதிற்கொள்ள முடியாதவாறு தனது அரசிருக்கையை நால்வகை அரணும் பொருந்துமாறும் அமைத்துள்ளானும். இவை பற்றிய நும் கருத்தென்ன ?

பெருங்குடிலன் : கொங்கின் கோவே, நீங்கள் எதற்கும் அஞ்சற்க. நெருநலே நம் ஒற்றர் வழியே அவன் நிலைகள் பலவும் உணர்ந்தேன். ஆய் அண்டிரனுக்குப் பொதியம் முழுவதுங்கூட உரியதன்று. அவ்வரையின் ஒருபாலுள்ள ' நவிரம் ' என்னும் சிறுமலையும், அதனோடு சார்ந்த நிலனுங் காடுமே அவனுக்குரியன. மேலும், அண்டிரனது அரசிருக்கையாகிய ஆய்குடி தக்க அரண்களும் படைகளும் சூழப் புரக்கப் பெறினும், நம் திறன் மிக்க கூற்றுமஞ்சக் கொடுஞ்சமர் புரியும் படையின் முன் அவை யாவும் நீரால் அவியுறும் நெருப்புப் போல ஒழியும்.

நல்லாயன் : அரசர் பெரும, நம் முதலமைச்சர் மொழிந்தன யாவும் உண்மையே எனினும், எதையும் நன்கு ஆய்ந்தே நாம் முயலுதல் முறையாம். போரெனக் கூறுமுன், நாம் நம் பொருள் நிலை படைவலி துணை நலம் இவற்றை நம் மாற்ருன் கொண்டுள்ளவற்ருேடு ஒத்து நோக்க வேண்டும். நாம் பெற்றவை நம் மாற்ருனினும் மிகுத்து முனைக்குமாயின் போர்க்கெழுவது அறிவுடைமை-யாகும். நெருநல் இவண் போந்த ஒற்றனை, யானும் சிறிது உசாவ நேரிட்டது. அவன் கூறியவற்றுள் ஒரு சில என்னை மிகவும் அச்சுறுத்தின. ஆய்மன்னன் தென்-பாண்டி நாட்டின் ஒரு பகுதிக்கே தலைவன் தான்; நீங்கள் அந்நாட்டினும் நான்கு மடங்கு பரந்துள்ள இக்கொங்கு நாட்டின் இறைவர் என்பதிலும் ஐயமின்று. எனினும், இந்நிலப் பெருக்குமட்டும் வெற்றிக்குப் பற்றுக்கோடா-காது. ஆய்நாடு நில அளவில் சுருங்கினும், பொருள் நிலை, படைத்திறன் இவற்றுள் நம்மினும் மிக்கதென்பது வெள்-ளிடை மலையென விளங்குகின்றது. இன்னும், வேள்-ஆயைப்பாடிச் செல்வோர்க்கு அவன் யானையை மற்றைப் பொருள்களினும் மிகுத்து வழங்குகின்ருன் என்ற செய்தி-யொன்றே, அவன் நாட்டின் களிற்றுப் பெருக்கை உணர்த்துவதால், அவன் மிகுந்த யானைப் படை யுடையன் என்பதும் அறியலாகும். ஆதலால், நீங்கள் எளியனது புல்லுரையைச் சிறிது உளங்கொண்டு உன்ன வேண்டும்.

பெருங்குடிலன் : (அசட்டுச் சிரிப்புடன்) பெரும! இந்நல்லாயர் என்றும் முற்போக்கின் முட்டுக்கட்டை-தான். விரைந்த அறிவெழுச்சி அற்றவனது எத்தகைய சிறந்த யானைப்படையும் பொருள் வலிமையும் நம் கொங்கின் கொடும்படைமுன் என்னவாகும் என்பதை இவர் இன்னும் ஓர்ந்திலர். நீங்கள் ஆணை தரின் நம் படைத் தலைவர் வீரநாதரை ஈண்டு அழைக்கின்றேன். அவர் வழியே நம் நிலைமையை நீங்கள் எளிதில் உணரலாகும்!

கொங்கு வேந்தன் : நன்று முதலமைச்சரே, நம்

துணையமைச்சர் நல்லாயனுர் சற்று மெதுவானவர்தாம். அவரது கருத்து ஈண்டுற்ற செயலுக்குப் பொருந்தாது என்பதே எனது துணிபு. நீவிர் அவ்வீரநாதரை இவண் விரைவிற் கொணர்க.

பெருங்குடிலன் : இறைவரே, இதோ அழைக்கின்றேன்! (பணியாளனை நோக்கி) காவல, நீ சென்று நம் தானைத் தலைவர் வீரநாதரை இவண் கடிதிற்கொணர்க.

பணியாளன் : (வணங்கி) உங்கள் திருவுளப்படியே!

(ஓடி வீரநாதனை அழைத்து வருகிருன்)

வீரநாதன் : (வணக்கத்துடன்) கொங்குப் பெருவேந்தரே, எளியேன் வணக்கம் உங்கள் திருவடிக்குரியதாகும்! அடியேனை நீங்கள் எண்ணியதெதற்கோ? அறிகிலேன். பொறுத்தருள்க!

கொங்கு வேந்தன் : வீரநாதரே, நம் படையெடுப்பின் ஏற்பாடு எவ்வாறுளது? ஒரு கணமும் வீண்போக்காது நம் படைத்திறனைப் பெருக்கக் கருதினேமே! நம் போர்ப் படைகள் யாவும் இதுபோது செவ்விதின் அணிவகுக்கப் பெற்றனவா?

வீரநாதன் : அரசரே, இதில் ஏன் உங்கட்கு ஐயம்? வீரநாதன் இருக்குமளவும் காலம் வீணுகுமா? நம் நாற்படைகளும், நீங்கள் இதுபோது கருதின் உழுந்து கண்ணுடியில் உருளுமுன் இவண் கூடும். இங்கு நிற்கும் நம் அணித்தலைவர் வச்சிரமுடியார் நம் படைகட்கு ஓயாமல் அல்லும் பகலும் அளித்திருக்கும் பயிற்சி சொல்லும் தரத்ததன்று. சுருங்கக் கூறின், நம் படையின் வளர்ச்சி கண்டு முடியுடை மூவேந்தருள் ஒருவராய சேரமானே தளர்ச்சி பெற்றுர் எனில், இக்குறுநில மன்னனுய ஆய் எம்மாத்திரமாவான்?

பெருங்குடிலன் : வீரநாதரே, நன்று நவின்றீர்! (மன்னனை நோக்கி) அரசரே, இப்போதாயினும் உங்கள் ஐயப்பாடு தெளிவுறலாகுமென நம்புகிறேன். நம் படைத் தலைவர் வீரநாதரும் அணித்தலைவர் வச்சிரமுடியாரும் ஒரு படைக்குத் தலைமை பூண்டால், வெற்றியும் புகழும் வேறு எங்குத்தான் செல்லுதற்கு இயலும்? நம்

வச்சிர முடியாரின் வாயுரைக்கும் நீங்கள் அருளுடன் செவி சாய்த்திடுக.

வச்சிர முடியான் : கொங்குவள நாட்டின் கோவே, எளியேன் அடி பணிகின்றேன். அடியேன் இயன்றவரையில் நம் நாற்படைகளும் தத்தம் நெறியில் குறைவிலாது பணியாற்றப் பயிற்சியளித்துள்ளேன். ஒவ்வொரு படையும் நம் நாட்டின் உயர்வுக்கும், உங்களது தகைமைக்கும், நம் குடி மக்களது வாழ்விற்கும் எத்தகைய இடர்ப்பாடும் வாராதபடி தம்முயிர் போமளவும் முன்வைத்த காலைப் பின் வைக்காது கடுஞ்சமர் புரியும் பேராற்றல் வாய்ந்தது. நம் காலாட்படைஞர் நான்கு திசைகளினும் பருந்துகள் வட்டமிடுமாறு புலால் மணக்கும் கொடிய நீண்ட வேற்படையைக் கையில் தாங்கியுளர். எமனது சிவந்த நாக்குப் போல நாளும் பகைவரது குருதியைக் குடித்தும் வேட்கை தணியாது அலைகின்ற உடைவாளை அவர்களது உறையினிலிட்டு அசைத்துக்கொண்டுளர். காற்றினும் கடுகிச் செல்வனவும், காலன் பற்களினும் கூரியனவுமாகிய அம்புகளை மிகுதியாகத் தங்கள் தூணிகளில் நிரப்பியுளர். இன்னும், அவர்கள் தங்களது வில்லின் நாணை இழுத்து இடி போன்ற பேரொலியை எழுப்பிக் கண்டவர் அஞ்சுந் தோற்றமுற்றுளர். நம் குதிரைகள் யாவும் தம் இருப்புக் கடிவாளங்களைப் பற்களினால் கறித்துக்கொண்டு, விரைவு மிக்க கரிய குளம்புகளால் நிலத்தையுதைத்துப் புழுதியெழுப்பி, உதடு துடிக்க, போர்க்கு ஆயத்தமாயுள. மும்மதங்களைப் பொழியும் முகிற்கூட்டம் போன்ற நம் யானைகள், தங்கள் நிழலையே பகைவராகக் கருதித் தமது புலால் வீசும் வளைந்த பிறைமதி போன்ற கொம்புகளை அசைத்துக்கொண்டு சினந்து நிற்கின்றன. பண்டொருநாள் உக்கிர பாண்டியனுக்கு ஆற்றாது புறமுதுகிட்டு ஓடிய இந்திரன் கையிற் சிக்கிக்கொள்ளாது கடற்குள் மறைந்து நின்ற உயர்ந்த மைந்நாகமலை போல, நம் அழகிய உயர்ந்ததேர்கள் பரந்த சிறகுகளை விரித்து, ‘வீரப் பெருமக்களே, விரைவில் வாருங்கள்! இம்மென்று கூறுவதற்குள் யாம் அவ்விந்திரனுலகும் செல்வேம்!’ எனக்

கூறுவன போலத் தம் கொடிகளையசைத்து நிற்கின்றன. இவை யாவும் நீங்கள் நேரில் காணில் நன்கு விளங்கும்.

கொங்கு வேந்தன் : போர்ப்படைத் தலைவரே, நாற்படையாளரே, யாம் பெரிதும் மகிழ்ந்தோம்! நும் போன்ற வீரர்களைப் பெற்றவெமக்கு இனி யாது குறை-யுளது? நீவிர் யாவிரும் பெரும்பேறுடையீர். உங்-கள் கொங்கின் தேவி இக்குறைகடல்சூழ் ஞாலத்தைத் தன் ஒரு குடை நிழற்கீழ் ஆளுவதற்காக நீங்கள் ஒவ்-வொருவரும் ஒற்றுமை குறையாது தாயினுஞ்சிறந்த அவளது அன்பு பெருகிய உளம் மகிழுமாறு போர் புரிவீர்கள். ஆதலால், நும்மினும் பெரும்புகழ் படைத்தார் யாவருளர்? நீங்கள் கொங்கு தேவியின் கொழுவிய குழந்தைகளாவீர்கள். உங்கள் நலங்கருதி அவள் பவானி-யாகவும், அமராவதியாகவும் நம்மிடை அசைந்து நடந்து, நமக்கு நல்லமுது சுரக்கின்ருள். வீரக்குடிப் போர்ப் படைஞரே, உங்கட்கு என்றும் வெற்றி மிளிர்க! வாழ்வு பெருகுக!

வீரநாதன் : வாழிய அரசரே! வணக்கம். உங்கள் உப்பும் சோறும் உண்டு பெருத்த எங்கள் உடல், உங்-கட்கு உயர்வும் பெருவாழ்வும் தோன்றத் தொழிற்படாது ஒழியின், அதனினும் கடைப்பட்ட வேறு ஒரு பொருளைக் காணக் கூடுமோ? மேலும், அவ்வுடலுடன் பொருந்திய உயிர், மறுமையில் நன்றி கொன்ற மக்கள் படும் துன்பத்-தில் மூழ்கி, வெளிவர இயலாது வாடுமே! நாங்கள் போரின்பாற்பெறும் புண்கள் யாவையும் புகழ் அறிவிக்-கும் கண்கள் எனக் கொள்வோம்; '**போர்க் குறிக்-காயமே புகழ்க்குறிக் காயம்,**' என்பதை எங்களில் ஒவ்வொருவரும் உணர்ந்து வினைவழித் தொழிற்படும் பெற்றியராவேம். பெரும! புண்படாது உலகில் புகழ் பெற-லாகுமோ? உலகத்தில் ஒவ்வொரு கணப்பொழுதினும் எத்தனையோ நூருயிரங்கோடிப் பிறவிகள் தோன்றியும் மறைந்தும் ஒழிகின்றனவே! அவை யாவும் கருதுதற்கு உரியனவோ? ஆதலால், எங்கள் படை யாவும் தம்

உயிர்க்கண் அன்பின்றித் தங்கள் நாட்டின் பெருமைக்காக வருந்தி உழைத்து அதனல் எய்தப் பெறும் பேற்றையே மகிழ்ந்து பெருஞ்சிறப்புடையவாகும். தலைவரே, நீங்கள் அருள் கூர்ந்து இதுபோது நம் பாடி நகர்க்கு எழுந்தருளின், யாவற்றையும் எளிதில் அறியலாகும்.

பெருங்குடிலன் : மன்னர் மன்னரே, அதுவே நன்று. உங்கட்குத் திருவுளமிருப்பின் நாம் இன்று மாலை அவண் சென்று நம் படைகளைப் பார்வையிடலாம்.

கொங்கு வேந்தன் : நல்லது குடிலரே, அதற்கு வேண்டுவன யாவும் இன்னே புரிக!

பெருங்குடிலன் : வீரநாதரே, நம் மன்னர் பெருந்தகை நம் பாடிநகர்ச் சோதனைக்கு வருமுன்னர் வேண்டுவன யாவும் சிறப்பாகத் திட்டஞ்செய்யக் கடவீர்; விரைந்து சென்று ஆவன புரிமின்.

வீரநாதன் : அவ்வாறே யாகுக! (கும்பிட்டு நின்று) எளியேனுக்கு விடையருள வேண்டும்.

பெருங்குடிலன் : சென்று வருக.

வீரநாதன் : வணக்கம். (பணிந்து செல்கிருன்.)

அருஞ்சொற்பொருள் :

நெருநல் - நேற்று, பொதியம் - பொதியமலை, வரை - மலை, சமர் - சண்டை, மாற்ருன் - பகைவன், ஓர்ந்திலன் - உணர்ந்திலன், கொணர்க - கொண்டு வருக, தானைத்தலைவர் - சேனைத் தலைவர், அல் - இரவு, குருதி - இரத்தம்.

பயிற்சி வினக்கள் :

1. கொங்கு வேந்தன் ஆய் அண்டிரனுடைய வலிமை பற்றிப் பெருங்குடிலனிடம் கூறியதென்ன?
2. நல்லாயன் ஆய் அண்டிரனுடைய வலிமை பற்றிக் கூறியவற்றைத் தெரிவிக்க.
3. படையெடுப்பின் ஏற்பாடுபற்றி வீரநாதன் கூறியது என்ன?
4. தன் தலைமையிலுள்ள படையின் திறமை பற்றி வச்சிரமுடியான் கூறியவற்றைத் தெரிவிக்க.
5. கொங்கு வேந்தன் போர்ப்படையினர்களை ஊக்குவித்துக் கூறிய வீர உரைகளைத் தெரிவிக்க.
6. 'போர்க்குறிக் காயமே புகழ்க்குறிக் காயம்.'—இது யாரால் எப்பொழுது கூறப்பட்டது?
7. 'நீரால் அவியுறும் நெருப்புப்போல ஒழியும்.'—இதனை இடஞ்சுட்டி விளக்குக.

17. பாரி வள்ளல்

[திரு. வி. மரிய அந்தோனி அவர்கள், எம். ஏ.]

[இவர் விருதுநகர் செந்தில் குமாரசாமி நாடார் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர்; ஆராய்ச்சித் திறனும் படைத்தவர்; பண்பட்ட எழுத்தாளர்; பல பாட நூல்களின் ஆசிரியர்.]

சங்ககாலம் தமிழகத்தின் பொற்காலம். அக்கால வேந்தர் புலவர் பாடும் புகழுடையோராய் விளங்கியதுமன்றிச் சிற்சிலர் தாமும் பாடும் புலவராய் விளங்கினர். புலவரும் பொருள் பெறல் ஒன்றே குறிக்கொள்ளாது, அரசர் கோல் கோடியவழிச் செவியறிவுறுத்தி நெறி நிறுத்தினர்.

குடை கொடி முரசு கொண்ட பேரூர் வேந்தரேயன்றிச் சீறூர் மன்னர் பலரும் தமிழகம் முழுவதும் ஆங்காங்கு விளங்கினர். குறுநில மன்னரும் பெருவேந்தரைப்போன்றே நடையிலும் கொடையிலும் சிறந்து விளங்கினர். அவருள்ளும் கொடை மேம்பட்டோர் வள்ளல் என்னும் சிறப்புப் பெயருக்கு உரிமை பெற்றனர். வள்ளல்களில் தகைமை சான்றவனெனப் பாரி குறிக்கப் பெறுகின்ருன்.

மாரியினும் மேலாகப் பாரியைப் புகழ்ந்து பாடிய புலவர் பலர் இருந்திருக்க வேண்டும் என்பது கபிலரது பாட்டால் உணரக் கிடக்கின்றது. ஆயினும், பாரியை நேர் நின்று பாடிய புலவர் பிறர் பாடல் எதுவும் புறநானூற்றுத் தொகுப்பிற் காணப் பெருமை வியப்பையே விளைக்கின்றது! பாரியை வஞ்சித்துக் கொன்ற வேந்தர் அழுக்காறு காரணமாக அவற்றை அழித்தனரோ, அன்றேல், அவனுக்குப் பின்னர் அவன் வழியினர் இல்லாமையால் அவை இயற்கை வழியான் அழிந்தனவோ என்பது தெளியுமாறில்லை. இப்பொழுது உள்ளன கொண்டு ஆராயினும், பாரியின் பண்பாடு பட்டப்பகலென விளங்கும்.

பாரி மகளிரைப் பற்றிய சிற்சில குறிப்புக்கள் புறநானூற்றிற்காணப்படினும், பாரியின் மனைவியைப் பற்றிய குறிப்பு ஒன்றுமே நமக்குக் கிடைக்கவில்லை. அவள்

'**பாவை அன்ன நல்லோள்**' என்று மட்டும் பதிற்றுப்பத்துக் குறிக்கிறது. அரச மரபில் தோன்றிப் பாடற் புலமை சான்ற நங்கையாராக **ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியன் தேவியாரைப்** புறநானூற்றில் நாம் காண்கின்றோம்; குறுநில மன்னன் மகளிராகப் **பாரி மகளிரைக்** காண்கின்றோம். பண்டை நாளிற் பெண் கல்வி போற்றப் பெற்றமைக்கு ஔவையார் முதலிய பெண்பாற் புலவர் சான்றாய் விளங்குவர். பண்டைப் பேரரசரும் அவர்தம் தேவியரும், குறுநில மன்னரும் அவர்தம் துணைவியரும் செந்நாப் புலவரின் பாடற்பொருளை உணரும் ஆற்றல் பெற்று விளங்கினர் என்று கொள்ளுதல் தவறாகாது. இத்தகைய **அறிவும், அன்பும், அறமும், அருங்கற்பும்** அணிகலன்களாகக் கொண்ட நங்கை ஒருத்தி பாரியின் துணைவியாக அமைந்திருத்தல் வேண்டும்; அவளை இடையில் இழந்த பாரி அவள்மீது கொண்டிருந்த ஈடுபாட்டால் மறுமணம் இன்றி நெறிப்படி வாழ்ந்திருத்தல் வேண்டும்; அன்னையைப் பிரிந்த செல்வமகளிர் பிரிவுத் துயரால் வருந்தாவண்ணம், கபிலர்பால் கற்றுத் தேர்ந்து புலமை பெற அவன் ஏற்பாடு செய்திருத்தல் வேண்டும். பாரி இறந்த பின்னர் பலபடப் புலம்பிய கபிலர், அவன் மனைவியைப் பற்றி ஒன்றுங் கூறாது விடுத்ததும், பாரி மகளிரைத் தம்முடன் அழைத்துக்கொண்டு வெளியேறியதும் இவ்வாறு ஊகிக்க இடந்தருகின்றன.

பாரியின் பேராண்மை பாராட்டத் தக்கது. முந்நூறு ஊர்களையே உடைய சிறிய நாட்டை ஆண்ட பாரி, "வையங் காவலர் வழிமொழிந் தொழுகப், போகம் வேண்டிப் பொதுச்சொற் பொறாஅது, இடஞ்சிறிதென்னும் ஊக்கந் துரப்பப்" படைமேற் கொண்டு பிற நாடுகளை வென்று அடிமைப்படுத்தும் எண்ணம் சிறிதும் கொண்டிலன். பேராற்றலும் படை வலியும் அரண் சிறப்பும் அமையப் பெற்ற அவன் தன் ஆற்றல் காட்டுதற்காகப் போர் மேற்கொண்டு உயிர்களுக்கு ஊறு விளைக்க எண்ணங் கொண்டிலன். அது அவனது தண்ணளியைக் காட்டி நிற்கும். '**நீரினும் இனிய சாயலன்**' என்ற புகழ்

அவனுக்கு மிக மிகப் பொருந்துவது. ஆயினும், தன்னை வெல்வது கருதி வந்த வேந்தரை அவன் வென்று துரத்தினன்; அவர்கள் முதுகிட்டு ஓடிய கழலொலி கேட்டுப் பின் செல்ல நாணிச் சீற்றந் தணிந்தான்; அவர் நாட்டை வென்று கைக்கொள்ள அவன் முற்படவில்லை. மூவேந்தரும் பறம்பை முற்றியிருந்த காலத்தும் அவன் வெளிப்பட்டுப் போர் புரியாமைக்கு இத்தண்ணளியே காரணம். பறம்பைப் பகைவர் முற்றியிருந்து பற்றுதல் இயலாது; தாமாகத் தளர்ந்து முற்றுகை தவிர்ந்து திரும்பிச் செல்லும் அவர்களோடு போர் புரிந்து உயிர்களைக் கொல்ல அவனது அன்புள்ளம் இடந்தரவில்லை. ஆகவே, அவன் அடைத்திருந்து அளி சுரந்தான்.

பாரியின் கொடை நலம் இணையற்றது. "நல்லவை தீயவை என்று வேறுபாடு காணப்பெறும் சூடும் பூவினத்தைச் சாராத குவிந்த பூங்கொத்தினையும் புல்லிய இலையையும் உடைய எருக்கம் பூவே ஆயினும், ஒருவன் உடையது அதுவேயாயின், தெய்வங்கள்; 'அதனை யாம் விரும்போம்,' என்று சொல்லா. அது போல, பாரியும் தன்னை வந்து இரந்தவர் அறிவற்றவராயினும், புல்லிய குணத்தினராயினும், அவர்தம் தகுதி நோக்காது வழங்குதலைக் கடப்பாடாகக் கொண்டவன்." இதுவே வரையா ஈகை எனப்படுவது.

பறம்பு நாடு முந்நூறு ஊர்களையுடையது. அம்முந்நூறு ஊர்களையும் பரிசிலர் பெற்றனர். பாரிக்கு உரிமை என்று சொல்லக் கபிலர் ஒருவர் இருக்கின்றார்; பாரியும் இருக்கின்றான்; பறம்பு மலையும் இருக்கின்றது. கபிலர் நட்பு உரிமையால் மட்டும் பாரிக்கு உரியவராதலின், பிறர்க்குக் கொடுக்க உரியவர் அல்லர். தன்னையும் குன்றையுமேனும் தனக்கென வைத்துக்கொள்ளும் தன்மை பாரிக்கு உண்டா? கபிலர் கூறுகின்றார்: "குறத்தி எடுத்து மாட்டிய காய்ந்த தீக்கடை கோல் சந்தனமாதலால் அதன் அழகிய புகை அருகிலுள்ள மலைச் சரிவில் நிற்கும் வேங்கையின் அழகிய பூங்கொம்பிற் சென்று பரக்கும் பறம்பு மலை, பாடி வருவார்க்குப் பங்கிட்டுக்

கொடுக்க உரியது. பாரியும் அறக் கடனே தன் அணியாகப் பூண்டு, தன்னையே பரிசிலர் இரப்பினும் வாரேன் என்னாது அவர் ஏவிய எல்லைக்கண்ணே நிற்கும் இயல்புடையவன்.'' தன்னையே ஈதலினும் சிறந்த கொடை யாது? கபிலர் கூறியது புகழுரையா, பொருளுரையா? வஞ்ச வேந்தர் தன்னையே வேண்டியபோதும் பாரி தடையில்லாது ஈந்தான்.

'கண்ணோட்டம்' என்ற அதிகாரப் பொருளை விளக்கப் போந்த பரிமேலழகர், "அஃதாவது, தன்னொடு பயின்றாரைக் கண்டால் அவர் கூறியன மறுக்கமாட்டாமை,'' என்று வேறுபடுத்திக் கூறினராயினும், வேறுபாடின்றி எவர்மாட்டுங் கண்ணோடுதலையே வள்ளுவர் குறித்தாராதல் வேண்டும். "தம்மை ஒறுக்கும் இயல்புடையாரிடத்தும் கண்ணோட்டம் உடையராய்க் குற்றத்தைப் பொறுக்கும் இயல்பே அரசர்க்குத் தலையாய இயல்பாவது,'' என்று அவர் கூறியுள்ளது காண்க. பிறர் பிழை நோக்காது பேரருள் சுரக்கும் பெருந்தகைமையே ஈண்டுக் கண்ணோட்டம் என்று குறிக்கப் பெற்றது. இதனையே **நாகரிகம்** என்றும் அவர் குறிப்பார்:

> "பெயக்கண்டும் நஞ்சுண்டு அமைவர் நயத்தக்க
> நாகரிகம் வேண்டு பவர்.''

என்று கண்ணோட்டத்தின் உச்சநிலையை வள்ளுவர் குறிக்கின்றார். யாவரும் விரும்பத்தக்க கண்ணோட்டம் என்னும் நனி நாகரிகம் தம்மிடத்து உள்ளதென நிறுவ வேண்டுவார், பிறர்தமக்கு நஞ்சு பெய்து தருதலை அறிந்திருந்தும் அதனை மறுக்காது ஏற்று உண்டு, அவரோடு அருள் குறையாது மேவுவர். இக்குறளில் 'அமைவர்' என்ற சொல்லுக்கு அந்நஞ்சின் பயனை நுகரவும் ஒருப்படுவர் என்றும் பொருள் கொள்ளலாம். முற்றுகை முதலிய பேராற்றலால் தன்னை வெல்ல இயலாத வேந்தர் தன்னை இரந்து பெற்ற வஞ்சகத்திற் பொதிந்துகிடந்த நஞ்சு பாரி அறியாததன்று. ஆயினும், கண்ணோட்டம் காரணமாகப் பாரி அவர்தம் இரவுக்குத் தன்னையே பரி-

சாக நல்கினன். அக்கொடையே அவனது உயிரை உண்ணும் நஞ்சாயிற்று. நஞ்சுண்டு அமைந்த பாரி நனிநாகரிகன் ஆயினன்.

பெருஞ்செல்வராகிய மூவேந்தர் கொடையின்றி வாழ்ந்த காலங்கள் புலவரால் ஆங்காங்குச் சுட்டப்படு-கின்றன. அறப்பயனும் குறிக்காது கொடைப்பயனே குறித்து வழங்கிய **ஆய் வள்ளலை** உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பின் வருமாறு பாராட்டுகிருர் :

"களாப்பழம் போன்று கரிய கோட்டினையுடைய சிறிய யாழ்கொண்டு பாடும்இனிய பாடல் வல்ல பாணர் களிறுகளைப் பரிசாகப் பெற்றுச் சென்றனர். ஆகவே, அவற்றைக் கட்டியிருந்த தறிகளிற் காட்டு மயில்கள் தம் இனத்தோடு வந்து தங்கியிருக்கின்றன. ஆயின், உரிமை மகளிரும், வழங்குதற்கு அரிய மங்கல அணியையன்றிப் பிறவணிகள் யாவற்றையும் இரவலர்க்கு உரிமையாக்கி-னர். ஆகவே, அவனது கோவில் பொலிவிழந்து சாய்ந்தது என்று சொல்வாருமுளர். இனிய சுவையுள்ள தாளித்த உணவைப் பிறர்க்கு உதவாது தம் வயிறே நிரப்பி, உரை-சால் ஓங்குபுகழ் நீங்கிய முரசு பொருந்திய செல்வத்தினை உடைய வேந்தர் கோவில்களும் இருக்கின்றன. ஆயி-னும், அவை பொலிவிழந்த செல்வமற்ற **ஆயின்** கோவி-லுக்கு நிகராகா."

பாரி வாழ்ந்த நாளில் வேந்தர் கொடை குறைந்து நின்ற தன்மையைக் கபிலர் ஒரு பாடலிற் குறிப்பாகச் சுட்டுகின்றார். "நிழலில்லாத நெடிய வழியிடத்து நின்ற தனி மரத்தைப்போல, முரசு கெழுமிய வேந்தர் கொடுப்-பதினும் மிகுத்து இரவலர்க்கு ஈயும் வள்ளியோன்" என்று பாரி புகழப்பெறுகின்றான். நிழலில்லாத நெடிய வழி கொடை வறந்த தமிழ் வேந்தரையும், அவ்வழியில் நின்ற தனி மரம் கொடை சிறந்த பாரியையும், நிழ-லொன்றே வழங்கியும் அதுவும் வழங்காதும் நிற்கும் பிறமரங்கள் போலாது வந்தவர்க்குக் குளிர்நிழலும் வான்-கனிகளும் மிகுந்து வழங்கும் இணையற்ற மரம் இரவலர்க்-குச் சிறிது வழங்கியும் அறவே வழங்காதும் இருந்த

வேந்தர் போலாது முகமலர்ந்து வரையாது வழங்கிய பாரியின் கொடைத் திறனையும் நன்கு விளக்குகின்றன.

இவ்வாறு நெறியொழுகும் நேர்மையும், படைமறமும், அருள் அறமும், கொடைத்திறமும், அருங்கண்ணோட்டமும், அன்புள்ளமும் அமையப்பெற்ற பாரி அழியாப் புகழ் எய்தினமை வியப்பன்று.

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு."

அருஞ்சொற்பொருள் :

இறை - வரி, திறை - கப்பம், வரையாது - அளவில்லாமல், வான் புகழ் - சிறந்த புகழ், அளி - கருணை, பேரூர் வேந்தர் - பெருநில மன்னர், சீறூர் மன்னர் - குறுநில மன்னர், தறி - யானை கட்டும் தூண்.

பயிற்சி வினாக்கள் :

1. குறுநில மன்னர் எத்தகையர் ?
2. பாரியின் மனைவி பற்றி அறிவது யாது ?
3. பாரியின் மகளிர் பற்றி அறிவது என்ன ?
4. பாரி வள்ளலின் பேராண்மை பற்றித் தெரிவிக்க.
5. பாரி வள்ளலின் கொடை நலம் பற்றி விவரிக்க.
6. 'வரையா ஈகை' எனப்படுவது எது ? விளக்குக.
7. பாரி நனி நாகரிகன் ஆயினது எதனால் ?
8. முடமோசியார் ஆய் வள்ளலைப் புகழ்ந்து கூறியது என்ன ? அதனால் விளங்குவது யாது ?
9. பாரி வாழ்ந்த நாளில் வேந்தர் கொடை குறைந்து நின்ற தன்மை எதனால் உணரப்படுகிறது ?

18. மனையினை அழகு படுத்துதல்

[குமாரி அன்னுவரிது, பி.எஸ்சி.]

நாம் எல்லோருமே அழகின் நடுவே வாழ விரும்புகிறோம்; நம்மைச் சுற்றிலும் அழகின் தோற்றத்தையே காண விழைகிறோம். ஆனால், அன்றாட வாழ்க்கையின் கடமைகளிலும் கவலைகளிலும் உழன்று வரும் நாம், அழகுக்கலை நமக்கு எவ்வளவு தேவை என்பதனை மறந்துவிடுகிறோம். களைத்துவரும் நமக்கு வலியூட்டி வாழ்க்கையில் சுவையூட்டும் கலை, அழகுக் கலையே. இந்த அழகுக் கலை நன்கு வளர்ந்து மனையில் இடம் பெறவேண்டும். அழகுள்ள மனையில் அமர்ந்தால், சிறிது நேரத்திற்காவது நம்மை வாட்டும் தொல்லைகளை மறக்கலாம். கடன்காரர்களது நச்சரிப்பையோ, அலுவலகத்தின் தலைவர் எரிந்து விழுந்ததையோ உள்ளத்தினின்றும் சிறிது நேரத்திற்காவது ஒதுக்கி வைக்கலாம்.

அழகுள்ள பொருள்களைப் படைப்பது என்பது பணப்பையைக் காலியாக்கக்கூடிய காரியம் என்று பெரும்பாலார் தவருகக் கருதுகின்றனர். ஆனால், அழகுள்ள எல்லாப் பொருள்களும் செலவை உயர்த்துவன அல்ல. உண்மையிலேயே மனையை அழகுபடுத்த விரும்பினால், எளிய முறையிலும் மனையில் அழகைப் புகுத்தலாம் என்பதைத் தெளிவாக விளக்க விரும்புகிறேன்.

‘எனக்குக் கலையுணர்வு இல்லை. ஆகவே, நான் அழகுள்ள பொருள்களைப் படைக்க முடியாது,’ என்று சிலர் கூறுகின்றனர். ஆனால், கதிரவன் மறையும் காட்சியைக் காணும் யாவரும் அக்காட்சி அழகுடையதே என்று கூறுவர். அழகினை உணர்ந்து சுவைக்கும் ஆற்றலுடைய ஒவ்வொருவரும் அழகிய மனையினை அமைக்க முடியும்; மனையில் அழகுத் தெய்வத்தையே குடியேற்ற முடியும்.

மனித உள்ளத்தையும் கண்களையும் கவர்வன அழகிய நிறங்கள். கதிரவன் மறையும் காட்சியில், பல எழில் நிறங்களின் சேர்க்கையே நம்மை மயக்குகிறது. நாம் கண் கொட்டாது அந்நிறங்களைக் கண்டு மகிழ்கிறோம்.

அது போன்றே, அழகிய நிறங்களைக் கருத்துடன் தேர்ந்தெடுத்து அலங்கரித்தால் இல்லம் அழகுடன் திகழும்.

சிறிது காலத்திற்கு முன் நடந்த ஆராய்ச்சி, நிறங்கள் மனிதர்களைப் பல முறையில் பாதிக்கின்றன என்பதை வெளியிட்டுள்ளது. சில நிறங்கள் நமக்குக் களிப்பை ஊட்டுகின்றன. சில நிறங்கள் நமது களைப்பைப் போக்குகின்றன. வருந்தும் உள்ளத்தின் உணர்ச்சிகளைத் தூண்டி மேலும் துயரத்தில் ஆழ்த்தும் நிறங்களும் உள.

நிறங்களின் தன்மையைப் பற்றி ஆராயும்பொழுது, நிறங்களைப் பற்றிய சில விவரங்களை அறிந்துகொள்ளுதல் நல்லது. எல்லா நிறங்களும் மூன்று அடிப்படை நிறங்களினின்றும் பிரிக்கப்பட்டவைகளே. சிவப்பு, நீலம், மஞ்சள் என்னும் மூன்று நிறங்களும் அடிப்படை நிறங்களாகும். இவைகளை ஒன்றுடன் ஒன்று சமமாகக் கலந்தால், புதிய நிறங்கள் அல்லது இரண்டாந்தர நிறங்கள் (Secondary colours) பிறக்கின்றன. சிவப்பும், நீலமும் கலப்பதால் ஊதாவும், நீலமும் மஞ்சளும் சேர்வதால் பச்சையும், மஞ்சளும் சிவப்பும் ஒன்றுபடுவதால் ஆரஞ்சு நிறமும் பிறக்கும்.

ஊதா, பச்சை, ஆரஞ்சு ஆகிய இம்மூன்று நிறங்களும் இரண்டாந்தர நிறங்கள் என்று வழங்கப்படுகின்றன. இந்த அடிப்படை நிறங்களையும், இரண்டாந்தர நிறங்களையும் கலந்தால், நம்மைக் கவர்ந்து களிப்பூட்டும் பல நிறங்கள் தோன்றுகின்றன. வெள்ளை, கறுப்பு, சாம்பல், என்னும் மூன்று நிறங்களும், ஏனைய எல்லா நிறங்களோடும் பொருந்தக் கூடியவை. ஆகவே, இந்நிறங்கள் சார்பற்ற நிறங்கள் (Neutral colours) என்று வழங்கப்படுகின்றன.

இந்த நிறங்களுள்ளும் சில நம்மை ஊக்கமூட்டிக் களிப்பூட்டுகின்றன. சில நிறங்கள் நம் கண்களுக்குக் குளிர்ச்சியூட்டிக் களைப்பை மாற்றுகின்றன. களிப்பூட்டும் நிறங்கள் வெப்ப நிறங்கள் (Warm colours) என்றும் வழங்கப்படுகின்றன. இவை நெருப்பில் காணப்-

படும் நிறங்களாகிய மஞ்சள், சிவப்பு, ஆரஞ்சு என்ற நிறங்களாகும். இந்நிறங்கள் தொலேவில் இருக்கும் பொருள்களே அருகிலிருப்பவை போலக் காட்டுகின்றன. இவை **முந்தும் நிறங்கள்** (Advancing colours), என்று வழங்கப்படுகின்றன. **குளிர்ச்சியூட்டும்** நிறங்கள் அல்லது **தட்ப நிறங்கள்** (Cool colours), நாம் நீரில் காணும் நீலம், பச்சை என்ற நிறங்களாகும். இவை பொருள்களேத் தொலேவில் இருப்பவைபோலக் காட்டு-கின்றன. ஆதலால், இவை **பின்வாங்கும் நிறங்கள்** (Retreating colours) என்று வழங்கப்படுகின்றன.

வீட்டை அலங்கரிப்பதில் ஏதாவது ஒரு வழியில் நாம் நிறங்களேப் பயன்படுத்துகிறோம். பல வகை நிறங்களேக் கொண்ட பொருள்களேக் கையாளுகிறோம் என்பதை மறுக்க முடியாது. ஆதலால், வீட்டை அலங்கரிக்க விரும்பினல், நீங்கள் செய்ய வேண்டுவது இதுதான். அடுத்த தடவை கடைக்குச் சென்று பொருள்களே வாங்-கும் போது எந்த நிறத்தில் வாங்குவது என்பதைக் தீர்-மானிப்பதற்குச் சிறிது நேரம் செலவழியுங்கள். நீங்கள் திரைகளேப் பயன்படுத்துவதிலும் நிறங்களேப் பொருந்து-மாறு பொறுக்கி எடுங்கள். உங்களுக்கு அமைதியளித்து களேப்பை நீக்கும் நிறங்கள் தேவையாய் இருந்தால் அதாவது ஒரு படுக்கை அறையை நீங்கள் அலங்கரிக்க விரும்பினல், குளிர்ச்சியான நிறங்களேயே தேர்ந்தெடுங்-கள். அதாவது, சிவப்பு, மஞ்சள் என்னும் வெப்ப நிறங்களே நீக்கிப் பச்சை, நீலம் என்னும் குளிர்ச்சியான நிறங்களேயே பயன்படுத்துங்கள். களிப்பூட்டும் நிறங்-களே வேறு அறைகளில் பயன்படுத்தலாம். சிவப்பு, மஞ்சள் என்னும் நிறங்கள் கண்ணுக்குக் கவர்ச்சியூட்டி உள்ளத்தை மகிழ்விக்கும். உங்கள் வீட்டில் சிறு அறை-கள் இருந்தால், அவை பெரியனவாகத் தோன்றுமாறு குளிர்ச்சி நிறங்களேயே பயன்படுத்துங்கள். மிகப் பெரிய அறைகள் இருந்தால், சிவப்பு, மஞ்சள் என்னும் வெப்ப நிறங்களேப் பயன்படுத்தினல் அறைகள் சிறியன-வாய்த் தோன்றும்.

மனையை அலங்கரிப்பதில் பெரும்பாலார் செய்யும் தவறு இதுதான்: ஓர் அறையில் பல நிறங்களையுடைய திரைகளைத் தொங்கவிடுகிறார்கள். எல்லா நிறங்களும் ஒன்றோடொன்று பொருந்துவனவாக இல்லாவிடில், அவை எழுப்பும் கவர்ச்சியும் உணர்ச்சியும் குலைந்துவிடுகின்றன. ஓர் அறையில் இரண்டு அல்லது மூன்று நிறங்களுக்கு மேல் பயன்படுத்தாதிருப்பதே சிறந்த முறை. அதிகக் கவர்ச்சி வேண்டுமென்று விரும்பினால், அந்நிறங்களின் அடர்த்தியான நிறங்களுடன் எளிய சாயல் நிறங்களையும் சேர்க்கலாம். அடர்த்தியான நிறங்கள் (thick colours) மிகுந்துவிட்டால், அழகுக்குப் பதிலாக வெறுப்புணர்வை ஊட்டும் என்பதை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். சார்பற்ற நிறங்களான வெள்ளை, கறுப்பு, சாம்பல் நிறங்கள் எல்லா நிறங்களோடும் பொருந்துவன. ஆகவே, அவற்றையும் பயன்படுத்தலாம்.

துணிகளைத் தேர்ந்தெடுக்கும் போது வேறு வேறு வேலைப்பாடுகள் கொண்ட துணிகளைத் தேர்ந்தெடுக்காதீர்கள். கட்டம் போட்ட துணிகளுடன், பூவேலை செய்யப்பட்ட துணிகள் பொருந்தா. இவை, ஒன்று எழுப்பும் பயனை மற்றொன்று குலைத்துவிடும் தன்மையுடையன. பூ வேலை செய்யப்பட்ட அல்லது பெரிய கட்டங்கள் இடப்பட்ட துணிகளைப் பெரிய அறைகளில் வேண்டுமானால் பயன்படுத்துங்கள். ஏனென்றால், அவை பெரிய அறைகளைச் சிறியனவாகக் காட்டும் வன்மை பெற்றிருக்கின்றன. வேலைப்பாடுகளற்ற துணிகளே சிறிய அறைகளுக்கு ஏற்றவை. சிறிய பூக்கள் போடப்பட்டிருப்பது தவறன்று.

திரைகள் எவ்வளவுதான் விலையுயர்ந்தவையாய் உயர்ந்த தரமுள்ளவையாய் இருந்தாலும், வீட்டினுள்ள பொருள்கள் அழகாக வைக்கப்படவில்லை என்றால், திரைகளாற் பயனில்லை. வசதியளிக்கும் முறையில் நாற்காலி, பலகைகள், மேசை போன்றவற்றை ஒழுங்காக வைக்க வேண்டும். அறையில் நெருக்கமாகப் பொருள்களைப் பரப்பி வைத்தல் கூடாது. நாம் அறையினுள் சுற்றி வர

நல்ல இடம் விட்டுப் பொருள்களை வைத்தல் வேண்டும். மேலும் சிறிய அறையில் மிகப் பெரிய பொருள்களையோ, மிகப் பெரிய அறையில் சிறிய பொருள்களையோ வைத்தல் கூடாது; அவை எடுத்துக் காட்டா. ஒரு சிறு படுக்கை அறையின் அழகை மிகப் பெரிய கட்டில் குறைக்கும். மேலும், அறையின் ஒரு பகுதியில் பொருள்கள் நெருக்கமாகவும் மற்ருெரு பகுதியில் காலியாகவும் இருக்கக்கூடாது.

ஓர் அறையை அலங்கரிக்கும்பொழுது, மிகவும் அழகான பொருள்களைக் கவர்ச்சிகரமாக வைத்தல்வேண்டும். காண்பவரது கவனத்தைத் தன்னிடத்தே இழுக்குமாறு அதற்கெனத் தனியிடம் ஒதுக்குதல் வேண்டும். மற்றைய பொருள்களின்மீது நாட்டம் செல்லாதவாறு, அந்தப் பகுதியில் அடர்த்தியான நிறங்களைப் பயன்படுத்தலாம்.

பூக்கிண்ணங்களும் (Vases), படங்களும், அலங்காரப் பொருள்களும் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை என்று நான் கூறவில்லை. ஆனல், வாழ்க்கையைச் சுவையாக்கி, மனைக்கு அழகு ஊட்டுவன இவை. இவைகளை அமைப்பதில் ஒரு பெண் தன் திறமையைக் காட்ட முடியும். இவையனைத்தையும் ஒரே அறையில் நெருக்கமாக வைக்கக் கூடாது. எவ்வளவுதான் அழகான பொருள்களாய் இருந்தாலும், அவற்றை ஒரே அறையில் நெருக்கி நிறைத்துவிட்டால், அழகு எழுப்பும் பயன் குறைந்துவிடும். காண்பவரும் எதை நோக்குவது என்றறியாது திணறக் கூடும்.

பெரும்பான்மையான வீடுகளில் சுவர்கள் முழுவதும் புகைப்படங்களால் நிரப்பப்பட்டு விடுகின்றன. படங்களைத் தேர்ந்து எடுப்பதும் ஒரு கலை. படங்கள் அறையின் அழகினை உயர்த்துவனவாய் இருக்க வேண்டும். படத்தைத் தேர்ந்து எடுப்பது, சட்டம் போடுவது, தொங்கவிடுவது எல்லாம் கவனத்துடன் செய்யப்பட வேண்டும். நான்கு புறங்களிலும் நல்ல இடம்விட்டு நடுவில் படத்தை அமைத்தல் வேண்டும். படத்தை அட்டையில் ஒட்டும்போது மூன்று பக்கங்களைவிட அடியில் சற்று

அகலமாக இருக்கும்படியாகச் செய்ய வேண்டும். படம் நேராகத் தொங்கவிடப் பட்டால் கவர்ச்சியூட்டும். படங்களைச் சுவரில் மாட்டும்பொழுது, கயிறுகளோ, கம்பிகளோ வெளியே தெரியாதபடி படத்தின் பின்பக்கம் மறைந்திருக்குமாறு மாட்டுதல் வேண்டும். மேலும், படங்கள் எளிதில் பார்க்கக்கூடிய உயரத்தில் தொங்கவிடப்பட வேண்டும்.

மனையை அழகுபடுத்துவதில் மலர்களைப் பயன்படுத்துவது எளிய முறையாகும். பூக்கிண்ணங்களில் மலர்களை வைத்து அழகு படுத்தும் போது மலர்களை நெருக்கி வைத்தல் கூடாது. நிறத்திலும் உருவிலும் எளிய தோற்றமுடைய பூக்கிண்ணங்களே சிறந்தவை. ஏனெனில், அவை மலர்களின் அழகினை மிகைப்படுத்திக் காட்டும். பூக்கிண்ணங்கள் மங்கலான பச்சை நிறமாகவோ, அன்றிப் பழுப்பு நிறமாகவோ இருக்கலாம்; அல்லது பித்தளை வெள்ளி நிறத்திலோ அல்லது கறுப்பு, வெள்ளி, சாம்பல் நிறங்களிலோ இருக்கலாம். அதிக ஆழமற்று வாயகன்று இருக்கும் கிண்ணங்கள் சிறந்தவை. விலை உயர்ந்த பூக்கிண்ணங்களைக்காட்டிலும் சாதாரண வாயகன்ற சீசாக்களும் (Bottles), சாடிகளும் (Jars), கிண்ணங்களும் நல்ல பூக்கிண்ணங்களாகப் பயன்படுகின்றன.

சப்பானியர்கள் மலர்களை ஒழுங்குபடுத்தி வைப்பதில் திறமையும் தேர்ச்சியும் உடையவர்களெனக் கருதப்படுகிறார்கள். அவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளுதற்குரிய பாடங்கள் உண்டு. அவர்கள் மிகச் சில மலர்களையும் இலைகளையும் அழகுற அமைக்கிறார்கள்; மலர்களின் அழகு எடுத்துக்காட்டப்படும் முறையில் அமைக்கிறார்கள்; மலர்களை மூன்று நிலைகளில் அமைக்கிறார்கள்; உயர்ந்த நிலையில் காணப்படுவது விண்ணையும், நடுவில் அமையும் மலர்கள் மக்களையும், தாழ்ந்த நிலையில் இருக்கும் மலர்கள் மண்ணையும் குறிப்பதாக அமைக்கிறார்கள். அவர்கள் ஒற்றை எண்களில் முடியும் எண்ணிக்கைகளிலேயே (1, 3, 5, 7, 9) மலர்களை அமைக்கிறார்கள்.

பூக்கிண்ணங்களில் இலைகளுக்கிடையே ஒவ்வொரு மலராக வைக்கவேண்டும். பெரிய மலர்களை—அடர்த்தியான நிறங்களுடைய மலர்களை—அடியில், கிண்ணத்தின் விளிம்பில் வைக்கலாம். மலர்களையும் இலைகளையும் கிண்ணத்தில் நிறுத்துவதற்காகக் கிண்ணத்தினுள் மணலையோ அல்லது கம்பி வலையையோ வைக்கலாம். நன்கு அழகுற மலர்களை ஒழுங்குபடுத்திய பின்னர், பூக்கிண்ணத்தை நன்கு எடுத்துக் காட்டக்கூடிய இடத்தில் வைக்கலாம்.

அழகான பொருள்களை அழகிய மனையில் அமைத்துவிடுதல் மட்டும் போதாது. தூய்மையாகவும், ஒழுங்காகவும் பொருள்கள் வைக்கப்பட வேண்டும். பொருள்களை நல்ல முறையில் பேணிக் காப்பாற்றினல், நீண்ட நாட்கள் உழைக்கும். ஒரு தடவை நன்ருக ஒழுங்குபடுத்தி அமைத்துவிட்டு அது அழியும்வரை விட்டுவிடக் கூடாது. புதிய பொருள்களை வாங்கி அறையில் நிரப்பவேண்டுவதில்லை. அறையின் பொருள்களின் இடத்தை மாற்றுவதிலும் புதிய அழகுத் தோற்றத்தை உண்டாக்கலாம். எடுத்துக்காட்டாக, நாற்காலியின் இருப்பிடத்தை மாற்றுவதாலும், அறைக்குப் புதிய அழகு தோன்றுவதைக் காணலாம்.

மனையினை அழகுபடுத்துவது ஒரு பெருங்கலையாகும். அதனை விரித்துரைக்க முயலவில்லை நான்; மனையை அழகுபடுத்தத் தேவையான அடிப்படைக் கருத்துக்களை ஓரளவு காட்ட முனைந்துள்ளேன். இவற்றிற்குமேல் உங்கள் சுவைக்கும் திறமைக்கும் தகுந்தவாறு மனைக்கு அழகு ஊட்டலாம். அழகையூட்ட அதிகப் பொருள் செலவழிக்க வேண்டுவதில்லை. செங்கல்லாலும் சுண்ணும்பாலும் கட்டப்பட்டதே வீடு என்ற எண்ணத்தை மாற்றி, அழகிய இல்லமாக, அழகின் இருப்பிடமாக அதனை மாற்ற முயல்வது ஒவ்வொருவரது கடமையுமாகும்.

அருஞ்சொற்பொருள் :

விழைகிறோம் - ஆசைப்படுகிறோம், உழன்று - வருந்தி, கதிரவன் - சூரியன், கவர்வன - இழுப்பன, எழில் - அழகு, திகழும் - விளங்கும், மனை - வீடு, சாயல் - ஒப்பு, நாட்டம் - கருத்து, பார்வை.

பயிற்சி வினாக்கள் :

1. 'மனையில் அழகுக்கலை இடம் பெற வேண்டும்'—ஏன்?
2. அடிப்படை நிறங்கள் எவை? இரண்டாந்தர நிறங்கள் எவை?
3. சார்பற்ற நிறங்கள் யாவை?
4. வெப்ப நிறங்கள், தட்ப நிறங்கள் எவை? அவற்றின் இயல்பு என்ன?
5. வீட்டை அலங்கரிக்க விரும்புவோர் செய்யவேண்டுவது என்ன?
6. மனையை அலங்கரிப்பதில் பெரும்பாலார் செய்யும் தவறு யாது?
7. அறைகளுக்குத் திரைகள் கட்டுவதில் கவனிக்கப்பட வேண்டுவது என்ன?
8. வீட்டில் பொருள்களை அழகுற அமைக்க வேண்டிய முறை பற்றித் தெரிவிக்க.
9. வீடுகளில் புகைப்படங்களை வைப்பதில் கவனிக்க வேண்டிய முறை என்ன?
10. பூக்கிண்ணங்களில் மலர்களை அமைக்கும் முறை பற்றித் தெரிவிக்க.
11. சப்பானியர்கள் மலர்களை எவ்வாறு கிண்ணங்களில் அமைத்துப் பயன்படுத்துகிறார்கள் என்பதை விவரிக்க.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம் சென்னை-600 008.
146709.
TB 03(C9) N59

RSR 1160

SELVAN SENTAMIL MALAI

NINTH STANDARD

RAMPOLO MASCARENES, M.A.,
AND
VIDWAN A. S. GOVINDASAMY

JEGASELVAN & CO.
NAGERCOIL & TIRUCHIRAPALLI

Copyright] [*Price Rs.* 2-25